
முத்துலட்சுமி ராகவன்
எண்ணியிருந்தது ஈடேற...
ஆறாம் பாகம்

# முத்துலட்சுமி ராகவன்

# எழுதிய

# எண்ணியிருந்தது ஈடேற...

## ஆறாம் பாகம்




லட்சுமி பாலாஜி பதிப்பகம்

68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,

சி.ஐ.டி நகர், தி.நகர்,

சென்னை - 600 035

அழைக்க : 95669 42486

மின்னஞ்சல் :bchandar24@yahoo.com

Website : www.muthulakshmiraghavan.com

# நூல் விவரப் பட்டியல்


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | எண்ணியிருந்தது ஈடேற... 6 |
| நூலாசிரியர் | : | முத்துலட்சுமி ராகவன் |
| நூல் உரிமை | : | எழுத்தாளருக்கு |
| மொழி | : | தமிழ் |
| பதிப்பு ஆண்டு | : | முதற் பதிப்பு, ஜூன் 2017 |
| தாள் | : | 11.6 Kg புக் பிரிண்ட் |
| நூல் அளவு | : | 1 X 8 கிரவுன் |
| பக்கங்கள் | : | 400 |
| விலை | : | ரூபாய் 200.00 |
| பதிப்பகம் | : | லட்சுமி பாலாஜி பதிப்பகம்<br>68/37, ஸ்ரீராம் பேட்டை தெரு,<br>சி.ஐ.டி நகர், தி.நகர்,<br>சென்னை - 600 035<br>செல் : 95669 42486 |

# முக்கிய அறிவிப்பு

இந்தக் கதை எனது சொந்தக் கற்பனையில் உருவானது. இதன் பதிப்பிற்கான உரிமையை லட்சுமி பாலாஜி பதிப்பகத்திற்கு மட்டுமே தந்திருக்கிறேன்.

இதைத் தழுவி தொலைக்காட்சி தொடர்களையோ. திரைப் படத்தையோ எடுத்தாலும் இணையதளத்தில் என் அனுமதியின்றி வெளியிட்டாலும் நான் சட்ட பூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

*இப்படிக்கு*

*முத்துலட்சுமி ராகவன்*

# ஆசிரியர் கடிதம்

**எ**ன் பிரியத்துக்குரிய வாசக... வாசகிகளே...!

இந்த வருடம் கோடையின் வெப்பம் அதிக அளவில் வாட்டுகிறதில்லையா..? இந்தக் கதையை எழுத ஆரம்பிக்கும் போது மே மாதம் வந்திருக்க வில்லை.. குளுமையான டிசம்பர் மாதத்தில்தான் கதையை ஆரம்பித்தேன்.. ஆனாலும் பாருங்கப்பா.. நவம்பர் டிசம்பர் மாதங்களுக்கான பருவ மழை பொய்த்துப் போய் அப்போதே வெப்பம் ஆரம்பித்திருந்தது..

மார்கழிப் பனியின் குளுமையை மீறிய வெப்பம்.. சென்னைக்கு நான் வந்த போது மழை கொட்டே கொட்டெனக் கொட்டியது.. சென்னை மாநகரமே வெள்ளத்தில் மூழ்கியது.. அதுதான் நாங்கள் பார்த்த பெருமழை.. அதற்குப் பின்னால் தொடர்ந்தாற்போல மழையைப் பார்க்கவே இல்லை..

அதீத வெப்பத்தில் உடலும் மனமும் குளிர்ச்சிக்காக ஏங்கியதில் கதைக்கான களமாக கேரள மாநிலத்தை நான் தேர்ந்தெடுத்தேன்.. தீயாக உனைக் கண்டேன் நாவலின் கதைக் களமாக மொரிஷியஸ் தீவைத் தேர்ந்தெடுத்ததைப்

போல இந்தக் கதைக்கும் ஏதாவது ஒரு தீவைக் கதைக் களமாக வைக்கத்தான் நினைத்திருந்தேன்.. தேடினேன்..

இந்தியாவில் இல்லாத இயற்கையழகா வெளிநாட்டில் இருக்கிறது என்று என் மனம் கேட்ட கேள்வியில் கேரளத்தின் இயற்கையழகின் பக்கம் எனது பார்வை திரும்பியது..

கேரளா..! கடவுளின் தேசம் என்று இதற்கு ஒரு பெயர் உண்டாம்.. இயற்கை தந்த கொடைதான் இந்த அழகான மலைவள நாடு.. இது கடவுளின் தேசம்தான்.. இயற்கை மாறாமல் எங்கெல்லாம் ஆராதிக்கப்படுகிறதோ அங்கெல்லாம் கடவுள் குடியிருப்பார்..

‘இயற்கை’ என்று ஒரு திரைப்படம்.. உங்களில் எத்தனை பேர் அதைப் பார்த்திருப்பீர்கள் என்று தெரியவில்லை.. இருமுறை அதை நான் பார்த்திருக்கிறேன்.. கடலும், கடல் சார்ந்த தீவுமாக அப்படத்தில் இயற்கை கொஞ்சி விளையாடும்.. இயற்கையை மிஞ்சின அழகில்லை..

கேரளத்தில் இயற்கையின் வளம் குன்றாமல் பார்த்துக் கொள்கிறார்கள்.. பாதுகாக்கிறார்கள்.. நான் தபால் துறையில் வேலை பார்த்த போது பயிற்சி காலத்தில் எனது அறைத் தோழியாக கன்னியாகுமரி டிவிஷனைச் சேர்ந்த ‘சாரதா’

இருந்தாள்.. கேரளத்துப் பெண்.. நீண்ட கூந்தல்.. நீளமென்றால் உண்மையிலேயே முழங்கால்களைத் தாண்டிக் கணுக்காலைத் தொடும் நீளம்.. அடர்த்தியாக கன்னங்கரேலென்று இருக்கும்..

அவள் தினமும் தேங்காய் எண்ணையை அப்பு, அப்பென அப்பித் தலைக்கு குளிப்பாள்.. அடர்த்தியான கூந்தலில் தினமும் தலைக்கு தண்ணீர் விட்டால் ஜலதோஷம் பிடித்துக் கொள்ளாதா என்று கேட்டால் சிரிப்பாள்.. கேரளத்துப் பெண்களுக்குத் தலையோடு தண்ணீர் விட்டுக் குளித்தால்தான் குளித்ததைப் போல இருக்குமாம்.. தலையை நனைக்காமல் குளித்தால் தூக்கம் தூக்கமாக வருமாம்.

குளிர் நிரம்பிய மலையாள தேசத்தில் நீண்ட கூந்தலையுடைய கேரளத்துப் பெண்கள் தினமும் தலையை நனைத்துக் குளித்து ஈர கூந்தலுடன் உலா வந்தாலும் அவர்களை ஜலதோஷம் அணுகுவதில்லை..

இது விந்தையல்லவா..!

இயற்கையோடு இயைந்து வாழ்ந்தால் எத்தகைய ஆரோக்கியமான வாழ்வு கிட்டும் என்பதற்கான மிகச் சிறந்த உதாரணம் இது..

சிறு வயதில் பள்ளியில் இன்பச் சுற்றுலா போன போது கேரளத்தின் திருவனந்தபுரத்திற்குப் போயிருக்கிறேன்.. எங்கு பார்த்தாலும் பூங்காக்களைப் போலவே இருக்கும்.. உப்பங்கழிகளில் படகுகள் மிதக்கும்..

அதில் பயணம் செய்யும் பயணிகள் எப்படி இயல்பாக அவ்வாழ்க்கையை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்று ஆச்சரியமாக இருக்கும்..

‘நச நசன்னு இருக்காதா..?’

என் மனதில் தோன்றிய கேள்வியைக் கேட்டிருந்தால் அவர்கள் விசித்திரமாக என்னைப் பார்த்திருப்பார்கள்..

இயற்கையோடு இசைந்து வாழும் மக்கள் கேரளத்து மக்கள்.. அவர்களின் மத்தியில்தான் எனது எட்டுபாக கதை பயணிக்க வேண்டும் என்று நான் முடிவெடுத்தேன்..

கேரளா என்று முடிவாகி விட்டது.. எந்த ஊர் என்று சொல்ல வேண்டுமல்லவா..? மூணாறைச் சொல்லலாம் என்றால் ஏற்கனெவே சில கதைகளை மூணாறில் நடப்பதாகப் படைத்திருக்கிறேன்..

மூணாறு போடிக்கு மிக அருகில் உள்ள மலைபிரதேசம்.. போடி மெட்டில் இருந்தே மலை நாட்டிற்கான குளிர் ஆரம்பமாகி விடும்.. அதனால்தானோ என்னவோ.. மூணாறு எனக்கு மற்றுமொரு கொடைக்கானலாகவே தோன்றியது.

‘கேரளா என்றால் இதுக்கும் மேலே இருக்கனும்..’

ஒவ்வொரு ஊராக ஆராய்ந்தபடி வந்த போது தான் ‘வயநாடு’ என் கவனத்தை ஈர்த்தது... உலகிலேயே சிரபுஞ்சிக்கு அடுத்தபடி அதிகமாக மழை பொழியும் மலைநாடு வயநாடு..!

யோசித்துப் பார்த்தால் நம் நாட்டை வேற்றுமையில் ஒற்றுமை என்று கொண்டாடுவது சாலச் சிறந்தது என்று புரிகிறது..

பாலை வனங்களைக் கொண்ட ராஜஸ்தானும் இந்தியாவில்தான் இருக்கின்றது.. மழை பொழியும் வயநாடும் இந்தியாவில்தான் இருக்கிறது.. என்ன ஒரு அற்புதம்..!

‘காதல் கோட்டை’ திரைப்படத்தில் கதாநாயகன் ராஜஸ்தானில் இருப்பான்.. கதாநாயகி ஊட்டியில் இருப்பாள்.. ‘நலம்.. நலமறிய ஆவல்..’ என்ற பாடலில் ஊட்டியின் குளிரை

அவன் கேட்டபான்.. ராஜஸ்தானின் வெம்மையை அவள் கேட்பாள்..

எத்துனை அழகான தேசம் நம் இந்தியதேசம்..! அதில் கடவுளின் தேசம் கேரள தேசம்..! மலைகள் சூழ்ந்த மலைவளநாடு.. மலையாள நாடு..!

தற்காப்புக் கலைகளின் தாயகம் கேரளா.. இங்கே இருக்கும் 'களரி வித்தை' மிக நூதனமான போர் முறையைக் கொண்டது.. உலகத்தின் பலநாடுகளிலும் இருந்து இக்கலையைக் கற்க கேரளம் வருகிறார்கள்.. 'இந்தியன்' திரைப்படத்தில் இந்தியன் தாத்தா பிரயோகிப்பது இந்தக் கலையைத்தான்.. வர்மக்கலை இது.. எனது 'போர்க்களத்தில் பூவிதயம்..' கதையின் நாயகன் இக்கலையில் தேர்ச்சி பெற்றவன் என்று உருவகித்திருக்கிறேன்..

கிழக்கே மேற்கு தொடர்ச்சி மலை.. மேற்கே அரபிக்கடல்.. தென் கிழக்கில் தமிழ்நாடு.. வடக்கிழக்கில் கர்நாடகம் என்று மேற்கு தொடர்ச்சி மலைத் தொடர்களைக் கொண்ட தேசம் மலையாள தேசம்.. மலையில் வாழும் இம்மக்கள் மலையாளிகள்..

கேரளாவின் அடையாளம் 'கதகளி' நடனம்..

‘மோகினியாட்டம்’ தெய்வம்.. துள்ளல்.. கெண்டை மேளச் சத்தம் புகழ் பெற்றது.

இங்குள்ள கோவில்கள் தனித்த விசேஷ அமைப்புடன் இருக்கின்றன.. ஆற்றுக்கால் பகவதி கோவில், சோட்டானிக்கரை பகவதி கோவில்.. குருவாயூரில் இருக்கும் குருவாயூரப்பன் கோவில்.. திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவில்.. மங்கல தேவி கண்ணகி கோவில் என்று பல கோவில்கள் நமக்கு அருள் பாலிக்கக் குளிர் சூழக் காத்திருக்கின்றன.

நம்ம ஊர் தீபாவளி, பொங்கல் போல இங்கே ஓணம்,...... பண்டிகைகளை வெகு சிறப்பாக கொண்டாடுகிறார்கள்..

திருவிதாங்கூர், கொச்சி, மலபார் என்ற மூன்று சமஸ்தானங்கள் இணைந்ததுதான் கேரள தேசம்.. இயற்கையை மிஞ்சியது எதுவுமில்லை.. நம்ம ஊரில் விவசாயம் இயற்கையைக் கட்டிக் காப்பாற்றிக் கொண்டிருந்தது.. என் அம்மாவழித் தாத்தாவுக்கு தென்னந்தோப்பு இருந்தது.. அதற்கு செல்லும் வழியில் ஓடை ஒன்று ஓடும்.. ஓடையில் முழங்கால் வரை தண்ணீர் ஓடும்..

பாவாடை நனைய ஓடையைக் கடப்போம்.. இருபக்கமும் பச்சைப் பசேலென்ற வயலின் நடுவே அகலமான வரப்பு தென்னந்தோப்பை நோக்கிப் போகும்.. பரந்து விரிந்த தென்னந்தோப்பு.. வெயிலின் சிறு கதிர் கூட விழாமல் அடர்ந்த கருமை நிழல் கொண்டது.. தென்னங்கீற்றுகளின் கூரைகளால் வேயப்பட்ட மாளிகையில் இருப்பதைப் போல இருக்கும்.. தோப்புக்குப் பின்னால் ஆறு ஓடும்.. அதில் நீந்திக் குளித்த அனுபவங்கள் உண்டு.. கினற்றிலும் குதித்து நீச்சலடிப்போம்.. அகண்ட பெரும் கிணறு.. அதனுள்ளே இறங்கப் படிக்கட்டுகள்.. கிணற்றை ஒட்டிய மோட்டார் ரூம்.. பம்புசெட் குழாய் நீர் பொழிந்து வழிந்து ஓட அகலமான பெரிய சிமிண்ட் தொட்டி.. மோட்டார் ரூமுக்கு முன்னால் கிடக்கும் கயிற்றுக் கட்டில்கள்.. தென்னை மரங்களின் ஊடே ஓரிரு மாமரங்களும், கொய்யா மரங்களும் உண்டு.. கொய்யாமரத்தில் தொட்டில் கட்டிப் போடப்பட்ட விஜி (விஜி பிரபு) தொட்டில் அவிழ்ந்து விழுந்தது தெரியாமல் இமை கொட்டி..

“ஆத்தும்மா.. (ஆட்டும்மா..)” என்று சொன்னது இன்றும் நினைவில் இருக்கிறது..

இன்று அந்த ஊரில் தாத்தாவும் இல்லை.. ஓடையின் நீர் வற்றிக் காய்ந்து போய் முள் பாதையாக மாறியிருக்கிறது.. வயலும் தென்னந்தோப்பும் இருந்த இடம் தெரியாமல் மறைந்து பொட்டல் காடாக இருக்கிறது.. ஆறு போன இடம் தெரியவில்லை.. விவசாயம் அழியும் போது அங்கே இயற்கையும் அழிய ஆரம்பித்து விடும்.. பேசாமல் கேரளாவுக்கு குடி பெயர்ந்து விடலாமா..?

**- நட்புடன்**

**முத்துலட்சுமி ராகவன்**

# அத்தியாயம் 169

**ப**ச்சையா, நீலமா என்று இனம் பிரிக்க முடியாததொரு வண்ணத்தில் கடல்நீர் இருந்தது.. வினித்தும் உத்ராவும் கேரளத்தின் அழகில் பிரமித்துப் போயிருந்தார்கள்.. நந்தினி அவர்களை விட அதிகமாக.. பிரமித்தவள்தான்.. அதிகமென்றால் மிக, மிக அதிகம்.. பழகப் பழக கேரளத்தின் வனப்பில் அவள் பிறந்து வளர்ந்தவளைப் போ ல இதெல்லாம் எனக்குத் தெரியுமே என்று சொந்தம் கொண்டாட ஆரம்பித்து விட்டாள்.. அதிலும் உத்ராவின் முன்னிலையில் எனக்கெல்லாம் இது சர்வ சாதாரணம் என்று காண்பித்துக் கொள்வதென்றால் அவளுக்கு அல்வா சாப்பிடுவதைப் போல அவ்வளவு இனிப்பாக இருக்கும்..

“இதெல்லாம் ஜுஜுபி.. நான் இதுக்கும் மேலேயே பார்த்திருக்கேன் தெரியுமா..?” என்று அலட்டிக் கொள்வாள்..

அன்று அதுபோல அலட்டர்கள் எதுவும் இல்லாமல் அமைதியாக படகில் உட்கார்ந்திருந்தவளை ஆச்சரியத்துடன் பார்த்தாள் உத்ரா..

‘இது நந்தினிதானா..?’

படகின் ஜன்னலோரமாக உட்கார்ந்து கடல் நீரையே வெறித்த வண்ணம் இருந்த நந்தினியிடம் அசாத்திய அமைதி இருந்தது.. கடல்நீரில் பாய்ந்து கொண்டிருந்த படகின் முனையை ரசிக்கும் எண்ணமின்றி இருபுறமும் பிரிந்து வழி விட்ட நீர்ப்பாதையை வெளித்துக் கொண்டிருந்தாள்..

“இவளுக்கு என்ன ஆச்சுங்க..?”

உனக்கென்ன ஆனது என்று நந்தினியிடம் ரவிச்சந்திரன் கேட்ட கேள்வியை இவளுக்கு என்ன ஆனது என்று வினித்திடம் கேட்டு வைத்தாள் உத்ரா.. கேரளத்து குளிருக்கு இதமாக மனைவியை ஒட்டி உராய்ந்து ரகசிய சில்மிசங்களை செய்து கொண்டிருந்த வினித்..

“யாரைச் சொல்கிற..?” என்று அசுவராஸ்யமாக கேட்டு வைத்து.. மனைவியைத் தவிர வேறு எந்த மங்கையும் அவனது கண்களுக்குப் புலப்படவில்லை என்பதை நிரூபித்தான்..

பொதுவாக நந்தினியின் அருகில் இருக்கும் போது உத்ராவை யாரும் பார்வையிட மாட்டார்கள்.. உத்ரா அழகுதான் என்றாலும் நந்தினி அவளை விடப் பேரழகு.. அவளுடைய இயல்பான சுபாவமும் ஒப்பனையில் ஆர்வம்

காட்டாததும் அவளுடைய அழகை அதிகப் படுத்துவதால் நந்தினிக்கான கவனிப்புகள்தான் அதிகமாக இருக்கும்.. நந்தினி அதையும் உணர மாட்டாள்.. உத்ரா தெள்ளத் தெளிவாக உணர்ந்து கொள்வாள்.. கல்லூரியிலும்.. தோழிகள் இருவருமாக சேர்ந்து செல்லும் வெளியிடங்களிலும் இதை உணர்ந்தும் நிகழ்வுகள் அதிகமாக இருக்கும்..

அப்படிப்பட்ட நந்தினி அருகில் இருக்க.. அவளை ஏறெடுத்தும் பார்க்காமல் மனைவியின் அழகில் மட்டும் வினித் கண்ணும் கருத்துமாக இருந்ததில் மகிழ்ந்து போனாள் உத்ரா..

‘என் புருஷன் ஏகப த்தினி விரதனாக்கும்..’

அவள் மனதில் கர்வம் பொங்கியது.. அதனுடன் பொங்கிய காதலுடன் செல்லமாக கணவனின் தோளில் அடித்தவள்..

“உங்களுக்குப் பெண்டாட்டியைத் தவிர வேறு யாரையும் கண்ணுக்குத் தெரியாதே..” என்று அதை விடச் செல்லமாக கடிந்து கொண்டாள்..

“எதுக்குத் தெரியனும்..?” கிடைத்த வாய்ப்பை நழுவ விடாமல் இறுக்கிப் பிடித்துக் கொண்ட வினித் மனைவியின் கன்னத்தில் மூக்கால் உரசினான்..

“ஸ்ஸ்.. நந்தினி..!”

கணவனின் செயல் பிடித்தமானதாக இருந்த போதிலும் திருமணமாகாத தோழி அருகில் இருக்கிறாள் என்ற குற்ற உணர்வுடன் கணவனுக்கு அறிவுறுத்தினாள் உத்ரா..

“நந்தினிக்கு என்ன..?”

வினித் தன் காதலில் கண்ணும் கருத்துமாக நெருக்கத்தை அதிகப்படுத்தினான்..

“நந்தினிக்கு என்னவா..? அவளும் நம்மோட அவுட்டிங் வந்திருக்கிறா.. நினைவிருக்கட்டும்..”

அவள் மீதான கணவனின் தேடலில் பெருமிதம் கொண்டவளாக நினைவு படுத்தினாள் உத்ரா..

“மறந்துட்டேண்டி..”

கண்ணியம் காத்து விலகி அமர்ந்தான் வினித்.. கணவனிடம் அந்தக் கண்ணியமும் உத்ராவைக் கவர்ந்தது..

‘இவன் என் புருஷன்.. எனக்கே எனக்கானவன்..’ மனம் குதூகலத்துடன் கூக்குரலிட்டது..

“நந்தினி ஏன் மூட்-அவுட்டா இருக்கிறாங்க..?”

அவள் காலையிலிருந்தே உற்சாகமில்லாமல்தான் இருக்கிறாள் என்பதை அறியாதவனாக வினித் வினவினான்..

“நானும் அதைத்தான் உங்ககிட்டக் கேட்டேன்.. நீங்க என் கேள்வியைத் திருப்பி என்கிட்டேயே கேட்கறிங்களா..?” சிணுங்கினாள் உத்ரா..

உத்ராவின் சிணுங்கலில் வினித் நந்தினியை மறந்து போனவனாக நெருங்க முற்பட..

“நீங்க இருக்கீங்களே..” என்று சந்தோஷமாக அலுத்துக் கொண்டு விலகி நந்தினியிடம் போனாள் உத்ரா..

பக்கத்தில் உத்ரா வந்து உட்கார்ந்ததைக் கூடக் கவனிக்காமல் கரையோர தென்னைமரங்களை உன்னிப்பாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள் நந்தினி..

“எத்தனை தென்னை மரங்கள் இருக்குன்னு கணக்கெடுக்கிறயா..?” தோழியின் தோளில் கை வைத்துக் கேட்டாள் உத்ரா.. விசுக்கென நந்தினி திரும்பிப் பார்த்தாள்..

'யார் நீ..?' என்று கேட்ட அந்தப் பார்வையில் திகைத்துப் போனவளாக..

“நந்தினி..?” என்று தோழியின் தோளைப் பிடித்து உலுக்கினாள் உத்ரா..

“என்..என்னடி..?” தன்னுணர்விற்கு மீண்டாள் நந்தினி..

“என்னவா..? முழிச்சுக்கிட்டேத் தூங்கறியா..? நீயெல்லாம் அதைப் பண்ண மாட்டியே.. இருபத்தி நாலு மணி நேரமும் கிளாஸ் எடுத்தாலும் அசராம பாடத்தைக் கவனிக்கிற மாணவி சிகாமணின்னு நம்ம காலேஜில நல்ல பெயர் வாங்கி எங்க வயித்தெரிச்சலைக் கொட்டிக்கிட்ட புண்ணியவதியாச்சே நீ..”

“அது.. அப்போ..”

“இப்ப மட்டும் என்ன வந்திருச்சாம்..?”

தோழியின் விசாரிப்புக்கு காதல் வந்து விட்டது என்ற உண்மையைச் சொல்ல முடியாமல் மென்று விழுங்கினாள் நந்தினி..

“என்னவோ போடி.. நீ நீயா இல்லை.. அது மட்டும் தெளிவாத் தெரியுது.. இது காலேஜும் இல்லை.. இங்க யாரும்

பாடம் எடுக்கவும் இல்லை.. கடவுளோட தேசம்ன்னு உலகத்தில் இருக்கிற அத்தனை மக்க ளும் கொண்டாடற கேரளத்தில இருந்துக்கிட்டு என்ஜாய் பண்ணாம முழிச்சுக்கிட்டேத் தூங்கற.. உனக்குத்தான் செடி, கொடி, கடல், மலை, அருவின்னா அவ்வளவு பிடிக்குமே.. இயற்கையை ரசிக்கனும்னா பசியைக் கூட மறந்துருவியே.. நீயாடி கோழிக்கோடு கடலில, போட் ஜர்னியில, முழிச்சுக்கிட்டேத் தூங்கற..?"

தோழியை விசித்திரமாகப் பார்த்தாள் உத்ரா..

'காலையிலே கூட நல்லாத்தானே இருந்தா..?

வினித்திடம் நான் மாட்டிக்கிட்டு முழிச்சதை ரசிச்சவ.. ஆபத்பாந்தியாய் கை கொடுத்து சுறுசுறுப்பாக் கதை சொல்லி என்னை ரிலீஸ் பண்ணினாளே.. அப்புறம் என்ன ஆச்சு..?'

தோழியை நினைத்துக் கவலை ஏற்பட்டது உத்ராவுக்கு.. எது தொலைந்தாலும் நந்தினியின் உற்சாகம் தொலைந்து விடக் கூடாது.. வற்றாத உற்சாகம்தான் நந்தினியின் அடையாளம்.. அது குறையக் கூடாது..

‘பட்.. இவ மனசில என்ன இருக்குன்னு சொன்னாத்தானே அதுக்கான சொலுஷனைச் சொல்ல முடியும்..?’

நந்தினி உத்ராவிடமிருந்து எதையும் மறைத்ததில்லை.. அவளுடைய திருமணத்தைப் பற்றிய குமுறலைக்கூட அவள் உத்ராவிடம் மறைக்காமல் பகிர்ந்து கொண்டாள்.. பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிக்க வழி காட்டு என்று அழுதாள்.. உத்ரா வழி காட்டிய போது அதைப் பற்றிக் கொஞ்சம் கூட சந்தேகப் படாமல் தோழி காட்டிய வழியை இறுக்கிப் பிடித்துக் கொண்டு மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் ஏறினாள்..

‘அந்த நந்தினியா இது..?’

மனதில் இருப்பதை மறைக்கத் தெரியாத நந்தினி எங்கே போனாள் என்று உத்ராவுக்கு ஆயாசமாக இருந்தது.. இந்த நந்தினி வேறு ஒருத்தி.. உள்ளத்தை தோழியிடம் மறைப்பவள்..

“உன் மனசில் எந்த பூதம்டி ஒளிஞ்சுக்கிட்டு இருக்கு..? சினந்தாள் உத்ரா..”

‘காதலெனும் பூதம்..?’

# எண்ணியிருந்தது ஈடேற... 6

உத்ரா சரியாகத்தான் கேட்டிருக்கிறாள் என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. காதல் ஒரு பூதம்தான்.. எதற்கும் அயராத நந்தினியை துவம்சம் பண்ணிக் கொண்டிருக்கிறதே..

ஆணின் காதலுக்கு அடி பணியாத வரைக்கும்தான் பெண் என்பவள் மகா சக்தியாக நிமிர்ந்து நிற்க முடியும்.. உலகத்தையே வென்று நிற்கும் மாவீரனைக்கூடத் துச்சமாகப் பார்க்க முடியும்.. அதுவே அந்த ஆணின் மீது அவள் காதல் கொண்டு விட்டால் அவன் காலடியில் வீழ்ந்து விடுவாள்.. அனைத்தும் நீயே என்று சரணடைந்து விடுவாள்.

காதல் என்பது அடிமைப் படுத்துவது.. அது ஆணாக இருந்தாலும் சரி.. பெண்ணாக இருந்தாலும் சரி.. காதலில் வீழ்ந்தவர்கள் ஒருவரிடமொருவர் அடிமையாகியே தீருவார்கள்..

நந்தினியும் அந்நிலையில்தான் இருந்தாள்.. விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக்குருவியாக இருந்தவள்.. சிறகுகளை விரிக்க முடியாமல் சிறை பட்டிருந்தாள்..

‘காலையில் இவ இப்படியில்லையே..’

அதற்கடுத்து என்ன நேர்ந்திருக்கக் கூடும் என்று வரிசைப் படுத்தி யோசித்துப் பார்த்தாள் உத்ரா.. அவளறிந்த வரை

நந்தினிக்கும் ரவிச்சந்திரனுக்கும் இடையே வாக்குவாதம் கூட ஏற்படவில்லை..

‘நேத்துக்கூட ரெண்டு பேரும் சண்டையும் சச்சரவுமாக இருந்தாங்க.. இன்னைக்கு நல்ல மூடில்தானே பேசிக்கிட்டு இருந்தாங்க.. அதுக்கப்புறம் என்னவாகி யிருக்கும்..?’ ஆழ்ந்து யோசித்தாள் உத்ரா..

‘ரவி சார் கூட இன்னைக்கு ஜாயின் பண்ணிக்கலையே.. அவர் கூட வந்திருந்தாலாவது ஏதாச்சும் சொல்லியிருப்பார்.. இவ மூஞ்சியைத் தூக்கி வைச்சுக்கிட்டு உட்கார்ந்திருக்கான்னு சொல்லலாம்.. அதுவும் இல்ல..’

சட்டென்று அது உறைத்தது உத்ராவுக்கு..

‘ஒருவேளை.. ரவி சார் கூட வராததினாலதான் இவ இப்படி மூட்-அவுட் ஆகி உட்கார்ந்திருக்காளோ..’

நம்ப முடியாமல் தோழியைப் பார்த்தாள் உத்ரா.. எதையோ தொலைத்து விட்டதைப் போன்ற ஏக்கம் நந்தினியின் முகத்தில் படர்ந்திருந்தது.. இந்த ஏக்கத்தை இப்போதுதான் நந்தினியின் முகத்தில் பார்க்கிறாள்.. என்பதை மனதுக்குள் குறித்துக் கொண்டாள் உத்ரா..

‘என்னடா இது.. இவகூட வரலைன்னா ரவி சார் மூட்-அவுட் ஆகிறார்.. தனியாய் ஏன் எங்ககூட ஜாயின் பண்ணினான்னு லெப்ட் அண்ட் ரைட் வாங்கியிருக்கார்.. இன்னைக்கு இவளே எதையோ தொலைச்சுட்டவளைப் போல மருகி மருகி முழிச்சுக்கிட்டு இருக்கிறா.. அன்னைக்கு ரவி சார் இல்லாம இவ மட்டும் தனியா எங்ககூடப் வந்தப்ப சந்தோஷமா துள்ளி குதிச்சுக்கிட்டுச் சிரிச்சுப் பேசிக்கிட்டு இருந்தாளே..’

முதல்நாள் மாலையில் நந்தினியிடம் அவள் நடத்திய குறுக்கு விசாரணையை நினைத்துப் பார்த்தாள் உத்ரா..

‘உன் மனசில காதல் வந்திருச்சுன்னு சொன்னதுக்கு இல்லவே இல்லைன்னு சாதிச்சாளே..’

இப்போதும் அதைத்தான் செய்வாள் என்று அலுத்துக் கொண்டாள் உத்ரா.. உன் மனசுக்குள்ளே காதல் வந்துச்சா என்று கேட்டால் ‘வந்தல்லோ, வந்தல்லோ..’ என்று தலையை ஆட்டி ஒப்புக் கொள்ளவா போகிறாள்..? ‘இல்லையல்லோ.. இல்லையல்லோ’ என்று பொய் சொல்லப் போகிறாள்.. அந்தப் பொய்யை ஏன் கேட்க வேண்டும்..

நந்தினியைப் பொய் சொல்ல வைக்கும் கொடுமையைச் செய்யாமல் ரவிச்சந்திரனைப் பற்றி அவளிடம் பேச ஆரம்பித்தாள் உத்ரா..

‘அசோகவனத்தில சீதையை யார்ன்னு கண்டு பிடிக்க அனுமார் இந்த டெக்னிக்கைத்தான் யூஸ் பண்ணினாராம்.. மரத்து மேல உட்கார்ந்துக்கிட்டு ராமனைப் பற்றிச் சொல்ல ஆரம்பித்தாராம்.. அதில் சீதை மகிழ்ந்து போய் ‘யார் என் சுவாமியின் கதையைச் சொல்வது..’ என்று ஆஞ்சநேயரை அடையாளம் கேட்டாளாம்..’

உத்ராவின் சிந்தனை விரிந்ததில்..

‘கடவுளே..!’ என்று கலவரமானாள் உத்ரா..

அவள் வினித்தின் மனைவி.. புதிதாகத் திருமணமான இளம் மனைவி.. தேநிலவிற்கு வந்திருப்பவள்.. உலகத்திலேயே சிறந்த அழகி நீதான் என்று கணவனால் ஆராதிக்கப் படுபவள்..

‘நான் என்ன லேடி ஆஞ்நேயரா..?’

எப்பேற்பட்ட உவமானம் என்று நொந்து போனாள் உத்ரா.. அவளுடைய கணவனோ ஏகபத்தினி விரதன்..

உத்ராவின் உபாசகன்.. அவனே ராமன்..! உத்ராவே சீதை..! அந்தப் போஸ்டை நந்தினிக்கு அளித்து.. கிருஷ்ண லீலா புரிந்து கொண்டிருக்கும் ரவிச்சந்திரனை ராமனாக்கி.. இவள் லேடி ஆஞ்சநேயராகிக் கொண்டிருக்கிறாளே.. இவளுக்கு என்ன பைத்தியமா பிடித்து விட்டது..

‘ஃபிரண்டு மேல பாசம் இருக்க வேண்டியதுதான்.. ஆனா இந்த அளவுக்கு இருக்கக் கூடாது.. இது ஒண்ணும் அசோகவனமில்லை.. கோழிக்கோடு.. நந்தினி மரத்தடியில் உட்கார்ந்திருக்கலை.. போட்டில் உட்கார்ந்திருக்கிறா.. ஸோ.. இவ நந்தினி.. நான் சாட்சாத் உத்ராவேதான்.. வினித்தின் ஆசைப் பெண்டாட்டி.. லேடி ஆஞ்ச நேயரில்லை..’

மனதுக்குள் உருப் போட்டு மனப்பாடம் செய்து கொண்டு நந்தினியிடம் பேச்சை ஆரம்பித்தாள்..

“ரவி சார் சூப்பர் மேனில்ல..”

ஒற்றை வரியைத்தான் சொல்லியிருப்பாள்.. அதில் நந்தினியின் முகத்தில் உயிர்ப்பு வந்து விட்டது.. கண்களில் ஒளி வெள்ளம் பாய ஜீவசக்தி கிடைக்கப் பெற்றவளாக தோழியை ஏறிட்டாள் நந்தினி..

# அத்தியாயம் 170

**'முன்னம் அவன் நாமம் கேட்டேன்**

**மூர்த்தி அவனுடைய வண்ணம் கேட்டேன்..'**

**இ**ந்தக் கவி மிகு வரிகளுக்கான நாட்டியத்தை செஞ்சித் திருவிழாவில் பார்த்திருக்கிறாள் உத்ரா.. இதற்கான அபிநயத்தை அந்த ஆடலரசி அபிநயித்த போது கூட இதுபோன்ற பரவச அலைகள் வெளிப்படவில்லை.. நந்தினியின் முகத்தில் அப்படியொரு பரவசம் வெளிப்பட்டது..

"ஆங்.. அவர் சூப்பர் மேன்தான் போ.."

என்னவோ முறைமாப்பிள்ளையைப் பற்றிச் சொல்வதைப் போல முகத்தில் செம்மை படற வெட்க உதட்டுச் சுழிப்புடன் சிருங்காரமாக சிணுங்கினாள் நந்தினி..

'அடிப்பாவி நந்தினி.. உனக்குக்கூட இப்படி ரொமாண்டிக் சேட்டை பண்ணத் தெரியுமா..?' உத்ரா அயர்ந்து போய் விட்டாள்..

"ஆ ஆள் பெரிய கள்ளனாக்கும்.." என்றாள் நந்தினி..

"ஆ ஆளா..? அது யாருடி.. அ,ஆ,இ,ஈ,உ,ஊ ஆளு..?"

“ஆ ஆளுதான்.. கேரளத்து தேசத்திண்ட வல்லிய சுந்தர திவ்ய புருஷன்..”

“என்னது..? திவ்யாவோட புருஷனா..?”

“அடி வாங்கப் போறடி..”

“எதுக்கு..?”

“ஆ ஆளை எவளோ ஒரு திவ்யாவோட புருஷனாக்கறதுக்கு.. திவ்ய புருஷனுக்காக திரிலோக சுந்தரியே இறங்கி வருவாளாக்கும்.. கேட்டோ..”

“திரிபுர சுந்தரியா..?”

“அது அம்மனாக்கும்.. ஈ பெண்குட்டி அழகியாக்கும்..”

“இந்தாப் பாரு.. ஒழுங்காப் பேசறதுன்னா என் கூடப்பேசு.. இல்லேன்னா நீ பாட்டுக்கு நீயுண்டு உன் மௌனவிரதம் உண்டுன்னு இரு.. நான் என் வினித்தோடு கலந்துரையாடப் போறேன்..”

“எவரைப் பத்தி..?”

“எந்தச் சுவரைப் பத்தியும் இல்ல..”

“ஆ திவ்ய சுந்தர புருஷனைப் பத்தியோ..?”

“ஈ மலையாள வளநாட்டு திவ்ய சுந்தர புருஷனைப் பத்தி என் புருஷன்கிட்டப் பேசினேன்னு வைய்யி.. அவர் கோர்ட்படி ஏறாமலே டைவர்ஸ் கொடுத்துட்டு.. கூறாம சன்யாசம் வாங்கிக்கிட்டு ஓடியே போயிருவார்.. இந்த பாய்சன் எக்ஸாம்கெல்லாம் நான் தயாராக இல்லை..”

“உனக்குக் கோர்ட்படி ஏறாம டைவார்ஸ் கொடுப்பாருன்னு சொல்லு.. கேட்டுக்கறேன்.. அது என்ன, அண்ணா கூறாமலே சன்யாசம் வாங்கிக்கிட்டுப் போயிருவாருன்னு அவ்வளவு கன்ஃபர்மா சொல்ற..? கிடைச்சது சான்ஸ்ன்னு ஏதாச்சும் ஒரு மலையாள சுந்தரியை லவட்டிக்கிட்டுப் போவாருடி..”

“அவர் லவட்டலைன்னாலும் நீ லவட்ட வைச்சிர மாட்ட..? யாரு நீ..?”

“நான் யாருடி..?”

“சிநேகித துரோகி..!”

“என்ன வார்த்தை சொல்லிட்ட உத்ரா..! நீயே இப்படிச் சொன்னா என் மனசு தாங்குமா..?”

“எல்லாம் தாங்கும்.. தாங்கும்..”

“அப்படிங்கற..?”

“ஆமாங்கிறேன்..”

‘ரவி சார்..’ என்ற ஒற்றைச் சொல்லில் உயிர்த்தெழுந்து விட்ட தோழியிடம் மீண்டு விட்ட உற்சாகத்தை அவதானித்தபடி சொன்னாள் உத்ரா.. நந்தினியின் மனதிலும் மயக்கம் வருமா ..?

‘வந்திட்டதைப் போலதான் சிம்டம்ஸ் சொல்லுதே..’

“உத்ரா..”

“ம்ம்ம்..”

“உத்ரா..”

“சொல்லுடி..”

“உத்ரா..”

“அடச்சீ சொல்லு.. நான் என்ன ஏழுகடல் ஏழுமலை தாண்டி அந்தப் பக்கமாவா நின்னுக்கிட்டு இருக்கேன்..? உன் பக்கத்திலேதானே நின்னுக்கிட்டு இருக்கேன்..? அப்புறமும் ஏண்டி உத்ரா.. உத்ரான்னு அனத்தற..? பேச நினைக்கிறதைப் பேசித் தொலைடி பிசாசே..”

“அது எப்படி அவரை சூப்பர் மேன்னு கண்டு பிடிச்ச..?”

இதைச் சொல்லும் போது நந்தினியின் முகத்தில் ஓர் பரவசம் ஒளிர்வதை கண்டு பிடித்தாள் உத்ரா.. நந்தினியின் முகம் சிவப்பதை, கண்கள் மின்னுவதை.. உதடுகள் துடிப்பதை, தடுமாற்றம் கொள்வதை.. இன்னும் என்னென்னவோ இனம் புரியாத உணர்வுகளுடன் நந்தினி போராடுவதை கண்டு பிடித்தாள்..

“எவரைச் சொல்ற..?”

வேண்டுமென்றே கேட்டாள்.. இது ஓடவிட்டு விரட்டிப் பிடிக்கும் யுக்தி..! உள்ளிருக்கும் உணர்வுகளை பேச்சுத் தூண்டிலில் சிக்க வைக்கும் தந்திரம்.. மறைந்திருக்கும் பூனைக்குட்டியை ‘மியாவ்’ என வெளியே குதிக்க வைக்கும் வியூகம்..

கத்தரிக்காய் முற்றினால்தான் கடைத்தெருவுக்கு வர வேண்டுமா என்ன..? பறிக்கும் விதத்தில் பறித்தால் பிஞ்சுக் கத்தரிக்காய்கள் கூட வீடு தேடி வந்து விடும்..

“அதுதாண்டி அவர்..”

“அவர்ன்னா..?”

“நான் யாரைச் சொல்கிறேன்னு உனக்குத் தெரியலையா..?”

“தெரியலையே.. தெரிஞ்சா ஏண்டி கேட்கப் போறேன்..?”

“அவர்தாண்டி..”

“எவர்தாண்டி..?”

மறுபடியும் ஆரம்பத்துக்கே வந்தாள் உத்ரா.. சுற்றி விளையாட நினைத்து விட்டால் ‘ஐயோ பாவம்..’ பார்க்கக் கூடாது.. அப்படிப் பார்த்தால் வேலைக்கு ஆகாது.. தும்முவதைக் கூடத் தோழியிடம் பகிர்ந்து கொள்பவள் மனதுக்குள் ரகசியமாய் காதல் பயிரை வளர்ப்பாளா..? அதை கண்டு பிடிக்காவிட்டால் அவளென்ன தோழி..!

“உத்த்.. த்த்.. த்த்.. ரா..”

“இப்படி நீட்டி முழக்கி ராகம் போட்டா ஆச்சா..? எதைப் பேசினாலும் தெளிவாப் பேசிப் பழகுடி..”

“உனக்குத் தெரியாது பாரு.. நான் நம்பிட்டேன்..”

“அப்பாடி..! என் ஃபிரண்ட் என்னை நம்பிட்டா.. இனி நான் நிம்மதியா என் புருஷனிடம் கடலை போடப் போகலாம்..”

“அடிப்பாவி..!”

“எதுக்கு இந்த ரியாக்ஷன்..? என் புருஷன்கிட்டத்தானே கடலை போடப் போறேன்னு சொன்னேன்..? உன் ஆள்கிட்டக் கடலைச் சாகுபடி பண்ணப் போறேன்னு சொன்னேனா..?”

“சொல்லித்தான் பாரேன்..”

சண்டைக் கோழியாய் சிலிர்த்தெழுந்தாள் நந்தினி.. கள்ளச் சிரிப்பும், கள்ளப் பார்வையுமாக கோழியை உசுப்பிவிட்டு வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தாள் உத்ரா.. அவளுக்குத் தெரியும்.. நந்தினியை உசுப்பி விட்டால் என்ன ஆகுமென்று..

“இந்தா.. சொல்லிட்டேன்.. உன் ஆள்கிட்டக் கடலை போடப் போறேன்.. என்னடி செய்வ..?”

“எதையும் செய்வேன்..”

“ஃபார் எக்ஸாம்பிள்..?”

“கொலையும் செய்வேன்..”

“கொலையும் செய்வாள் தோழி..! நல்லா வருவேடி நீ..”

“காலையிலே நீ கடலை போட்டப்ப வினித் அண்ணா வந்து நீ மாட்டிக்கிட்டயே.. பட்டும் உனக்குப் புத்தி வரலை

பாரு.. ஐயோ பாவம்.. நம்ம உயிர் தோழியாச்சேன்னு காப்பாத்தினேன் பாரு.. என்னைச் சொல்லனும்..''

''நான் கடலை போட்டேனா..? அதுவும் உன் ஆள்கிட்டயா..? வினித் வந்து கோபப்பட்டாரா..? நீ என்னைக் காப்பாத்தினயா..? எப்போடி..?''

''அதான் காலங் கார்த்தாலேன்னு சொன்னேனில்ல.. உன் செவிட்டுக் காதில விழலையா..?''

''என் காது.. செவிட்டுக் காது..?''

''ஆமாம்.. ஆமாம்.. ஆமாம்.. என்னடி செய்வ..?''

''எதையும் செய்ய மாட்டேன்.. பிழைத்துப் போ.. காலையில நான் உன் ஆளிடம் கடலை போடலையே.. ரவி சார்கிட்டயில்ல பேசிக்கிட்டு இருந்தேன்..?''

''அம்பட்டு நேரமாடி பேசுவ..? அதான் அண்ணன் உன்னைக் காய்ச்சு காய்ச்சுன்னு காய்ச்ச வந்தார்..''

''அதில உனக்கெதுக்குடி இம்புட்டுக் காண்டு..?''

''எதில..? அண்ணா உன்னை காய்ச்ச வந்திதிலயா..? கனவு காணாதே.. அதில எனக்கு வளர சந்தோஷம் உண்டாயி..''

“உண்டாகும்.. உண்டாகும்.. உன்னைப் போல ஃபிரண்ட் கிடைக்க நான் கொடுத்த்..து வைச்சிருக்கனும்..”

“இதையே நானும் சொல்லலாமில்ல..?”

“ஏன் சொல்லனும்..? எதுக்குச் சொல்லனும்ங்கிறேன்.. நான் ரவி சார்கிட்டத்தானே பேசினேன்..? அதுக்கு என் ஹஸ்பெண்ட் காண்டானா அதில ஒரு அர்த்தமிருக்கு.. நீயேண்டி காண்டாகிற..?”

உத்ராவின் கிடுக்கிப்பிடிக் கேள்விக்குப் பதிலளிக்க முடியாமல் திணறினாள் நந்தினி.. மனதில் பொங்கும் காதல் உணர்வுகள் பிரத்யேகமானவை.. அதைப் பகிர்ந்து கொள்ளுதல் அத்தனை எளிதல்ல.. அதே தருணத்தில் சந்தோஷ நதித் தீரத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதை மறைப்பதும் அத்தனை சுலபமல்ல.. அகத்தின் மகிழ்வை முகம் காட்டிக் கொடுத்து விடும்.. எப்பேற்பட்ட சாதுர்யவாதியாக இருந்தாலும் காதலில் வீழ்ந்தால் தங்களைக் கட்டுப் படுத்திக் கொள்ள முடியாமல் தடுமாறித்தான் போவார்கள் எனும் போது நந்தினி எம்மாத்திரம்..?

“நான்.. நான்.. நான்..” என்று தடுமாறியவள்.. “நான் ஏண்டி காண்டாகனும்..?” என்று உத்ராவிடம் சண்டைக்கு வந்தாள்..

“அடங்குடி..” புறங்கையால் நந்தினியின் கோபத்தை விரட்டி விடுவதைப் போலப் பாவனை செய்த உத்ரா நந்தினியை ஏற இறங்க அடையாளம் பார்ப்பதைப் போல பார்த்து வைத்தாள்..

“என்னடி.. புதுசாப் பார்க்கிறதைப் போலப் பார்க்கிற..?”

“இன்னைக்கு.. இல்லையில்ல.. நேரத்தில இருந்தே நீ ஒரு மார்க்கமா புதுசாத்தாண்டி இருக்கிற.. அதான் இவ நம்ம நந்தினிதானான்னு அடையாளம் பார்க்கிறேன்..”

“பார்ப்ப.. பார்ப்ப.. ஏன் பார்க்க மாட்ட.. கேரளாவுக்கு ஹனிமூன் கொண்டாட வந்தவ.. ஹஸ்பெண்டையும், சீனரியையும் பார்க்காம என்னைப் பார்க்கிறாளாம்.. போவியா..”

“எங்கே போகச் சொல்கிற..? ரவி சார் வேலையிருக்குன்னு தேங்கிக்கிட்டாரே.. ஹோட்டலில் வெயிட் பண்றேன்னு சொல்லியிருக்காரே.. நீ சொன்னாலும்

சொல்லலைன்னாலும் அவரைப் பார்த்துத்தானே ஆகணும்..? லன்ச்சில பார்ப்பேன். . பேசுவேன்..”

உத்ரா சொல்லச் சொல்ல நந்தினியின் முகத்தில் கடுகு பொரிந்தது.. ரவிச்சந்திரனைப் பற்றி உரிமையோடு உத்ரா பேசுவதை அவள் விரும்பவில்லை..

“ஏண்டி.. உனக்கு உன் ஹஸ்பெண்டோட நினைவே வராதா..?”

சுள்ளெனக் கேட்டு விட்டாள்.. அதுநேரம் வரைக்கும் மனைவி வருவாள், வருவாள் என்று பொறுத்துப் பார்த்து பொறுமையிழந்து போன வினித் அவர்கள் பக்கமாக வந்தான்.. நந்தினி கேட்ட கேள்வி அவன் காதுகளில் விழுந்து விட்டதில் மனைவியை ஆழ்ந்து பார்த்தான்.. உத்ரா அடித்தாளே ஒரு அந்தர் பல்ட்டி..!

நந்தினியே அயர்ந்து விட்டாள்..

“போடி நந்தினி.. நான் இம்புட்டு நேரமும் என் வினித்தைப் பத்தி மட்டும்தானே பேசிக்கிட்டு இருந்தேன்..? இருபத்தி நாலு மணி நேரமும் எனக்கு என் புருஷனோட நினைவுதானே..”

விழிகளைச் சுழற்றி கள்ளூறும் காதல் பார்வையைப் பார்த்துக் கணவனை சொக்க வைத்து விட்டாள் உத்ரா..

நந்தினி பக்கத்தில் இருந்ததால் உத்ரா தப்பிப் பிழைத்தாள்.. இல்லையென்றால் வினித் இறுக்கி அணைத்து மனைவிக்கு எக்கச்சக்க உம்மாக்களைப் பரிசளித்திருப்பான்..

'அடிப்பாவி..!' நந்தினி இமை கொட்டி விழித்தாள்..

'என் பெண்டாட்டியின் காதலைப் பற்றி என்னன்னு நினைத்த..?' நந்தினியைக் கர்வப் பார்வை பார்த்தான் வினித்..

"அண்ணா.." "என்ன..?"

"சாய்ச்சுப்புட்டா அண்ணா.."

"ஹா.. ஹா.."

மகிழ்ந்து போனான் வினித்.. கணவனுக்குத் தெரியாமல் நந்தினியிடம் கண்சிமிட்டிய உத்ரா..

"எப்புடி..?" என்று கிசுகிசுத்தாள்..

"எங்கேயிருந்துடி இம்புட்டு வித்தையைக் கத்து வைச்சிருக்க..?"

“இதெல்லாம் சொல்லிக் கொடுத்து வர்றதில்லை.. தானாய் வருகிறதுதான்.. இப்ப ஒளிவு, மறைவு உனக்குள்ளே தானா வந்திருக்கில்ல.. அது மாதிரிதான்..”

“ஒளிவு, மறைமா..? நானா..?”

“அட.. அட.. அட..! சீன் போடாதேடி.. என்னை என்ன பைத்தியக்காரின்னு நினைச்சிட்டயா..?”

“நீ பைத்தியக்காரியில்லைடி.. வேலை மெனக் கெட்டு உன்னை வயநாட்டில ஹனிமூன் கொண்டாட வாடின்னு வருந்தி வருந்தி அழைத்தேன் பாரு.. நான்தான் பைத்தியக்காரி..”

“ஊஹும்..?”

உத்ரா மர்மச்சிரிப்புடன் புருவங்களை உயர்த்தி இறக்கி..

***“அடிப்போடி.. பைத்தியக்காரி..!***

***நான் அறிந்தவள்தான்..***

***உன்னைத் தெரிந்தவள்தான்..”***

என்று பாடினாள்.. மனைவி பாடுகிறாள் என்பதில் மகிழ்ந்து போனான் வினித்..

"அண்ணா... இது காதல் பாட்டில்லை.."

எரிச்சலுடன் சுட்டிக் காட்டினாள் நந்தினி.. அப்படியா என்று அவன் யோசிக்கும் முன்..

***"என் மனது ஒன்றுதான்..***

***உன் மீது ஞாபகம்..***

***வான் நிலவு ஒன்றுதான்..***

***வான்மீது சத்தியம்.."***

என்று காதல்ரசத்தை உத்ரா பிழிந்து விட வினித் கள்ளுண்ட வண்டானான்..

'அடிப்பாவி..!' இரண்டாம் முறையாக இமை கொட்டினாள் நந்தினி..

"கள்ளி..! உன் மனசில இருக்கிறதை வெளியில் சொல்லாம என்னையா மாட்டி விடப் பார்க்கிற..?"

உத்ரா கணவனுக்குத் தெரியாமல் ஒற்றை விரலை உயர்த்தி தோழியை எச்சரித்தாள்..

# அத்தியாயம் 171

“**யா**ரு நானு..?”

நந்தினியின் முன்னால் எச்சரிப்பதைப் போல ஒற்றை விரலை உயர்த்திய உத்ரா அதை கொக்கி போல மடக்கிக் காட்டி உதட்டைச் சுழித்தபடி..

**“என்னை நீயும்..**

**மாட்டி விட முடியுமா..?**

**அது முடியுமா..?**

**நான் நீ நினைக்கும்**

**உத்ரா இல்லை.. தெரியுமா..?**

**அது தெரியுமா..?”**

என்று பழைய பாடல் ஒன்றின் ராகத்தில் வார்த்தைகளை இட்டுக் கட்டி எடுப்பாக பா டிக் காட்டினாள்..

“கரை வந்திருச்சு..” மனைவியின் கைவிரல்களோடு விரல் கோர்த்தான் வினித்..

இப்படி ரவிச்சந்திரனின் விரல்களோடு விரல் கோர்த்து என்று நடப்பது என்று ஏக்கப் பட்டாள் நந்தினி..

சடுதியில் தோழியை மறந்தவளாக கணவனோடு உரசியபடி ரகசியம் பேச ஆரம்பித்த உத்ரா..

“அட.. ரவி சார் வந்திருக்காரே..” என்று ஆச்சரியப்பட்டாள்..

அவளும் வினித்தும் போட்டை விட்டு இறங்கியிருந்தார்கள்.. நந்தினி அப்போதுதான் போட்டிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தாள்..

ரவிச்சந்திரன் வந்திருக்கிறான் என்று உத்ரா சொன்னதும்..

‘எங்கே அவன்..? எங்கே அவன்..?’ என்று மனது பரபரக்க விழிகளால் அவனைத் தேடினாள்.. கரையிலிருந்த அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. அவனைத் தேடிய அவளது

விழிகளைச் சந்தித்தவனின் ஆழ்ந்த பார்வையில் நந்தினிக்குள் எதுவோ நிகழ்ந்தது.. அவர்கள் இருவரின்

பார்வைகளும் பின்னிப் பிணைந்தன.. அவனைத் தேடிய அந்தப் பார்வையில் ரவிச்சந்திரனின் மனதில்..

‘எங்கே நானென்று தேடட்டும் என்னை.. சிந்தாத முத்தங்கள் சிந்த..’ என்ற பாடல்வரிகள் ஒலித்தன..

இதோ அவன் விரும்பிய காரிகையின் கண்கள் அவன் எங்கேயென்று தேடி விட்டன.. அவள் மனதை அவன் ஜெயித்து விட்டான்..

ஓர் ஆண்மகனாக இதைவிட மகத்தான வெற்றி வேறு எதுவும் இருக்க முடியாது என்று அவன் கர்வம் கொண்டான்..

எவராலும் கட்டுப்படுத்த முடியாத காட்டாற்றின் சுபாவம் கொண்டவள்.. இயற்கையான யௌவன அழகு தன்னில் நிரம்பிக் கிடந்தும் அதை உணராத இயல்புடையவள்.. மனதில் உள்ளதை மறைக்கத் தெரியாதவள்.. மற்றவரைக் கவர முற்படாதவள்.. காணக் கிடைக்காத தோஹினூர் வைரம் போன்றவள்.. அருவியெனக் குதித்தோடும் அழகு தேவதை..!

அப்படியொரு பெண்ணை தன் வாழ்வின் போக்கில் அவன் சந்தித்தான்.. முதல் பார்வையிலேயே அவனை வசீகரித்தாள் அந்த வசீகரி..! அதை உணராத குழந்தைத் தனத்துடன் இருந்தாள்.. அவள் பணக்காரக் குடும்பத்தில்

பிறந்தவள்தான்.. அவனோ அவள் அண்ணாந்து பார்க்கும் உயரத்தில் உள்ள கோடிஸ்வரன்.. ராஜ பாரம்பர்யப் பேரழகன்.. உலகம் முழுவதும் அறியப்பட்ட இளந்தொழிலதிபன்... நட்சத்திர அந்தஸ்தைக் கொண்டவன்..

இப்படிப்பட்டவனின் பின்புலம் அறியாமல் இயல்பாக அவனுடன் அவள் உரையாடினாள்.. பின்புலத்தை அறிந்த பின்னால் பிரமிப்பாள் என்று நினைத்தால்.. அவள் முன்பைவிட படு இயல்பாக அவனுடன் உரையாட ஆரம்பித்தாள்.. ஒருபோதும் நீ இவ்வளவு பெரிய ஆளா என்று விழி விரித்ததில்லை.. எவராலும் அணுக முடியாத உச்சத்தில் இருப் பவனின் பக்கத்தில் அவள் இருக்கிறாள் என்று பெருமிதம் கொண்டதில்லை.. அவனது அரண்மனையையும், யாழ் ஹோட்டல்களையும், பேக்டரிகளையும், கம்பெனிகளையும் கண்டு பிரமித்ததில்லை..

இப்படிப்பட்டவனா நீ என்று வெகு இயல்பாக அவனது பின்புலத்தை ஏற்றுக் கொண்டாள்.. இதனால் எல்லாம் நான் உனக்குத் தோப்புக்கரணம் போட்டு விட மாட்டேன் என்பதைப் போல அவள் அவளாகவே இருந்தாள்.. அவனைக் கவர நினைத்ததில்லை.. புதிதாக நளினங்களையும்,

லாவகங்களையும் கையாளவில்லை.. அவன் காதல் சொன்னபோது

இப்பேற்பட்டவனின் காதல் தனக்குக் கிடைத்திருக்கிறதே என்று துள்ளிக் குதிக்கவில்லை.. மாறாக அவள் பயந்து விலகினாள்.. அவனுடைய காதலை ஏற்றுக்கொள்ள மறுத்தாள்.. அவன் அரட்டினாலும், மிரட்டினாலும் அடி பணியாமல் பிடிவாதமாக இருந்தாள்..

அப்படிப்பட்டவளின் காதல் அவனுக்குக் கிடைத்து விட்டது..

‘நந்தினி..!’

அவனைத் தேடும் அவளது விழிகளைப் பார்த்தான்.. அவனைக் கண்டவுடன் ஒளிர்ந்த அவளது விழிகள் அவனைச் சுண்டியிழுத்தன.. அவனும் கட்டுண்டான்.. விருப்பமான கட்டல்லவா அது..!

‘என் நந்தினி..!’

தாள முடியாத தாபத்துடன் பார்த்த அவனது பார்வையின் வேகத்தைத் தாள முடியாமல் அவள் தடுமாறி விழப் போனாள்..

“ஏய்ய்.. நந்தினி..”

இரண்டே எட்டில் போட்டை அணுகி அவளைத் தாங்கிப் பிடித்துத் தூக்கிக் கடற்கரை மணலில் இறக்கி விட்டான் ரவிச்சந்திரன்..

“செம சீன்..” என்ற வினித்துக்கு அவனும் உத்ராவை இதுபோல உச்சத் தூக்காக தூக்கிக் கரையில் இறக்கி விட்டிருக்க வேண்டும் என்ற ஆசை எழுந்தது..

“மிஸ் பண்ணிட்டேண்டி...” ஏகத்துக்கும் மனைவியிடம் வருத்தப் பட்டான்..

“ஐய்யே.. இதுவே கேரளா.. தடுக்கி விழுந்தால் படகுப் பயணம்தான்.. இன்னும் ஏகப்பட்ட சான்ஸ் கிட்டும் மாமோய்.. உத்ரா கணவனைச் சமாதானம் செய்ய..”

“என்னது..? ‘மாமோய்..’ யா..” என்று அவன் கிளர்ந்தான்..

“பிடிக்கலைன்னா மச்சான்னு கூப்பிடறேன்..” கண்சிமிட்டி கணவனின் ஏமாற்றத்தைத் துரத்தி விட்டாள் உத்ரா..

பேசியபடியே அவள் முன்னால் நகர்ந்து விட வினித் அவளுடன் சேர்ந்து நடந்தான்.. அவனது மனைவி அவனுடைய மனதைப் புரிந்து கொண்டவளாய் தனித்து அவனுடன் நடக்கிறாள் என்ற பெருமை அவனுக்கு.. உத்ராவின் மனது தனிமையை நாடியது.. அவளுக்கும் வினித்துக்குமான தனிமையை அல்ல... அதுதான் எப்போதும் கிடைத்து விடுகிறதே... நந்தினிக்கும் ரவிச்சந்திரனுக்குமான தனிமையை அவள் நாடினாள்.. வாராது வந்திருக்கும் காதலை நந்தினி ரவிச்சந்திரனிடம் தெரியப்படுத்த வேண்டாமா..? இப்படி மனதுக்குள் ஒளித்து வைத்து மருகிக் கொண்டிருக்க வேண்டுமா..?

நந்தினி மனதுக்குள் ரவிச்சந்திரனைத்தான் நினைத்துக் கொண்டிருக்கிறாள் என்பதை உத்ரா புரிந்து கொண்டதைப் போல ரவிச்சந்திரனும் புரிந்து கொள்ள வேண்டாமா..?

வினித்திடம் பேசியபடி திரும்பிப் பார்த்தாள்..

நந்தினி தள்ளி நடந்து வர ரவிச்சந்திரன் செல்ஃபோனை காதுக்குக் கொடுத்துப் பேசியபடி நடந்து வந்து கொண்டிருந்தான்..

‘இவன் புரிந்து கொண்டாலும்..’

தோழியின் விழிகளில் தெரிந்த ஆற்றாமையில் உத்ராவுக்கு கோபம் கோபமாக வந்தது.. இதற்காகவா அவள் அவர்களைத் தனித்து விட்டு விலகி நடந்தாள்..?

‘படா பிக் பிஸினெஸ் மேன்னு சொல்லிக்கிறாங்க.. ஒரு பெண்ணோட மனசைப் புரிஞ்சுக்க முடியலையா..?’

“என்ன பார்க்கிற..?” வினித் கேட்டான்..

‘ஒரு செகண்ட் அந்தப் பக்கம், இந்தப் பக்கம்ன்னு என் பார்வை திரும்பிரக் கூடாது..’ கணவனின் ஆளுமை நிரம்பிய காதலை அவள் மனம் விரும்பியது..

“ச்சும்மா.. நாம வந்த போட்டைப் பார்த்தேன்..” உத்ரா சமயோசிதமாக எதையோ சொல்லித் தப்பித்தாள்..

நந்தினியின் காதலை அவள் பார்த்துக் கொள்ளட்டும்.. உத்ரா தன் கணவனைப் பார்த்தாக வேண்டும்.. அவளுக்கு அவன்தான் முக்கியம்..

நந்தினி பார்த்துக் கொண்டுதான் இருந்தாள்.. கம்பீரமாக செல்ஃபோனில் பேசியபடி காற்றில் தலைமுடி அலைபாய அவள் மனதை அலைபாய வைத்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரனின் பேரழகைப் பார்த்துக் கொண்டுதான்

இருந்தாள்.. அவள் பக்கம் அவன் திரும்ப மாட்டானா என்று அவள் மனம் ஏங்கித் தவித்தது..

ஓர்நொடி.. ஒரு சிறு நொடி போதும்.. அவளுக்கான பிரத்யேக அந்த சிறு பார்வையில் அவள் உயிர்த்தெழுந்து விடுவாள்..

இந்த அளவுக்கா அவன் மீது அவள் மனம் பித்தாகியிருக்கிறது..? அவள் திகைத்துப் போனாள்.. அவனுக்காக அவள் உள்ளம் தவிக்கும் தவிப்பில் பயந்து போனாள்.. அன்று நீலிமலைக் காட்டின் மரக் குடிலில் ஒரு பொய்யாவது சொல் கண்ணே.. உன் காதல் நான்தானென்று.. அந்தச் சொல்லில் உயிர் வாழ்வேன் என்று பாடினானே.. அந்தப் பாடல் வரிகளை இப்போது அவளது மனம் பாடிக் கொண்டிருக்கிறதே.. அது அவனது மனதை எட்டவில்லையா..? அந்தப் பாடல் வரிகளை உணர்ந்து பாடியிருந்தால் அவளது மன ஏக்கத்தை உணராமல் இருப்பானா..?

“நடிப்புக்காரன்..”

மனதுக்குள் பேசுவதாக நினைத்துக் கொண்டு அவள் வாய் விட்டுச் சொல்லிவிட..

“வாட்..?” என்று அவன் திரும்பினான்..

‘தொலைஞ்சது போ..’ அவள் கையை உதறியதை விசித்திரமாகப் பார்த்து விட்டுச் செல்ஃபோனுக்கு காதைக் கொடுப்பதை அவன் தொடர..

‘போ.. போ.. போய் அந்த செல்ஃபோனையே கட்டிக்க.. அதுதான் உன் காதலி..’ என்று கடுப்பானாள் நந்தினி..

கனமான சாம்பல் வண்ணக் கோட்டில் அட்டகாசமாக இருந்து தொலைத்தான்.. இவ்வளவு வெள்ளையாக அழகாக ஓர் ஆண்மகன் இருக்கக்கூடுமா என்று வயிறெரிந்தாள் நந்தினி.. இவனுடைய நிழலுக்குப் பக்கத்தில் நிற்க கூட அவளுக்குத் தகுதியில்லையே..

‘எதைப் புலம்பினாலும் மனதுக்குள் புலம்பித் தொலைடி.. நீ பாட்டுக்கு மைண்ட் வாய்ஸுன்னு நினைச்சுக்கிட்டு.. சவுண்ட் வாய்ஸில பேசி மாட்டிக்காதே.. இவன் ஜெகஜால கில்லாடி..! ம்ஹும்.. என்னத்தைக் கில்லாடியா இருந்து என்ன பிரயோசனம்..? என் மனசைப் புரிஞ்சுக்காத மக்கா இருக்கிறானே.. இதில இவன் எனக்குத் தத்தி பட்டம் கொடுக்கிறான்.. கொடுமை..’

பேசுகிறேன்.. பேசுகிறேன்.. உன் இதயம் பேசுகிறேன் என்று அவளைப் பார்த்து அன்றொரு நாளில் பாடியவன் பேசுகிறான்.. பேசுகிறான்.. வாய் வலிக்கப் பேசிக் கொண்டே இருக்கிறான்.. அவளிடம் அல்ல.. செல்ஃபோனில்..! காதை விட்டு ஓர் அங்குலம் கூட செல்ஃபோனை நகர்த்தவில்லை.. பேச்சை நிறுத்தவுமில்லை..

‘கம் போட்டுக் காதோடு செல்ஃபோனை ஒட்டியிருப்பானோ..’ நந்தினிக்குச் சந்தேகமாக இருந்தது..

‘வாய் வலிக்காதா..? செல்ஃபோனில நிஜமாவே பிஸினெஸ் தான் பேசறானா.. இல்லை.. கடலை கிடலை போடுகிறானா..?’

ரவிச்சந்திரனின் கண்டிப்பான முகபாவனையைப் பார்த்தால் கடலை போடுகிறவனைப் போலத் தெரியவில்லை.. தீவிரமாக எதையோ விவாதித்துக் கொண்டிருந்தான்..

‘இப்போதைக்குப் பேசி முடிக்க மாட்டான்..’

அவள் நாக்கைத் துருத்தி அவனுக்கு அழகு காட்டிய அதே நொடியில் அவன் பேச்சை முடித்து செல்ஃபோனை காதை விட்டு அகற்றியபடி அவளைப் பார்த்து விட்டான்..

# எண்ணியிருந்தது ஈடேற... 6

‘அகப்பட்டுக்கிட்டேனே..’ அவள் திருதிருத்தாள்.. குடம் குடமாக முகத்தில் அசடு வழிய..

“ஹி.. ஹி..” என்றவளிடம்..

“என்ன..?” என்று புருவங்களை உயர்த்தி இறக்கி மயக்கித் தொலைத்தான்..

வேய்ங்குழல்தான் கையில் இல்லை.. மற்றபடி குழலூதும் அந்தக் காதல் கண்ணன்தான்.. யமுனை நதி தீரத்தில் கோபியர்கள் புடைசூழ ஆடிப்பாடி ராதையை மயக்கிப் பைத்தியமாக்கியது போதாது என்று நந்தினியைப் பைத்தியமாக்க வந்து சேர்ந்திருக்கிறானா..?

கிறங்கிப் போன நந்தினியை அவன் பார்த்த பார்வையின் வேகம் தாளாமல் கிளர்ந்து தளர்ந்தாள் நந்தினி.. இப்படிப் பார்க்காதே என்று மனதுக்குள் அரற்றிக் கொண்டாள்..

‘உன்னை நான் காதலிக்கிறேன்.. அதை உன்னிடம் சொல்ல அற்புதமான தனிமை கிடைக்காமல் தவிக்கிறேன்.. நான் வேண்டும் அந்த அற்புதமான தனிமை கிடைத்து நீயும் நானும் மட்டுமே நிற்கும் சூழலில் உன்னிடம் வாய் திறந்து என் காதலைச் சொல்லிவிட முடியுமென்று எனக்குத் தோன்றவில்லை.. இப்போதும் உனக்கு நான்

இணையானவள்தானா என்ற தாழ்வு மனப்பான்மை எனக்குள் குவிந்து கிடக்கின்றது.. அதைத் தாண்டி வரும் திராணி எனக்கு இருக்குமானால் அப்போது உன்னிடம் என் காதலைச் சொல்வேன்.. அந்தத் திராணி எனக்கு வருமா..?'

எதையோ பறிகொடுத்து விட்டவளைப் போன்ற நந்தினியின் ஏக்கப் பெருமூச்சில்..

"என்னடி..?" என்றாள் உத்ரா..

நந்தினியின் வாடிய முகம் அவள் இன்னும் ரவிச்சந்திரனிடம் மனம் திறந்து பேசவில்லை என்பதை அறிவித்தது..

'இவ ஏன் இப்படி இருக்கா..?' உத்ராவுக்கு கோபம் கோபமாக வந்தது..

நந்தினி அப்படியிருக்கக் கூடியவளல்ல.. மனதில் இருப்பதை மறைக்காமல் பேசி விடுபவள்.. மனதில் எதையும் தேக்கி வைத்துக் கொள்ளத் தெரியாதவள்..

"இவளிடம் ரகசியம் பேசிட்டாலும்.. கழுதையில.. அப்படியே மனதுக்குள்ளே பத்திரப் படுத்தித்தான் வைத்துக்குவாளாக்கும்..?"

தோழிகள் அலுத்துக் கொள்வார்கள்.. ரகசியத்தை பாதுகாக்கத் தெரியாத நந்தினியா தன் மனதில் காதலை ரகசியமாக சுமந்து கொண்டிருக்கிறாள்..?

# அத்தியாயம் 172

**ந**ந்தினிக்குப் பிடித்தமான மலபார் பிரியாணியின் மணம் நாசியைத் துளைத்தாலும் அதைப் பற்றிய பிரக்ஞையின்றி யாருக்கான விருந்தோ என்று உட்கார்ந்திருந்தாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் பாதம் நீண்டு டேபிளுக்கு அடியிலிருந்த அவளது பாதத்தில் படிந்தது.. அந்த ஸ்பரிசத்தில் திடுக்கிட்டவள் சட்டென தன் காலை இழுத்துக் கொண்டு படபடத்தாள்..

"வாட் இஸ் திஸ் பாஸ்..?"

"ஷாக் ட்ரீட்மெண்ட்.."

"வாட் ஃபார்..?"

"உன் மனதை மயக்கும் மலபார் பிரியாணியைக் கண்டுக்காம உட்கார்ந்திருக்கிறயே.. பிரியாணி மேல் என்ன கோபம்..? ஏன் இதை மொக்கலை..?"

"பசியில்லை.."

"என்னது..?"

ஆச்சரியத்துடன் கண்களை அகல விரித்தான் ரவிச்சந்திரன்.. கேட்பதற்கரிய வார்த்தைகளைக் கேட்டு விட்ட முகபாவனையுடன்..

“நீயா இதைச் சொல்கிற..? ஐ கான்ட் பிலிவ் திஸ்..” என்றான்..

‘என்னை சாப்பாட்டு ராமின்னே முடிவு கட்டிட்டான்..’ நந்தினியின் கண்களில் கண்ணீர் தளும்பி விட்டது..

“ஹேய்.. எதுக்காக கண் கலங்கற..?”

“நத்திங்...”

“நத்திங் ஹெஸ் மெனிதிங்.. யு நோ..?”

“ஐ டோன்ட் நோ..”

“உனக்கு எதுதான் தெரிந்திருக்கு..?”

அவள் முன்னால் பிரியாணித் தட்டை நகர்த்திய ரவிச்சந்திரன் அவளது விழிகளுக்குள் ஊடுறுவும் ஆழ்ந்த பார்வையோடு..

“சாப்பிடு..” என்றான்..

மந்திரத்துக்குக் கட்டுப்பட்டவளைப் போலச் சாப்பிட ஆரம்பித்தான் நந்தினி.. அவளுக்கு மறுக்கத் தோன்ற வில்லை.. அவன் சொல்வதை செய்து விட வேண்டும் போல இருந்தது.. எதனால் என்று புரியவில்லை..

அவன் மீதான அவளது காதல் அவனுக்கு அவளை அடிமையாக்குகிறதா..?

காதல் அடிமை கொள்வதென்றால் அவள் மீது காதல் கொண்ட அவன் அவளுக்கு அடிமையாகி விட்டானா என்ன..? இல்லையே..

‘இப்போதும் இவன் மனதில் என் மீது காதல் இருக்கிறதா..?’ ஏக்கத்துடன் சாப்பிட்டு முடித்து எழுந்தாள் நந்தினி..

“ஈவினிங் ரூமை வெகேட் பண்ணனும்னு சொன்னீங்கள்ல.. எத்தனை மணிக்கு நாங்க ரெடியாகனும்..? அதைத் தெரிந்துக்கிட்டா திங்ஸை பேக் பண்ண வசதியாயிருக்கும்..” வினித் கேட்டான்..

“இப்ப புரோக்ராமை மாத்திட்டேன்.. நாம் வயநாட்டைச் சுற்றிப் பார்த்துட்டு அப்புறமா எங்க அரண்மனைக்குப் போகலாம்.. இப்பக் கிடைக்கிற பிரைவஸி.. அரண்மனையில

உங்களுக்குக் கிடைக்கிறது சிரமம்ன்னு எனக்குத் தோணுது.. நீங்க சென்னைக்கு ரிட்டர்ன் ஆகிறதுக்கு இரண்டு நாள்கள் இருக்கிறப்ப அரண்மனைக்குப் போனால் போதும்.. அப்பா, அம்மா உங்களைப் பார்த்ததும் சந்தோஷப் படுவாங்க.. நீங்க அரண்மனையிலே தங்கி விழுந்து சாப்பிடனும்னு நினைப்பாங்க.. உங்களாலே வயநாட்டைச் சுற்றிப் பார்க்க முடியாது..”

ரவிச்சந்திரனின் நீண்ட விளக்கத்தில் புருவங்கள் சுருங்க அவனை ஏறிட்டாள் நந்தினி.. அவளை அவன் பார்த்த பார்வையில் ஏதோ ரகசியம் ஒளிந்திருப்பதைப் போல அவளுக்குத் தோன்றியது.. அது என்னவாக இருக்கும் என்று யோசிக்கக்கூட அவளால் முடியவில்லை.. அது எதுவாகவோ இருந்து விட்டுப் போகட்டும்.. அதைத் தெரிந்து கொண்டு அவளுக்கு ஆகப் போவதென்ன..? அரண்மனைக்குப் போனாலாவது அத்தை, ரம்ய மாலினியென்று கலகலப்பாக இருக்கும்.. வினித்தையும் உத்ராவையும் ஊரைச் சுற்றிப் பார்க்க அனுப்பி வைத்து விட்டு அரண்மனையின் கலகலப்பில் அவள் ஒன்றிக் கொள்ளலாம்.. மனதுக்குள் இத்தனை சோர்வு இருக்காது..

“பட்.. வயநாட்டில்தானே உங்க அரண்மனை இருக்கு..? அங்கே தங்காம இ ங்கே ஹோட்டலில் தங்கி உங்க ஊரைச் சுற்றிப் பார்த்தா சரியாய் இருக்குமா சார்..”

“ஓ.. நீங்க வயநாடுன்னா அது தனி ஊர்ன்னு நினைத்துட்டிங்களா வினித்..? நோ.. நோ.. இது எங்க டிஸ்ட்ரிக்கோட நேம்.. சுல்தான் பத்தேரி.. எடக்கல் குகை.. ஜைனர் கோவில்ன்னு இங்கே பார்க்கிறதுக்கு நிறைய இடங்கள் இருக்கு.. கோழிக்கோடு வெரி நியரஸ்ட் சிட்டி..”

“எங்க பிரைவஸிக்காக நீங் க காம்ப்ரமைஸ் ஆக வேண்டாம் சார்.. நாங்க இங்கே உங்களோட கெஸ்ட்டாத்தான் வந்திருக்கோம்.. ஹனிமூனெல்லாம் அப்புறம்தான்..”

“உங்களுக்காக நான் காம்ப்ரமைஸ் ஆகலை வினித்.. இதுவும் என்னோட இடம்தான்.. யாழ் ஹோட்டலும் அரண்மனையும் ஒன்றுதான்.. நீங்க இங்கேயிருந்து சுத்திப் பார்த்துட்டு அப்புறமா ஒன் ஆர் டூ டேஸ் அரண்மனையில ஸ்டே பண்ணிட்டுக் கிளம்பறதுதான் பெட்டரா இருக்கும்..”

“தேங்க் யு சார்..”

ஓர் விதமான விடுதலையுணர்வு மனதை வியாபிக்க மனமார நன்றி சொன்னான் வினித்... அவனுக்கு அரண்மனையில் தங்கி ஹனிமூன் கொண்டாடுவதில் விருப்பமில்லை.. அது அரண்மனையாக இருந்தாலும் ரவிச்சந்திரனின் குடும்பம் வசிக்கும் வீடு.. அங்கிருந்து ஹனிமூன் கொண்டாடலாமே..

'யாழ்' ஹோட்டல் அவனுக்கும் உத்ராவுக்குமான தேநிலவுத் தனிமையை வெகு இனிமையாக கொடுத்தது.. உணவருந்துவது முதல் ஊர் சுற்றுவது வரை அவர்களுக்கான தனிமையை வழங்கி ரவிச்சந்திரன் தள்ளியே நின்றான்.. நந்தினியையும் இழுத்துப் பிடித்து நிறுத்திக் கொண்டான்..

அந்தச் சூழல் அப்படியே நீடித்ததில் வினித்துக்கு சந்தோஷமாக இருந்தது.. இடையூரற்ற தேநிலவு

கிடைத்ததில் அவனுக்கு மகிழ்ச்சியோ மகிழ்ச்சி.. "தேங்க்ஸெல்லாம் எதுக்கு வினித்..? நீங்க என்னோட ஃபிரண்ட்.. தேங்க்ஸ் சொல்லி தள்ளி நிற்கக் கூடாது.." அன்புடன் கடிந்து கொண்டான் ரவிச்சந்திரன்.

நந்தினிக்கு அது இதமாக இருந்தது.. அவளுக்காக உத்ரா வரலாம்... வினித்தும் வந்திருக்கிறானே... தேநிலவைப்

பற்றிய அவனது கனவுகள் தடைபடாமல் நிறைவேற வேண்டும் என்று நந்தினி விரும்பினாள்.. இதைப்பற்றிய எண்ணம் அவளுக்கு இரண்டு நாள்களுக்கு முன்னால் வரவில்லையே.. உத்ரா அவளைப் பார்க்க வந்திருக்கிறாள் என்று ஒட்டுப்புல்போல அவளுடன் ஒட்டிக் கொள்ளத் துடித்தாளே..

எந்த நொடியில் ரவிச்சந்திரனின் மீதான காதல் அவளுக்குள் தகிக்க ஆரபித்ததோ.. அந்த நொடியிலிருந்து அவளுக்குள் அரும்பாக இருந்த உணர்வுகள் மலர்ந்து விரிந்து அவளை குழந்தைத்தனத்திலிருந்து மீட்டு முழுமையான பெண்ணாக்கி விட்டனவே..

காதல் சொல்ல தனிமை கிடைக்கவில்லையென்று அவள் இந்த அளவுக்கு ஏங்குகிறாளே... திருமணமாகி தேநிலவு கொண்டாட வந்திருப்பவர்கள் தனிமைக்காக ஏங்க மாட்டார்களா..?

“பை வினித்.. ஈவினிங் நீங்களும் உத்ராவும் அவுட்டிங் போய்விட்டு வர கார் ரெடியா இருக்கும்.. நந்தினி என்கூட ஜாயின் பண்ணியாகனும்.. சம் இம்பார்ட்டண்ட் வொர்க்..”

“ஸோ வாட் சார்..? நாங்க அவுட்டிங் போய்க்கறோம்.. நந்தினியை டிஸ்டர்ப் பண்ணலை..”

கண்ணா.. லட்டு திங்க ஆசையா என்று கேட்டால் எப்படியொரு மகிழ்வுடன் பதிலைச் சொல்வார்களோ.. அது போன்ற மகிழ்வோடு பதில் சொன்னான் வினித்..

‘டிஸ்டர்ப் பண்றது நானா.. இல்லை.. இவங்களா..?’

வினித்தின் சந்தோஷத்தை உணர்ந்தவளாய் நொந்து போன பார்வை பார்த்தாள் நந்தினி.. ரவிச்சந்திரன் நமட்டுச் சிரிப்பு சிரிப்பதைப் போல இருந்தது..

‘சும்மாவே சிரிப்பான்.. சான்ஸ் கிடைச்சா விட்டா வைப்பான்..? ஆனாலும் நான் இந்த அளவுக்கு தத்தியா இருக்கக் கூடாது.. இவன் தத்தின்னு சொன்னா மட்டும் கோபப்படறேனா.. இப்படியிருந்தா இவன் தத்தின்னு சொல்லாம புத்திசாலின்னா கொஞ்சுவான்..? நந்தினி.. நீ இருக்கியே..’

ரவிச்சந்திரனின் நமட்டுச் சிரிப்பைக் கவனிக்காதவளைப் போல நகர்ந்தாள் நந்தினி..

“நீ எங்கே போகிற..? வொர்க் விஷயமா உன்னிடம் டிஸ்கஸ் பண்ணனும்.. அவங்க ஹனிமூன் கப்புள்.. நீ அப்படியா..? என்னுடைய பெர்சனல் செக்கரட்டரி..! மனசிலாயி..?”

“மனசில ஆகியாச்சு.. சொல்லுங்க...” பற்களை நறநறத்தாள் நந்தினி..

சிரித்தபடி வினித்தும் உத்ராவும் சென்றுவிட.. நந்தினியும் ரவிச்சந்திரனும் தனித்து நின்றார்கள்.. ஏஸியின் இதமான குளிர் நந்தினியை சிலிர்க்க வைத்தது.. ஏஸி அறையில் இல்லாவிட்டாலும் கோழிக்கோடின் குளிர் சில்லிடத்தான் வைக்கும்.. துளைக்கும் ரவிச்சந்திரனின் பார்வையை உணராதவளைப் போலச் சிலையாக நின்றாள் நந்தினி.. அவன் விழிகளை நேருக்கு நேர் சந்திக்க அவளால் முடியவில்லை.. தடுமாற்றமாக இருந்தது.. இனி அவன் முகம் பார்த்துப் பேச முடியுமா என்று அவளுக்குச் சந்தேகமாக இருந்தது.. நிச்சயமாக முடியாது.. உள்ளம் நிறைவிலோர் கள்ளம் புகுந்திடில் உள்ளம் நிறைவாமோ..?

இந்தப் பொல்லாத காதல் அவளது உள்ளத்தில் புகுந்து விடும் என்று அவள் கனவா கண்டாள்..? புகுந்து விட்டதே..

“ஏய்ய்..”

‘என்னது.. ‘ஏய்யா..?’’ வெடுக்கென்று தலை நிமிர்ந்த நந்தினி..

“என் பெயர் ஒண்ணும் ‘ஏய்’யில்லை.. நந்தினி..!” என்று சிடுசிடுத்தாள்..

“ஈஸிட்..? உன் பெயர் நந்தினியா..? எனக்கு மறந்து போச்சே..” உல்லாசமாக சிரித்தான் ரவிச்சந்திரன்..

“மறக்கும்.. மறக்கும்..” நந்தினிக்கு அழுகையே வந்துவிட்டது.. இமைகளைச் சிமிட்டிக் கண்ணீரை அடக்கியபடி..

“இன்னைக்கு என் பெயர் மறந்து போகும்.. நாளைக்கு என்னையே மறந்துருவீங்க..” என்று உதட்டைக் கடித்தாள்..

“உன்னை மறக்கிறதா..? நானா..?” அவளைக் கூர்மையாக பார்த்தான் அவன்..

‘இந்தப் பார்வைக்கு என்ன அர்த்தம்..?’ அவள் மனம் படபடத்தது..

“போ.. போய் ரெஸ்ட் எடு.. எதையோ மனதில் போட்டுக் குழப்பிக்கிட்டு இருக்கிறதைப் போல தெரியுது.. தூங்கி எழுந்தா

சரியாகிரும்.. ஈவினிங் நான் கால் பண்றப்பக் கிளம்பி வா..” முதலாளியாக உத்தரவிட்டான் ரவிச்சந்திரன்..

‘எந்த நேரம் என்ன வேஷம் கட்டுவான்னே தெரிய மாட்டேங்குது.. இதுக்கு எதுக்கு என்னை நிப்பாட்டி வைச்சானாம்.. இதைச் சொல்கிறதுக்கா..?’ நந்தினிக்கு வெறுத்துப் போனது..

“ம்ம்ம்..” எங்கோ பார்த்தபடி முணுமுணுத்து விட்டு நடையைக் கட்டப் போனாள்..

“வெயிட்..” மறுபடியும் உத்தரவு..

‘இப்ப என்ன..?’ மனதில் குமைந்தபடி நின்றாள் அவள்..

“இந்த ஸாரி உனக்கு அழகாயிருக்கு..”

ரவிச்சந்திரனின் குரல் மென்மையாக குழைந்தது..

‘தேங்க் டு காட்..’ நந்தினிக்கு நிறைவாக இருந்தது..

பார்த்துப் பார்த்து அவள் செய்து கொண்ட ஒப்பனைக்கு மதியத்தில் ஒரு சிறு பாராட்டுக் கிடைத்திருக்கிறது..

இதுபோதும் என்று மனம் முழுவதுமாக நிறையாமல் ஓர் வெற்றிடம் உருவாகியிருந்ததில் ஏதும் சொல்லாமல் நின்றாள்..

‘இவ்வளவுதானா..?’ மனம் சிணுங்கியது..

“இது நான் வாங்கிக் கொடுத்த ஸாரி தானே..?”

“என் சேலரியில் இந்தச் சேலைக்கான விலையைக் கழிக்கச் சொல்லியிருந்தேன்..”

“நான் அதைச் செய்யலை..”

“ஏன் செய்யலை..? எனக்காக ஒண்ணும் நீங்க செலவழிக்க வேணாம்..?”

“ஊஹும்..? ஏன் அப்படி..?”

அவள் என்னவோ குழந்தை போலவும்.. அவள் பேசும் மழலைப் பேச்சை அவன் ரசிப்பதைப் போலவும் அவன் சிரித்து வைத்ததில் கொதித்துப் போனாள் நந்தினி..

“எதுக்கு இந்தச் சிரிப்பு..?” உக்கிரமானாள்..

“சிரிக்கக் கூடாதா..?” சரசமாக வினவி அவளை சோதித்து வைத்தான் ரவிச்சந்திரன்..

நந்தினிக்கு அங்கே நிற்க முடியவில்லை.. அவன் மீதான காதல் கொதிகலனாய் கொதித்துக் கொண்டிருக்க.. அதை மூடி மறைத்து நிற்கச் சிரமமாக இருந்தது..

“தலை வலிக்குது.. நான் ரெஸ்ட் எடுக்கப் போறேன்..” முணுமுணுத்தபடி திரும்பிப் பார்க்காமல் விரைந்து விட்டாள்..

அவள் மட்டும் திரும்பிப் பார்த்திருந்தால் அவனது இதழ்களில் நெளிந்த குறுஞ்சிரிப்புக்கு என்ன அர்த்தம் என்று புரியாமல் குழம்பிப் போயிருப்பாள்.. எதுவோ துரத்திக் கொண்டு வருவதைப் போல அறைக்கு ஓடிக் கட்டிலில் விழுந்தவள் மனம் விட்டு அழுதாள்.. அழுதால் மனம் பாரம் குறையும் என்பார்கள்.. அவளது மனதில் பாரம் குறைந்து தொலைக்காமல் அதிகரித்து வைத்தது.. இமைகளின் சோர்வில் உறக்கம் அவளைத் தழுவியதில் அவள் உறக்கத்தில் அமிழ்ந்து விட்டாள்.. மெல்லிய சங்கீதம் போலக் காதோரமாக ஒலித்த செல்ஃபோனின் ஒலியில் கண்விழித்தவள் யாரென்று கூடக் கவனிக்காமல் செல்ஃபோனை காதுக்குக் கொடுத்து..

“சொல்லுங்க பாஸ்..” என்றாள்..

“ஃபோன் நம்பரைக் கூடப் பார்க்காம கூப்பிடறது நண்தண்ணு எப்படிக் கண்டுபிடிச்ச..?” என்றான் அவன்..

‘நான் ஃபோன் நம்பரைக் கவனிக்கலைன்னு இவன் எப்படிக் கண்டு பிடிச்சான்..?’ அவளுக்குத் தூக்கம் பறந்து விட்டது..

“‘ஙே’ன்னு விழிக்காதே.. எந்த நேரம் நீ எதைச் செய்து வைப்பன்னு எனக்குத் தெரியாதா..? தூங்குமூஞ்சி..! தூக்கத்தில நீ இதைத்தானே செய்து வைப்ப..?”

மிகச் சரியாக அவன் அவளைக் கணித்து வைத்திருந்ததில் அவளுக்கு ரோஷமாகி விட்டது.. இதைச் சும்மா விடக் கூடாது என்று வரிந்து கட்டியவள்..

“தூங்க விடாம நீங்கதானே இம்சை பண்ணுவீங்க..? அது எனக்கும் தெரியும் பாஸ்.. நேரம் காலம் இல்லாம ஃபோன் வந்தா அதை நீங்கதான் பண்ணியிருப்பீங்கன்னு கண்ணை மூடிக்கிட்டுச் சொல்லிரலாம்.. இதுக்குன்னு உங்க ஊர் சோழிகளை உருட்டி தாயக்கட்டத்தில ஜோஸியம் பார்க்க வேண்டியதில்லை..” என்று செமத்தியாக கொடுத்துக் கட்டினாள்..

“நீ என் செக்கரட்டரி..!” அழுத்தமாக அறிவித்தான் அவன்..

அவன் குரலில் இருந்தது ஆணவமா அல்லது சிரிப்பா என்று இனம் காண முடியாமல் திணறிப் போனாள் நந்தினி.

இது ஆசையா.. இல்லை அதிகாரமா..?

# அத்தியாயம் 173

**‘எ**ன்னாங்கிற.. இப்ப என்னாங்கிற.?’ என்று முரசு கொட்டி விடத் துடிப்புக் கொண்டாள் நந்தினி..

‘எதுக்கெடுத்தாலும் என்னோட செக்கரட்டரி.. என்னோட செக்கரட்டரின்னு என்னை ஏலம் போடறான்.. நான் என்ன பிறக்கறப்பவே இவனோட செக்கரட்டரியாவா பிறப்பெடுத்தேன்..? வாயைத் திறந்தாலே இதே பேச்சுத்தான்.. பெரிசா செக்கரட்டரியைக் கண்டிருக்கவன்..’

தூக்கம் கலைந்த எரிச்சல்.. மனதில் உள்ள காதலை வெளிப்படுத்த முடியாத கோபம்.. இயலாமை என்று அனைத்தும் ஒன்று சேர்ந்ததில் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது அவளுக்கு..

‘நான் இவனோட செக்கரட்டரிதான்.. அதுக்கு இப்ப என்னவாம்..? செக்கரட்டரிக்கு என்னத்தை வைச்சிருக்கான்.. வேலையை வேணும்ன்னா வைச்சிருப்பான்.. கம்மாண்டர்..’

‘‘திட்டி முடிச்சாச்சா..?’’

மனதில் அவள் தாளித்துக் கொண்டிருப்பதைக் காது கொடுத்துக் கேட்டதைப் போல அவன் கேட்டான்..

“வேணாம் பாஸ்.. தூங்கிக்கிட்டு இருந்தவளை எழுப்பி உட்கார வைச்சு வம்புக்கு வராதீங்க.. நான் உங்களைத் திட்டினேனா..? தேமேன்னு இருக்கேன்.. வம்பிழுக்காதீங்க..”

“இப்ப உன் மனதுக்குள் என்னைத் திட்டலை..?”

“ஆமாமாம்.. இவரு பெரிய சூப்பர் மேன்.. என் மனசுக்குள்ள நுழைஞ்சு கண்டு பிடிச்சுட்டாரு.. போவீங்களா..”

“ஓ..! இதுதான் சாக்குன்னு என்னைத் தனியா வேலை செய்டான்னு அனுப்பி வைச்சுட்டு ஹாயாய் ரூமில தூங்கி எழுந்திருக்கலாம்ன்னு பிளான் பண்றியோ..?”

அப்படிச் செய்தால்தான் என்ன என்று நந்தினிக்குத் தோன்றிவிட்டது.. அப்போதைய மனநிலையில் அவள் தனிமையில் இருப்பதே சாலச் சிறந்தது.. அவன் முன்னால் உட்கார்ந்து முகத்தைப் பார்த்துப் பேசி வேலை செய்து விட முடியுமென்ற தன்னம்பிக்கை அவளுக்கு வரவில்லை..

‘இவனே ஐடியா கொடுக்கிறான்.. வாழ்க.. வாழ்க..’

நந்தினி மூக்கை உறிஞ்சினாள்..

“எதுக்கு இந்த பில்ட்-அப்..?”

“பாஸ்.. எனக்குத் தலைவலி..”

“பாருடா.. சொல்லவே இல்லை..”

“இப்பத்தான் சொல்லிட்டேனே..”

“அதுசரி.. ஒற்றைத் தலைவலியா..? இரட்டைத் தலைவலியா..?”

“நீங்க மட்டும்தானே இருக்கீங்க பாஸ்..?”

“இதென்ன கேள்வி..?”

“இல்லை.. கூட அந்த தரங்கிணியோ.. கிண்கிணியோ இருக்காளான்னு கேட்டேன்..”

“ரப்பிஷ்..! இது யாழ் ஹோட்டல்..! என் ரூம்..! நான் மட்டும்தான் இருக்கேன்..”

“அப்ப இது ஒற்றைத் தலைவலி மட்டும்தான் பாஸ்..”

“சப்போஸ்.. தரங்கிணியும் என் கூட இருந்திருந்தா..?”

“நிச்சயமா இரட்டைத் தலைவலின்னு சொல்லியிருப்பேன்..”

“நீ இருக்கியே..”

அவன் ரசித்துச் சிரித்தான்.. என் வயிற்றெரிச்சல் உனக்கு சிரிப்பை மூட்டுகிறதா என்ற கடுப்புக் கிளம்பியது அவளுக்கு..

“நான் இல்லாமப் போனா சந்தோஷப் படுவீங்க போல இருக்கே..” வெடுக்கென்று சொல்லி விட்டாள்..

“ப்ம்ச்.. என்ன பேச்சு இது..”

அவன் அதட்டியது சுகமாக இருந்துத.. உரிமையான அந்த அதட்டல் அவளைத் தாலாட்டியது.. மனதை அழுத்தும் பாரத்தை அவனிடம் சொல்ல முடியாமலும்.. சொல்லத் தெரியாமலும் தவிக்கும் இந்தத் தவிப்புக் கொடுமையானது.. அவன் மடியில் முகம் புதைத்து அழுதால் தேவலை.. எங்கே.. காதல் அவள் மனதில் நுழையாமல் இருந்தவரை நினைத்ததை செயல்படுத்துவது அவளுக்கு எளிதானதாக இருந்தது.. காதல் புகுந்த பின்னால் அவன் நிழலை அணுகக் கூட மலைப்பாக இருக்கிறதே..

“ரூமுக்குள்ளே அடைஞ்சுக்கிட்டு இருந்தால் இப்படித்தான் நெகடிவ்வா பேசத் தோணும்.. கிளம்பு.. கிளம்பு..”

“கிளம்பி..?”

“வேலையிருக்கும்மா..”

‘அம்மாவா..?’ அவள் மனம் சிணுங்கியது.. அடாவடித்தனமாக அவன் அழைக்கும் ‘வாடி, போடி’ அழைப்புக்காக மனம் ஏங்கியது..

‘வேலையிருக்குடின்னு சொன்னால்தான் என்னவாம்.. அந்தத் தரங்கிணியைப் பார்த்த பின்னால் ஆளே மாறிட்டான்..’

அவள் மீதான காதலும் மாறி விட்டதோ என்ற சம்சயத்தில் அவள் கண்கள் கண்ணீரில் மிதந்தன.. அவன் தேடி வந்தபோது அவள் அலட்சியப் படுத்தினாள்.. இப்போது அவள் மனம் அவனைத் தேடும்போது அவன் அலட்சியப் படுத்துகிறானா..? இது அவன் முறையா..?

“வேலை இருந்தா நான் கிளம்பி வரனுமா..? இருபத்தி நான்கு மணிநேரமும் வேலை பார்க்க முடியாது பாஸ்.. லேபர் லா என்ன சொல்லுதுன்னு தெரியுமா..?”

“ஓ..! லேபர்ஸ் லா பேசறிங்களோ..”

“யெஸ் பாஸ்..”

“யூனியன் ஆரம்பிக்கப் பிளான் பண்ணியிருக்கயா..?”

“எந்தப் பிளானையும் நான் யோசிக்கறதில்ல பாஸ்.. நீங்க எதுக்கு இருக்கீங்க..? இதுக்கு பிளான் பண்ணியிருக்கயா.. அதுக்குப் பிளான் பண்ணியிருக்கயான்னு ஐடியாக்களை அள்ளி விட்டிற மாட்டிங்களா..?”

மறுமுனையில் அவன் கடகடவென சிரித்து வைத்தான்.. மல்லிகைப்பூ பல்வரிசையில் நினைவில் அவளது மனம் மயங்கியது..

‘ஏண்டா மயக்கற..?’ மனதுக்குள் அரற்றினாள்..

“உன் மனச்சாட்சியைத் தொட்டுச் சொல்லு..”

“அது பாட்டுக்கு அது இருக்கு.. அதை எதுக்கு தேவையில்லாம டிஸ்டர்ப் பண்ணச் சொல்றிங்க..?”

“உத்ரா வந்ததில இருந்து ஓர் நாளாவது நீ உன் டியூட்டியைப் பார்த்திருக்கிறயா..?”

“இல்லை.. இதை என்கிட்டக் கேட்டாலே பதில் சொல்லிருவேனே.. தேவையில்லாம மனச்சாட்சியைப் போய் இழுக்கறிங்களே.. அதுவா உங்க பெர்சனல் செக்கரட்டரி..?”

“வாலு..!”

அவன் ரசித்துச் சிரித்தான்.. உன் கண்களுக்கு நான் வாலாக மட்டும்தான் தெரிகிறேனா என்று மனம் குமைந்தாள் நந்தினி.. அவளும் பெண்தான்.. அவளுக்கென்றும் ஓர் மனம் இருக்கிறது என்பதை அவன் யோசிக்கவே மாட்டானா..?

‘முதலில் நீ யோசித்தாயா..?’ உணக்கையாய் கேள்வி கேட்டு மடக்கியது அவளின் மனச்சாட்சி..

‘அவன் உன்னைச் சாட்சிக்குக் கூப்பிட்டான்னு அவனுக்கு வக்காலத்து வாங்கறியா..? அடங்கு மனச்சாட்சியே..’ என்று அடக்கி வைத்தாள் நந்தினி..

“நான் மட்டும் ஊர் சுற்றலை பாஸ்.. நீங்களும்தான் ஊர் சுற்றினீங்க.. மனசிலாயி..”

“இப்ப நான் வொர்க்கைப் பார்க்கக் கிளம்பனும்.. ஸோ.. நீயும் என்னுடன் கிளம்பனும்.. மனசிலாயி..”

‘விடமாட்டானே..’

உம்மென்று முகத்தை வைத்துக் கொண்டு.. “ஊம்.. ஊம்..” என்றாள் நந்தினி..

“ஆஃப் ஆன் அவரில நீ கிளம்பியாகனும்..” உத்தரவிட்டான் அவன்..

‘அதிகாரமெல்லாம் தூள் பறக்குமே.. யாரு இவன்..? கம்மாண்டராச்சே..’

“கேட்டுக்கிட்டு இருக்கியா..?”

“கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன் பாஸ்.. கேட்டுக்கிட்டுத்தான் இருக்கேன்.. வேற வழி..?”

“தெரிந்தால் சரி.. லேபர்ஸ் லாவையெல்லாம் மூட்டை கட்டி கடலில போட்டுட்டு சீக்கிரமாக் கிளம்பி வா.. ”

“அதுக்கென்ன பாஸ்.. அப்படியே செய்துட்டாப் போச்சு.. யாரு நீங்க..?”

“நீயே சொல்லு..”

“என்ன்ன்.. னோட பாஸ்ஸ்ஸ்..”

“பல்லைக் கடித்துக்கிட்டே சொல்கிறதைப் போல இருக்கு..”

“ஹி.. ஹி.. இல்ல பாஸ்..”

“அதுக்காக இந்த அளவுக்கு சிரித்து மழுப்ப வேண்டாம்..”

‘எல்லாத்துக்கும் ஒரு ஷொட்டுக் கொடுத்துருவான்..’

“நந்தினி..”

திடிரென்று அவன் குரல் மென்மையானது .. ‘என்னவாம்..?’ அவள் திருதிருத்தாள்..

“நாம கோலிக்கோடில ஷாப்பிங் போனப்ப மெரூன் கலர் ஸாரி மட்டும் வாங்கலை..”

‘அதை எதுக்கு இப்பச் சொல்றான்..?’

“இன்னும் கொஞ்சம் வாங்கினோம்ன்னு நினைக்கிறேன்..”

“நினைக்கிறது சரிதான் பாஸ்.. நாலைஞ்சு சேலை வாங்கினேன்.. எல்லாத்துக்கும் கணக்கு வைச்சிருக்கேன்.. நீங்க சேலரியில கழித்துக்கங்க..”

“தத்தி..”

அவன் போட்ட சப்தத்தில் அவளுக்கு தூக்கி வாரிப் போட்டது..

‘எதுக்கு இப்படிக் கத்தறான்..?’

அவனுடைய திடிர் சினத்திற்கான காரணம் யாதாக இருக்கக் கூடும்..? அவள் ஒன்றும் தவறாய் எதையும் சொல்லி விடவில்லையே..

“நீ இப்படியேதான் பேசிக்கிட்டு இருப்பியா நந்தினி.. மாறவே மாட்டியா..?”

“சொல்லிக் காட்ட வேணாம் பாஸ்..” அவளுக்கு கோபம் வந்து விட்டது..

“உங்க தரங்கிணி, அஜந்தா அளவுக்கு நான் அறிவாளியில்லைதான்.. அதுக்காக ஒரேயடியா தத்தியும் இல்லை.. என் அறிவோட லெவலைப் பத்தி உங்களுக்கென்ன தெரியும்..? நான் காலேஜ் ஃபர்ஸ்ட்.. யுனிவர்சிட்டி கோல்டு மெடலிஸ்ட்..”

“அதுதான் எனக்கு டவுட்டா இருக்கு.. உன் பெயர்தானா அதுன்னு செக் பண்ணச் சொல்லனும்..” கோபமாக அவன் சொல்ல..

“என்னது..?” என்று இவள் சிலிர்த்தெழுந்தாள்..

“படிப்பில ஃபர்ஸ்ட்டா வந்து என்ன செய்ய..? சொல்ல வருகிறதைப் புரிஞ்சுக்கனும்.. அதுதான் சுத்தமா இல்லையே..”

“ஓகே.. ஓகே.. என்னத்தை சொல்ல வந்தீங்க..?”

அரை மனதாகத்தான் அவள் கேட்டாள்.. அவளை அவன் மட்டம் தட்டுகிறான் என்று அவளது மனம் குமைந்து கொண்டிருந்தது.. இது முதல் தடவையா..? எதற்கெடுத்தாலும் அவளை மட்டம் தட்டுவதையே வேலையாக வைத்திருக்கிறான்..

“பிங்க் கலர் ஸாரி ஒன்றை எடுத்தியே..”

“ஆமாம்.. எடுத்தேன்.. இன்னும் ஓர தரம் கூடக் கட்டலை.. எங்கே..? உங்க ஊரில அத்தனை அழகிகளும் பிங்க் கலர்ல ஜொலித்து என்னைச் சோதிக்கிறாங்களே.. இவங்க கலருக்கு முன்னாலே என் சேலை கலர் எடுபடுமான்னு கட்டாமலே வைச்சிருக்கேன்..”

“இப்ப அதை உடுத்திக்கயேன்..”

அவனது நேயர் விருப்பத்தில் ஆச்சரியமானாள் நந்தினி.. என்னடா இது என்று ஆகிவிட்டது அவளுக்கு..

பிங்க கலர் சேலைக்கும் அவனுடைய இம்பார்ட்டண்ட் வொர்க்கிற்கும் என்ன சம்பந்தம்..?

இருந்திருந்து அவளை பிங்க் கலர் சேலையில் பார்க்க நேயர் விருப்பம் தெரிவித்திருக்கிறான்.. அவனைப் போன்ற

பேரழகனை ஜீன்ஸ் பேண்ட், ஷர்ட்டில் பார்க்க அவள் ஆசைப்படுவதில் ஓர் அர்த்தமுள்ளது.. அந்தப் பேரழகன் அவளை பிங்க் கலர் சேலையில் பார்க்க விரும்புவது உலக அதிசயமல்லவா..?

‘ஒருவேளை.. இன்னும் இவன் மனதில் என்மீது காதல் இருக்குமோ..?’

மனதில் ஆசையைப் புறம் தள்ளி ஒதுக்கினாள் நந்தினி.. முடவி கொம்புத் தேனுக்கு ஆசைப்படக் கூடாது.. அவன் உச்சத்தில் இருக்கும் நட்சத்திர பிம்பம் கொண்ட கோடீஸ்வரப் பேரழகன்.. ராஜ பாரம்பர்யம் கொண்டவன்.. நந்தினி தஞ்சாவூர் ஜவுளிக்கடை மேகநாதனின் மகள்.. விண்மீன் மீது மண்மீன் ஆசை கொள்வதா..?

“ஓகே பாஸ்..” உடனடியாக சம்மதம் சொன்னாள் நந்தினி..

அவன் கேட்ட காரணத்தினாலேயே அந்தச் சேலையை அவளுக்குப் பிடித்துப் போய் விட்டது.. குளித்து உடைமாற்றி.. முடியைத் தளர்வாகப் பின்னலிட்டு.. காது, கழுத்து, கைகளில் செம்பவள நிறத்திலான நகைகளை அணிந்து கண்ணாடி பார்த்தவளுக்கு..

‘ஆஹா.. நானும் அழகுதான்..’ என்று குதூகலம் உண்டானது..

அவளுக்காக ரிசப்ஷனில் காத்திருந்த ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின.. இது போன்ற பிரத்யேக மின்னலைப் பார்த்து எத்தனை நாளானது என்ற பரவசத்துடன் அவனைப் பார்த்தாள்.. உத்ராவும், வினித்தும் ஊர் சுற்றப் போய் விட்டார்கள் என்று சொன்னான் அவன்.. அவர்களைப் பற்றிய நினைவேயில்லாமல் அவன் கேட்ட பிங்க வண்ணப் புடவையின் நினைவில் இருந்தவள் ஒப்புக்கு தலையை அசைத்துக் கேட் டுக் கொண்டாள்..

“போகலாமா..?” அவன் கேட்டான்..

ஏதோ முக்கிய வேலை என்றானே என்ற நினைவில் அவள் தலையை அசைத்தாள்.. அவன் பக்கத்தில் உட்கார்ந்து தனித்துப் பயணம் செய்தது அவளுக்கு இனிப்பாக இருந்தது.. கேரளத்துக்கே உரிய பூஞ்செடி, கொடிகளின் மத்தியில் இருந்த பங்களாவின் போர்டிகோவில் கார் நின்றது.. உள்ளிருந்து மேற்கத்திய இசை மெல்லிசையாய் கசிந்து கொண்டிருந்தது..

“இம்பார்ட்டண்ட் வொர்க்குன்னு சொன்னிங்க..?” புரியாமல் கேட்டாள் நந்தினி..

“இம்பார்ட்டண்ட் பிஸினெஸ் பார்ட்டி..” சுருக்கமாக பதில் அளித்தான் ரவிச்சந்திரன்..

பார்ட்டி ஹாலுக்குள் நுழையும் போது வெகு இயல்பாக அவளது இடையை அவனது கரம் வளைத்து இறுக்கிக் கொண்டது.. அவள் விலக முயன்றாள்.. முடியவில்லை.. வரவேற்றவர்களிடம் அவள் நந்தினி என்று மட்டும் சொன்னான்.. மெல்லிசைக்கு ஏற்ப ஆடிக் கொண்டிருந்த ஜோடிகளுடன் அவளையும் இழுத்து அணைத்துக் கொண்ட ஐக்கியமானான்.. நந்தினிக்கு புது வருடப் பிறப்பன்று அவனும் அவளும் ஆடிய நடனம் நினைவுக்கு வந்தது..

இன்றும் அதைப் போலவே அவளது தோள் தொட்டு.. அணைத்துத் தழுவி கண்களுக்குள் கிறக்கமாக பார்த்தபடி ஆடினான்.. அவனுடைய கிறக்கம் அவளையும் தொற்றிக் கொண்டது.. அவன் மீது சரிந்து அவள் தோள் சாய்ந்த தருணத்தில் அவளது காதோரமாக முத்தமிட்டு..

“இப்போது உன் காதலைச் சொல்லுடி..” என்றான் ரவிச்சந்திரன்..

‘இவனுக்குத் தெரியுமா..?’

விழி விரிய அவள் அவனுடைய முகத்தை நோக்க.. அவன் குனிந்து அவளது இமைகளில் முத்தமிட்டான்..

# அத்தியாயம் 174

“**தை**யத்தா.. தையத்தா.. தையத்தா..”

மைக்கை கையில் பிடித்தபடி மேடையின் எதிரே நின்றிருந்தவர்களில் ரவிச்சந்திரனின் மீது மட்டும் பார்வையைப் பதித்தபடி பாடிக் கொண்டிருந்தாள் நந்தினி.. இமைமூடி அவன் கொடுத்த முத்தத்தின் ஸ்பரிசத்தை உடல் சிலிர்க்க உணர்ந்த அந்த நொடியின் இன்பத்திலிருந்து இன்னும் அவள் வெளிவரவில்லை.. அதற்கு முன்பும் அவன் முத்தம் கொடுத்திருக்கிறான்தான்.. இதுபோல அந்த முத்தங்கள் இனிப்பைத் தரவில்லையே.. ஏன்..?

அவனை அவள் காதலிப்பதை அறிந்தபின் அவன் தரும் முதல் முத்தம் இது என்பதினால் தேன் போலத் தித்தித்ததா..?

**“தையத்தா.. தையத்தா.. தையத்தா..**

**பையத்தா.. பையத்தா.. பையத்தா..”**

துள்ளலாக வெளி வந்தது பாடல்.. நடனம் முடிந்ததும் பாடல் என்றார்கள்.. வழக்கப்படி அவன் அவளை முன்மொழிந்து மேடைக்கு அனுப்பி விட்டான்.. மேகத்தில்

மிதப்பதைப் போல மிதந்து கொண்டிருந்தவள் மறுப்புச் சொல்லாமல் மேடையேறி பாட ஆரம்பித்தாள்..

**"உயிர் வாழ்கிற வரைக்கும்**

**உன்கே மடி கொடுப்பேன்..**

**இனி ஓர் ஜென்மம் இருந்தால்**

**உனக்காக மீண்டும் பிறப்பேன்.."**

நந்தினியின் குரல் தழதழத்தது.. அவளை விட்டு விழிகளை அகற்றாமல் பார்த்துக் கொண்டிருந்தவனின் முகத்தில் தெரிந்த உணர்ச்சிக் குவியல் அவளை முத்தங்களின் குவியல்களில் ஆழ்த்திவிட அவன் உத்தேசித்திருப்பதை அறிவித்தது..

"சொல்லித்தான் தெரியனுமாடி..?"

எப்படித் தெரியும் என்ற அவளது தடுமாற்றத்திற்கு அவன் சொன்ன பதில் அவளது மனப் பெட்டகத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய பொக்கிச வார்த்தைகள்..!

**"உன் கனவில்**

**நினைவில் உருவில்**

**நானே என்றும் இருப்பேன்..**

**தையத்தா தையத்தா தையத்தா..”**

அவளது உள்ளம் தையத்தா என்று குதிக்க ஆரம்பித்தது.. அவள் சொல்ல வேண்டும் என்ற அவசியமேயில்லை.. அவள் மனதை அவன் உணர்வான்.. அவளது விழிகளில் அவளுடைய காதலைப் படிப்பான்.. அவளை அவளைவிட அவன் நன்கு அறிந்து வைத்திருக்கிறான்.. அவளது விழியசைவு சொல்லும் கோடிக் கதைகளில் ஒரு கதையைக்கூட அவன் தவற விட மாட்டான்..

**“நிஜங்கள் உடைந்து போனாலும்**

**நிழல்கள் உடைவதில்லை..**

**நேசம்.. பாசம்.. நிஜமானது..”**

அவளது குரல் நெகிழ்ந்து கரைந்தது கமறியது.. அவள் மீதான அவனது காதல் நிஜமானது என்பதில் அவள் வானத்தில் பறந்து கொண்டிருந்தாள்.. என்ன தவம் செய்தாள்..! இப்படியோர் காதலைப் பெற..! சொல்லென்றும் மொழியென்றும் பொருளென்றும் இல்லை என்று

கண்ணதாசன் எழுதிய காலத்தால் அழியாத காவிய வரிகளுக்கு இவன் உயிர் கொடுத்து விட்டானே..

**“மழையில் கிளிகள் நனைந்தாலும்**

**சாயம் போவதில்லை..**

**அன்பே..! நம் காதல் அது போன்றது..”**

விளையாட்டுப் பெண்ணாக அவனுக்குத் தோற்றமளித்துக் கொண்டிருந்த நந்தினியின் புதிய பரிணாமத்தில் ரவிச்சந்திரன் வியப்பில் ஆழ்ந்தான்.. குழந்தைத்தனத்தைத் தாண்டிய.. ஆழ்கடலின் ஆழ் உணர்வுகளை விழிகளில் தேக்கிய.. இவள் புதிதானவள்.. அவன் மனதின் காதலை உணர்ந்தவள்.. அவள் மனதின் காதலை உணர வைத்தவள்..

**“பெண்ணுக்கு பேராசை வேறு ஒன்றும் இல்லை..**

**சொன்னதைச் செய்தாலே**

**நிகரேதும் இல்லை..”**

அவனிடத்திலான அவளது அளவு கடந்த அன்பிற்கான காரணம் எதுவென்பதை உணர்த்தினாள் அவள்.. அவளுக்கு அவனுடைய பெருமைகளைப் பற்றிப் பெரிதாக

ஒன்றுமில்லை.. அவனது கணக்கிலடங்கா சொத்துக்களைப் பற்றிய பிரக்ஞை எதுவும் இல்லை..

அவள் அவனை உயிராக நினைப்பதற்கான காரணம் ஒன்றே ஒன்றுதான்.. அவன்..! அவன் மட்டுமே அவளது இலக்கு..! அனைத்து அடையாளங்களையும் தாண்டிய இரும்பு குணம் படைத்த அந்த இரும்புக்கை மாயாவியின் மீது அவள் உயிரை வைத்திருக்கிறாள்.. அவன் சாகசம் புரியும் மாவீரன்..! புத்திசாலி..! அவளை நேசிப்பவன்..! அவளது நேசத்துக்கு உரியவன்..! அவளை அறிந்தவன்..!

**"நீ உறுதியானவன்..**

**என் உரிமையானவன்..**

**பசிருசியை.. பகல் இரவை..**

**பகிர்ந்து கொள்ளும் தலைவன்..!**

**தையத்தா.. தையத்தா.. தையத்தா..**

**பையத்தா.. பையத்தா..**

**பஞ்சு முத்தம் தா.."**

ரவிச்சந்திரனின் விழிகள் பிரகாசித்தன.. கூர்மையான அவனது பார்வை.. குளிர் நிரப்பி.. அவளது உடலில் மேய்ந்து

கதகதப்பை உணர வைத்தது.. நந்தினி தவித்தாள்.. ஆகிருதியான காதலனின் தோள் சாய்ந்து.. முடி கோதி முத்தம் பதித்திடத் துடித்தாள்.. அவனைக் கண்ட நொடி முதல் இந்த நொடி வரை அவளை ஆவேசமாய் காதலிக்கும் அன்பானவனுக்குத் தன் அன்பைப் பரிசாக அள்ளியள்ளித் தரும் ஆவேசம் கொண்டாள்.. அவன் போல் யாருண்டு..? அவள் மீது ஆளுமை கொண்ட அவனது அன்பிற்கு நிகர் உண்டா..? ஜென்மங்கள் தோறும் அவளைக் காதலித்துக் கரம் பற்றியவனை சந்தித்து விட்ட சிலிர்ப்பு அவளது நாடி நரம்பெங்கும் வியாபித்திருக்கிறதே.. இந்த உணர்விற்கு ஈடேது..?

**"பிறவி வந்து போனாலும்.. உறவு முறிவதில்லை..**

**உயிரை உயிரால் முறுக்கேற்றவா..?**

**உயிரை உயிரால் முறுக்கேற்ற.. வா.."**

கேள்வியைக் கேட்டு அவனையும் அழைத்தாள் அவள்.. அவன் தேடிய காதலை விழிகளில் தேக்கி நின்றாள்.. அவன் எதிர் பார்த்து ஏங்கிய காதலை தன்னுள் நிரப்பித் தேம்பினாள்..

'நந்தினி..!'

அவனது நாடி நரம்புகள் முறுக்கேறின.. நீ எனக்குத்தான் என்று அறைகூவி அவளை அடைகாத்த ஆஜானுபாகுவானவன் அவளை எலும்புகள் நொறுங்க இறுக்கி அணைக்கும் உன்மத்தம் கொண்டான்.. அவள் வேண்டும் என்று அவனது உடலில் இருந்த ஒட்டு மொத்த அணுக்களும் ஒன்று சேர்ந்து கூவின..

**"உன்னைப் போன்ற அன்பானவன்..**

**யார்க்கு இங்கு வாய்க்கும்..?**

**உடலை உடலால் குளிப்பாட்டவா..?**

**உடலை உடலால் குளிப்பாட்ட.. வா .."**

அதே கேள்வி.. அதே அழைப்பு..

'ஏய்ய்..'

மேடையில் தாவி ஏறி அவளைக் கடத்தி விடும் வேகம் அவனுக்குள் ஊற்றெடுத்தது.. பிடிவாதமாக அவன் காதலை மறுத்தவள்.. இதோ.. அவனிடம் சரணடைந்து காதல் சொல்லி உருகிப் பாடுகிறாள்.. எனக்கு உன்னைப் பிடித்திருக்கிறது.. ஆனால் காதல் வரவில்லையே என்று குழந்தையாகக்

கேட்டவள், அணை உடைந்த வெள்ளமாக அவனை ஆக்ரமிக்க முற்படுகிறாள்..

அவளைத் தழுவி இதழ் சேர்க்காவிட்டால் அவனென்ன காதலன்..? அவனிடம் அஞ்சியவளை அவனை அழைக்க வைத்து விட்டானே.. இது அல்லவோ அவனது காதலின் வெற்றி..

அவனது விழிகளின் தாபத்தில் கரைந்து கொண்டிருந்தது அவளின் பெண் மனம்.. தேக்குமரம் போன்ற அவனது கட்டான உடல்கட்டில் கட்டுப்பட்டு மயங்கித் தவித்தது அவளின் பெண்மனம்.. செதுக்கி வைத்த கிரேக்க சிற்ப த்தைப் போன்ற சீரான அவனது வடிவழிகில் சிக்கிச் சிதிலமானது அவளின் பெண் மனம்.. அலைபாயும் அவனது முடிக் கற்றையில் முகம் புதைத்து விரல் கோதி நறுமணம் நுகர ஏங்கியது அவளின் பெண் மனம்..

அரும்பாகி மொட்டாகி.. பூவாக விரிந்து மணம் பரப்பாமல் காதல் களத்தில் அவனிடம் சரணடைய முடியாதென பிடிவாதமாக போர் புரிந்த அவளின் பெண் மனம் ஆயுதங்களைத் தூக்கியெறிந்து விட்டு நிராயுதபாணியாக அவனிடம் சரண் புக நினைக்கிறதே.. இது என்ன விந்தை..!

மொட்டு விரிந்து மலர்ந்து மணம் புரப்பும் காதல் பூவின் நறுமணத்தை அவனுக்குள் நிரப்பி அவனுடைய மூச்சுக் காற்றுடன் இவளது மூச்சுக்காற்றுக் கலக்க ஈருடல் ஒருயிர் ஆவதற்குத்தான் இத்தனை பிரயத்தனங்களும்..

**"ஒரு கணம்**

**நீயென்னைப் பிரிந்தாலும்.. கண்ணா..**

**மறு கணம்**

**நானுன்னைச் சேரும் வரம் வேண்டும்."**

அவளைப் பிரிய அனுமதிக்காத பிடிவாதக்காரனிடம் வரம் கேட்டாள் அந்தப் பேதை.. நான் உன்னை விட்டு விலக மாட்டேன்.. நீ விலகுவதையும் அனுமதிக்க மாட்டேன் என்று அவளைச் சிறையெடுத்த காதல் மூர்க்கனிடம் விண்ணப்பித்தாள்.. அவனைத் தவிர எவரைப் பார்த்தாலும் அந்தப் பார்வைக்கான பதில் கிடைக்கும் வரை ஓயாத புலன் விசாரணையை அவள்மீது திணித்த அந்த அநியாயக்காரனிடம் இறைஞ் சினாள்..

**"உன்னை இறுக்கி அணைக்கிறேன்..**

**உயிர் நுரைக்க ரசிக்கிறேன்..**

**அணுவணுவாய் உனைப் பிளந்து**

**என் ஆயுள் அடைப்பேன்..**

**தையத்தா.. தையத்தா.. தையத்தா..**

**பையத்தா.. பையத்தா..**

**பஞ்சு முத்தம் தா..”**

அவள் கேட்ட பஞ்சு முத்தத்தை இரும்பு முத்தமாக அவளுக்கு அள்ளி வழங்கினான் அந்த முரடன்.. மேடையை விட்டு இறங்கியவளைத் தோட்டத்தின் இருளுக்குள் இழுத்து இறுக்கிக் கொண்டான்... அவன்மீது காதல் வரவில்லையென்று அவள் சொன்ன காலத்திலேயே தள்ளி நிற்காதவன் இந்த அளவுக்கு அவள் காதலால் கசிந்துருகிப் பாடி அழைத்த பின்பு தள்ளியா நிற்பான்..?

சுவையான பாலை ருசி பார்க்கத் துடிக்கும் சிங்கமாக அவளை வேட்டையாட அவன் துடித்தான்.. இரை தேடும் சிங்கத்தின் கைகளில் அகப்பட்ட வேதனையும் வலியும் அவளுக்கு இல்லை.. இன்பமான அந்த இம்சைகள் அவளை எங்கெங்கோ அழைத்துச் சென்றன.. ஏதோ ஓர் நதியில் இறங்கும் உணர்வை அவளுக்கு அவன் கொடுத்துக்

கொண்டிருந்தான்.. மூச்சுத் திணறும் முத்தங்கள்.. இன்பமான நதிச் சுழல்கள்.. ஈரம் படர்ந்த முகம்.. பனி படர்ந்த ரோஜா..

ஒப்புக்குக்கூட அவளது ஒப்புதலை அவன் கேட்கவில்லை.. நீயென் உரிமையானவள்... என் உடமையானவள்.. உன்னை ருசிக்க உன்னிடம் நானென்ன அனுமதி கேட்பது என்று அத்து மீறினான்.. வேட்கை மிகுந்த அவனது தழுவல்கள் அவளுக்குப் பரிச்சயமில்லாதவை.. அவனது தழுவல்கள் அவளுக்குப் புதிதல்ல.. மென்மையாக அவளைத் தொட்டுத் தழுவி விட்டு விலகும் தழுவலாக இந்தத் தழுவல்கள் இல்லை..

அவனது வெப்ப மூச்சுக் காற்று அவளது உடலைத் துளைத்த கோழிக்கோடின் குளிர் காற்றை அனலாக்கியது.. ஊசி முனைத் தாக்குதலை நிகழ்த்திய குளிருக்கு கேடயமாக அவனது மூச்சுக்காற்று அவளை அரவணைத்தது.. தகிக்கும் காதலின் வெம்மையோடு அவன் உடல் அவள் மீது அழுந்தியிருந்ததில் நந்தினி இனம் புரியாத உணர்வுகளின் ஆளுகைக்கு ஆட்பட்டாள்.. இரும்புக்கரங்கள் அவளை வளைத்திருந்தன.. அத்து மீறிப் பிரவேசிக்கும் அவனது கரங்களுக்குத் 'தடா..' போடும் முயற்சியில் தோல்வியுற்றாள்.. அவள்மீது போர்வையாகக் கவிந்திருந்தவனை அப்புறப்

படுத்தும் திராணியில்லாமல் அவனுடைய கைகளுக்குள் அடைக்கலமாகி அவன் மார்பில் புதைந்து விட்டாள்..

நீ எனக்கு சகலமும்.. இந்த சரணாகதியில் ஆறிப் போய் வருகின்றன அனைத்து மன ரணங்களும்..

ரவிச்சந்திரனுக்கும் அப்படித்தான் இருந்தது.. அதற்கு முன்னாலும் அவள் அவனிடம் அடைக்கலமாகியிருக் கிறாள்.. அது உண்மையிலேயே அடைக்கலம் தேடும் அடைக்கலம்.. அவனை ஓர் பாதுகாவலனாக மட்டுமே உணர்ந்து அவள் புகுந்த அடைக்கலம்.

இப்போது அப்படியில்லை.. அவனே சகலமும் என்று உடலும் மனமும் உருக அவனிடம் அடைக்கலமாகியிருக் கிறாள் அவள்..

'இது போன்ற ஓர்நாள் இதற்கு முன்னால் வந்ததில்லை..'

எத்தனையோ இமாலய வெற்றிகளை ஈட்டிய அந்த வெற்றியாளனின் சூடான இதழ்கள் அவளது உச்சந்தலையில் பதிந்து அன்றைய வெற்றிக்கு எதுவும் இணையில்லை என்று அறிவித்தது.. அவள் மனதை வெற்றி கொண்டு விட்ட கர்வப் புன்னகை அவன் இதழ்களில் விரிந்தது..

"நந்தினி.."

"ம்ம்ம்.."

"எத்தனை நாளா இதை வெளியில் சொல்லாம மனதுக்குள்ளே வைத்திருந்த..?"

"எத்தனை நாளா..? நீங்க வேற.. இந்த இரண்டு நாள்களைக் கடக்கிறதுக்குள்ள போதும்.. போதும்ன்னு ஆகி வாழ்க்கையே வெறுத்துருச்சு.. உங்களிடம் சொல்லவும் முடியல.. சொல்லாம இருக்கவும் முடியல.. அழுகையழுகையாய் வந்துச்சு.. தெரியுமா..?"

தேம்பியவளின் கண்ணீரைத் துடைத்து விட்டு அவளது பட்டுக் கன்னத்தில் பட்டு முத்தமொன்றைத் தந்தவன்..

"குழந்தைடி.. நீ.." என்று பிரியத்துடன் சொன்னான்..

"ஹை.. இப்படிச் சொல்லி எஸ்கேப் ஆகிரலாம்ன்னு பிளானா..? அதுதான் நடக்காது.. இனி தரங்கிணி, கிண்கிணின்னு எவளாவது உங்க பக்கத்தில் வந்தான்னா நடக்கிறதே வேற.. சொல்லிட்டேன்.."

"அடேங்கப்பா.. பயமாய் இருக்கே.. அத்தனை டெர்ரரா நீ..?"

அவளது முகத்தைக் கைகளில் ஏந்திக் காதலுடன் பார்த்தவன்..

"இரண்டு நாள்களுக்குள் இவ்வளவு கஷ்டப் பட்டிருக்கயே.. இத்தனை நாள்களா உன்மீது காதலை வைத்து விட்டு.. நீ 'நோ..' சொன்னதில நான் எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பேன்..?" என்று கேட்டான்..

"ஆமாமில்ல.. ஸாரி. . ஸாரி.." அவள் அவனது கோட்டின் நுனியைப் பிடித்துத் திருகியபடி அண்ணாந்து முகம் பார்த்தாள்..

"தரங்கிணி மேல உனக்கு இவ்வளவு கோபம் வருதே.. இதைப் போல்தானே உன்னிடம் யார் பேசினாலும் எனக்கும் கோபம் வரும்..?"

அவனை அவன் உணர்த்தி விட்டதில் நெகிழ்ந்து போன நந்தினி.. அனைத்திற்கும் ஈடுகட்டப் போவதைப் போல அவனது கழுத்தை வளைத்து அவனது முகத்தை இழுத்து எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள்..

# அத்தியாயம் 175

**மு**தல் முத்தம்..!

அவன்மீது காதல் கொண்டு அவனது காதலியாய் அவள் அவனுக்குக் கொடுத்த முதல் முத்தம் அது.. தேனாக இனித்தது.. அவன் பெண்களை அறிந்தவன்தான்.. காதலை அறிந்தவனல்ல.. காதலியையும் அறிந்தவனல்ல.. நந்தினியை அறிந்த பின்னால் காமம் இல்லாத காதல் என்றால் என்ன என்பதை அவன் அறிந்தான்.. இந்த ஒற்றை முத்தத்தில் கிடைக்கும் பரவசம் கூடல்களில் கிடைக்க வில்லையென்று அவன் மனம் கிறங்குகிறதே..

தீராக் கிறக்கமல்லவா இது..!

அவனிடம் மயங்கும் பெண்கள் அவனது ஆகிருதியைக் கண்டு மயங்கவில்லை.. அவனது புகழைக் கண்டு மயங்கினார்கள்.. பணத்தைக் கண்டு மயங்கினார்கள்.. அவனைக் கண்டும் மயங்கினார்கள்.. அவர்களில் எவரும் நந்தினியைப் போலக் கள்ளமற்ற வெள்ளை மனத்துடன் இருக்கவில்லை.. கபட மும், சூதும், சாகசமும், நிறைந்தவர்களாக இருந்தார்கள்..

நந்தினி தேவதைக்கு நிகரானவள்.. சூழ்ச்சிகளற்ற வெள்ளை மனதுக்கு சொந்தக்காரி.. மழை பொழியும் கார் மேகம் போன்றது அவளது குணம்.. வசீகரம் நிறைந்த.. அதை உணராத வசீகரி..

நந்தினி அவனிடம் மயங்கியதில் அவன் எந்த அளவுக்கு மயங்கினான் என்பதை நந்தினி அறிய மாட்டாள்.. அவன் மீதான அவளது மயக்கமும்.. அந்த மயக்கத்தைக் குறித்த அவளது பயமும் அவனை ஈர்த்தது.. அவளை நினைக்க வைத்தது..

எந்தவித மனக்கிலேசமும் இல்லாமல் முழு மனதாக தன்னை அவனிடம் ஒப்படைத்துத் தழுவி நின்றவளின் ஆசை முத்தத்தில் அலை பாய்ந்த அவன் மனம் சமனப் பட்டது..

பதிலுக்கு அவளது நெற்றியில் முத்தமிட்டான்.. இமை மூடிக் கிறக்கத்துடன் அவனுடைய முத்தத்தை ஏற்றுக் கொண்டாள் நந்தினி.. முதல் முத்தத்தைப் போல முதல் இசைவு இது.. நான் உன்னுடையவள் என்று முழுமனதாக தன்னை அவனிடம் ஒப்புக் கொடுக்கும் தருணம் இது.

‘இது.. இது.. இதற்காகத்தானே இத்தனை நாளாய் உன்னுடன் போராடிக் கொண்டிருந்தேன் கண்மணி..’

சடசடவென மழைத் துளிகள் அவர்கள் மீது ஊசிச் சாரலாய் விழுந்து நனைத்ததில்.. அவள் மீது மழைச்சாரல் விழுந்து நனைத்திடா வண்ணம் தன் ஜெர்கினுக்குள் அவளை இழுத்துத் தலை யோடு போர்த்தி விட்டான்.. கோட் போன்ற ஜெர்கின்.. குளிர் கால கேரளாவுக்கான பிரத்யேக தயாரிப்பு.. எந்த நொடியும் மழை பொழியும் வயநாட்டில் தகுந்த உடையில்லாமல் வெளியே கிளம்ப முடியாது..

நந்தினி ரவிச்சந்திரனின் விருப்பத்திற்காக சேலையில் வந்திருந்தாள்.. அதன் மேல் ஸ்வெட்டர் போட்டு சால்வையைப் போர்த்தியிருக்க வேண்டும்.. அவ்வாறு தலைமுதல் கால்வரை போர்த்திக் கொண்டாலும் கோழிக்கோடின் குளிர் ஊசி

முனைகளாய் உடலை பதம் பார்த்து விடும்.. ரவிச்சந்திரனே வாய் விட்டுக் கேட்ட பின்பு அவன் கூறிய சேலையை உடுத்திக் கொண்ட நந்தினிக்கு

அதன் அழகை அவன் கண்டு ரசிக்க வேண்டுமென்ற ஆவல்.. அதை மறைக்க ஸ்வெட்டர் போடவில்லை.. சால்வை போர்த்தவில்லை.. தமிழ்நாட்டில் உலா வருவதைப் போலக் கிளம்பி வந்து விட்டாள்.. நேரம் செல்லச் செல்லக் குளிரின் ஆதிக்கத்தையே அவளால் தாங்க முடியவில்லை.. இதில்

மழைவேறு கூட்டுச் சேர்ந்து வந்து அவளைக் கலவரப் படுத்தியது.. வயநாட்டு மலைப் பகுதியின் அருகாமையிலிருக்கும் கோழிக்கோடில் நினைத்தவுடன் மழை பொழிவது எப்போதும் நிகழ்வது தான்..

‘மழை பெய்யுதே..’ நந்தினிக்கு பயமாக இருந்தது.. இத்தனை நாளாய் ஏதேதோ செய்து... எஸ்கிமோக்களைப் போலத் தலை முதல் கால்வரை கம்பளிகளால் போர்த்தியபடி நடமாடி ஜலதோஷம் அவளை அண்டி விடாமல் தற்காத்துக் கொண்டிருக்கிறாள்.. இன்று தற்காப்புத் தகர்ந்து விடுமோ..?

இல்லை என்பதைப் போல ரவிச்சந்திரன் அவனது ஜெர்கினுக்குள் அவளைப் புகுத்திக் கொண்டதில் கிளுகிளுப்பான சந்தோஷம் கொண்டாள்.. அவளது தலையைத் தன் மார்போடு புதைத்துப் போர்த்தி விட்டவனின் தலைமுடி மழைநீரில் நனைந்தது..

“நீங்க நனைகிறீங்களே..”

நந்தினி விலக முயன்றாள்..

“ம்ப்ச்..” கோபத்துடன் அவளை இழுத்து நிறுத்திக் கொண்டான் அந்த இரும்புக்கை மாயாவி..

“ப்ளீஸ்.. நீங்க நனைஞ்சா எனக்குக் கஷ்டமாயிருக்கும்..”

“நீ நனைஞ்சா எனக்கு அதைவிடக் கஷ்டமாயிருக்கும்..”

“இதில கூட பிடிவாதமா..?”

“யெஸ்.. மை டியர்..”

“சொன்னாக் கேட்கனும்..”

“சொல்லுடி.. கேட்கறேன்.. நீ சொல்லி நான் கேட்கனும்னுதானே இத்தனை நாளாய் காத்திருந்தேன்..?”

“சமத்துப் பிள்ளையாய் என்னை ஜெர்கினில்ல இருந்து ரிலீஸ் பண்ணுவீங்களாம்.. நான் ஒரே ஓட்டமா பங்களாவுக்குள்ளே ஓடித் தப்பிச்சுக்குவேனாம்..”

“தப்பிக்கிறதா..? வயநாட்டு மழையிடமிருந்தா..? நோ சான்ஸ்.. அதுக்குள்ளே நீ தொப்பல் தொப்பலாய் நனைஞ்சிருவ.. அது என்ன..? என்னை சமர்த்துப் பிள்ளைன்னு உன் பிள்ளையாக்கிற..? எந்த ஊரில் ஆறடி உயர பிள்ளையிருக்கும்..?”

“ஆறடிதான் உயரமா..?”

அண்ணாந்து அவன் முகத்தைப் பார்த்து நகைத்தாள் நந்தினி.. முத்துப்பல் சிரிப்பழகில்.. மோகனப் புன் முறுவலில்.. தன்னை இழந்தான் ரவிச்சந்திரன்..

“மயக்கறடி..” அவளது கன்னத்தைக் கடித்தான்..

“ரவி..” சன்னக்குரலில் கிறக்கமாக முணுமுணுத்தாள் நந்தினி..

“ஹேய்.. என்னடி சொன்ன..? என் பெயரையா சொன்ன..?” அவன் பரபரத்தான்..

அப்போதுதான் அதை உணர்ந்த நந்தினி நாக்கைக் கடித்தாள்..

‘எப்படிக் கேஷுவலாய் இவன் பெயரைச் சொன்னேன்..?’

அவளுக்கே புரியவில்லை.. அதுவரை அவனை சார், சாரே, பாஸ் என்றுதான் அழைத்திருக்கிறாள்.. மனதுக்குள் திட்டும் போது கூடப் பெயர் சொல்லித் திட்டியதில்லை.. ‘கம்மாண்டர்..’ என்றும் ‘மாமியார்’ என்றும் அவ்வபோது தோன்றும் இன்ன பிற பட்டப் பெயர்களைக் கொண்டும் தான் அவனை விளித்து அர்ச்சனை செய்திருக்கிறாள்..

‘ஞானா.. ரவியெண்டு விளிச்சு..?’

மலையாளத்து மங்கம்மாவாகவே மாறிப் போனாள் நந்தினி..

‘ம்ஹூம்.. செந்தமிழ் நாட்டுத் தமிழச்சியாய் பிறந்தவ.. மலையாள வயநாட்டு ரவிச்சந்திரனைக் காதலிச்சுத் தொலைச்சிட்டேனே.. கேரளத்து மருமகளுக்கு மலையாளம் துணை வர்றதில ஆச்சரியம் என்ன இருக்கு..?’

“இன்னொரு முறை சொல்லு..” அவன் கெஞ்சினான்.

“பாஸ்..” வெட்கத்துடன் அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள் அவள்..

“சொல்லுடி..”

“மாட்டேன்..”

“சொல்லித்தான் ஆகனும்..”

“வேண்டாம் பாஸ்..”

“நான் உனக்குப் பாஸா..?”

“பின்னே இல்லையா..? ஈ நந்தினியெனும் பெண்குட்டி நிங்களண்டே ஜோலி பார்க்க வந்து..”

“ஹேய்.. என்னடி இது.. ?”

“மலையாளம்..”

“இது மலையாளமா..?”

“யெஸ்.. மை டியர்..”

அவனைப் போலவே சொல்லி விட்டு அவள் கண் சிமிட்டியதில் போதை தலைக்கேற அவளது இதழோடு இதழ் பொருத்தக் குனிந்தான் ரவிச்சந்திரன்.. கொட்டிய மழைநீரில் நனைந்ததினால் நீர் சொட்டிய அவன் முகத்தைக் கண்டுப் பதறிப் போன நந்தினி திமிறினாள்.. அவன் விடவில்லை..

“வயநாட்டில பிறந்து வளர்ந்தவனுக்கு மழையென்ன அன்னியமா..? வருசம் முழுவதும் மழை பெய்கிற இடம்டி வயநாடு.. நான் மழையோடு விளையாடி மழையோடு உறவாடி வளர்ந்தவன்..”

“இந்தப் பெருமையை எத்தனை தரம்தான் சொல்வீங்க..?”

“எத்தனை தரம் வேண்டுமானாலும் சொல்வேன்.. எப்பேற்பட்ட பெருமை தெரியுமா இது.. வயநாடுன்னா சும்மாவா..?”

“சும்மான்னு யார் சொன்னதாம்..?”

“யார் சொன்னாலும் சொல்லலைன்னாலும் ஐ டோன்ட் கேர் எபௌட் இட்.. நீ சொல்லக் கூடாது.. தட்’ஸ் ஆல்..”

“ஏனாம்..?”

“ஏன்னா நீ வயநாட்டின் மருமகள்.. மனசிலாயி..”

“அடேங்கப்பா.. அதிகாரம் தூள் பறக்குது..”

“அப்படித்தான் தூள் பறக்கும்.. வாயைத் திறக்கக் கூடாது..”

“ஆகட்டும் சாரே..”

“எனக்குப் பழக்கமான கிளைமேட் இது... உனக்குத்தான் ஈரக்காற்று பட்டாலே தும்மல் வந்திருதே..”

அவனது அக்கறையில் மனம் குளிர்ந்தாள் நந்தினி.. அவளுக்கும் ரவிச்சந்திரனுக்கும் இது தொடர்பாக சண்டை வந்து ஓய்ந்திருந்தது.. நீலிமலைக் காட்டின் மரக்குடிலில் அவன் காதல் சொல்லி அவள் ஏற்றுக் கொள்ள மறுத்த தினத்திலிருந்து அவன் தினமும் ஏதாவது ஒரு காரணத்துக்காக என்று பெயர் வைத்து அவளை வாட்டி வதைப்பான்.. அப்படியொரு நாளில் மழை பெய்தது.. ரவிச்சந்திரனும் நந்தினியும் எஸ்டேட்டின் மலைப் பாதையில் நடந்து

கொண்டிருந்தார்கள்.. சடசடத்த மழைத்துளியில் அரண்டு போன நந்தினி அவசரமாக சால்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு அருகிலிருந்த கட்டிடத்தில் ஒதுங்கி நிற்க ஓடினாள்.. அதற்கு ரவிச்சந்திரன் கடுகடுத்தான்..

“இயற்கையோடு இசைந்து வாழத் தெரியனும்.. ஒரு துளி மழையில் நனைந்தால் நீ ஒன்றும் முளைத்து விட மாட்டாய்.. வயநாட்டுக்கு வந்த பின்னால் மழையைக் கண்டு ஒதுங்கி ஓடினால் சரி வருமா..? இது வயநாடு மட்டுமில்லை.. மலை நாடு.. கூடவே மழை நாடு..! வருஷம் பூராவும் மழை பெய்துகிட்டே இருக்கும்.. எத்தனை நாளைக்கு ஓடி ஒளிவாய்..? நனையப் பழகிக் கொள்..”

உத்தரவிட்டான் ரவிச்சந்திரன்.. அதற்கென்ன என்று நந்தினி தலையாட்டி விட்டுப் போயிருக்கலாம்.. அப்படிச் செய்தால் அவள் எப்படி நந்தினியாவாள்..? அதிகாரத்துடன் ரவிச்சந்திரன் பேசியதைப் பொறுத்துக் கொள்ள முடியாதவளாக..

“வயநாட்டு மழைக்கு நான் ஏன் பழகிக்கனும்..? நான் செந்தமிழ் நாட்டுத் தமிழச்சி..! தஞ்சாவூருக்குத் திரும்பிப் போயிருவேன்.. இருக்கிற கொஞ்ச நாளில பாதுகாப்பா

இருந்துட்டுப் போகாம மழையில நனைஞ்சு ஜலதோஷத்தை இழுத்து விட்டுக்கச் சொல்கிறீங்களா..?” என்று சொல்லி விட்டாள்..

“என்ன சொன்ன..?” என்று கர்ஜித்த ரவிச்சந்திரன் பேசு, பேசு எனப் பேசித் தீர்த்து விட்டான்..

அந்த நந்தினிதான் இன்று வயநாட்டின் மழைக்கு அவள் பழகிக் கொள்ள வேண்டும் என்ற கட்டளையை ரவிச்சந்திரன் மறுபடியும் சொல்லும் போது எதிர்த்து வாயாடாமல் ‘ஏனாம்’ என்று சரசத்துடன் கேட்டுப் பூரித்துப் போகிறாள்..

ஆணாதிக்கம் என்பது பார்ப்பவரின் கண்ணோட்டத்தையும் மன ஓட்டத்தையும் பொறுத்தது.. உண்மையில் பெண்ணால் ஆதிக்கம் செலுத்தப் படுவதை ஒவ்வொரு குடும்ப ஆணும் பெருமையாக உணர்கிறான்.. நினைக்கிறான்..

அன்று ரவிச்சந்திரன் பேசிய பேச்சைத் தாங்க முடியாமல் மழையில் நனைந்த நந்தினிக்கு அன்று இரவே குளிர்காய்ச்சல் வந்து விட்டது.. என்னவென்று கேட்ட வீணாவிடம் காய்ச்சல் வேகத்தில் நந்தினி உளறி விட.. அவள் மகனிடம் பொங்கலோ பொங்கல் என்று பொங்கிப் பதிலுக்குப் பேசித் தீர்த்து விட்டாள்..

பதிலுக்குப் பதிலாக அவனுடைய அன்னையிடம் போட்டுக் கொடுத்து சண்டையிட வைத்திருக்கிறாளா என்று அவன் சண்டையிட முடியாமல் அவள் காய்ச்சால் வேகத்தில..

“எனக்கு மழையில நனைஞ்சா ஒத்துக்காது.. ஜலதோஷம் பிடிச்சுக்கும்.. காய்ச்சல் வரும்.. ஜன்னி வரும்.. மழை எனக்கு அலர்ஜி பாஸ்..” என்று புலம்பித் தள்ளிக் கொண்டிருந்தாள்..

‘இவதான் டிரெயினில வரும்போதே மழையும், குளிரும் அலர்ஜின்னு சொன்னாளே.. அது தெரிஞ்சிருந்தும் இவளை மழையில நனைய வைத்து ஜுரத்தில விழுக வைச்சிட்டேனே..’ அவன் குற்ற உணர்வு கொண்டான்..

திறமையான டாக்டர்களை வரவழைத்து அவருக்கு சிகிச்சையளித்து இரண்டே நாளில் அவளை எழுந்து உட்கார வைத்து விட்டான்.. அவளது முகம் பார்க்காமல் எங்கோ பார்த்தபடி அவன் ‘ஸாரி..’ சொல்ல.. அவள் வேறு எங்கோ பார்த்தபடி ‘என்னிடம் யாரும் ஸாரி சொல்ல வேணாம்..’ என்றாள்.. ரவிச்சந்திரனின் மனம் மிருதுவானது..

அன்று அவளை மழையில் நனையச் சொல்லிக் கட்டாயப் படுத்திய ரவிச்சந்திரன்தான் இன்று மழையில் தான் நனைந்து

கொண்டு அவளை நனைய விடாமல் சிறகுகளுக்கடியில் தாய் பறவை குஞ்சைப் பாதுகாப்பதைப் போல அவளைத் தனது ஜெர்கினுக்குள் பதுக்கிப் பாதுகாக்கிறான் ..

காதலில் விழுந்த பின்னால் நியாயங்கள் மாறுபட்டு விடுகின்றன.. காதலுக்கு தனி நீதி.. தனி நியாயம்..

மழையில் நனைந்தபடி ஒற்றை மழைத்துளிகூடத் தன் காதலிமீது விழுந்து நனைத்து விடாமல் பாதுகாத்து அடை காத்து அணைத்தபடி பங்களாவை நோக்கி நடந்தான் ரவிச்சந்திரன்.. அவனது ஜெர்கினுக்குள் அடங்கியிருந்த நந்தினியின் மனம் இவன் எனது ஆண்மகன் என்ற பெருமிதத்துடன் கூவியது..

# அத்தியாயம் 176

**கா**ல்களை ஊன்றி முன்னால் ஏறிய வினித் கதாநாயகனைப் போலத் திரும்பி உத்ராவுக்கு கை நீட்டினான்.. அதை இறுகப் பற்றிக் கொண்டு மலையேறிய உத்ரா தன்னைக் கதாநாயகியைப் போல உணர்ந்தாள்.. கால்கள் வலிப்பதைப் போல இருந்ததில் நின்று முட்டியைத் தடவி விட்டுக் கொண்டாள்..

“வலிக்குதா..?” கவலையும் கரிசனமுமாக கேட்டான் வினித்..

“வேணும்னா தூக்கிக்கங்க அண்ணா..”

அவர்களுக்கு முன்னால் ரவிச்சந்திரனுடன் மலையேறிக் கொண்டிருந்த நந்தினி கேலி செய்தாள்..

“கால் வலிக்குதுடி..” உத்ரா சிணுங்கினாள்..

“எடக்கல் குகையைப் பார்க்க எடக்கல் மலையில ஏறுகிறதுக்கே முட்டியைப் பிடிச்சுக்கறியே.. உன்னை மீன்முட்டி அருவிகளைப் பார்க்க நீலிமலையில் ஏற்றி விட்டா என்ன செய்வியோ.. நான் அந்த மலையிலேயே ஏறி மீன்

முட்டி அருவிகளைப் பார்த்துட்டு வந்தவளாக்கும்..” பெருமையுடன் பீற்றிக் கொண்டாள் நந்தினி..

“நீ..? மலையேறின..? நம்பாதீங்க உத்ரா.. இவளுக்கு மீன் முட்டி அருவிகளைப் பார்க்க நீலிமலையில் ஏறனும் என்கிறதே தெரியாது.. அருவிக்குப் போகலாம் வர்றியான்னு கூப்பிட்ட உடனே.. மலையடிவாரத்தில கொட்டற அருவின்னு நினைத்துக் குதித்துக்கிட்டு கூட வந்தா.. வடுவாஞ்சலில ஜீப்பை நிறுத்திட்டு எதிரில தெரிந்த மலையைக் காட்டி அதில ஏறினாத்தான் அருவிகளைப் பார்க்க முடியும்ன்னு சொன்னதும் அருவியும் வேண்டாம்.. ஒன்றும் வேண்டாம்ன்னு ரிடர்ன் ஆகப் போனவதான் உங்க ஃபிரண்ட்..” ரவிச்சந்திரன் காட்டிக் கொடுத்தான்..

“இவர் மட்டும் என்னவாம்.. மீன் முட்டி அருவிகளைப் பார்க்கனும்னா மலையேறனும்னு எனக்குச் சொல்லவே இல்லைடி உத்ரா.. பக்கத்தில இருக்கிற அருவியைக் காட்டுகிறதைப் போலப் போக்குக் காட்டிக் கூப்பிட்டுக்கிட்டுப் போயி.. கால் முட்டி தேய மலையேற வைத்தார்.. நம்ம்ம்..பி இவர் பின்னாலே போனதுக்கு என்னமா கிஃப்ட் கொடுத்தாருங்கிற..? சின்னப் பிள்ளைக்கு சாக்லெட் ஆசையைக் காட்டி ஏமாத்தறதைப் போல அருவி ஆசையைக்

காட்டி என்னை ஏமாத்தி வருவாஞ்சலுக்கு கடத்திக்கிட்டுப் போயி மலையேற வைச்சவருடி இவரு.. பாஸை என்னன்னு நினைச்ச..?”

நந்தினி ரவிச்சந்திரனைப் பார்த்து உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள்.. வினித்தின் உள்ளங்கையை ரகசியமாகக் கிள்ளினான் உத்ரா.. பதிலுக்கு அவனது விரல் உத்ராவின் உள்ளங்கையை ரகசியமாக சுரண்டியது..

“பார்த்தீங்களா..?” கிசுகிசுத்தாள் உத்ரா..

“பார்த்தேன்.. பார்த்தேன்..” பதிலுக்கு கிசுகிசுத்தான் வினித்..

“இவங்களுக்குள்ள ஏதோ ஒரு சார்ட் ஃபிலிம் ஓடறதைப் போலவே இருக்குல்ல..”

“சார்ட் இல்ல.. லாங் ஃபிலிமே ஓடிக்கிட்டு இருக்கு..”

“ஹனிமூன் கப்புள் நாமா, இல்ல இவங்களான்னு டவுட்டா இருக்கு..”

“இந்த டவுட் எப்பவோ எனக்கு வந்துருச்சு..”

“லவ்வர்ஸ் போலவே பேசிக்கிறாங்க..”

# எண்ணியிருந்தது ஈடேற... 6

“நீ வேற.. ரவிசார் வாடி, போடிங்கிற ரேன்ஜில அவ, இவன்னுதான் நந்தினியைச் சொல்கிறார்.. இது அதுக்கும் மேலே..”

“ஜோடிப் பொருத்தம் நல்லாத்தான் இருக்கு..”

“நம்ம ஜோடிப் பொருத்தத்தை விடவா..?”

இவன் எங்கே சுற்றினாலும் ஒரே இடத்தில்தான் வந்து நிற்பான் என்ற நினைவில் புன்னகைத்தாள் உத்ரா.. அவளுக்கும் அவனுக்குமான உலகம் அது... அங்கே வினித்தும் உத்ராவும் மட்டுமே கதாநாயகன், கதாநாயகியாய் உலா வருவார்கள்..

எந்த மனைவிதான் இதை விரும்ப மாட்டாள்..? உத்ராவும் விரும்பினாள்.. அவளை கதாநாயகியாக்கி அழகு பார்க்கும் அவளுடைய கதாநாய கனின் மீது ஆசை கொண்டாள்.. தாழ்ந்த குரலில் கணவனிடம் ரகசியம் பேசினாள்.. அவன் பேசிய ரகசியப் பேச்சில் முகம் சிவந்தாள்..

அவர்கள் செய்த அத்தனை வேலைகளையும் ரவிச்சந்திரனும் நந்தினியும் செய்து கொண்டிருந்தார்கள்.. தேநிலவு ஜோடிக்குத் தனிமை கொடுக்க வேண்டும் என்று ரவிச்சந்திரன் நந்தினியை இழுத்துக் கொண்டு முன்னால்

மலையேறி விட்டான்.. தனிமை தேவைப்படுவது அவர்களுக்கா இல்லை இவர்களுக்கா என்ற நினைவில் நந்தினி முகம் சிவந்தாள்.. ரவிச்சந்திரனின் ஆசைப் பார்வை அவள் மீது படிந்து இறங்கிக் கவிழ்ந்து அவளுக்குள் ஆசைத்தீயின் அனலை மூட்டிக் குளிர் காய்ந்தது.. அவள் எதையாவது சொன்னால் அதைப் பற்றி அறியாதவனைப் போல புருவங்களை உயர்த்தி இறக்கி அவளைக் கிறங்கடித்து மயங்க வைத்தான்.. அவளுடைய அந்த மயக்கத்தை நொடிக்கொருதரம் கண்டு ரசிக்க விரும்பினான்.. அவன் மீதான மயக்கத்தில் தடுமாறுபவள் இப்போது ஆசைக் கடல் அலை மோத அவனை அள்ளித் தின்று விடுபவளைப் போல பார்த்து வைத்ததில் கிளர்ச்சியடைந்தான்..

“நந்தினி..”

உத்ரா உரக்க அழைத்ததில் வினித்தும் ரவிச்சந்திரனும் எரிச்சலடைந்தார்கள்.. இப்போது எதற்காக தோழியைத் தேடுகிறாள்..? தேநிலவு கொண்டாட வந்தவள் கணவனுடன்தானே கடலை போட வேண்டும்..? தோழியை எதற்காக ஜோடி சேர்க்க வேண்டும்..? அவளென்ன சுற்றுலாவா வந்திருக்கிறாள்..

“இப்ப எதுக்கு உன் ஃபிரண்டைக் கூப்பிடற..?”

வினித் மனைவியைக் கடிந்து கொண்டது ரவிச்சந்திரனின் காதுகளில் விழுந்து வைத்தது.. அவன் அதை ஆதரித்தான்.. முதல்நாள் இரவில் அவனும் நந்தினியும் கொட்டும் மழையில் காதல் பேசிய நொடிகள் நினைவுக்கு வந்து உடலை சூடேற்றிக் கொண்டிருந் தன.. முடிந்தவரை தன் காதலியிடம் மோகத்தீயை மூட்டிவிட்டுக் குளிர் காய விரும்பினான் அவன்.. அதற்கு இடையூறாக உத்ரா நந்தினியை அழைப்பதா..?

“ஸ்ஸ்ஸ்.. இது ஒன்றும் ரொமான்டிக்கான இடமில்லை.. ஹிஸ்டரிக்கல் பிளேஸ் போல தோணுது.. கொஞ்ச நேரம்தானேங்க.. அதுக்கப்புறம் ஹோட்டலுக்கு ரிட்டர்ன் ஆகிறப் போகிறோம்.. யாழ் ஹோட்டலை விட ஃபெண்டாஸ்டிக்கான பிளேஸ் ஹனிமூன் கப்புளுக்குக் கிடைக்குமா என்ன..?”

ஆமாம்தானே என்று தோன்றி விட்டதில் வினித் அமைதியாகி விட்டான்.. ரவிச்சந்திரனுக்குத்தான் கோபம் கோபமாக வந்தது.. யாழ் ஹோட்டல் ஹனிமூன் கப்புளுக்கு ஃபெண்டாஸ்டிக் பிளேஸ்தான்.. ஏனென்றால் அவர்களை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்.. ஹோட்டலின்

உரிமையாளருக்கு அப்படியா..? அவன் எங்கே போய் நின்றாலும் அங்கே பணியாளரின் கூட்டம் சேர்ந்து விடுமே.. அவர்களுக்கு மத்தியில் எப்படிக் காதல் செய்து..?

“என்னடி..?”

ரவிச்சந்திரனின் முறைப்பில் மனதில் தென்றலடிக்க.. மன்னிப்புக் கேட்பதைப் போல காதிரண்டையும் பிடித்துத் தோப்புக்கரணம் போடுவதைப் போல பாவனை செய்தபடி தோழியின் குரலுக்குப் பதில் குரல் கொடுத்தாள் நந்தினி..

“வெயிட் பண்ணுங்கடி.. நாங்களும் ஜாயின் பண்ணிக்கறோம்..”

“ஓகே.. ஓகே..”

நந்தினி நின்று விட அவள் எதற்காக ஓகே சொன்னாள் என்று ஆத்திரமடைந்தான் ரவிச்சந்திரன்..

“உன் ஃபிரண்ட் ஜாயின் பண்ணிக்கத்தான் அவங்க பக்கத்திலேயே அவங்களோட ஹஸ்பெண்ட் நிற்கிறாரே.. உன்கூட ஏன் ஜாயிண்ட் அடிக்கிறாங்க..?”

“அதை அவளிடம்தான் கேட்கனும்..”

“கேட்டு விடவா..?”

ரவிச்சந்திரன் உண்மையிலேயே உத்ராவிடம் கேள்விக் கணையைத் தொடுத்து விடுவான் என்பதில் கலவரமாகிப் போனாள் நந்தினி..

“உங்களுக்குப் புண்ணியமாப் போகும்.. அப்படி எதுவும் செய்து விடாதீங்க..” என்று பதறினாள்..

“புண்ணியத்துக்காக உன்கூட ஸ்பெண்ட் பண்ற இந்த தனிமையை விட்டுக் கொடுக்கச் சொல்கிறயா..?”

“எனக்காக விட்டுக் கொடுக்கலாமில்லையா..?”

“நீ எனக்காக பார்க்கவே மாட்டியாடி..”

அவன் தாபத்துடன் கேட்டதில் நந்தினிக்குள் காதல் வந்தது.. காதலிக்கான கடமையை ஆற்றுகிறவளாய் இமைகளைச் சிமிட்டினாள்.. அவன் விழிகள் மின்னின..

“ஏய்ய்..” என்று கிளர்ந்தான்..

“ஸ்ஸ்ஸ்.. உத்ரா கிட்ட வந்துட்டா..”

“ம்ப்ச்..”

ரவிச்சந்திரன் சலிப்பாக வினித்தைப் பார்த்தான்.. அவனைவிடச் சலிப்பாக வினித் அவனைப் பார்த்தான்..

‘ம்ஹூம்.. ஒரு ஆணோட மனது இன்னொரு ஆணுக்குத்தான் தெரியும்..’

புரிந்து கொள்ளலுடன் இருவரும் சிரித்துக் கொண்டார்கள்..

“இந்த இடம் ரம்யமா இருக்கில்ல..?”

இந்தக் கேள்வியைத் தேநிலவுக்கு வந்திருக்கும் மனைவி கணவனைப் பார்த்துக் கேட்டால் நன்றாக இருக்கும்.. உத்ராவோ தோழியைப் பார்த்துக் கேட்டு வைத்தாள்.. வினித் பெருமூச்சு விட்டான்.. காதில் புகை வராதது ஒன்றுதான் குறை..

“பாவம் வினித் நீங்க..”

போதாக்குறைக்கு ரவிச்சந்திரனும் இரக்கப்பட்டு வினித்தை உசுப்பேற்றி விட்டான்..

“நீங்க பாவம் பார்க்கறிங்க சார்.. இவ பார்க்கலையே..”

வினித் உத்ராவைப் பார்க்க அவள் நந்தினியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.. தோழிகள் இருவரும் கை கோர்த்து எடக்கல் மலையின் அழகை ரசித்தார்கள்..

சில்லென்ற இதமான குளிர் காற்று அவர்களின் உடலைத் தழுவிச் சென்றது.. நந்தினியிடம் வியந்த போது அவள்..

“கேரளாவில் இப்படித்தான் இருக்கும்..” என்று கேரளத்தில் பிறந்து வளர்ந்தவளைப் போலப் பீற்றிக் கொண்டாள்..

“பாருடா..” உத்ரா உதட்டைப் பிதுக்கி தோழியை மேலும் கீழுமாக பார்த்து வைத்தாள்..

“பாருடான்னு என்னைத்தானே சொன்ன..?” வினித் மனைவியிடம் ஒட்டிக் கொள்ளத் துடித்தான்..

“இல்லேண்ணா.. என்னைச் சொன்னா.. கேரளாவைப் பற்றி எல்லாம் தெரியும்ன்னு நான் பீற்றிக்கிட்டேனாம்.. மேடம் அதைச் சொல்லிக் காட்டறாங்களாம்.. இவளுக்கு கொழுப்பு அதிகம்ன்னா..” நந்தினி பட்டுக் கத்தரித்து வினித்தை விலக்கி வைத்தாள்..

“கொலஸ்ட்ரால் இருக்கா..? இல்லையே.. கொடி போல இல்ல இருக்கா..?” வினித்தின் விழிகள் மனைவியின் வடிவழகை அளவிட்டன..

“இவளை விடவா.. செம தீனி திங்கிறா.. ஆனாலும் வெயிட்லெஸ்.. பூப்போல இருக்கிறா..” ரவிச்சந்திரன் நந்தினியை அளவெடுத்து ஜொள்ளினான்..

“ஊஹும்.. இவங்க ரெண்டு பேரும் நம்மை ஜோடி சேர விட மாட்டாங்கடி..” உத்ரா சன்னக்குரலில் நந்தினியிடம் முணுமுணுக்க..

“சரியாச் சொன்ன..” என்று நந்தினி தலையை ஆட்டி அதை ஆமோதித்தாள்..

அந்த நொடியில் உத்ரா திருமணமானவள்.. வினித் அவளுடைய கணவன்.. நந்தினி அப்படியல்ல.. ரவிச்சந்திரனுக்கும் அவளுக்குமான காதலைப் பற்றி உத்ராவிடம் அவள் இன்னும் கூறவில்லை என்பதை அடியோடு மறந்து விட்டாள் நந்தினி.. உத்ராவுக்கு வினித் எப்படியோ.. அதைப் போல நந்தினிக்கு ரவிச்சந்திரன் என்பதைப் போல நடந்து கொண்டாள்..

“பேசாம இவங்க கூட ஜோடி போட்டுக்குவோம்.. இல்லேன்னா ஒரு வார்த்தை கூட நம்மாலே பேச முடியாதுடி நந்தினி..”

“யு ஆர் கரெக்ட்.. நீ அண்ணா பக்கத்தில ஒட்டிக்க.. நான் இவரோட ஜாயினடிச்சுக்கறேன்..”

நந்தினி ரவிச்சந்திரனின் பக்கத்தில் ஒட்டி நிற்க.. உத்ரா வினித்தின் கை விரல்களோடு விரல் கோர்த்துக் கொண்டாள்..

“இப்பத்தான் இந்த கிளைமேட்டே சில்லுன்னு மாறியிருக்கு..” என்றான் வினித்..

“யெஸ்.. யெஸ்.. நான் நினைத்தேன்.. நீங்க சொல்லிட்டிங்க..” ரவிச்சந்திரனின் கரம் நந்தினியின் தோளை வளைத்தது..

அவள் அதைத் தட்டி விடாமல் ஒட்டி நின்றாள்.. இரண்டு ஜோடிகளையும் இணை சேர்த்துப் பார்த்ததில் உற்சாகமான வாடைக்காற்று ஊதல் காற்றாய் மாறி அவர்களின் உடல் தழுவியது.. கணவன், மனைவியும், காதலின், காதலியும்.. வாடைக் காற்றின் உபயத்தால் மெல்லிய குரலில் காதல் மொழிகளை பேச ஆரம்பித்தார்கள்..

எடக்கல் மலையிலிருந்து பார்க்கும் போது எங்கும் பசுமையாக அழகாக இருந்தது.. கண்ணுக்கெட்டிய தூரம்வரை தெரிந்த மலைத் தொடர்களில் எத்தனை அருவிகள் இருக்கக் கூடும் என்று யோசித்தாள் நந்தினி..

அவையத்தனையும் மீன்முட்டி அருவிகளைப் போல அழகாக இருக்குமா…? எடக்கல் மலையில் நிற்கும் போதும் நீலி மலையின் நினைவுதான் அவளுக்குள் வந்தது.. மறக்க முடியாத நினைவுகளை அவளுக்குள் தந்த மலையல்லவா அது..!

மலைத் தொடர்கள் அடர்ந்த வயநாட்டில் அவள் வந்து நிற்பாள்.. அவளுக்கான வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுப்பாள் என்பதை நினைத்துப் பார்த்திருப்பாளா..?

அவளுடைய தோளை வளைத்திருந்த ரவிச்சந்திரனின் கரத்தின் மீது இதழ் பதித்தாள்.. அவளது முத்தத்தை உணர்ந்த ரவிச்சந்திரனின் கைவிரல்கள் அவளது கன்னத்தைத் தடவின..

‘உத்ரா பார்த்திருப்பாளோ..’

பதட்டத்துடன் தோழியைப் பார்த்தாள்.. உத்ராவும் வினித்தும் ரகசியப் பேச்சில் இருந்தார்கள்.. அவர்கள் இவர்களைக் கவனிக்கவில்லையென்பதில் நிம்மதியானாள்..

“ரிலாக்ஸ்..” ரவிச்சந்திரன் முணுமுணுத்தான்..

“அவங்க இரண்டு பேருமே கிளவர்.. நம் காதலை கண்டு பிடிச்சிருப்பாங்க.. தேவையில்லாம பயப்படாதே.. வி ஆர் லவ்வர்ஸ்..”

அப்படியும் இருக்குமோ என்று தோன்றியது நந்தினிக்கு.. அதனால்தான் உத்ரா அவளிடம் அப்படிப் பேசினாளோ.. நந்தினியின் மனதில் ரவிச்சந்திரனின் மீது காதல் இருக்கிறது என்பதை கண்டு சொன்னவள் உத்ரா தானே..

தோழிக்கு அவள் மனது தெரியும் என்பதில் சங்கடம் விலகிய நந்தினி.. ரவிச்சந்திரனின் கைவிரல்களில் கன்னம் சாய்த்தாள்..

# அத்தியாயம் 177

**க**டவுளின் தேசம் என்றழைக்கப் படும் கேரள தேசம் இயற்கையை சீதனமாகப் பெற்ற பேறு கொண்டது.. மலைகளும் மலைத் தொடர்களுமாக மாநிலம் முழுவதும் இருப்பதால் மலையாள தேசம் என்று கொண்டாடப் படுவது.. அம்மலைவள நாட்டின் வயநாடு மழை பொழியும் மலைப் பிரதேசமாகும்.. உத்ரா வியந்ததைப் போல ரம்யா நிரப்பிய சீதோஷ்ணம் கொண்ட சில்லென்ற மலைப் பிரதேசம் அது..

காதல் வராதவர்களுக்கும் காதல் வர வைத்து விடும் வாடைக்காற்று இது என்று நந்தினியின் மனம் கவிதை வரைந்தது.. மலைத்தொடர்களின் வரிசை மனதில் இதம் பரப்பினால், மலை முகடுகளை முத்தமிட்டு நகர்ந்து செல்லும் மேகக் கூட்டங்கள் மனதில் காதலை விதைத்தன..

புகை மூட்டம் போலக் கவியும் பனிப்புகை.. எதிரில் வருபவர்களைக் கூட இனம் காண முடியாமல் தன்னுள் ஒளிந்து வைத்து விளையாடும்.. இதில் அவ்வப்போது பொழியும் மழைத் தூறல் வேறு.. சாரல் மழையும் பனிப்

புகையும் ஒன்று சேர்ந்து உடலையும் மனதையும் குளிர்வித்தன..

வயநாடு என்பது தனிப்பட்ட ஓர் ஊரின் பெயரல்ல.. ஒரு மாவட்டத்தின் பெயர்.. கோழிக்கோடின் அருகாமையில் உள்ளது வய நாடு மாவட்டம்.. ஓங்கி உயர்ந்திருக்கும் மேற்கு தொடர்ச்சி மலைகளும் நீலவண்ணப் பனிப் புகையும்

வயநாட்டிற்கான தனித்த அடையாளங்கள்.. வயநாட்டில் உள்ள முக்கியமான ஊர் சுல்தான் பத்தேரி.. கணபதி வட்டம் என்று அறியப்பட்ட இந்த ஊரில் திப்பு சுல்தான் ஆயுதக் கிடங்கை வைத்தார்.. அதனால் 'சுல்தான் பாட்டரி' என்ற பெயராகி காலப் போக்கில் இந்தப் பெயரும் மருவி சுல்தான் பத்தேரியாகி விட்டது என்று உத்ராவுக்கு கதை சொன்னாள் நந்தினி..

என்னவோ தனது சொந்த ஊரைப் பற்றி விவரிப்பதைப் போலப் பெருமையாக அவள் கதை சொல்லி விவரித்ததை கேலி செய்யாமல் மெந்நகையுடன் கேட்டுக் கொண்டாள் உத்ரா.. ரவிச்சந்திரனின்ஊர் என்பதினால்தான் நந்தினி அந்த ஊரின் மீது அத்தனை பிரியம் கொள்கிறாள்.. என்பது

நந்தினிக்குப் புரிந்திருந்ததோ இல்லையோ.. உத்ராவுக்குப் புரிந்திருந்தது.

காதல் என்பது காதலிக்கப்படும் நபரைச் சார்ந்த அனைத்தையும் காதலிப்பது..

“நீ சொல்கிற சுல்தான் பத்தேரி எங்கே இருக்கு..?”

“நாம நிற்கிற எடக்கல் மலையில இருந்து 12 கி.மீ தொலைவில் இருக்கு.. யு நோ உத்ரா.. வயநாட்டில எந்த டூரிஸ்ட் ஸ்பாட்டை நீ பார்க்கிறதா இருந்தாலும் மலையேறித்தான் ஆகனும்.. இப்படித்தான் மீன் முட்டி அருவியைப் பார்க்க ஆசைப்பட்டு நீலி மலையில் ஏறி கால் முட்டியைப் பெயர்த்துக்கிட்டேன்.. கால்வலி அடங்க ரெண்டு நாளாச்சு..”

“இதை எத்தனை தரம்தாண்டி சொல்வ..? உனக்கு வாயே வலிக்காதா..?”

“நீலிமலையையும்.. மீன் முட்டி அருவிகளையும் பத்திப் பேசனும்னா வாழ்நாள் முழுக்கப் பேசிக்கிட்டு இருப்பேண்டி.. எனக்கு வாயே வலிக்காது..”

விழிகளில் ரகசியக் கனவு மிதக்கச் சொன்னவளை உன்னிப்பாகப் பார்த்தாள் உத்ரா.. தோழியின் மனதில் பொங்கும் நுண்ணிய உணர்வுகளை நுணுக்கமாக கண்டு கொண்டாள்..

“ஸோ.. உன்னைப் பொறுத்தவரை நீலிமலைக் காடும்.. மீன் முட்டி அருவிகளும் மறக்க முடியாத நினைவுச் சின்னங்கள்.. இல்லையா..?”

“மரக்குடிலை விட்டுட்டியே..”

“மரக்குடிலா..?”

“யெஸ்.. வுட் ஹவுஸ்.. ரவியோட கெஸ்ட் ஹவுஸ்.. அதைப் பார்த்தா நீ ஆச்சரியப்பட்டுப் போவ உத்ரா..” ரவிச்சந்திரனை பாஸ் என்று குறிப்பிடாமல் ‘ரவி’ என்று பெயர் சொல்லி நந்தினி குறிப்பிடுவதை மனதுக்குள் குறித்துக் கொண்டாள் உத்ரா.. தோழியின் மனதில் வந்திருந்த காதல் அவளுக்கு

சந்தோஷத்தைக் கொடுத்தது.. அனைத்தும் இருந்தும் எதுவும் இல்லாதவளாக ஓர் அகதியைப் போல ரவிச்சந்திரனிடம் அடைக்கலமாகியிருந்தவள் அவனையே ஆளும் அளவிற்கு உயர்ந்து விட்டாளே..

‘இனி நந்தினியின் வாழ்வில் உயிர்ப்பு வந்து விடும்..’

நேசத்துடன் தோழியின் கையைப் பிடித்துக் குலுக்கினாள் உத்ரா..

“எதுக்குடி..?”

“எதுக்குன்னு தெரியாமலே கை கொடுத்த பாரு.. அங்கே நிற்கிறடி நீ..”

“நான் எடக்கல் மலையில் நிற்கிறேன்.. நானாடி உன்னிடம் கை குலுக்க அலைஞ்சேன்..? நீயா கை கொடுத்த.. தானாக் கிடைக்கிற பாராட்டை யாராச்சும் வேணாம்ன்னு சொல்வாங்களா..?”

“அதைச் சொல்லு..”

தோழிகள் இருவரும் சிரித்தபடி மலையேற்றத்தைத் தொடர்ந்தார்கள்.. இருவரும் ஏறினார்கள் என்று பெயர்தான்.. கை கொடுத்து ஏற்றி விட்டதெல்லாம் வினித்தும்.. ரவிச்சந்திரனும்தான்.. இதில் வாயை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல்..

“‘ஏலேலோ.. ஐலேசா’..ன்னு பாடலாமாடி உத்ரா..?” என்று கேட்டு வைத்தாள் நந்தினி..

“பேசாம வாயை மூடிக்கிட்டு வந்தா த் தப்பிச்ச.. இல்லைன்னா கையை விட்டிருவேன்.. மலைச்சரிவில் உருண்டோடி மலையடிவாரத்தில போய் நின்னாகனும்.. எப்படி வசதி..?” என்று ரவிச்சந்திரன் கேட்டு வைத்ததில் வாயை மூடிக் கொண்டாள்..

ஓங்கி உயர்ந்திருந்த பாறைகளின் இடைவெளியில் ஒருவர் மட்டும் நடக்கும் அளவுக்கான குறுகிய இடைவெளி..

நால்வர் குழுவிற்குத் தலைமை தாங்கி ரவிச்சந்திரன் முன்னால் நடக்க.. நந்தினி அவனை வால் பிடித்துப் பின் தொடர்ந்தாள்.. நந்தினியின் பின்னால் உத்ரா.. உத்ராவுக்குப் பின்னால் வினித் என்று நடுவில் பெண்களை விட்டு இரண்டு ஆண்களும் முன் பின் காவல் காத்து நடைபயணத்தைத் தொடர்ந்தார்கள்..

என்ன நினைத்தாளோ.. ‘களுக்’ கென்று வாய் பொத்திச் சிரித்தாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் ஆர்வப் பார்வை அவளைப் பிய்த்துத் தின்றது.. இமைமூடி அவனை அமைதி காக்கும்படி எச்சரித்தாள்.

“எதுக்குடி சிரிச்ச..?” உத்ரா துருவினாள்..

“கம்மாண்டர்ன்னா கம்மாண்டர்தான்..”

நந்தினியின் கண்கள் சிரித்தன.. புரிந்து கொண்ட ரவிச்சந்திரனின் கண்கள் மின்னின.. அவனுக்கான பிரத்யேக கேலி அவனுக்குப் பிடித்திருந்தது..

“கம்மாண்டரா..?” உத்ரா புரியாமல் விழித்தாள்..

“இங்கே எதுவும் மிலிட்டிரி பீபுள்ஸின் பிளேஸ் இருக்கா..?” என்றான் வினித்..

“இல்லையேங்க.. சுல்தான் பத்தேரிங்கிற ஊரைப் பத்திச் சொன்னப்ப அது திப்பு சுல்தானோட ஆயுதக் கிடங்குன்னு சொன்னா..”

“ஒருவேளை அதை மீன் பண்ணிச் சொல்றாங்களோ என்னவோ..”

“இருக்கும்.. இருக்கும்..”

உத்ராவும் வினித்தும் தங்களின் கண்டு பிடிப்புகளை பகிர்ந்து கொண்டிருக்க.. நந்தினியின் விழிகளும் ரவிச்சந்திரனின் விழிகளும் கலந்து ரகசிய பாஷையில் பேசிக் கொண்டன..

சிரிப்பும் கிண்டலுமாக அவர்கள் எட க்கல் குகையை அடைந்து விட்டார்கள்.. 2400 வருடங்கள் பழமையான

குகையின் கீழ்பாகத்தில் சித்திர எழுத்துக்களும்.. மேற்பகுதியில் பிரமி, தமிழ் எழுத்துக்களும் இருந்தன..

“பார்த்துக்கங்க.. உங்க வயநாட்டிலயும் எங்க தமிழ் மொழிதான் கொடி கட்டிப் பறக்குது.. எடக்கல் குகையில தமிழ் எழுத்து.. எங்கும் தமிழ்..! எதிலும் தமிழ்..!”

நந்தினி ஆனந்தக் கூத்தாடாத குறைதான்.. உத்ராவும் வினித்தும் குகையின் சித்திர எழுத்துக்களையும்.. தமிழ் எழுத்துக்களையும் வீடியோ எடுத்தார்கள்..

பழமை வாய்ந்த குகை வரலாற்றுத் தொன்மையுடன் சிறப்பு வாய்ந்ததாக இருந்தது.. அதன் ஒவ்வொரு கல்வெட்டையும் நிறுத்தி நிதானமாக ரசித்துப் பார்த்தார்கள்..

“இங்கே வந்திருக்கிறயாடி..?”

“இல்லை உத்ரா.. இன்னொரு நாள் பார்க்கலாம்ன்னு சொன்னார்.. அந்த இன்னொரு நாள் நீ வரும் நாளாக இருந்திருக்கு பாரேன்..”

“பார்த்துக்கிட்டுத்தானே இருக்கேன்..” இருபொருள்படச் சொன்னாள் உத்ரா...

ரவிச்சந்திரனைப் பற்றிப் பேசும் போது மிகக் கவனமாக ‘பாஸ்..’ என்ற வார்த்தையைத் தவிர்த்துத் தொங்கத் தொங்கத் தாலி கட்டிக் கொண்டவளைப் போல ‘இவர் சொன்னார்..’ என்று உரிமையுடன் நந்தினி பேசுவதைக் கணக்கில் எடுத்துச் சொன்னதைப் போல இருந்தது அவள் பேச்சு.. மனைவியின் ஜாடைப் பேச்சை ரசித்துச் சிரித்தான் வினித்..

பறவை, விலங்குகள் வேட்டையாடப் படுவதைக் குறிக்கும் கல்வெட்டை படம் பிடித்துக் கொண்டார்கள்.. எடக்கல் குகைக்குச் செல்லும் வழி அழகானதாக இருந்தது.. நந்தினியிடம் அதைச் சொன்னபோது அவள் பெருமையாக..

“வயநாட்டில எல்லா வழிகளும் அழகான வழிகளத்தான் இருக்கும்..” என்று பீற்றிக் கொண்டாள்..

“முடியல..” என்று அலுத்துக் கொண்ட உத்ரா..

**“நேற்று இல்லாத**

**மாற்றம் என்னது..?”**

என்று சங்கேதமாக பாடினாள்..

“உனக்குத்தான் பாட்டுப் பாடத் தெரியுமா..? இந்தா.. நானும் பாடப் போறேன் எசப் பாட்டு..” என்று அறிவித்த நந்தினி..

**“நேற்று வரை**

**நீ யாரோ..?**

**நான் யாரோ..?**

**இன்று முதல்**

**நீ வேறோ..**

**நான் வேறோ..?”**

என்று ரவிச்சந்திரனைப் பார்த்தபடி படி வைத்தாள். “நான் இங்கிருக்கேன்..” குரல் கொடுத்தாள் உத்ரா..

“போடி..” நந்தினிக்கு வெட்கம் வந்து விட்டது.. வெட்கப்படும் போது அவள் மிகுந்த அழகோடு இருக்கிறாள் என்று தனிமையில் அவளைத் தள்ளிக் கொண்டு போய் ஜொள்ளினான் ரவிச்சந்திரன்.. அவனை விடவா அவள் அழகு என்று அவள் அவனுடைய சட்டை பொத்தானைப் பிடித்துத் திருகினாள்.. இப்படிக் கூட காதலைக் காட்ட அவளுக்குத் தெரியுமா என்று அவன் அதிசயப்பட்டுப் போனான்.. ஏன்,

தரங்கிணிக்கும், அஜந்தாவிற்கும்தான் அது தெரியுமா.. நந்தினிக்குத் தெரியாதா என்று அவள் சண்டைக்கு வந்தாள்..

“ஏய்ய்.. அவங்க எங்கேயிருக்கிறாங்க..? நாம் எங்கேயிருக்கிறோம்.. இங்கே வந்தும் அவங்க நினைவு தானா..?” கடிந்து கொண்டான் ரவிச்சந்திரன்..

ஏன் அவர்களைப் பற்றி நந்தினி நினைக்கிறாள்..? அவளுக்கே அது தெரியவில்லை.. அவர்களின் நினைவு தானாக வருகிறது.. அது கலவரத்தைக் கொடுக்கிறது என்று மட்டும் மிகத் தெளிவாகத் தெரிந்தது..

உத்ராவும் வினித்தும் பக்கத்தில் இருக்கிறார்கள்.. ரவிச்சந்திரன் எனும் ஆண்மை மிகு இளஞ்சிங்கம் அவளது காதலனாய் பாதுகாக்கிறான்.. இருந்தும் ஏன் நந்தினி அந்த இரண்டு பெண்களையும் நினைத்து அச்சம் கொள்கிறாள்..? அவர்கள் இருவரும் சாகச ம் நிரம்பிய பெண்கள் என்பதினாலா..? நந்தினியிடம் நிமிர்வு இருக்கிறது.. சாகசம் தெரியாதே.. அவளிடம் இல்லாத சாகசம் அவர்களிடம் இருப்பதுதான் அவளை அச்சுறுத்துகிறதா..?

பாறைகளில் கிறுக்கி வைத்ததைப் போன்று இருந்த சிற்பங்களை பக்கத்தில் போய் உன்னிப்பாக பார்த்தார்கள்..

“நுணுக்கமான வேலைப்பாடு..” வியந்தாள் உத்ரா..

“கொசமுசான்னு கிறுக்கி வைத்ததைப் போலவே இருக்குடி..” குறைபட்டாள் நந்தினி..

“உனக்கு ரசிக்கத் தெரியலைன்னு சொல்லு..” ஷொட்டு வைத்தான் ரவிச்சந்திரன்.. மலையிறங்கியவர்கள் ஜைனர் கோவிலைப் பற்றி வியந்து பேசியபடி ‘யாழ்’ ஹோட்டலை அசைந்தார்கள்..

“லன்ச்சை முடிச்சுட்டு ரெஸ்ட் எடுக்கப் போகலாம்.. இன்றைக்கு ஈவினிங் அவுட்டிங் கேன்சல்..”

ரவிச்சந்திரன் சொன்னதை ஒரு மனதாக மற்ற மூவரும் ஏற்றுக் கொண்டார்கள்.. கால் முட்டியைத் தடவி விட்டுக் கொண்ட உத்ராவிடம் ஆயிரத்தைந்தாவது முறையாக நீலிமலையில் ஏறிய மலையேற்றத்துக்கு முன்னால் இதெல்லாம் சர்வ சாதாரணம் என்று பீற்றி விட்டு வாங்கிக் கட்டிக் கொண்டாள் நந்தினி..

“ஏண்டி..? உனக்கு வாய் வலிக்கவே வலிக்காதா..? ஓயாம பேசிக்கிட்டே இருக்கியே..”

நந்தினியுடன் தனித்துச் சாப்பிட ஒதுங்கிய ரவிச்சந்திரன் எவரும் அறியாத வகையில் அவளுக்கு ஒரு குட்டு வைத்தான்..

“வேணும்ன்னா மௌனவிரதம் இருக்கவா..?”

“என்னடி ஆச்சு..?”

“ஐயாவுக்குத்தான் நான் பேசினாலே பிடிக்கலையே..”

“நீ பேசறதெல்லாம் பிடிச்சிருக்கு.. அந்தப் பேச்சை என்னிடம் பேசாமல் உன் ஃபிரண்டிடம் பேசுகிற பாரு.. அதுதான் பிடிக்கலை.. என்னிடம் மட்டும்தான் நீ பேசனும்..”

“இது வேறயா..? இத்தனை நாளா உங்களைத் தவிர வேற யாரையும் நான் பார்க்கக் கூடாதுன்னு சட்டம் போட்டிங்க.. இப்பப் பேசறதுக்கும் ‘தடா’ வந்தாச்சா..? போதும் பாஸ்.. நான் தாங்க மாட்டேன்..”

“பாஸா..?”

“தப்புத் தப்பு.. ரவி..!” கன்னத்தில் போட்டுக் கொண்டவள் குனிந்து அவன் முகம் பார்த்துக் கண்சிமிட்டி ஹஸ்கி வாய்ஸில்..

“என் ரவி..!” என்றாள்..

ரவிச்சந்திரன் சுற்றுப் புறத்தை மறந்து விட்டான்..

# அத்தியாயம் 178

**"நேற்று இல்லாத மாற்றம்**

**என்னது..?**

**காற்று என் காதில் ஏதோ**

**சொன்னது.."**

**வா**ய் விட்டுப் பாடிய நந்தினிக்கு கைகளை விரித்துத் தட்டாமாலை சுற்ற வேண்டும் போல இருந்தது.. பெல்ட் மன்னனுடன் அவளுக்குத் திருமணம் நிச்சயமாகியிருக்கும் செய்தியைக் கேள்விப் படும் வரை எத்தகைய உற்சாகத்துடன் இருந்தாளோ.. அத்தகைய உற்சாகத்திற்கு அவள் திரும்பியிருந்தாள்.. பாரங்களற்ற மனது விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக்குருவியின் உல்லாச மனப்பான்மையுடன் சிறகடித்துப் பறக்கத் துடித்தது.. உலகம் வண்ணமயமாகி அவளது ஆனந்தத்தில் ஆனந்தத்துடன் பங்கேற்றது..

"இதுதான் காதல் என்பதா..?"

தனக்குள் கேட்டுக் கொண்டவள் க்ளுக்கென்று சிரித்தாள்.. அவளுடைய சிரிப்புச் சப்தத்தைக் கேட்டு மிரண்டு தலையைத்

திருப்பிப் பார்த்தது ஒரு மான்.. அதன் கண்களில் அச்சம் தெரிந்தது..

“ஹேய்.. நானும் உன் போலதான்..” நந்தினி கையை ஆட்டிக் குதித்தாள்..

அவள் பேசாமல் இருந்திருந்தால் அந்த மான் ஓடாமல் இருந்திருக்கும்.. அவள் அதனுடன் பேச்சு வார்த்தையில் இறங்கியதில் அது அவளை விடத் துள்ளிக் குதித்து ஓடோடி விட்டது..

“மானைத் துரத்திட்டயா..?” ரவிச்சந்திரன் அவளுடைய காதைத் திருகினான்..

“என் காதைத் திருகறதுக்கு எப்படா சான்ஸ் கிடைக்கும்ன்னு காத்திருப்பீங்களோ..? வலிக்குது பாஸ்..” நந்தினி கண்ணிமைகளையும் மூக்கையும் சுருக்கி அவனைக் கவர்ந்தாள்..

துறுதுறுப்பு நிரம்பிய அவளது அழகில் ஈர்க்கப் பட்டவனாக அவளது தோளில் கை போட்டுத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. மறுப்புச் சொல்லாமல் அவன் இழுத்த இழுப்பிற்கு இசைந்து கொடுத்து அவன் கழுத்தில்

கைகளை மாலையாக்கிக் கொண்டாள் நந்தினி.. அவளது அந்த இணக்கம் அவனுக்குப் பிடித்தமானதாக இருந்தது..

அதற்கு முன்னாலும் அவள் அவனைத் தொட்டுப் பேசியிருக்கிறாள்தான்.. மன பாரம் அதிகமானால் அவனிடம் அடைக்கலம் புகுந்து அவன் மார்பில் முகம் புதைத்து அழுதிருக்கிறாள்தான்.. அவையெல்லாம் பாதுகாவலனிடம் ஆறுதல் தேடும் தொடுகை.. ஒரு காதலியாய் காதலனைத் தொடும் தொடுகை இருப்போதுதான்..

அவன்மீதான அனைத்து பயங்களையும் சஞ்சலங்களையும் உதறிவிட்டு அவன் மீதான காதலை மட்டும் மனதல் நிரப்பி அவன் கழுத்தைக் கைகளால் வளைத்து ஆசையுடன் பார்த்துக் கொண்டிருந்தவளின் கன்னத்தில் முத்தமிட்டான் ரவிச்சந்திரன்.. இமைமூடி அவனது முத்தத்தை அவள் ஏற்றுக் கொண்ட விதம் அலாதியான அழகைக் கொண்டதாக இருந்தது..

“நந்தினி..” போதையுடன் முணுமுணுத்தான்.. மது அருந்தாமலே போதை தரும் வஸ்து காதல் ஒன்றுதான்..

“ம்ம்ம்..” நந்தினி முணுமுணுத்தாள்..

“ஐ லவ் யு..”

“ஐ லவ் யு டூ..”

இது போதும் என்று இருந்தது ரவிச்சந்திரனுக்கு.. அவனுடைய காதலை ஏற்றுக் கொள்ளாதவளின் வாயிலிருந்து நானும் உன்னைக் காதலிக்கிறேன் என்ற வார்த்தைகள் வந்து விட்டன.. இதற்கு மேல் அவனுக்கு வேறு என்ன வேண்டும்..?

அவளைத் தழுவிக் கொண்டவனின் ஆவேச முத்தங்களில் மூழ்கி எழுந்தா நந்தினிக்கு மூச்சுத் திணறியது..

உத்ராவும் வினித்தும வேறு பக்கமாக உலா போய் விட்டார்கள் போலும்.. கண்களில் தென்படவே இல்லை.. அன்று அவர்கள் முதங்காவிற்கு வந்திருந்தார்கள்..

வழியில் ஆதிவாசிகள் வசித்த குகைகளைப் பார்த்தார்கள்.. அதன் தொன்மை மாறாத பழமையின் அழகோடு அவை இருந்தன.. சிலவற்றை சிதைத்துப் புதுப்பிக்காமல் அவற்றின் இயல்போடு விட்டு விட வேண்டும்.. ஆதிவாசிகள் வாழ்ந்த குகைகள் அந் த ரகத்தைச் சேர்ந்தவை..

முதங்காவில் காட்டு யானைகள் கூட்டம் கூட்டமாக உலா வந்து கொண்டிருந்தன.. மான்களும், யானைகளும்

சுதந்திரமாகச் சுற்றித் திரியும் வனவியல் பூங்காவைப் பார்த்த நந்தினி உதட்டைக் குவித்து..

“வாவ்..” என்று கண்களை விரித்தாள்..

அவள் ‘வாவ்’ சொன்ன அழகில் சொக்கிப் போன ரவிச்சந்திரனுக்கு அதற்கு ஒரு ‘வாவ்..’ சொல்ல வேண்டும் போல இருந்தது..

“கூண்டுக்குள் அடைக்காம ஃப்ரீயா விட்டிருக்காங்க பாருங்க.. இதுக்காக கேரளா கவர்ண்ட்மெண்டைப் பாராட்டியே ஆகனும்.. எங்க தமிழ்நாட்டில் ஃப்ரீயா விடு.. ஃப்ரீயா விடுன்னு பாட்டுப் பாடத்தான் செய்வோம்.. செய்கையில காண்பிக்க மாட்டோம்..”

“உங்க தமிழ்நாடா..? பல்லை உடைச்சிடுவேன்..”

“ஹப்பா..! என்ன ஒரு மேல்சாவினசம்..! பல்லை உடைக்கச் சுத்தியலும் கையுமா அலைவீங்க போல இருக்கு.. இதுக்குத்தானே உங்களைக் காதலிச்சேன்..? உங்களிடம் பல்லைக் காட்டிட்டா அந்தப் பல்லை உடைச்சுரனும்னு நேர்த்திக்கடன் வைச்சிருக்கீங்களா..?”

“ஹா.. ஹா.. இவர் என்னிடம் பல்லைக் காட்டிட்டாலும்..”

“இப்ப என்ன செய்துக்கிட்டு இருக்கேனாம்..?”

“வாயைக் குறைடி..”

“முடியாததைச் சொல்லக் கூடாது மச்சான்..”

“மச்சான்..?”

“இட் மீன்ஸ் மாமு..”

“மாமு..?”

“இதுவும் புரியலையா..? உங்களைப் போய் காதலிச்சேன் பாருங்க.. என்னைச் சொல்லனும்..”

“என்னடி அலுத்துக்கிற..?”

ரவிச்சந்திரன் நந்தினியின் தோளைப் பிடித்து இழுத்து அருகிலிருந்த மரத்தின் மீது சாய்த்தான்... அவள் விடுபட முடியாதபடி இரு கைகளையும் மரத்தில் ஊன்றி நடுவில் அவளை வைத்தான்.. அவள் மீது சாய்ந்து முகம் பார்த்தான்..

“இதுதான் பனிஷ்மெண்டா..?” நந்தினி சிரிப்பை அடக்கிக் கொண்டு கேட்டாள்..

“யெஸ்.. காதல் வெர்ல்டில இப்படித்தான் பனிஷ் பண்ணுவாங்க..”

“எவங்க..? நம்ம கேரளத்து பிஸினெஸ் ஸ்டார் ரவிச்சந்திரனுங்களா..?”

“அவனைத்தானேடி நீ காதலிக்கிற..?”

ரவிச்சந்திரன் அவளது முகத்தின் மீது முகம் வைத்துக் கவிழ்ந்து வாசம் பிடித்தான்.. நந்தினிக்குள் உணர்வுப் பேரலையொன்று எழுந்து ஓங்கி அடித்தது.. அதன் பிரவாகத்தில் மூழ்கி மூச்சுத் திணற அவள் இழுத்துச் செல்லப் பட்டாள்..

“ஹம்மா..” பலவீனமான குரலில் முணுமுணுத்தாள் நந்தினி..

அவளது கைகள் அவன் கழுத்தை வளைத்துப் பின்னந்தலை முடியை இறுக்கிப் பிடித்தன.. நடுங்கிய அவளது பூவுடலை தன் உடலின் அதிர்வால் உணர்ந்தவனுக்குள் உணர்வுகள் கிளர்ந்து எழுந்தன.. அவன் மூர்க்கமானான்.. அவளுக்குள் புதைந்து இதழோடு இதழ் பதித்தான்.. நந்தினியின் நடுக்கம் அதிகரித்தது..

“யு ஆர் மை லவ் நந்தினி..”

“ம்ம்ம்..”

“ஐ நீட் யு..”

“ம்ம்ம்..”

“என் ஆயுள் முழுக்க.. ஏன்.. அதற்குப் பின்னாலும் நீ வேணும்டி..”

“ம்ம்ம்..”

நந்தினிக்குள் மோகத்தீ பற்றியிருந்தது.. அதன் சுழற்சியில் அவள் சுழற்சியில் அவள் சுழன்றாள்.. பதில் பேச வார்த்தைகள் வரவில்லை.. வாய் திறந்தால் முணுமுணுப்பு மட்டுமே வந்தது.. அவனது பின்னந்தலை முடியைப் பிடித்திருந்த கரங்கள் இறங்கி முதுகில் பரவின.. அவன் தோள் வளைவில் முகம் புதைத்தாள்..

“எப்படியோ.. என்னை ஜெயிச்சுட்டிங்கள்ல..”

“ஈஸிட்..? நீ என்னை ஜெயிச்சுட்டேனில்ல நான் நினைத்துக்கிட்டிருக்கேன்.. ஐ லவ் யுடி கண்ணம்மா..”

“எத்தனை முறைதான் ஐ லவ் யு சொல்வீங்க.. வாய் வலிக்காதா..?”

“ஊஹும்.. இனிக்கும்..”

ரவிச்சந்திரன் அவளது முகத்தை நிமிர்த்தி நெற்றியில் முத்தமிட்டான்.. விழிமூடி நின்றிருந்தவளின் இமைகளில் முத்தமிட்டான்.. பட்டுப் போன்ற மென்மை என்று வர்ணித்தபடி கன்னத்தில் முத்தமிட்டான்.. அவன் முகத்தில் முகம் புரட்டிச் சிணுங்கியவளின் கழுத்து வளைவில் முகம் புதைத்தான்..

நந்தினி மயங்கிப் போனாள்.. ஆழிப் பேரலைகளின் ஆழத்தில் அமிழ்வதைப் போன்ற ஓர் உணர்வு.. குளிர் நிரம்பிய கோழிக்கோடின் கானகமும், தனிமையும், அவனது ஸ்பரிசமும், அவளுக்குள் எழுப்பி விட்ட கிளர்ச்சி வார்த்தைகளால் வர்ணிக்க இயலாததாக இருந்தது..

மான் ஒன்று அவர்களைக் கடந்து ஓட.. நந்தினி அந்த மானைப் பார்க்கும் ஆர்வத்தில் முகம் திருப்பினாள்..

“ம்ப்ச்...” கண நேர விலகலையும் பொறுத்துக் கொள்ளாத ஆட்சேபத்துடன் அவளது முகம் திருப்பி விழிகளுக்குள் உற்றுப் பார்த்த ரவிச்சந்திரன்..

“உன் கண்களை விட அந்த மானின் கண்கள் அழகாடி..?” என்று கோபம் காட்டினான்..

“அது துள்ளி ஓடறதைப் பார்க்க அழகாய் இருந்தது பாஸ்..”

“நீ துள்ளி ஓடுவது அதைவிட அழகாயிருக்கும்..” இந்த அளவுக்கு அவன் கொண்டாடுகிறானே என்றிருந்தது நந்தினிக்கு.. அவன் என்ன சாமான்யனா..? கேரளத்தின் ராஜகுமாரன்.. கோடிஸ்வரப் பேரழகன்.. அவனுடைய நிழலுக்குப் பக்கத்தில் நிற்கக் கூட ஒரு தகுதி இருக்க வேண்டும்..

அவன் அவனையே அவளுக்கக் கொடுக்கிறான் .. ஆட்கொள்ளும் தகுதி அவளுக்கு இருக்கிறதா..? இருக்கிறது என்று சொன்னான் அவன்..

“என்னை எடுத்துக்கடி..” என்று அரற்றினான்..

உணர்வுகளின் வீச்சைத் தாங்க முடியாத பேதையாக தவித்துப் போய் தடுமாறினாள் நந்தினி.. அவனுடன் ஒன்றிப் போக ஆசை சொன்னது.. வெட்கம் தடுத்தது.. உத்ராவும், வினித்தும் அருகில் இல்லாத தனிமைதான் அது.. ஆனாலும் அவர்களின் பெயரைச் சொல்லித் தப்பித்துக் கொள்ள முயன்றாள் நந்தினி.. அவனோ..

“ஹா.. ஹா..” என்று சிரித்து பக்கத்தில் உலவிய மான்குட்டிகளைத் துள்ளி ஓட வைத்தான்..

“அதுக பாட்டுக்கு புல் மேய்ந்துக்கிட்டு இருந்ததுக.. விரட்டி விட்டுட்டிங்களே.. இது நியாயமா..?” நந்தினி விலக யத்தனித்தாள்..

“மான் குட்டிகள் மட்டும்தான் மேய்ந்துக்கிட்டு இருந்ததுகளா..?”

விஷயம் சொட்டும் ரவிச்சந்திரனின் கேள்வி அவன்

என்ன செய்து கொண்டிருந்தான் என்று வினவியது.. நந்தினி சொக்கிப் போனாள்.. அவன் மீதான மயக்கம் தீரா மயக்கம் என்று தோன்றியது.. அது தீரவே தீராது.. எவ்வளவுதான் அவன் அள்ளி வழங்கினாலும் இன்னும் கொஞ்சம், இன்னும் கொஞ்சம் என்ற கிறக்கம் அவளுக்குள் எழுந்து கொண்டே இருக்கிறதே..

“வா நந்தினி.. தஞ்சாவூருக்குப் போகலாம்.. உன் அப்பாம்மாவிடம் பெண் கேட்கிறேன்.. உன் கழுத்தில் தாலியைக் கட்டி உன்னை என் வொய்ஃப்பாக்கிக் கொள்கிறேன்.. என்னால் தாங்க முடியவில்லை..” தாள முடியாத தாபத்துடன் அவன் சொன்னான்..

நந்தினி பதில் சொல்லவில்லை.. மேகநாதனின் முன்னால் ரவிச்சந்திரனின் மீதான காதலைச் சொல்லி நிற்கும் தைரியம் அவளிடம் இல்லை.. அவர் நிச்சயம் பண்ணி வைத்திருந்த மாப்பிள்ளையை மறுத்து வயநாட்டுக்கு ஓடி வந்து விட்டு.. அவளாக ஒருவனை நிச்சயம் பண்ணிக் கொண்டு அவர் எதிரில் போய் நிற்க அவளால் எப்படி முடியும்..? மேகநாதனும் வெண்ணிலாவும் அவளை எப்படி வளர்க்கவில்லையே..

தனக்கெல்லாம் காதல் வரும் என்று நந்தினி நினைத்துக் கூடப் பார்த்ததில்லை... நினைத்துப் பார்க்காததெல்லாம் நடப்பதுதானே வாழ்க்கை..! படிப்பை முடித்து ஊர் திரும்பியவள் அங்கே அவளுக்காக கல்யாணம் காத்து நிற்கும் என்று நினைத்துப் பார்த்தாளா..? அந்தக் கல்யாண மாப்பிள்ளை ஒரு கையில் துப்பாக்கியும், இன்னொரு கையில் பெல்ட்டுமாக பயமுறுத்தும் பெல்ட் மன்னனாக இருந்து தொலைப்பான் என்று நினைத்துப் பார்த்தாளா..? வெண்ணிலாவிடம் சொல்லாமல் பக்கத்து வீட்டுக்குக் கூடப் போயிராத நந்தினி, பெல்ட் மன்னனுக்குப் பயந்து ஊரை விட்டு ஓடி வந்தவள் மன்மதன் போன்ற பேரழகனிடம் மயங்கிப்

போய் காதலில் விழுந்து விடுவாள் என்றுதான் நினைத்துப் பார்த்தாளா..?

இப்படி நினைத்துப் பார்க்காத அத்தனையும் நந்தினியின் வாழ்வில் நிகழ்ந்து விட்டன.. நிகழ்ந்து விட்ட நிகழ்வுகளின் தொடர்ச்சியாக மேகநாதனின் முன்னால் குற்றவாளியாக நிற்பதை மட்டும் அவளால் நினைத்துப் பார்க்க முடியவில்லை..

‘அப்பாவிடம் இதையெல்லாம் எப்படிச் சொல்வேன்..?’

அவளுக்குப் பயமாக இருந்தது.. திருமணம் வேண்டாம் என்று அவரை எதிர்த்துப் போராட முடியாமல் வீட்டை விட்டு ஓடிவந்தவள் அவள்.. இப்போது புதிதாக முளைத்திருக்கும் காதலுக்காக அவரை எதிர்த்து நின்று எப்படிப் போராடுவாள்..?

காதலிக்கும் போது இனிப்பாகத்தான் இருக்கிறது.. அதற்க்கடுத்து காதலுக்காக போராடத்தான் பயமாக இருக்கிறது..

# அத்தியாயம் 179

**தா**ள முடியாத தாபத்துடன் அவள் காதோரமாக கிசுகிசுத்துக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்.. 'ம்ம்ம்' என்பதைத் தவிர வேறு எதையும் சொல்ல முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தாள் நந்தினி.. அவளுடைய காதல் விவகாரத்தை மேகநாதன் எப்படி எடுத்துக் கொள்வாரோ என்ற பயம் ஒரு பக்கம் அவள் மனதை போட்டு அரித்துக் கொண்டிருந்தது.. அதை ரவிச்சந்திரனிடம் சொன்னால் அவன் அவளை உண்டு, இல்லையென்று பண்ணி விடுவானே என்ற பயம் அதைவிட அதிகமாக இருந்தது.. அவனைக் காதலிப்பதை மேகநாதன் எப்படி மறுப்பார் என்று கிளம்பி விடுவான் அவன்..

கேரளாவில் அவன் பெரிய பிஸினெஸ் ஸ்டாராக இருக்கலாம்.. கோடிஸ்வர ராஜகுமாரனாக இருக்கலாம்.. தஞ்சாவூரின் மேகநாதனுக்கும் அப்படியே இருப்பானா..?

இதை அவனிடம் சொல்ல முடியுமா..?

"என்னடி யோசிக்கிற..?" தாபம் சொட்டும் குரலில் கெஞ்சலாக கேட்டான் அவன்..

“ம்ப்ச்.. சும்மா..”

“சும்மான்னுதான் தெரியுமே.. நீயெல்லாம் சீரியஸா திங்க் பண்ண ஆரம்பிச்சா உலக உருண்டை ஆப்போசிட் போலில சுத்த ஆரம்பிச்சிரும்.. ஹா.. ஹா..”

‘அப்படியே நான் இருந்திருக்கக் கூடாதா..?’

காதல் எனும் மாய வலைக்குள் அகப்படாதவளாக.. சுதந்திர வானில் விட்டுச் சிறகடிக்கும் சிட்டுக் குருவியாக.. தளைகளற்று விட்டு விடுதலையான புள்ளி மானாக.. கவலைகளற்ற பழைய நந்தினியின் கலகலப்போடு என்று அவள் வலம் வருவாள்..?

**‘உள்ளம் நிறைவிலோர்**

**கள்ளம் புகுந்திடில்..**

**உள்ளம் நிறைவாமோ..’**

இது கள்ளம் புகுந்து விட்ட உள்ளம்.. இதைச் சுமந்து மேகநாதனின் முன் நிற்பதென்பது வெகு சிரமம்..

“என் நந்தினி..” அவளது மூக்கைத் தன் மூக்கால் உரசி விரக தாபத்தை வெளிப்படுத்தினான் ரவிச்சந்திரன்..

அவனை எப்படி எதிர் கொள்வது என்று தெரியாமல் திணறிப் போனாள் நந்தினி.. அவன் மீதான காதலை உணர்ந்து அதை அவனிடம் சொல்ல முடியாத இரண்டு நாள்களில் நரக வேதனையை அனுபவித்தவள் நந்தினி..

அதிலிருந்து அவன் மீட்காமலிருந்திருந்தால்..? நினைத்துப் பார்க்கவே அவளது நெஞ்சம் நடுங்கியது.. அவனுக்காக ஏங்கியவள்.. அவன் பக்கத்தில் வந்தால் தன்னை ஒப்படைக்காமல் பின்னடைவது எந்த விதத்தில் நியாயம் என்று அவன் கோபப் பட்டான்.. அவனது கோபத்தில் அவள் தவித்தாள்..

அவனிடம் அவளை ஒப்படைத்து விடுவதென்பது அத்தனை எளிதான ஒன்றா என்ன..? அடைக்கலம் என்று அவனிடம் அடைக்கலம் புகுந்திருந்த போது வெகு இயல்பாக அவனிடம் தன் பாதுகாப்பை ஒப்படைத்தவளாக அவன் மார்பில் சாய்ந்து கண்மூடி அவன் கரம் பற்றிப் பின் தொடர்ந்தாள் அவள்.. அப்போது அவன் அவளுடைய பாதுகாவலன்.. அவனிடம் அவளை ஒப்படைப்பதும் அவனைக் கேள்வியே கேட்காமல் பின் தொடர்வதும் எளிதாக இருந்தது..

இப்போது அவன் அவளுடைய பாதுகாவலன் மட்டுமல்ல.. காதலனும் கூட.. காதலுக்கான கடமையை ஆற்று என்று அவளைக் கட்டாயப் படுத்துகிறான்.. அவளால் அதைச் செய்ய முடியவில்லையே.. அவன் மீது காதல் உண்டு.. ஆசை உண்டு.. அவனுடன் கலந்து விடும் தாபமும் உண்டு..

ஆனால் அவளால் எல்லைகளைக் கடக்க முடியவில்லையே.. ஏன்..?

“ரவி..” அவள் தழதழத்தாள்..

“என் நந்தினி..!” அவள் பெயர் சொல்லி

அழைத்ததில் அவன் பரவசப் பட்டுப் போனான்..

“நான் பட்டிக்காடு ரவி.. உங்களோட எதிர் பார்ப்புகளுக்கு என்னால் ஈடு கொடுக்க முடியாது..”

“அடித்தேன்னா தாங்க மாட்டடி..”

“இதையெல்லாம் யோசிச்சுத்தான் இதுவரைக்கும் ஐயா அடி மேல அடியாய் கொடுத்தீங்களாக்கும்..?”

“இனி அடிக்க மாட்டேன்..”

“ஏன்னா நான் காதல் சொல்லிட்டேனில்ல..? அதனால என் கன்னம் இனிப் பழுக்காது..”

“அப்படின்னு யார் சொன்னது..?”

“ஏனாம்.. நீங்கதானே இனி அடி கொடுக்க மாட்டேன்னு சொன்னீங்க..”

“அடித்தால்தான் கன்னம் பழுக்குமா..?”

அவன் சட்டெனக் குனிந்து அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தான்.. ஆழப் பதிந்த அந்த முத்தத்தில் அவள் கிறங்கிப் போனாள். .

“முத்தம் கொடுத்தாலும் கன்னம் பழுக்கும்டி..”

நந்தினியால் பேச முடியவில்லை.. புயலில் சிக்கி விட்டத் தளிர் கொடி போல நடு நடுங்கினாள்.. அவன் ஒன்றும் புதிதாய் அவளைத் தொட்டு விடவில்லை.. வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம் கட்டித் தழுவுவான்.. முத்தம் பதிப்பான்.. அவள் அவனுடைய காதலை ஏற்காத பொழுதும் அவனுடைய காதலில் அவன் உறுதியாக இருந்தான்.. நீ என்னுடையவள் என்று வெறியாக இருந்தான்.. நந்தினிதான் அவனுடைய

காதலின் உறுதி பற்றிய சந்தேகத்துடன் விலகுவதிலேயே முனைப்பாக இருந்தாள்..

இப்போது அப்படி விலக முடியவில்லையே.. அதுதான் அவளுக்குப் பயமாக இருந்தது.. அவன் தொட்டால் அனல்மேல் உருகிக் கரைகிறாளே.. இது எதில் போய் முடியுமோ..

“ரொம்பவும் யோசிக்காதே.. இந்தக் குட்டித் தலை தாங்காது..”

செல்லமாக அவளது தலையோடு தலை மோதிச் சிரித்தான் ரவிச்சந்திரன்.. மயங்கிப் பார்த்தவளிடம் இமையைச் சிமிட்டிக் கண்ணடித்து சோதித்தான்.. அந்தச் சோதனையையே தாங்க முடியாமல்.. ‘குப்’ பென்று உடல் முழுவதும் கிளர்ந்து எழுந்த உணர்வுப் பேரலைகளில் உருள ஆரம்பித்தாள் நந்தினி.. அடுத்த சோதனையாக..

“என்னடி.. இப்போதுதான் ஃபர்ஸ்ட் டைம் என்னைப் பார்க்கிறதைப் போலப் பார்த்து வைக்கிற..? ம்ம்ம்..?” என்று புருவங்களை வசீகரமாக உயர்த்தி இறக்கினான்..

நந்தினி உதட்டைக் கடித்துத் தன் உணர்வுகளைக் கட்டுப்படுத்த முயன்றாள்.. பலகோடி பட்டாம் பூச்சிகள் ஒன்று

சேர்ந்து அவளது வயிற்றுக்குள் பறக்கும் இன்ப அவஸ்தையில் சிக்கித் திக்கு முக்காடினாள்..

“ரொம்பவும் ஸ்ட்ரெஸ்ஸை உன் தலைக்குள் ஏற்றிக் கொள்ளாதே..” அவள் காதைப் பிடித்துத் திருகினான் ரவிச்சந்திரன்..

“ஐ ஆம் யுவர்ஸ்.. ஆல்வேஸ் யுவர்ஸ்.. இதை மைண்டில் ரிகார்டு பண்ணிக்க.. இப்படி நடுங்க மாட்ட..” அவளது மூக்கைப் பிடித்து ஆட்டினான்..

அவன் மீதிருந்து வெளிப்பட்ட நறுமணத்தில் நிலை குலைந்து கொண்டிருந்தாள் நந்தினி.. அவனுக்கே உரித்தான நறுமணம் அது.. அவளை மயக்கத்தில் ஆழ்த்தும் நறுமணம்..

அவளது விழிகளில் வெளிப்பட்ட மயக்கத்தில் ரவிச்சந்திரன் அவள் மீது சாய்ந்தான்..

“ப்ளீஸ்.. வேண்டாம்..” நந்தினி தடுமாற்றத்துடன் மறுத்தாள்..

“வாட்’ஸ் தி மீனிங் தட் ‘வேண்டாம்..’ ம்ம்..? நான் உனக்கு வேண்டாமா..?” ரவிச்சந்திரன் ரகசியக் குரலில் வினவினான்..

நந்தினிக்குள் சுகமான ஓர் இதம் பரவியது.. அவஸ்தைகளை உள்ளடக்கிய இதம் நிரம்பிய அந்த இம்சைப் பொழுதுகளை அவள் மனமார விரும்பி வரவேற்றாள்.. அது எப்படி என்றுதான் அவளுக்குப் புரியவில்லை.. வேண்டாம் என்று உதடுகள்தானே சொல்கின்றன..? மனம் வேண்டும் என்று குதியாட்டம் போடுகின்றதே.. அது ஏன்..?

“இப்படியெல்லாம் பேசக் கூடாது..” அவள் சிணுங்கினாள்..

அவளது சிணுங்கலை அவன் ரசித்தான்.. மனதின் உணர்வுகளை மறைக்கத் தெரியாத பேதை அவள்.. அவன் மீதான காதலில் அவள் தவிப்பதைக் காண்பதற்கு அவனுக்குச் சுகமாக இருந்தது.. பிள்ளை மனம் கொண்ட கிள்ளையவளின் மனதை அவன் வென்று விட்ட மமதை அவனது நெஞ்சில் விரவியது..

“எப்படியெல்லாம் பேசக் கூடாது..?”

“நீங்க வேண்டாம்ன்னு நான் சொல்வேனா..?”

“சொன்னியே..”

அவன் நினைவு படுத்தியதில் அவளது முகம் சிணுங்கியது.. அவனை அவள் மறுத்த நாள்களை நினைவு கூர அவள் பிரியப்படவில்லை.. அவனுக்காக உருகும் இன்றைய நாள்களில் நிலைத்து நிற்கவே விரும்பினாள்..

“என்னத்தைச் சொன்னேனாம்..? இவர் பெரிசா என்னத்தைக் கேட்டுட்டாராம்..? நான் சொன்னதை யெல்லாம் கேட்டு விடறதைப் போலத்தான் பேச்சு..”

“சொல்லிப்பாருடி.. அப்பத் தெரியும்..”

“என்னன்னு..?”

“நான் கேட்கிறேனா.. இல்லையான்னு..”

அவன் கேட்டபான் என்றுதான் அவளுக்குத் தெரியுமே.. அவள் மீது ஆணை வைத்து விட்டாள் என்பதற்காக மறைவிடத்தில் நின்றவனாயிற்றே..

‘இரும்புக்கை மாயாவி ஞான் எது பறஞ்ஞாலும் கேட்பானல்லோ.. என்ன ஒந்நு.. ஞான் அதைக் காதலோடு பறஞ்ஞுனும்.. கேட்டோ..’

வினித்தும் உத்ராவும் சிரிக்கும் சிரிப்பொலி அவர்களின் காதுகளில் விழுந்தது.. அவசரமாக அவன் கைபிடிக்குள் இருந்து விலகி வெளிப்பட்டாள் நந்தினி..

“இவ்வளவு ஏர்லியரா ரிட்டர்ன் ஆகனுமா என்ன..?”

ரவிச்சந்திரனின் கோபத்தில் அவளுக்குச் சிரிப்பு வந்தது.. காதலுக்கான தனிமைக்கு இடையூறு நேர்ந்தால் நியாய, அநியாயங்கள் அங்கு மறக்கப் படுகின்றனவே..

“உச்சிப் பொழுதாகிச்சு பாஸ்... புலரியில காட்டுக்குள்ள போனவங்க இப்பத்தான் வந்திருக்காங்க..”

“கோழிக்கோடில புலரியையும், உச்சியையும் எப்படிடீ கால்குலேட் பண்ற..?”

“டைம் பார்த்துத்தான்.. போவீங்களா..”

“நீ இல்லாமலா..? வா, வா.. சேர்ந்தே ஓடலாம்..”

“ஓடனுமா..? எதுக்கு..?”

“அதுதானே உனக்குப் பிடிக்கும்..”

‘இவன் அதை விடவே மாட்டானா..’ அவளுக்கு கோபம் வந்து விட்டது.. அவனை இமைக்காமல் பார்த்தாள்.. அவனோ ஒற்றை இமையை மட்டும் சிமிட்டி அவளைக் கிறங்கடித்தான்..

‘ஈ மன்மதன் இங்ஙன மயக்கினா.. ஞான் எங்ஙன வெப்பராளம் கொள்வதாம்..’

கோபத்தில் சிவக்க வேண்டிய நந்தினியின் முகம் வெட்கத்தில் சிவந்தது.. அவனிடம் காதல் சொல்லாத காலத்தில்... அவன் அவளைப் பாடாய்ப் படுத்திக் கொண்டிருந்த தருணங்களிலேயே அவளால் அவன் மீது கோபம் கொள்ள முடிந்ததில்லை..

‘இப்பக் கோபப் பட்டுட்டாலும்.. கழுதையில.. சும்மாவே ஈ மனுஷனக் கண்டா மனசு ரெக்கை கட்டிப் பறந்து தொலைக்கும்.. இந்த லட்சணத்தில மனசுக்குள்ளே காதல் வந்து அது இவனுக்குத் தெரிஞ்சும் தொலைச்சிருச்சு.. பின்னிப் பிணையறான்.. கட்டின புருஷன் மாதிரி நொடிக்கொரு தரம் கண்ணடிச்சுக் கவிழ்க்கிறான்.. இதில கவிழாம நிமிர்ந்து நின்னு என்னத்தைச் சாதிக்கப் போறேனாம்..?’

கணவன் கவிழ்க்க முனையும் போது கவிழ்வதைப் போலக் கவிழ்ந்து அவர்களைக் கவிழ வைத்து விடும் வித்தை தெரிந்தவர்கள் இந்தியப் பெண்கள்.. மயங்கி மயக்குவதில் கை தேர்ந்தவர்கள்.. அந்த சூட்சுமங்கள் எவருக்கும் சொல்லி

வருவதில்லை.. சொல்லித் தெரிவதில்லை மன்மதக் கலை..! அது தானாய் வரும் கலை..!

நந்தினி இயல்பாகவே சொல் பேச்சுக் கேட்க மாட்டாள்.. இது பற்றிய பேச்சுகள் என்றால் “அய்யே..” என்று முகம் கோணி இடத்தைக் காலி செய்து விடுவாள்..

“பிரியாணி மேல காட்டற இண்ட்ரெஸ்டை லவ் மேலயும் காட்டேண்டி..” அவளுடைய தோழிகள் கிண்டல் செய்வார்கள்..

காதலைப் பற்றிய அரிச்சுவடி தெரியாதவளுக்கு ஆனானப்பட்ட ஆணழகன் காதலனாக கிடைத்திருக்கிறான்.. அவளுடைய கல்லூரித் தோழிகளுக்கு இது மட்டும் தெரிந்தால் போதும்..

“உன்னையும் ஒருத்தன் விழுந்து விழுந்து காதலிச்சிருக்கான்ங்கிறதையே நம்ப முடியலை.. இதில அவன் உலகம் முழுக்கத் தெரிஞ்ச கோடிஸ்வரன்னு வேற சொல்ற.. எல்லாம் நேரம்டி.. உனக்கு மச்சம்டி..” என்று வயிறெரிந்திருப்பார்கள்..

ரவிச்சந்திரன் அவள் முகத்தில் மூக்கை உரசினான்..

“ஸ்ஸ்ஸ்.. உத்ராவும், அண்ணாவும் பக்கத்தில் வந்துட்டாங்க..” நந்தினி எச்சரித்தாள்.. ரவிச்சந்திரனிடம் வினித்தைப் பற்றிப் பேசும் போது வினித் அண்ணா என்று கூடச் சொல்ல மாட்டாள்.. ‘அண்ணா’ மட்டும்தான் அப்போதுதான் அவன் பேசாமல் இருப்பான்..

‘இருந்தாலும் இவனுக்கு இத்தனை பொஸஸிவ்னெஸ் இருக்கக் கூடாது..’ மனத்தாங்கல் போல பெருமைப் பட்டுக் கொண்டாள்..

“ஹனிமூன் கப்புள் போலவாடி இருக்காங்க..? போன வேகத்தில திரும்பிட்டாங்களே..”

“இப்பத்தான் புலரி முதல் உச்சி வரைன்னு காலக் கணக்குச் சொன்னேன்.. மனசில ஆகலையா..?”

“உன் வாய் இருக்கே.. வாய்..”

ஆசையுடன் அவன் வாயைப் பார்க்க முத்தம் கொடுத்து விடுவானோ என்ற பயத்துடன் தள்ளி நின்று கொண்டாள் நந்தினி..

“எஸ்கேப்..?” அவன் முறைத்தான்..

“கிரேட் எஸ்கேப்..” அவள் அழகு காட்டினாள்..

“உன் ஃபிரண்டும் வினித்தும் வந்துட்டாங்க என்கிற தைரியம்..?”

“ஆமாம் பாஸ்..”

“பாஸாடி நான் உனக்கு..?”

“என் ஆசை மச்சான்தான் நீங்கள் எனக்கு.. பட்ஷே.. மத்தவங்க முன்னாடி இதே வாய் வந்து தொலைச்சிட்டா என்ன பண்றது..? பாஸுன்னு சொல்லி மெயின்டெயின் பண்ணிக்கிறது பெட்டர் பாஸ்..”

“உன்னை..”

“தள்ளியே நில்லுங்க.. உத்ரா கமிங்”

“இவ்வளவு சீக்கிரமா வந்திருக்க வேண்டாம்..”

“உச்சிப் பொழுது மச்சான்.. லன்ச் டைம்..”

“என்னடா.. என் ஆசைக் காதலி இவ்வளவு நேரமா ஃபுட்டைப் பத்தி வாயே திறக்கலையேன்னு பார்த்தேன்.. உனக்குப் பசி வந்திருச்சுன்னு சொல்லு..”

“வயிறிருக்கிற எல்லோருக்கும் பசி வரத்தான் செய்யும்..”

விட்டுக் கொடுக்காமல் வாயடித்த அந்த வாயாடியின் மூக்கைத் திருகி வார்த்தையாட வேண்டும் என்று ஆசை பொங்கியது ரவிச்சந்திரனுக்கு.. வினித்தும் உத்ராவும் பக்கத்தில் வந்து விட்டதால் பல்லைக் கடித்தபடி பொறுமை காத்தான்..

# அத்தியாயம் 180

“இங்கிலீஷ் எடுத்து ‘ய’ போலவே இந்த ரோடு வளைஞ்சு வளைஞ்சு போடுதில்ல..”

உத்ரா வியந்து போது நந்தினியும் ரவிச்சந்திரனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்..

“என்ன்ன்…ன..?” சன்னமான குரலில் அதட்டினான் ரவிச்சந்திரன்..

“ஒன்ன்ன்..னுமே இல்லை பாஸ்..” ஜகா வாங்கினாள் நந்தினி..

“உனக்கும் உன் ஃபிரண்டுக்கும் ‘ஸேம் தாட்’ன்னு நான் சொல்லனுமா..?”

“வேண்டவே வேண்டாம்..”

“வயநாட்டுக்குப் போகிற பாதை ‘ய’ ஷேப்பிலதான் இருக்கும்.. யார் இதைப் பாத்தாலும் இப்படித்தான் சொல்வாங்க..”

“ஓகே.. ஓகே.. கூல் பாஸ் கூல்..”

ஒரு பார்வை பார்த்து விட்டாள்.. அவளும் அவளுடைய தோழியும் ஒன்று போல நினைப்பதைப் பார்வையில் உணர்த்தி விட்டாள்.. அதற்கு இத்தனைப் பேச்சா..?

‘இவன் பண்ற அட்ராசிட்டி இருக்கே..’ நந்தினி பின்னால் திரும்பி உத்ராவைப் பார்த்தாள்.. ஜன்னல் கண்ணாடிக்கு வெளியே தெரிந்த வயநாட்டுப் பாதையில் இயற்கை அழகை ரசித்துக் கொண்டிருந்தாள் உத்ரா.. சரிவில் தெரிந்த தேயிலை பாத்திகளின் அழகை கணவனுக்குக் காட்டி அவள் குதூகலித்தைப் பார்க்க நன்றாக இருந்தது..

‘இதே சந்தோஷத்தோடு இவ சென்னைக்குத் திரும்பனும் கடவுளே..’ மனதுக்குள் வேண்டிக் கொண்டாள்..

உத்ராவுக்கான தேநிலவு நாள்களை இனிமை குறையாமல் கொடுத்து விட்ட நிம்மதி அப்போதுதான் நந்தினிக்குக் கிடைக்கும்.. மனச்சுணக்கத்துடன் உத்ரா கிளம்பிப் போனால் எனக்காக வயநாட்டுக்கு வந்து ஹனிமூன் டேஸின் சந்தோஷத்தை ஸ்பாயில் பண்ணிக் கொண்டாளே என்ற குற்ற உணர்வு நந்தினியைக் கொன்று தின்று விடும்..

கோழிக்கோடின் ‘யாழ்’ ஹோட்டலில் உத்ராவுக்கான சந்தோஷதினங்களை குறைவில்லாமல் கொடுக்க முடிந்தது..

முதல்நாள் தான் அவர்கள் பேகல் ஃபோர்ட் கோட்டையைப் பார்க்கப் போனார்கள்.. என்னவோ சரித்திர காலத்தின் நினைவிடத்தைக் காட்டுவதைப் போல..

“இங்கேதான் ‘உயிரே.. உயிரே..’ பாட்டை ஷூட் பண்ணினாங்க.. தெரியுமா..?” என்று பீற்றிக் கொண்டாள் நந்தினி..

சென்னைக்குத் திரும்ப இரண்டு நாள்கள் மட்டுமே இருந்த நிலையில் அவர்களை வயநாட்டு அரண்மனைக்கு அழைத்தான் ரவிச்சந்திரன்.. அவர்களும் அதற்கு என்ன என்று ஒப்புக் கொண்டார்கள்.. நந்தினிக்குத்தான் பதக், பதக்கென்று இருந்தது..

வயநாட்டு அரண்மனையில் அவந்திகாவின் குடும்பம் இருக்கிறதே.. அஜந்தா இருக்கும் இடத்தில் உள்ள இரண்டு நாள்கள் தங்கியாக வேண்டுமே..

‘என்ன நடக்குமோ..’ நந்தினிக்கு கலவரமாக இருந்தது.. அதை ரவிச்சந்திரனிடம் சொல்லி விட முடியாது.. என்னதான் இருந்தாலும் வயநாடு அவனுடைய ஊர்.. வயநாட்டு அரண்மனையில் இருப்பவர்கள் அவனுடைய குடும்பம், உறவினர்..

நந்தினி அவளுடைய பயத்தைப் பற்றி வாய் திறந்தால் அது தவறாகி விடாதா..?

சாலையின் ஓரமாக அடர்ந்திருந்த பச்சை மூங்கில் செடிகள் ஓங்கி வயர்ந்து முனையில் பின்னிப் பிணைந்து கோபுர வாசல் போல நீண்டிருந்ததில் பிரமித்துப் போனாள் உத்ரா..

வினித்தின் தோள் வளைவில் கையை வளைத்து தோள் சாய்ந்து தன் பிரமிப்பை அவள் வெளிப்படுத்தியதில் காரை ஓட்டிக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் பெருமூச்சு விட்டு நந்தினியை அர்த்தம் நிரம்பிய பார்வையொன்றை பார்த்து வைத்தான்..

அவளுக்கும் அது போல சாய வேண்டுமென்ற ஆசைதான்.. தனிமையில் இருந்திருந்தால் அதைத்தான் செய்திருப்பாள்.. கூட உத்ராவும் வினித்தும் இருக்கிறார்களே..

“இவங்க கூட நாமும் இருக்கோம்.. இவங்க நம்மை கண்சிடர் பண்றாங்களா..?” முணுமுணுப்பாய் வினவினான் அவன்..

“அவங்க கப்புள்.. நாம அப்படியா..?”

நந்தினியும் முணுமுணுத்தாள்.. “நாம லவ்வர்ஸ்..”

“கப்புள் இல்லை..”

“வா.. கப்புள் ஆகிடலாம்..”

இதற்கு மட்டும் அவள் பதில் சொல்லவே மாட்டாள்.. மௌனம் சாதிப்பாள்.. மனதுக்குள் தஞ்சாவூரும், மேகநாதனும் தோன்றுவதில் பதட்டத்துடன் நகத்தைக் கடிக்க ஆரம்பித்து விடுவாள்..

அப்போதும் அதுபோல அவளது கை வாயருகே போனது.. ரவிச்சந்திரன் காரை ஓட்டியபடி அவள் கையைத் தட்டி விட்டு..

“நகத்தைக் கடிக்காதே..” என்று அதட்டினான்..

“இவ அப்படித்தான் சார்... எதற்கெடுத்தாலும் நகைத்தைக் கடிச்சுத் துப்புவா.. சொன்னாலும் கேட்க மாட்டா.. ஒரு நாள் இவ கை நகங்களில வேம்பு எண்ணையைத் தடவி விட்டுட்டேன்.. நானும் மத்த ஃபிரண்ட்ஸூம் இதுக்காகவே பிளான் பண்ணி நாட்டு மருந்துக் கடையில வேம்பு எண்ணையை வாங்கி வைத்திருந்தோம்..” உத்ரா கதை சொன்னாள்..

“குட் ஐடியா..” மெச்சிப் போனான் ரவிச்சந்திரன்..

“ஐடியா என்னவோ குட்தான் சார்..

இவகிட்டத்தான் அது வொர்க்அவுட் ஆகலை..”

“ஏன்..? என்ன ஆச்சு..?”

“இவ நகத்தைக் கடித்தா.. தூ, தூன்னு துப்பினா.. நேரா பாத்ரூம் போய் கைவிரல் நகங்களுக்கு சோப்பு போட்டுக் கழுவி வேம்பு எண்ணை வாசத்தைக் கூடத் துரத்தியடிச்சுட்டு வெளியே வந்தா.. ஹாயாய் மறுபடியும் நகத்தைக் கடிக்க ஆரம்பிச்சுட்டா..”

“ஹா.. ஹா..”

‘என்னைப் பற்றிக் கேலி பேசினா இவனுக்கு வெல்லக் கட்டிய சாப்பிடறதைப் போலவே இருக்குமே..’

உரக்கச் சிரித்தவனை ஓரக் கண்ணால் ரசித்துப் பார்த்தாள் நந்தினி.. உத்ராவும் விரித்தும் தங்களுக்குள் எதையோ கிசுகிசுத்துச் சிரித்துக் கொண்டார்கள்.. எதைப் பற்றி அப்படி ரகசியம் பேசிச் சிரிக்கிறார்கள் என்றுதான் தெரியவில்லை.. அவளைப் பற்றியும் ரவிச்சந்திரனைப் பற்றியும் பேசுகிறார்களோ என்று சம்சயமாக இருந்தது..

‘இருந்தாலும் இருக்கலாம்.. யார் கண்டது..?’

பசுமைக் குகை என்று நந்தினி வர்ணிக்கும் மூங்கில் செடிகளின் வளைவுப் பாதையில் கார் பயணிக்க.. பிரமிக்க வைக்கும் அந்த நொடிகளை வீடியோவில் பத்திரப் படுத்தினாள் உத்ரா..

கண்ணுக்குத் தெரியாத சாம்பல் வண்ணப் பனிப் புகையின் ஊடே கார் விரைந்தது.. உத்ராவுக்கு எல்லாமே பிரமிப்புதான்.. வினித்தும் அது போல உணர்ந்திருக்க வேண்டும்.. அதை வெளிக்காட்டிக் கொள்வது ஆண்களுக்கு அழகல்ல என்று நினைத்தானோ என்னவோ.. எனக்கு இதெல்லாம் சகஜமப்பா என்பதைப் போல முகத்தை வைத்துக் கொண்டிருந்தான்..

‘ஆண்கள்..!’

பச்சைப் பசேல் என உயர்ந்து வளர்ந்திருக்கும் மரங்களின் பசுமை கூட சாம்பல் வண்ணத்தில் காட்சியளித்ததில் அதிசயப் பட்டுப் போனாள் உத்ரா..

“பாருங்களேன்..” குழந்தையாய் அவள் கூவ.. வினித் அவளைப் பார்த்து வைத்தான்..

‘இவளையா பார்க்கச் சொன்னா..?’ நந்தினிக்கு காரில் முட்டிக் கொள்ளலாம் போல இருந்தது..

‘இந்த ஆண்கள் இருக்கிறார்களே.. அவர்களுக்கு நேரம் கிடைக்கும் போதெல்லாம் பெண்களைப் பார்வையிடுவதைத்தான் கடமையாக வைத்திருக்கிறார்கள்..’

மேற்குத் தொடர்ச்சி மலைகளின் வரிசையை ரசித்துப் பார்த்த உத்ராவிடம் வயநாட்டு அரண்மனையை நெருங்கி விட்டதை நினைவு படுத்தினாள் நந்தினி.. தோழியின் விழிகளில் தேங்கியிருந்த பயத்திற்கான காரணம் புரியாமல் புருவங்களைச் சுருக்கினாள் உத்ரா.. ரவிச்சந்திரனின் வீட்டிற்குப் போக இத்தனை பயம் அதற்கு..?

நந்தினியிடம் தனிமையில் அதைப் பற்றி வினவ வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டாள் உத்ரா.. அவள் சென்னைக்குத் திரும்ப இரண்டு நாள்கள்தான் இருந்தன.. இதுவரை நந்தினியின் மனதில் என்ன இருக்கிறது.. வயநாட்டில் அவள் சந்திக்கும் இடர் பாடுகள் என்ன என்று எதையுமே உத்ரா பேசித் தெரிந்து கொள்ளவில்லை.. கணவனுக்கு ஆற்றும் கடமையாய் தேநிலவு நாள்களை குதூகலமாக கொண்டாடுவதிலேயே கவனமாக இருந்து

விட்டாள்.. இப்போது அப்படியிருக்க முடியாது.. தேநிலவு நாள்களைப் போதும் போதும் எனும் அளவில் திகட்டத் திகட்ட அனுபவித்தாகி விட்டது.. இனி தோழிக்கான கடமையை அவள் ஆற்றியாக வேண்டும்..

“ஏய்ய்.. இது நிஜமாவே அரண்மனைதாண்டி..”

பக்கத்தில் வினித் இருக்கிறான் என்பதையும் மறந்து பிரமிப்பை வெளிப்படுத்தி விட்டாள் உத்ரா.. அது போன்ற அரண்மனையை அவள் பார்த்ததே இல்லை.. நந்தினி அளவுக்கு அவள் பணக்கார குடும்பத்தில் பிறக்கவில்லை..

மத்தியதர வர்க்கம்தான்.. அப்பர் மிடில் கிளாஸ் என்று சொல்லிக் கொள்ளும் அளவிற்கு வசதி அவ்வளவுதான்..

“தஞ்சாவூரில இருக்கிற உங்க வீட்டைத்தான் அரண்மனைன்னு இத்தனை நாளாய் நினைச்சிருந்தேன்.. அடேங்கப்பா.. என்னைத் தப்பா எடுத்துக்காதே நந்தினி.. உங்க வீடு இந்த அரண்மனையின் தோட்டத்தில் பாதிகூட இருக்காது..”

“ஹா.. ஹா.. நல்லாச் சொல்லுங்க உங்க ஃபிரண்ட் கிட்ட.. எதற்கெடுத்தாலும் பெட்டியைத் தூக்கறா..”

என்னவோ கட்டின புருஷன் பிராது கொடுப்பதைப் போல புகார் செய்தபடி வயநாட்டு அரண்மனையின் வாசலில் காரை நிறுத்தி சங்கேதமாக ஹாரனை ஒலிக்க வைத்தான் ரவிச்சந்திரன்..

“கோட் வெர்டு மாதிரி இது கோட் ஹாரனா..?” அதற்கும் வியந்தாள் உத்ரா..

வினித் வாயைத் திறக்கவே இல்லை.. அடுத்தவரின் வீட்டை மனைவி புகழ்வதை எந்தக் கணவன்தான் விரும்புவான்..?

அனைத்துக் கணவன்மார்களும் அவரவரின் மனைவிக்கு ஹீரோவாக இருக்க வேண்டுமென்றுதான் ஆசைப்படுவார்கள்..

காரின் ஹாரன் ஒலியில் கேட்டருகே இருந்த செக்யூரியிட்டியின் அறையில் பதட்டம் நிலவியது.. கேட்டைத் திறக்க ஓர் செக்யூரிட்டி ஓடினான்.. இன்னொருவன் ஓடிவந்து காரின் அருகே குனிந்து சல்யூட் வைத்தான்..

“அண்டா கசம் அபூகா கசம் திறந்திடுசே..”

உத்ரா வேடிக்கையாகச் சொன்னாள்..

அவள் சொல்லி வாய் மூடுவதற்குள் அரண்மனையின் கோட்டைக் கதவுகள் போன்ற பிரம்மாண்டமான கேட் திறந்து வழி விட்டது..

“அட திறந்திருச்சு..” உற்சாகமானாள்..

“ஆக... எங்கள் அரண்மனையை அலிபாபா குகையாக்கிட்டிங்க..” ரவிச்சந்திரன் சிரித்தபடி காரை உள்ளே செழுத்தினான்..

“கரெக்ட் சார்..” வினித் இப்போது வாய் திறந்து ரவிச்சந்திரன் சொன்னதை ஆமோதித்து விட்டு சிரிப்பில் கலந்து கொண்டான்..

‘இந்த ஆண்கள் இருக்கிறார்களே..’

நந்தினி தலையை ஆட்டியபடி உத்ராவைப் பார்த்தாள்.. அவளும் தலையைக் குலுக்கிக் கொண்டிருந்தாள்.. மனதுக்குள் நந்தினி சொன்ன வார்த்தைகளைத்தான் அவளும் சொல்லியிருக்கிறாள் என்பதில் புரிந்து கொண்ட உணர்வுடன் தோழிகள் இருவரும் ரகசியமாக கண்சிமிட்டிச் சிரித்துக் கொண்டார்கள்..

காரை விட்டு இறங்கும் போது உத்ராவின் இந்தச் சிரிப்பு நிலைத்திருக்க வேண்டுமே என்ற கவலையுடன் தான் நந்தினி இறங்கினாள்.. இரண்டு நாள்கள்.. நாற்பத்தியெட்டு மணி நேரம்.. அவள் உத்ராவை அடை காக்க வேண்டும்.. உத்ராவின் கள்ளமற்ற வெள்ளைச் சிரிப்பு சிறிதளவும் குறைந்து விடாமல் பாதுகாத்து சென்னைக்கு அனுப்பி வைக்க வேண்டும்..

‘முடியுமா..?’ அவளுக்கு ஏக்கமாக இருந்தது..

காரை டிரைவரிடம் ஒப்படைத்து விட்டு வந்த ரவிச்சந்திரன் கவலையுடன் இருந்த நந்தினியைப் பார்த்ததும் கேள்வியாக புருவங்களை உயர்த்தினான்..

‘போடா.. நேரம் காலம் தெரியாமல் மயக்காதே..’ நந்தினி முகத்தில் சிணுங்கலைக் காட்டினாள்..

‘‘என்னடி..?’’ அவன் முணுமுணுத்தான்..

‘‘பயமாய் இருக்கு..’’ குழந்தையாய் சொன்னாள் நந்தினி..

‘‘ம்ப்ச்..’’ என்றான் ரவிச்சந்திரன்..

‘‘இதுவரைக்கும்தான் அடம் பிடிச்ச..

இப்பத்தான் என் மேல காதல் இருக்குங்கிறதை ஒப்புக்கிட்டயே.. இனிமேலும் பயந்தால் எப்படிடீ..? இது உன் வீடு..! மனசிலாயி.. ஐந்து விரல்களும் ஒன்றாய் இருப்பதில்லை.. மனிதர்களும் அப்படித்தான்.. வேறுபட்ட குணங்களோடு இருப்பார்கள்.. சமாளித்து ஜெயிக்கத் தெரியலைன்னா நீ ரவிச்சந்திரனோட பெண்டாட்டின்னு சொல்லிக்கிறதில அர்த்தமில்ல.. என் பெண்டாட்டி பயந்து நடுங்கக் கூடாது.. எது வந்தாலும் எதிர்த்து நிற்கனும்.. போராடனும்.. ஜெயித்துக் காட்டனும்.. மனசிலாயி..?"

"மனசில் ஆகிறது இருக்கட்டும்.. எப்ப நான் உங்க பெண்டாட்டியானேனாம்..? இன்னும் நமக்குக் கல்யாணமாகலை பாஸ்.. இதை நீங்க மனசிலாயி.."

"ஸோ... உனக்கும் எனக்கும் மேரேஜான பின்னாடிதான் நீ எனக்குப் பெண்டாட்டி... அப்படி ஆகலைன்னா வேற யாரோ ஒருத்தனுக்குப் பெண்டாட்டி..?"

ரவிச்சந்திரன் கண்கள் இடுங்கக் கேட்ட கேள்வியில் நந்தினியின் முகுதுத் தண்டு ஜில்லிட்டு விட்டது... காதலென்று ஆன பின்பு இது போன்ற உள் குத்தல்கள் அவளைத்

தாக்காமல் பதுங்கியிருந்தன.. இப்போது அவள் வாய் விட்டதில் வெளிப் பட்டு விட்டன..

“ரவி..”

“இஃது.. இப்படியே மெயின்டெயின் பண்ணு.. அதுதான் உனக்கு நல்லது.. நான் உன்னுடைய ரவிச்சந்திரன்.. பாஸில்லை.. நீ என் வொய்ப்.. தாலி கட்டினால்தான் பெண்டாட்டி என்கிறதெல்லாம் மத்தவங்களுக்கு..

எனக்கில்லை.. இந்த ரவிச்சந்திரன் அத்தனை எளிதாக ஒன்றை நினைத்து விட மாட்டான்.. நினைத்து விட்டால் அதில் மட்டுமே நிலைத்து நிற்பான்.. கடைசி வரைக்கும் மாற மாட்டான்.. மனசிலாயி..”

மனசில் ஆகாது என்று சொல்ல அவளுக்கு என்ன பிராந்தையா பிடித்திருக்கிறது..?

பூம் பூம் மாடு போல ஆகட்டும் எனும் விதமாக தலையை ஆட்டித் தப்பித்தாள்.. நந்தினி திடீர் புத்திசாலியாக.. உத்ராவோ முட்டாளாக மாறி..

“அங்கே பாருங்களேன்.. குதிரைகளுக்குத் தனித்தனி லாயம் இருக்கிறதைப் போல ஒவ்வொரு காருக்கும் தனித்தனி

போர்டிகோ ரூமும், ஷட்டர்களுமா இருக்கு.. ஹப்பா.. சீனப் பெருச்சுவர் போல இல்ல வரிசையா இருக்கு..” என்று வினித்திடம் சொல்லி விட்டு அவனுடைய நெருப்புப் பார்வைக்கு ஆளானாள்.. ம்ஹூம்.. பெண்கள் எதைப் பேசினாலும் யோசித்துத்தான் பேசியாக வேண்டும் என்பது விதி..

# அத்தியாயம் 181

**மா**டி பால்கனியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தாள் யாழினி.. நடுவில் நந்தினியும், உத்ராவும் நடந்து வர.. அவர்களின் இரு பக்கத்திலும் ரவிச்சந்திரனும் வினித்தும் இணைந்து நடந்து வந்தது ஏதோ ஒரு வகையில் அவள் மனதை நிரடியது..

இதுபோல ரவிச்சந்திரன் அஜந்தா, அபராஜிதனுடன் இணைந்து நடந்து வந்ததில்லை என்பது அவள் மனதை உறுத்தியது..

ரவிச்சந்திரன் யாரிடமும் சரி நிகர் சமானமாக நின்று பேசிவிட மாட்டான்.. கண்டிப்பான ஓர் பார்வையில் எட்ட நிறுத்தி விடுவான்.. அபராஜிதனையும், அஜந்தாவையும் அதுபோல கூட அவன் பார்த்ததில்லை.. அவர்கள் பக்கமே திரும்பாமல் கம்பீரமாக நடந்து விடுவான்..

'ஆ ரவிச்சந்திரன்தானா இது..'

யாழினிக்கு அவள் கண்களையே நம்ப முடியவில்லை.. உத்ரா ஏதோ சொன்னாள்.. அதற்கு நந்தினி கேலி செய்தாள்.. அதை ரவிச்சந்திரன் கிண்டல் செய்தான்.. வினித் நந்தினிக்குப்

பரிந்து வந்தான்.. அந்த நால்வரிடமும் தெரிந்த இணக்கமும் ஒட்டுதலும் யாழினிக்கு எதையோ உணர்த்தின..

‘எந்தா இது.. ஒன்றுமே நன்னாயில்லையல்லோ..’

இதைத்தான் அஜந்தாவும் சொன்னாள்.. ஒன்றல்ல, இரண்டல்ல... பதினைந்து தினங்களாக ரவிச்சந்திரனும் நந்தினியும் அரண்மனைக்குத் திரும்பவில்லையென்பதைச் சுட்டிக் காட்டினாள்.. அவர்கள் இருவரையும் கோழிக்கோடின் கடற்கரையில் நெருக்கமாக கண்டதாக தரங்கிணி யாழினிக்கு செல்ஃபோனில் தகவல் சொல்லி கோள் மூட்டியிருந்ததை நினைவு படுத்தினாள்... அருள்மொழிவர்மன் கட்டிக் காத்து வந்த வயநாட்டு அரண்மனையின் பாரம்பர்யப் பெருமையை ரவிச்சந்திரன் குலைத்துக் கொண்டிருப்பதாக குற்றம் சாட்டினாள்..

இதுதான் அஜந்தாவின் சாதுர்யம் நிரம்பிய சாகசம்..

உண்மையில் அவளைப் பெற்ற அவந்திகாவும், யோகானந்தனும்தான் வயநாட்டு அரண்மனையின் பாரம்பர்யப் பெருமைக்கு உலை வைத்தார்கள்.. அது தொலைந்து போய் விடாமல் கட்டிக் காப்பாற்றித் தூக்கி நிறுத்தி அதிக உயரத்திற்கு கொண்டு சென்றவன் ரவிச்சந்திரன்..

அஜந்தாவும் அபராஜிதனும் பெற்றவர்கள் எவ்வழியோ அவ்வழியே எங்கள் வழி என்று வயநாட்டு அரண்மனையின் பாரம்பர்யப் பெருமைக்கு அவர்களால் எந்த அளவுக்கு குந்தகம் விளைவிக்க முடியுமோ அந்த அளவுக்கு குந்தகம் விளைவித்து வந்தார்கள்..

அவர்களுக்கு இருக்க இடம் கொடுத்து, படிப்பைக் கொடுத்து வாழ்க்கை அமைத்துக் கொடுப்பதற்கான பொறுப்பையும் ஏற்றுக் கொண்ட ரவிச்சந்திரனுக்கு அவர்களால் செய்ய முடிந்த கெட்டது அனைத்தையும் அவர்களால் முடிந்த அளவுக்கும்.. சில தருணங்களில் மூச்சை அடக்கித் தங்களின் சக்திகளை ஒன்று திரட்டித் தம் கட்டி அதற்கு மேலேயும் செய்து வந்தார்கள்.. அவர்களுக்குத் தெரிந்த நன்(றி)னிக் கடன் அதுதான்..

அதையெல்லாம் யாழினி நினைத்துப் பார்க்கக் கூட முடியாத அளவிற்கு பேசுவதில் அஜந்தா கில்லாடி.. அது எப்படியோ தெரியாது.. அவள் வாயைத் திறந்து பேச ஆரம்பித்தால் ரவிச்சந்திரன் வில்லாதி வில்லனாக உருமாறி விடுவான்.. அவள் ஏதுமறியாத பேதையாக யாழினியின் கண்களுக்குத் தெரிவாள்..

“ஈ பெண் குட்டி எவரானு பாட்டி..?

ரவியத்தானிடம் ஜோலி பாக்க வந்தவ எந்துக்கோசரம் வயநாட்டு அரண்மனைக்கு வந்து..? பெர்சனல் செக்கரட்டரியோட ஜோலி இதா..? நம்மளிடம் ஜோலி பார்ப்பவர்களுக்கெண்டு பெண்குட்டி இருந்திருக்கனும் பாட்டி..? நமக்கெண்டு பெகுமானம் உண்டல்லவோ.. ரவியத்தான் தன்னோட பெர்சனல் செக்கரட் டரிய வயநாட்டு அரண்மனையில இருக்க வைத்திருக்கிற சேதி ஈ வயநாட்டில பரவினா நம்மட பெகுமானத்தின் கதி எந்தா பாட்டி..?”

அஜந்தா கரைத்து ஊற்றிய புளியில் யாழினி கதி கலங்கிப் போனாள்..

“நிண்ட பறஞ்ஞுறதும் சரியெண்டுதான் தோணுது கொச்சு மோளே..” என்று சொல்லி விட்டாள்..

“நம்மட வயநாட்டு அரண்மனையோட பெகுமானத்துக்கு சரியெண்டு படுவதைத்தான் ஞான் பறஞ் பாட்டி.. ஈ கொட்டாரத்தின் பெகுமானத்துக்கு ஒரு குறைவெண்டால் ஞான் நோக்கிக்கிட்டு இருக்க மாட்டேனல்லோ..”

“அஃதே.. அஃதே..”

“ஞான் எவரானு..?”

அஜந்தா கேட்ட கேள்விக்கு நீ அவந்திகாவின் மகள் என்றுதான் சொல்லப் போனாள் யாழினி.. அஜந்தா அதைச் சொல்ல விட்டு விடுவாளா என்ன..? அவந்திகாவுக்கு மகளானால் யோகானந்தனுக்கும் மகளாகித் தொலைக்க வேண்டும்..

யோகானந்தனின் மகளுக்கு என்ன பெகுமானம் (மரியாதை) கிட்டுமென்று அவள் அறியாதவளா என்ன..?

கடைந்தெடுத்த வினயம் கொண்ட கைகாரி அஜந்தா.. தனது அடையாளமாக அவள் பெற்றவர்களை முன் நிறுத்த மாட்டாள்.. அது எப்பேர்பட்ட பெகுமானக் குறைவு என்பது அவளுக்குத் தெரியும்.. தமையனையும் முன் நிறுத்த மாட்டாள்.. அவன் பெற்றவர்களுக்கும் மேலான பேமானியென்ற பெயர் பெற்றவன்..

ஆதலினால் ஆதி புத்திசாலி அஜந்தா தனது அடையாளமாக என்றுமே அருள்மொழிவர்மனையும், யாழினியையும் தான் முன் நிறுத்துவாள்.. அதிலும் அவளும் அபராஜிதனும் மட்டும்தான் அவர்களின் பேரன், பேத்தி என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுகிறார்கள்,

ரவிச்சந்திரனும், ரம்யமாலினியும் அவ்வாறு சொல்லிக் கொள்வதில்லை என்பதை நினைவு படுத்துவாள்.. அவளுக்குத் தெரியும்..

யாழினியின் மனதில் அந்த மனத்தாங்கல் இருக்கிறது என்பது..

அஜந்தாவுக்கும், அபராஜிதனுக்கும் அவள் பரிந்து பேசப்பேச ரவிச்சந்திரனும், ரம்யமாலினியும் தாத்தா, பாட்டியிடமிருந்து தள்ளித் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தார்கள்.. ஒரு கட்டத்தில் என் குடும்பம் என்று ரவிச்சந்திரன் பிரித்துப் பேசி அருள்மொழிவர்மனையும், யாழினியையுமே தள்ளி நிறுத்தி விட்டான்.. இதை உணராமல் ரவிச்சந்திரன் தங்கள் இருவரையும் புறக்கணித்து விட்டதாக யாழினி மனதுக்குள் குமுறிக் கொண்டிருந்தாள்..

இதைத் தெள்ளத் தெளிவாக புரிந்து வைத்திருந்த அஜந்தா அந்த வயோதிக தம்பதிகளுக்கும், ரவிச்சந்திரனுக்கும் இடையே விழுந்து விட்ட பள்ளத்தை அதிகப்படுத்தி தாண்ட முடியாத அகழியாக்கும் பணியில் செவ்வனே ஈடுபட்டிருந்தாள்..

“ஞான் எண்ட தாத்தா, பாட்டியோட கொச்சு மோளாக்கும்.. ஈ கொட்டாரத்தே தாட தம்புரான் எண்ட தாத்தா அருள்மொழிவர்மனல்லோ.. ஈ கொட்டாரத்தோட தம்புராட்டி எண்ட பாட்டி யாழினி தேவி..! இவரிண்ட கொச்சு மோளுக்கு ஈ கொட்டாரத்தில கிட்டும் பெகுமானம் எந்தா பாட்டி..?”

“எண்ட கொச்சு மோளே..!”

யாழினி கண் கலங்கி விட்டாள்.. அவளுடைய செல்லப் பேத்தி அஜந்தா கேட்பதும் நியாயம்தானே.. அந்த அரண்மனைக்கு ராஜா அருள்மொழிவர்மன்.. ராணி யாழினி தேவி.. இவர்களுடைய புகழை மறக்காமல் நினைவில் வைத்திருப்பது அவந்திகாவும் அவள் பெற்ற பிள்ளைகளும்தான்.. மற்றவர்கள் மறந்து விட்டார்கள்..

அருள்மொழிவர்மனும், யாழினியும் ஆட்சி பீடத்தில் இருந்தால்தான் அவந்திகாவும் அவள் குடும்பமும் அந்த அரண்மனையில் சகலவித அதிகாரங்களோடு உலா வர முடியும் என்பதை யாழினிதான் மறந்து விட்டாள்..

அவள் மறக்கவில்லையென்றாலும் அஜந்தா வேப்பிலை அடித்து மறக்க வைத்து விடுவாளே..

“எனிக்கு எந்தா பாட்டி.. நிங்களும், தாத்தாவும் நிங்களோட பெருமானம் குறையாம ஈ கொட்டாரத்தில ஜீவிக்கணும்.. ஞான் அதை நோக்கனும்.. ரவியத்தானும் அவரிண்ட குடும்பமும் எண்ட தாத்தா, பாட்டியோட பெருமானத்த பறிக்க ஞான் விட மாட்டேனல்லோ..”

வெகு சாமர்த்தியமாக ரவிச்சந்திரனையும் அவனுடைய குடும்பத்தையும் தள்ளி நிறுத்தி விட்டாள் அஜந்தா.. அருள்மொழிவர்மனையும், யாழினியையும் தனிமைப் படுத்திவிட்டாள்.. அவளுடைய சுயநலத்துக்காக அவளுடைய அன்னையின் அன்னையை மூளைச்சலவை செய்து ரவிச்சந்திரனுக்கு எதிராக திருப்பி விட்டு விட்டாள்..

“ஈ பெண்குட்டியே ஜோலி பார்க்க வந்து.. இவளோட ஃபிரண்டு எந்துக்கோசரம் வயநாட்டுக்கு வந்து..? ஹனிமூன் கொண்டாட ஈ வயநாடுதான் கிட்டியதோ..? ஈ வயநாட்டு கொட்டாரத்தில விருந்தாளியாய் வருவதற்கும் ஒரு பெருமானம் வேண்டுமல்லோ..?”

அதுதானே என்று பல்லைக் கடித்தாள் யாழினி..

வயநாட்டு அரண்மனைக்கு விருந்துக்கு வர ஒரு தகுதி வேண்டும்தானே.. அது ஏன் ரவிச்சந்திரனுக்குத் தெரியவில்லை..?

“ரவியத்தான் விளித்திருக்க மாட்டார் பாட்டி.. ஈ நந்தினி விளிச்சிருப்பா.. காயலோரமா இது போல கொட்டாரத்தின அவள் கண்டதில்லையல்லோ.. இதோட சேலுல மயங்கிப் போனவ தான் ஈ தரவாட்டில ஜோலி பாக்க வந்தவங்கிறத மறந்து போயி.. தான்தான் ஈ தரவாடோட தம்புராட்டி (ராணி) எண்டு விஜாரம் கொண்டு..”

“எந்தா..? ஈ தரவாடோட தம்புராட்டி ஆரானு..?”

“அதி நீங்கதான் பாட்டி.. வேற எவரானு தம்புராட்டி..?”

“அஃதே.. அதே..”

யாழினி ஆசுவாசமானாள்.. இரு கிழவி.. இந்த ரவிச்சந்திரனுக்கு மனைவாட்டியாகி இந்தக் கொட்டாரத்தின் தம்புராட்டியான பின்பு உன்னைத் தூக்கி மூலையில் கடாசுகிறேன் என்று அஜந்தா மனதுக்குள் சூளுரைத்துக் கொண்டாள்..

‘பின்னே.. எப்போது பார்த்தாலும் ஈ கிழவிக்கு சோப்புப் போட்டுக் காரியத்தைச் சாதிக்க வேண்டுமெண்டா வெப்பராளம் வராதா..? சோப்பைப் போட்டுப் போட்டு என் கைதான் தேய்கிறது.. ஒன்றையும் காணோம்.. காலம் போன கடைசியில இன்னமும் இந்தக் கிழவிக்கு தம்புராட்டி பட்டம் வேண்டிக்கிடக்கு.. மருமகளையும் ஆள விடலை.. பேரனுக்குக் கல்யாணம் ஆகி அவனுக்கும் ஓர் பெண்டாட்டி வரப் போகிறா.. இந்தக் கிழவி தம்புராட்டி பட்டத்தை விட்டுத் தர மாட்டேங்குது.. இதையெல்லாம் மூலையில் தூக்கிக் கிடாசினால்தான் நான் தம்புராட்டியாக முடியும்..

இந்தக் கிழவி எனக்குக் கூடத் தம்புராட்டி பட்டத்தை விட்டுத் தராது.. கில்லாடி கிழவியல்லோ..’

“அத்தான் வந்ததும் பறஞ் .. அன்வரிச்சு..”

“எதிப் பத்தி..?”

அஜந்தாவுக்கு கட்டையைத் தூக்கி யாழினியின் மண்டையில் நான்கு போடு போட்டு மண்டையைப் பிளந்து விடலாம் போன்ற வெறி ஏற்பட்டது.. அவளும் இரண்டு வாரங்களாக யாழினிக்கு சோப்புப் போட்டுக் குளிப்பாட்டி கரைப்பாய் கரைத்துக் கொண்டிருக்கிறாள்.. அனைத்துப்

பழமைகளையும் சுவராஸ்யமாக செவி மடுத்து புறணி பேசி முடித்து விட்டு கிழவி இப்படியொரு கேள்வியைக் கேட்கிறதே.. இதை என்ன செய்தால் தேவலாம்..

'ஈ கொட்டாரத்தோட தம்புராட்டி ஆரானுன்னு கேட்டுப் பாரு.. கிழவி ஞான்தான், ஞான்தான்னு அலறும்.. அதி மட்டும் தெரியுது.. மத்தது தெரியலையாம்.. என்னைப் பிராந்தையின்னு நினைக்குதோ..'

மூச்சை இழுத்து விட்டுத் தன்னை நிதானப் படுத்திக் கொண்டாள் அஜந்தா.. அவளுடைய கோபத்தை அவந்திகாவிடம் காட்டலாம்.. யாழினியிடம் காட்டி விடக் கூடாது.. அவள் ஒருத்தி மட்டும்தான் அஜந்தாவின் அஸ்திரம்.. எய்தால் குறி தவறாமல் தாக்கக் கூடியவள்..

அருள்மொழிவர்மனிடம் அஜந்தாவின் வாசகம் எடுபடாது.. அவர் ரவிச்சந்திரனின் உறவு கெடாமலிருக்க வேண்டும் என்பதில் கவனமாக இருப்பவர்..

"எந்தா பாட்டி இதி.. புலரி வரை ராமாயணக் கதை கேட்டு விட்டு.. புலரியில சீதைக்கு ராமன் ஆரானுன்னு கேட்டோ.. நிங்க ஈ கொட்டாரத்தோட தம்புராட்டி பாட்டி.."

"அதே.. அதே.."

‘இதுக்கு மட்டும் அதே போட்டிரு..’ அஜந்தாவுக்கு பற்றிக் கொண்டு வந்தது.. அதை மறைத்து செல்லமாக பாட்டியை முறைப்பதைப் போல நடித்தாள்..

“தம்புராட்டிக்கு ஆரானு ஆலோசனை பறஞ் ..? தம்புராட்டியல்லவோ ஆலோசிக்கனும்..?”

“எதுக்கோசரம் ஆலோசிக்கனுது கொச்சு மோளே..”

‘ஆமாம்.. அதையும் புளிப் போட்டு நான்தான் உனக்கு விளக்கிச் சொல்லியாகனும்.. உனக்கெல்லாம் எதுக்கு தம்புராட்டிப் பட்டம்..? நீயெல்லாம் தம்புராட்டி..! விளங்கிரும் போ..’

“எந்தா இத்தரயும் ஆலோசிக்கனுது கொச்சு மோளே..”

“நிண்ட கள்ளமில்லா சுபாவம் பத்தியல்லோ.. நிங்க வெளுத்ததெல்லாம் பால்ன்னு விஜாரம் கொண்டு.. அதி அல்ல பாட்டி.. ஈ நந்தினிக்கு இருக்க இடம் கொடுத்து.. அவ எந்தாயிண்ட அவளிண்ட ஃபிரண்டுக்கு ஹனிமூன் கொண்டாட இடம் கேட்டு.. அதியும் நிங்க கொடுத்து..”

“ஞான் அளிக்கலயில்லோ கொச்சு மோளே.. ரவியல்ரோ அளிச்சு..?”

“அதித்தான் நிங்க எந்தான்னு அன்வர்ஷிச்சு..”

“ஓ..”

அஜந்தா போட்டுக் கொடுத்த ரோட்டை சாலையாக்கும் திட்டத்தை யோசிக்க ஆரம்பித்து விட்டாள் யாழினி..

# அத்தியாயம் 182

“அரண்மனைன்னா இதுதான் அரண்மனை.. ரொம்ப அழகாயிருக்கில்ல..” வியந்தாள் உத்ரா..

“ம்ம்ம்.. ரோஜாவைப் போல அழகு..” சுற்று முற்றும் பார்த்தபடி சொன்னாள் நந்தினி..

“ரோஜாவுக்கும் அரண்மனைக்கும் என்னடி உவமைப் பொருத்தம்..?” முடியலை என்ற ரீதியில் கைகளை விரித்துக் கேட்டாள் உத்ரா..

“அழகான ரோஜாப்பூவின் அடியில் முள் இருக்கும் என்ற உவமை..” வெடுக்கென்று பதில் சொன்னாள் நந்தினி..

உத்ரா துணுக்குற்றாள்.. நந்தினியின் பேச்சில் ஏதோ மறைபொருள் ஒளிந்திருப்பதைப் போல அவளுக்குத் தோன்றியது.. நந்தினி அப்படி பொடி வைத்துப் பேசுபவள் அல்ல.. அவளுக்கு அது தெரியாது..

“முள்ளா..?” உத்ரா புருவங்களை நெறித்தாள்.. நந்தினி பதில் சொல்வதற்குள் வீணா வந்து விட்டாள்..

“நந்தினிம்மா..” பாசத்துடன் அவள் கைகளை விரிக்க அனைத்து மனக் கிலேசங்களையும் மறந்து..

“அத்தை..” என்று அவள் கைகளுக்குள் புகுந்து கொண்ட செல்லம் கொஞ்சினாள் நந்தினி..

ஒருவழியாக செல்லம் கொஞ்சி முடித்து

விடுபட்டு வந்தவளிடம்..

“ஏண்டி.. ஸ்மார்ட்டா, படு ஹேண்ட்சம்மா உன் பாஸ் இருக்கிறப்ப அவரை விட்டுட்டு அவரோட அம்மாவை லவ் பண்ணிக்கிட்டு இருக்கிற..?” என்று முணுமுணுத்தாள் உத்ரா..

“பிகாஸ்.. ஷி இஸ் ஸோ ஸ்வீட்.. யு நோ..” பாசத்துடன் வீணாவைப் பார்த்தாள் நந்தினி..

“பார்த்து.. பாசம் வழுக்கி விடப் போகுது..” கிண்டலடித்தாள் உத்ரா..

“நந்தினி.. வந்துட்டிங்களா..?” ரம்யமாலினி விரைந்து வந்து நந்தினியைக் கட்டிக் கொண்டாள்..

அவளின் வார்த்தைகளில் தெரிந்த எதிர்பார்ப்பிலும் சந்தோஷத்திலும் ஆச்சரியமானாள் உத்ரா.. ரவிச்சந்திரனின்

அம்மாதான் நந்தினியைத் தாலாட்டுகிறாள் என்றால் அவனுடைய தங்கை கொண்டாடுகிறாளே..

“அதான்.. வந்துட்டேனில்ல.. உங்க அண்ணனிடம் இருந்து தப்பிச்சுப் போக முடியலை.. ஸோ.. ஐ ஆம் ரிட்டர்ன் பேக்..” சிரித்தாள் நந்தினி..

“எங்களை விட்டு ஓடிப் போக நினைத்தீங்களா..? இருக்கு உங்களுக்கு..” ஒற்றை விரலை உயர்த்தி மிரட்டினாள் ரம்யா..

“பயமே வரலைங்க..” என்றாள் நந்தினி..

“நான் மிரட்டினாத்தானே பயம் வராது..? அண்ணன் மிரட்டினா..?”

“ஹைய்யோ.. எதுக்குங்க இந்தக் காண்டு..? உங்களுக்கு நான் பயப்படனும்.. அவ்வளவுதானே..? இந்தா.. பயந்தாச்சு..”

நந்தினி பயப்படுவதைப் போலப் பாவனை செய்ய ரம்யமாலினி அதை ரசித்துக் கலகலவென்று சிரித்தாள்..

“அம்மே..” தழுதழுப்பான விளிப்பில் உத்ராவே அரண்டு போய் நந்தினியை மேலும் கீழுமாக பார்த்து வைத்தாள்..

“நந்தினி.. மை டியர் ஃபிரண்ட்.. உனக்கு என்னடி ஆச்சு..?”

“எனக்கு ஒண்ணும் ஆகலைடி உத்ரா.. நான் நல்லாத்தான் இருக்கேன்.. உன் கூடத்தானே வந்தேன்..?”

“எனக்குத் தெரியாம பெரிசா ஏதாவது பிரெயின் டியூமர் மாதிரி இருக்காடி நந்தினி..? எனக்கு நெஞ்சு வலிக்கிறதைப் போல இருக்கே..”

“அடச்சீ.. அடங்கு.. அதிகமா தமிழ் சினிமா பார்க்காதேன்னு சொன்னாக் கேட்கறதில்ல.. எதுக்கெடுத்தாலும் பிரெயின் டியூமரா..? இவ ஓமனா.. ரொம்ப நாளைக்கப்புறம்மா என்னைப் பார்க்கிறாளாம்.. அதான் பாசத்தைப் பிழியறா..”

“ரொம்ப நாளா..? ரெண்டு வாரம் தானடி ஆகுது..”

“நான் நேற்றைக்குப் போயி இன்னைக்கு வந்தாலும் இவ இப்படித்தான் ரியாக்ட் பண்ணுவா.. என்மேல அப்படியொரு பிரேமம்..”

“யு மீன் லவ்..?”

“அதைத்தான் டீசண்டா மலையாளத்தில பிரேமம்ன்னு சொல்றேனில்ல... விடேண்டி... நான் ஓமனாவைக் கவனிச்சாகனும்.. ஓமனா..”

“அம்மே..”

“ஓமனா..”

“அம்மே..”

“ஓமனா..”

“அம்மே..”

இந்த உணர்வுப் பரிமாற்றம் பெயரைத் தாண்டிப் பயணிக்காது போல தோன்றியதில் வெறுத்துப் போன உத்ரா.. ரம்யமாலினியைப் பார்த்தாள்.. அவளோ விழுந்து விழுந்து சிரித்தாள்.. உத்ரா நந்தினியின் முதுகில் ஓங்கி ஒரு அப்பு அப்பி உரையாடலை முன் நகர்த்தினாள்..

“பார்த்தியா ஓமனா.. உன் கண் முன்னாலேயே இவ என்னைப் போட்டுத் தாக்கறா..” நந்தினி பற்ற வைக்க..

“ஈ பெண்குட்டி ஆரானு அம்மே..?” என்று ஓமனா உத்ராவை விரோதத்துடன் பார்த்தாள்..

“எண்ட ஜோட்டுக்காரியாக்கும்..”

“ஓ.. அதுக்கோசரம் இ மொத்து மொத்துவதோ..? எண்ட நந்தினி மேமைத் தள்ளுவதோ..?”

“ம்ஹூம்.. எனக்காக கேட்க யாருமில்லையெண்டு இந்தத் தள்ளு தள்ளரா ஓமனா..?” நந்தினி கண்ணைக் கசக்க..

“அடிப்பாவி.. ஏண்டி போட்டுக் கொடுக்கற..?” என்றாள் உத்ரா..

“ஞான் உண்டு அம்மே.. எண்ட நந்தினி மேமுக்காக எண்ட உயிரையும் கொடுப்பேனல்லோ..”

“அதை நீயே வைத்துக்க... உன் உயிரைக் கொடுத்துட்டா யார் என்னைத் தேடுவாங்களாம்..?”

“ஞான் தேடும் அம்மே..”

“எப்படி..? ஆவியா வந்தா..? எனக்கு ஓமனாக்குட்டி யெண்டால்தான் வளர இஷ்டம்.. ஓமனாப் பேயெண்டால் ரொம்பவும் கஷ்டம்..”

“ஹைய்யோ நந்தினி..” ரம்யமாலினி சிரிப்பைத் தாங்க முடியாமல் அங்கிருந்த சோபாவில் விழுந்து விட்டாள்..

“இவ இப்படித்தான்..” என்ற உத்ராவும் சேர்ந்து சிரித்தாள்..

“அம்மே..”

“இந்த ‘மே’யைத் தாண்டி ஜுன், ஜுலைன்னு ஓடி வா ஓமனா.. நந்தினி மேம்ன்னு விளிச்சா வளர நன்னாயிட்டுண்டு.. கேட்டோ..”

“ஆகட்டும் அம்மே..”

“ஊஹும்.. நந்தினி..”

“நந்தினி மேம்..”

“அம்மே, மேம்.. எதையாச்சும் தொத்த வைச்சுக்கனும்.. எப்படியோ போ..”

“ஊஹும்.. ஞான் நந்தினி மேமை விட்டுப் எங்ஙனயும் போகாண்டாம்..”

“உன்னை யாரு போகச் சொன்னது..?”

“நீங்கதான்..”

“இந்தப் ‘போ..’ அந்தப் ‘போ..’ இல்லை ஓமனா.. ககபோ..”

“எந்தா..? காக்கா கக்கா போயிருச்சா..?”

“முடியலை.. ககபோன்னா உனக்கு இந்த கக்கா போதான் நினைவுக்கு வருமா ஓமனா..?”

“ஹி.. ஹி..”

“வழியுது.. துடைத்துக்க..”

நந்தினி ஓமனாவை வாரிக் கொண்டிருக்கும் போது அங்கு ரவிவர்மன் வந்து விட நந்தினி விறைப்பானாள்.. அவள்..

“வாம்மா..” என்றதும் மரியாதையாக.. தலையை ஆட்டினாள்..

“ஏண்டி.. இங்கே நீ கெஸ்ட்டா இல்லை நான் கெஸ்ட்டா..?” சந்தேகம் கேட்டாள் உத்ரா..

“ஒருத்தராவது என்னை ரிஸிவ் பண்ணினாங்களா..? எல்லோரும் உன்னையே வா, வாங்கிறாங்க..”

உத்ராவின் பெறாமையில் நந்தினிக்கு சில்லென்று இருந்தது.. அதற்குள் வீணா..

“வாம்மா.. நீதான் உத்ராவா..? எங்க நந்தினியின் ஃபிரண்ட் எங்களுக்கெல்லாம் சொந்தம் போல.. தம்பி பெயர்

வினித் இல்லையா..? ஜோடிப் பொருத்தம் பிரமாதமா இருக்கு.. கோழிக்கோடைச் சுற்றிப் பார்த்தீங்களா..? எப்படி.. கேரளாவை பிடித்திருக்கா..?” என்று உத்ராவையும் வினித்தையும் வரவேற்று உத்ராவின் பெறாமையை விரட்டியடித்து விட்டாள்..

“ஆசிர்வாதம் செய்யுங்க ஆண்ட்டி..”

வினித் உத்ராவை அருகில் அழைத்து ரவிவர்மனையும் வீணாவையும் அருகருகே நிறுத்தி பாதம் பணிந்து எழுந்தான்.. அதில் ரவிவர்மனின் முகத்தில் திருப்தி நிலவியது..

“நல்லாயிருங்க..”

மணமக்களை மனமார ஆசிர்வதித்தவர் தன் கையிலிருந்த தங்கக் கடிகாரத்தைக் கழற்றி வினித்தின் கையில் கட்டி விட்டார்.. அவன் பிரமித்து விட்டான்.. எண்கள் இருக்கும் இடத்தில் மிளிர்ந்த வைரங்கள் அவனை அயர வைத்தன..

‘எத்தனை லட்சம் பெறுமோ..’

வீணா தன் கழுத்தில் இருந்த வைர அட்டிகையைக் கழட்டி உத்ராவின் கழுத்தில் போட்டு விட உத்ரா பயந்து போய்

பின் வாங்கினாள்.. அவள் வைரத்தையே பார்த்ததில்லை.. இதில் வைர அட்டிகையைப் போட்டு விட்டால் மிரண்டு விட மாட்டாளா..?

“உங்க அன்பும், ஆசிர்வாதமும் இருந்தால் போதும் ஆண்ட்டி.. ஜ்வல் வேணாம்.. இது டயமண்ட் நெக்லஸ் போல இருக்கு..”

உத்ராவின் பயத்தைக் கண்டு மிருதுவாகச் சிரித்தாள் வீணா..

“டயமண்ட்தான்ம்மா.. கல்யாணமாகி விருந்துக்கு வந்திருக்கிற தமிழ்நாட்டுப் பெண் நீ.. என் பிறந்த ஊர்.. உனக்கு டயமண்டில்தான் பரிசு கொடுக்கனும்.. வாங்கிக்க.. வயநாட்டு அரண்மனையின் ஞாபகம் வைரமா உன் கழுத்தில் இருக்கனும்..”

மறுக்க முடியாமல் தயக்கத்துடன் தலையை அசைத்தாள் உத்ரா.. நகையை அவிழ்க்கப் போன கை அதைத் தொட்டுப் பார்த்து விலகியது.. வைர அட்டிகை அவள் கழுத்தில் எப்படி ஒளிர் விடுகிறது என்று பார்க்க ஆசை கொண்டாள் உத்ரா..

‘தனி ரூமுக்கு போனதும் முதல் வேலையா கண்ணாடி பார்க்கனும்..’

நந்தினி கலவரத்துடன் ஹாலைச் சுற்றிப் பார்வையை ஓடவிட்டாள்.. உத்ராவும், வினித்தும் பரிசுகளை எதிர்பார்த்து வயநாட்டு அரண்மனைக்கு வருகை தரவில்லை.. அவர்கள் நந்தினியைப் பார்ப்பதற்காக தேநிலவு என்ற பெயரில் வந்திருக்கிறார்கள்.. ரவிச்சந்திரனின் அழைப்பை ஏற்று மரியாதையின் நிமித்தம் வயநாட்டு அரண்மனையில் இரண்டு நாள்கள் தங்கியிருந்து செல்ல ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.. வந்த இடத்தில் அவர்களுக்கு வைர நகைகள் பரிசாக கிடைக்குமென்று நினைத்துக் கூடப் பார்த்திருக்க மாட்டார்கள்.. பரிசை தட்டிக் கழிப்பது மரியாதையாகாது என்று தயக்கத்துடன் அந்த நகைகளை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்..

இதை அவந்திகாவும் அஜந்தாவும் புரிந்து கொள்வார்களா..? இதற்காகத்தான் இங்கே விருந்துக்கு வந்தீர்களா என்பதைப் போல ஒரிரு வார்த்தைகளைக் கேட்டு விட்டால் கூடப் போதும் உத்ரா நொறுங்கி விடுவாள்.. வினித்திற்கு கோபம் வந்து விடும்.. அளித்த பரிசுகளை அங்கேயே கழற்றிக் கடாசிவிட்டு மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸை பிடிக்கக் கோழிக்கோடுக்கு கிளம்பிப் போய் விடுவார்கள்..

‘அப்படி ஏதும் நடந்து விடக் கூடாது..’

நந்தினி மனதுக்குள் கடவுளை வேண்டியபடி கன்னத்தில் போட்டுக் கொண்டாள்..

“என்னடி..?” உத்ராவுக்கு வேடிக்கையாக இருந்தது.

“ஓமனா அம்மேன்னு கூப்பிடக் கூடாதுன்னு கடவுள்கிட்ட ப்ரே பண்றாங்களோ என்னவோ..” ரம்ய மாலினி சிரித்தாள்..

“இருக்கும்.. இருக்கும்..” வெகு இலகுவாக ரம்ய மாலினியிடம் தோழமை பூண்டு விட்டாள் உத்ரா..

“எண்ட மலையாள பகவதி..! எனிக்கோசரம் எண்ட அம்மே கடவுள வணங்கிநு..?” ஓமனாக்குட்டி புல்லரித்துப் போனாள்..

“உனக்காக வணங்கலை ஓமனா... அவங்களுக்காகத்தான் வணங்கிக்கிறாங்க.. இல்லைன்னா நீ அவங்களை உனக்கு அம்மையாக்கி விடறியே..” ரம்யமாலினி விரிவுரை கொடுத்தாள்..

“ஓ..! இதிக்கு எதிக்கு கடவுளிண்ட பறஞ் .. ஈ ஓமனாக்குட்டியிண்ட பறஞ்ஞா.. ஞான் எண்ட அம்மைய மேமிண்டு விளிக்குமல்லோ..”

“அதுசரி.. எத்தனை தரம்தான் உன்னிடம் பறயறது..?”

அலுத்துக் கொள்வதைப் போல நந்தினி பேச்சை மாற்றினாள்.. யதேச்சையாக ரவிச்சந்திரனைப் பார்த்த போது அவன் அவளையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்தாள்.. இருவர் விழிகளும் சந்தித்தபோது அவன் இமைகளை மூடித் திறந்தான்.. நான் பார்த்துக் கொள்கிறேன்.. நீ கவலை கொள்ளாதே என்ற அந்த மௌன சமிக்ஞையில் நந்தினியின் கலக்கம் விலகியது..

எதிரில் நிற்கும் அந்த இரும்பு மனிதனின் காவலைத் தாண்டி அஜந்தாவின் நாக்கு உத்ராவைச் சுட்டு விடாது என்ற நிம்மதி அவளுக்குள் வந்தது..

“ஓமனா.. மாடியில இவங்க ரூமைக் காட்டு..” வீணா உத்தரவிட்டாள்..

“வரனும் அம்மே..” ஓமனா உத்ராவின் பெட்டியைத் தூக்கிக் கொண்டாள்..

“இவளும் அம்மையா..? எண்ட குருவாயூரப்பா..” நந்தினி தலையில் கை வைக்க.. ரம்யமாலினி கலகலத்துச் சிரித்தாள்..

மகளின் சிரிப்பைக் கண்ணார கண்ட ரவிவர்மனின் விழிகளில் நீர் துளிர்த்தது.. அவருடைய செல்வமகளிடம்

அனைத்துச் செல்வங்களும் நிரம்பியிருக்கின்றன.. ஆனால் சிரிப்புச் செல்வம் இல்லாமல் முகம் வாடியிருந்தாள்.. அந்தச் செல்வத்தை அவருடைய மகளுக்கு அளிப்பதற்காகவே நந்தினி அவரது அரண்மனையில் காலடி வைத்திருக்கிறாளோ..

# அத்தியாயம் 183

**கோ**ழிக்கோடுக்கு கொண்டு சென்றிருந்த பைகளைப் பிரித்துத் துணிகளை சுவர் அலமாரியில் அடுக்கிக் கொண்டிருந்தாள் நந்தினி.. காலிங்பெல் ஒலித்தது.. கதவைத் திறந்தாள்.. உத்ரா நின்றிருந்தாள்..

“ஹேய்.. வாடி.. வா..”

உத்ராவின் கை பற்றி உள்ளே இழுத்துக் கொண்ட நந்தினி கதவை மூடித் தாழிட்டாள்..

“ஏண்டி..?” புரியாமல் கேட்டாள் உத்ரா..

“டிஸ்டர்ப் இல்லாமப் பேசலாமே..” நந்தினி துணிகளை அடுக்குவதைத் தொடர்ந்தாள்..

உத்ரா நந்தினியின் அறையைச் சுற்றிப் பார்த்து விட்டு..

“யாழ் ஹோட்டல் ரூமைத் தூக்கிச் சாப்பிடுதில்ல.? எங்களுக்கு கொடுத்திருக்கிற ரூமும் இப்படித்தான் இருக்கு.. ஹப்பா.. கண்ணைக் கட்டுதுடி நந்தினி.. கனவு போல இருக்கு.. ரவி சார் கோடிஸ்வரர்ன்னு தெரியும்.. இவ்வளவு

பெரிய கோடிஸ்வரர்ன்னு இப்பத்தான் தெரியும்..'' என்று விழி விரித்தாள்..

''ஃபர்ஸ்ட் டைம் பார்க்கிறப்ப எனக்கும் இப்படித்தான் இருந்தது..''

துணிகளை அடுக்கி முடித்து விட்டு சோஃபாவில் உட்கார்ந்தபடி சொன்னாள் நந்தினி.. அவளிடம் தனித்துப் பேச உத்ரா அவளைத் தேடி வந்திருப்பது அவருக்கு ஆறுதலைத் தந்தது..

''பணமிருந்தா உலகத்தையே விலைக்கு வாங்கி விடலாம்ங்கிறது உண்மைதான் போல..'' உத்ரா நந்தினியின் பக்கத்தில் உட்கார்ந்து அவள் கையைப் பிடித்துக் கொண்டாள்..

தோழியின் பரிவில் நந்தினிக்கு கண்கலங்கி விட்டது.. இந்த பதினைந்து நாள்களும் இருவரும் பக்கம் பக்கமாகத்தான் இருந்தார்கள்.. ஆனால் வெகு தொலைவில் விலகி இருப்பதைப் போலல்லவா இருந்தது.. இந்தத் தனிமை அந்த நாள்களில் கிடைக்கவில்லை..

''நாளை மறுநாள் நான் சென்னைக்குக் கிளம்பனும் நந்தினி..'' மெல்லிய குரலில் சொன்னாள் உத்ரா..

நந்தினியைப் பிரிவுத் துயர் வாட்டியது.. தொண்டையில் எதுவோ அடைப்பதைப் போல இருந்தது.. உத்ராவுடன் தானும் கிளம்பிப் போய்விடக் கூடாதா என்ற ஏக்கம் அவள் மனதைப் பிழிந்தது..

“அப்பா மனசு மாறவே மாறாதாடி..?” என்று அழுதுவிட்டாள்..

“ஊஹூம்.. அழக்கூடாது.. தைரியமா இருக்கனும்..”

தோழியின் கண்ணீரைத் துடைத்து விட்ட உத்ரா ஆதரவாக அவளை அணைத்துக் கொண்டாள்.. அடக்கி வைத்திருந்த துக்கம் பீறிட்டு எழ நந்தினி விம்மியழுதாள்.. அவளது கேவல் ஒலி அடங்கும் வரை அவளைத் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்திய உத்ரா அவள் அழுது முடித்ததும்..

“இப்படியே காலம் போயிராது நந்தினி.. உன் அப்பா மனசு கட்டாயம் மாறும்.. உன்னைத் தேடி வயநாட்டுக்கே வருவார்.. பாரேன்..” என்று உற்சாகப் படுத்தினாள்..

“வருகிறவர் அந்த பெல்ட் மன்னனைத்தான் கல்யாணம் பண்ணிக்கனும்ங்கிற மிரட்டலோடு வந்து விட்டால் நான் என்னடி செய்வேன்..?” நந்தினி பயந்தாள்..

“சீச்சீ.. அப்படியெல்லாம் சொல்ல மாட்டார்.. அப்படியே சொன்னாலும் வேறு ஏதாவது மாப்பிள்ளையைத்தான் கை காட்டுவார்.. பெல்ட் மன்னனை கை காட்ட மாட்டார்..” தோழிக்கு தேறுதல் கூறிய உத்ரா..

“நீ சொல்லிச் சொல்லி.. எனக்கும் பெல்ட் மன்னன்னே வாயில வருது பாரேன்..” என்று நாக்கைக் கடித்துக் கொண்டாள்..

“உத்ரா.. அப்பா வேற எந்த மாப்பிள்ளையையும் கை காட்டி விடக் கூடாது..”

நந்தினி தடுமாறினாள்..

“ஏண்டி..? உனக்குப் பெல்ட் மன்னன் மேல்தானே பயம்..?”

“அன்னைக்கு அது மட்டும்தான் பிராப்ளம் உத்ரா..”

“இன்னைக்கு என்னவாம்..?”

“அது வந்து.. வந்து.. வந்து..”

“அதான் வயநாட்டுக்கு வந்திட்டயே.. என்னதாண்டி உன் பிரச்னை..? வாயைத் திறந்து சொல்லேண்டி..”

“நான்.. நான்..”

“நீயாடி இது..?”

உத்ரா ஆச்சரியமாகக் கேட்டாள்.. அவளறிந்த நந்தினிக்கு வாயைத் திறந்தால் வார்த்தைகள் கொட்டும்.. தங்கு தடையில்லாமல் சரளமாகப் பேசுவாள்.. எதற்காகவும் தடுமாற மாட்டாள்..

“மனசைத் திறந்து பேசுடி.. கோழிக்கோடில ஊரைச் சுத்திக்கிட்டே இருந்தோம்.. ஓரிடத்தில நிலைச்சு நிற்கல.. வினித் ஹனிமூனுக்கு வேற பிளேஸ் போகனும்னு பிளான் போட்டிருந்தார்.. நான்தான் பிடிவாதமாக வயநாட்டுக்கு வந்தே ஆகனும்னு இழுத்துக்கிட்டு வந்துட்டேன்.. லைஃபில ஒரு டைம்.. ஹனிமூன் டைம் அவருக்கான லைஃபை அவருக்குக் கொடுக்கனுமில்லையா..? வாழ்க்கை பூராவும் நினைத்துப் பார்க்கும் நாள்கள் இல்லையா இந்த ஹனிமூன் டேஸ்..? அதனாலதான் அவரை விட்டு நகராம கூடவே இருந்தேன் நந்தினி.. உனக்கு இது இப்பப் புரியாது..”

‘எனக்கா புரியாது..?’

ரவிச்சந்திரனின் நினைவில் கன்னம் சிவந்தாள் நந்தினி.. அவனும் இப்படித்தானே.. அவளுடன் அட்டை போல

ஒட்டிக்கொண்டிருக்க வேண்டும் என்று அடம் பிடிப்பவன்தானே..

“இன்னைக்கு அலுப்புத் தீர ரெஸ்ட் எடுக்கனும்னு சொல்லியிருக்கிறார் நந்தினி... இப்பக் கூட குளிக்கப் போகாம பெட்டில விழுந்து தூங்க ஆரம்பிச்சிட்டார்... குட்டித் தூக்கம் போட்ட பின்னாடிதான் குளியலாம்.. ஸோ.. இன்னைக்கும் நாளைக்கும் நான் உன் கூடத்தான் இருப்பேன்.. வேண்டிய மட்டும் பேசிக்கலாம்.. ஓகே..?”

“ஓகே..”

மனம் விட்டுச் சிரித்தாள் நந்தினி.. உத்ராவுடன் இரண்டு நாள்கள் என்பதில் அவளது மனம் நிறைந்து விட்டிருந்தது.. ரவிச்சந்திரன் அவளுடன் இருந்தாலும் அவள் மனதில் ஓர் மூலையில் தனிமையின் நிழல் படிந்திருந்தது..

உத்ராவின் அருகாமை அதை விரட்டி விடக் கூடும்..

“இப்பச் சொல்லு பார்க்கலாம்..”

“எதை..?”

“உன் மனதில் ஒளித்து வைத்திருக்கும் மர்மத்தை..”

நந்தினியின் ஓர நெற்றியில் ஒற்றை விரலால் தட்டிக் காண்பித்தாள் உத்ரா.. உதட்டைக் கடித்த நந்தினி..

“எதை மறைத்து வைத்திருக்கேனாம்..?” என்றாள்..

அவள் விழிகளில் கள்ளத்தனம் மின்னியது..

“கள்ளி..” என்றாள் உத்ரா..

“உத்ரா..”

“ம்ம்ம்..”

“நீ சொன்னது நடந்திருச்சுடி..” முகம் சிவந்தாள் நந்தினி.. தோழியின் முகச் சிகப்பை ரசித்தபடி..

“எதைச் சொல்கிற..?” என்று அறியாதவளைப் போலக் கேட்டாள் உத்ரா..

“நான்..”

“நீ..?”

“ரவியை..”

“யு மின்.. ரவிசார்..?”

“யெஸ்..”

“அவர் உன் பாஸ்..”

“அது அப்ப..”

“இப்ப..?”

“ஐ திங்க் ஐ லவ் ஹிம்டி..”

“ஏய்ய்.. திங்க் பண்றியா.. இல்லை லவ் பண்றியா..? தெளிவாச் சொல்லு.. ரெண்டு நாளா ரெண்டு பேரும் கம் போட்டு அப்பிக்கிட்டப்பவே நினைச்சேண்டி.. ஹனிமூன் கப்புள் நாங்களா.. இல்லை நீங்களான்னு டவுட்டா இருந்துச்சு.. கடைசியில் பூனைக்குட்டி வெளியில வந்திருச்சா..?”

“போடி..”

நந்தினி வெட்கத்துடன் உத்ராவின் கையைக் கிள்ளிக் கொண்டிருந்த போது காலிங் பெல் ஒலித்தது..

“ஓமனாவா இருக்கும்..”

நந்தினி எழுந்து போய் கதவைத் திறந்து எட்டிப் பார்த்தாள்.. அங்கே உதாசீனப் பார்வையுடன் நின்றிருந்தாள் அஜந்தா..

‘இவளா..?’

நந்தினி தன்னிச்சையாக உத்ராவைப் பார்த்து வைக்க உத்ராவின் புருவங்கள் முடிச்சிட்டன..

'யாரைப் பார்த்து டென்ஷன் ஆகிறா..?'

ரம்யமாலினியும் வீணாவும் பெருந்தன்மையே உருவானவர்கள் மென்மை குணம் கொண்டவர்கள்.. அவர்களைக் கண்டு நந்தினி இப்படி விழிக்க மாட்டாள்.. ஓமனாக்குட்டி நந்தினியின் பிரியத்துக்குரிய வேலையாள்.. அவனைக் கண்டால் வம்பிழுப்பாள்.. வம்பைக் கண்டதைப் போல முகம் சுளிக்க மாட்டாள்..

'வேறு யாராக இருக்கும்..?'

உத்ரா எழுந்து கொள்ளப் போனாள்.. நீ இங்கே வர வேண்டாம் என்று அவசரமாக சைகை செய்தாள் நந்தினி.. உத்ராவின் சந்தேகம் அதிகரித்தது..

"உனக்கு என்ன வேண்டும்..?"

உத்ரா அறைக்குள் இருக்கும் நினைவில் பல்லைக் கடித்தபடி கேட்டாள் நந்தினி..

"யாரிடம் என்ன கேள்வியைக் கேட்கிறோம்ன்னு யோசித்துக் கேட்க மாட்டியா..? எனக்கு வேண்டியதைக்

கொடுக்கிற அளவுக்கு நீ பெரிய ஆளா..? ஆஃப்டர் ஆல்.. ஒரு பெர்சனல் செக்கரட்டரி..! வயநாட்டு அரண்மனையின் வாரிசிடம் என்ன வேண்டும்ன்னு கேட்கறியே.. என்ன தைரியம்..!"

அஜந்தா எது நடக்க வேண்டும் என்று எதிர் பார்த்தாளோ அது நன்றாகவே நடந்தது.. நந்தினி எது நடக்கக் கூடாது என்று பயந்தாளோ அதுவும் மோசமாகவே நடந்து விட்டது.. அஜந்தா பேசிய ஒவ்வொரு வார்த்தையும் அட்சர சுத்தமாக உத்ராவின் காதுகளில் விழுந்து விட்டன.. அவள் வேகத்துடன் எழுந்து அறைவாசலுக்கு வந்து விட்டாள்..

"உத்ரா.. நீ போ.." நந்தினி அவளை அஜந்தாவின் கண் பார்வையிலிருந்து அகற்ற முயன்றாள்..

இரண்டு நாள்கள்.. இரண்டே நாள்கள் அஜந்தாவின் பார்வை படாமல் உத்ராவைக் காப்பாற்றி ஊருக்கு அனுப்பி வைத்து விட்டால் போதும்.. அதன் பின்னால் நந்தினியுடன் அவள் மோதுவதைப் பற்றி யாதொரு கவலையும் இல்லை.. வந்து பார் வட்டப் பாறைக்கு என்று நந்தினி இரண்டில் ஒன்றைப் பார்த்து விடுவாள்..

“யாரை விரட்டற..?” உத்ராவைப் பார்த்து விட்டாள் அஜந்தா..

“ஓ..” என்று உதட்டைக் குவித்தவள்..

“இதுதான் உன் ஃபிரண்டா..? நீயே இங்கே தேவையில்லாம ஒண்டிக்கிட்டு இருக்கிற.. இதில் உன்னைப் பார்க்க ஒரு விருந்தாளி உனக்கே இது ஓவர்ன்னு தோணலை..?” என்று ஏளனமாக கேட்டாள்..

“தோணலை..” பல்லைக் கடித்தாள் நந்தினி..

முழுக்க நனைந்தாகி விட்டது.. இனி முக்காடு தேவையில்லை.. உத்ராவின் முன்னிலையில் அஜந்தாவுடன் மோதிப் பார்த்து விட வேண்டியதுதான்..

“ஆஃப்டர் ஆல்ன்னு உன்னைப் பார்த்துக் சொல்கிறா.. யார் இவ நந்தினி..?” உத்ரா கோபமாக கேட்டாள்..

அவளுக்கு அஜந்தாவைப் பற்றித் தெரியாது.. திருமணப் பெண்ணாக இருந்ததினால் அவளால் நந்தினியுடன் அடிக்கடி பேச முடிந்ததில்லை..

கிடைக்கும் ஓரிரண்டு நிமிடங்கள் நலம் விசாரித்தலிலேயே கழிந்து விட்டன.. நந்தினி

எங்கேயிருக்கிறாள் என்று மட்டும்தான் உத்ராவுக்குத் தெரியும்.. அங்கே யார், யார் இருக்கிறார்கள் என்ற விவரமெல்லாம் தெரியவே தெரியாது.. ரவிச்சந்திரன் சந்தேகங்களக்கு அப்பாற்பட்டவன்.. வாக்குக் கொடுத்து விட்டால் மறுக்காமல் அதை நிறைவேற்றுபவன்.. நந்தினியைப் பாதுகாக்கும் பொறுப்பை அவன் ஏற்றுக் கொண்டிருக்கிறான்.. கவலை வேண்டாம் என்று வினித் சொல்லியிருந்தான்.. அதற்கு மேல் நந்தினியைப் பற்றிக் கவலைப்பட்டால் அது ரவிச்சந்திரனைச் சந்தேகிப்பதாக ஆகி விடாது..

வினித்தை சந்தேகிப்பதாக.. அவன் சொல்லை உத்ரா நம்பாததாக ஆகி விடும்.. எனவே உத்ரா நந்தினியைப் பற்றிய தன் கவலையை வெளிப் படுத்தாமல் மௌனமாக இருந்தாள்.. வெளித் தோற்றத்துக்கு அவள் கவலையில்லாமல் இருப்பதைப் போலக் காட்டிக் கொண்டாள்.. மனதெல்லாம் நந்தினியைப் பற்றிய கவலையே மண்டியிருந்தது.. அவள் எப்படி இருக்கிறாள்..? ரவிச்சந்திரன் எப்படிப்பட்டவன்..? வினித் சொன்னதைப் போல அவன் வாக்குத் தவறாதவனா..? சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவனா..? அவனுக்கும்

நந்தினிக்கும் இடையில் என்ன உறவுமுறை நிலவுகிறது..? அவன் நந்தினியின் காவலனா.. இல்லை காதலனா..?

இத்தனை விவரங்களையும் அறிந்து கொள்ள உத்ராவுக்கு இப்போதுதான் நேரம் கிடைத்திருக்கிறது.. அவள் சொன்ன வார்த்தைக்குக் கட்டுப்பட்டு முன்பின் தெரியாத மலைதேசத்துக்கு நந்தினி வந்திருக்கிறாள்.. அவளின் பாதுகாப்பை உறுதிப் படுத்திக் கொள்ளாமல் உத்ரா வயநாட்டை விட்டு நகரவே மாட்டாள்.. இதை வினித்தும் ஆட்சேபிக்க மாட்டான்..

இந்த பதினைந்து நாள்களில் அவள் அறிந்தவரை ரவிச்சந்திரன் நல்லவன்தான்.. வினித் சொன்ன வார்த்தைகள் அட்சர சுத்தமாக அவனுக்குப் பொருந்தியதுதான்.. இருந்தாலும் நந்தினியின் வாய்மொழியில் அவள் அதை அறிந்து கொள்ள வேண்டியிருந்தது..

நந்தினி பணக்காரியாக இருக்கலாம்.. ரவிச்சந்திரன் அவளால் நினைத்துப் பார்க்க முடியாத உயரத்தில் இருக்கும் பணக்காரன்.. திரையுலக சூப்பர் ஸ்டார்களை மிஞ்சிய புகழையுடையவன்.. அவன் நின்றாலும், நடந்தாலும் அது ஊடகங்களில் செய்தியாக வரும்..

அப்பேற்பட்டவன் நந்தினியை உண்மையாகவே காதலிக்கிறானா..? அவனுடைய காதலை அவனுடைய குடும்பத்தார் ஏற்றுக் கொள்வார்களா..? அவன் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன்.. நந்தினியை அவன் மணப்பானா..? அவனுடைய பெற்றோர் பெருந்தன்மையான தயாள குணம் படைத்தவர்களாக இருக்கலாம்... வீட்டிற்கு வரும் விருந்தாளிக்கு வைர அட்டிகையைப் பரிசளிப்பவர்களாக இருக்கலாம்.. இவையெல்லாம் ராஜ பரம்பரைக்கே உரிய குணாதிசியங்கள்..

இதை மட்டும் வைத்து அவர்கள் நந்தினியை மருமகளாக ஏற்றுக் கொள்பார்கள் என்ற முடிவுக்கு வர முடியாதே..

இத்தனை விவரங்களை இரண்டேநாள்களில் பேசி முடிக்க வேண்டிய நிலையில் உத்ரா இல்லை.. கிடப்பதெல்லாம் கிடக்கட்டும்..

கிழவியைத் தூக்கி மணையில் வை என்ற அஜந்தா வம்பிழுக்க வந்து விட்டாள்..

# அத்தியாயம் 184

“என்ன சொன்ன..?”

அஜந்தாவுக்கு நெஞ்சு வலியே வந்து விட்டது.. அவனையா நந்தினியின் தோழி ‘எவ.. இவ..?’ என்ற ரீதியில் ‘யார் இவ..?’ என்று கேட்டாள்..

“யு.. யு.. யு...”

அந்த ஒற்றை எழுத்தைத் தாண்ட முடியாமல் திக்கித் திணறியவளை வெகு திருப்தியுடன் பார்த்தாள் நந்தினி..

‘வேண்டும் இவளுக்கு.. தேவையில்லாம வாயைக் கொடுத்தா வாங்கிக் கட்டிக்கத்தான் வேணும்..’

“நான்.. நான்தான்.. நீயென்ன பெரிய இவளா..? யாரா இருந்தாலும் மரியாதை கொடுத்தால்தான் மரியாதை கிடைக்கும்.. அது என்ன ஆஃப்பட்டர் ஆல்ன்னு சொல்கிறது..?”

“ஓ.. உன் ஃபிரண்டை ஆஃப்பட்டர் ஆல்ன்னு சொன்னதில உனக்கு ரோஷம் வந்திருச்சோ..?”

“பின்னே..? வராதா..?”

“எங்களிடம் ஜோலி பார்க்க வந்தவளை ஆஃப்டர் ஆல்ன்னு சொல்லாம வேற எப்படிச் சொல்கிறதாம்..?”

“அவ.. இவன்னு சொன்னா நடக்கிறதே வேற..”

“ஓ.. நீ மட்டும் அவ, இவன்னு சொல்லலாமோ..?”

“உன்கிட்ட வேற எப்படிப் பேசச் சொல்ற..? ஜோலி பார்க்க வந்தா ஆப்டர் ஆல்ன்னு சொல்லுவியா..? உன்னிடமா இவ ஜோலி பார்க்கிறா..?”

“எண்ட அத்தானிடம் ஜோலி பார்க்கிறாளாக்கும்..”

“அத்தானா..?” கேள்வியுடன் நந்தினியைப் பார்த்த உத்ரா..

“யாருடி இவ..?” என்று ஏற்கனெவே கேட்டு அஜந்தாவுக்கு ரத்தக் கொதிப்பை வர வைத்த கேள்வியை மீண்டும் கேட்டாள்..

“இவளா..?” நந்தினி சொன்னதையே திருப்பிச் சொன்ன அஜந்தாவின் முகம் பயங்கரமாகக் கோணியது..

‘ஈ அழகு சுந்தரிய இப்ப யாராச்சும் பார்க்கனும்.. கேரளத்து சொப்பன சுந்தரி இவளான்னு பயந்து போய்

பின்னங்கால் பிடறியில பட விழுந்தடிச்சு ஓடிப் போயிடுவாங்க..'

நந்தினி அஜந்தாவின் முக பாவத்தை ரசித்தாள்..

“ஆஃப்டர் ஆல் யு ஆர் எ செக்கரட்டரி.. ஞான் ஈ தரவாடோட தம்புராட்டி.. என்னிய இவன்னு விளிச்சு..?” அஜந்தாவுக்கு மூச்சிரைத்தது..

“மறுபடியும் ஆஃப்டர் ஆல்ன்னு என் ஃபிரண்டைப் பார்த்துச் சொன்ன.. பல்லைக் கழட்டிருவேன்.. பார்த்துப் பேசு.. இவளை யாருன்னு நினைச்ச..?” அஜந்தாவை விட அதிகமாக கொதித்த உத்ரா நந்தினியைப் பார்த்து..

“என்னடி சொல்றா இவ..? தமிழ் நல்லாத்தானே வருது..? அப்புறமும் எதுக்காக மலையாளத்தில பேசி வைக்கிறா..?” என்று கேட்டாள்..

“அது அப்படித்தான்.. அம்மணி திடீர்ன்னு மலையாளத்தில சம்சாரிப்பாங்க.. திடீர்ன்னு செந்தமிழில பேசுவாங்க..”

“தெலுங்கை மட்டும் ஏண்டி மிச்சம் வைச்சிருக்கா..? அதிலயும் மாட்டாட வேண்டியதுதானே..?”

“கன்னடத்தை விட்டுட்டயே உத்ரா..”

“கன்னடக்காரங்களுக்கும் நமக்கும் ஏற்கனெவே காவேரி பிரச்னையில சண்டை நாறிக்கிட்டு இருக்குது.. புதுசா ஒண்ணையும் இழுத்து விட்டுக்கனுமா..?”

“வேணவே வேணாம்..”

“இப்பச் சொல்லு.. இவ யாரு..”

“பாஸோட அத்தை மகள்..”

“அட..! அவருக்குப் போய் இப்படியொரு அத்தை மகாள..? பாவம்டி அவரு.. ஸோ சேட்..”

“ப்ம்ச்.. விதி..! என்னத்தைச் சொல்ல..?” தோழிகள் இருவரும் ரவிச்சந்திரனுக்காக பரிதாபப் படுவதைப் போல அஜந்தாவைக் கலாய்த்ததில் அவளது முகம் இன்னும் அதிகமாக கோணியது..

“உங்களைச் சொல்லிக் குற்றமில்லைடி.. உங்களை இந்த வயநாட்டு அரண்மனைக்குள் வர விட்டிருக்கிறாரே.. என் அத்தான்.. அவரைச் சொல்லனும்..” நிஷ்டூரமாக முறைத்தாள் அஜந்தா..

“சொல்லிப் பாரேன்..” நந்தினி யோசனை சொன்னாள்..

“அந்தத் திமிர்தானேடி உனக்கு..? உன்னையெல்லாம் வைக்கிற இடத்தில வைத்திருக்கனும்.. வயநாட்டு அரண்மனையில கால் வைக்க விட்டா இப்படித்தான்..” அஜந்தா துச்சமாக அவர்களை வெறித்தாள்..

“ஏன்..? வயநாட்டு அரண்மனையில நந்தினி கால் வைத்ததில என்ன ஆகிப் போச்சு..?” உத்ரா சண்டைக்கு வந்தாள்..

“இந்த அரண்மனையில கால் வைக்கத் தகுதியிருக்கனும்..”

“இவ தகுதிக்கென்ன குறைச்சல்...? இது வேண்டும்ன்னா அரண்மனையா இருக்கலாம்.. பட்.. நந்தினி ஒன்றும் குடிசையில் குடியிருக்கிறவளில்லை.. பங்களாவில், பணக்காரக் குடும்பத்தில், கோடிஸ்வர தாய் தகப்பனுக்கு, மகளாக, பிறக்கும் போதே தங்க ஸ்பூனுடன் பிறந்து வளர்ந்தவள்.. இவங்கப்பா பெரிய ஜவுளிக்கடை முதலாளி.. தோப்பு, துரவு ஆள் படைன்னு இளவரசியாய் வாழ்கிறவ.. ஒரு இக்கட்டான சூழ்நிலையில உன் அத்தானிடம் வேலை பார்க்க வந்தா நீ இளக்காரமா பேசுவியா..?”

“இக்கட்டான சூழ்நிலையா..? அது என்ன இக்கட்டு..?”

“உன்னிடம் சொல்லனும்ங்கிற அவசியமில்லை.. உனக்கெல்லாம் இவ்வளவு சொல்லியதே போதும்.. வேலை மெனக்கெட்டு கதவைத் தட்டி வம்பு வளர்க்கறியே.. ஏன் நந்தினி.. இவளுக்கு வேலை வெட்டியே இல்லையா..?”

“சரியாச் சொன்ன உத்ரா.. மத்தவங்களிடம் வம்பிழுப்பது மட்டும்தான் இவளோட ஃபுல் டே ஜாப்..”

“அட..! இது வேறயா... விளங்கிரும்... இவளுக்குத்தான் பொழுது போகலை.. நமக்கு அப்படியா..? பொழுது பத்தலை.. நீ உள்ளே வாடி.. வெட்டியா இவகிட்டப் பேசிக்கிட்டு.. இருந்தா நம்ம நேரம்தான் வீணாகும்.. காலத்தைப் பார்த்துச் செலவளிக்கனும்..”

“நீ வேற.. இவங்க குடும்பம் பணத்தையே பார்த்துச் செலவளிக்காது.. இவங்கள்ளாம் டோட்டலாவே வேற கேட்டகிரிடி உத்ரா.. ஒரு மைண்ட் செட்டிலே இருக்க மாட்டாங்க..”

“இவ குடும்பமா..? சாரோட அத்தை மகள்னு சொன்ன.. இவ மட்டும்தானே விருந்தாளியாய் வந்திருப்பா..?”

“விருந்தாளியா..? இவ குடும்பமே இங்கேதான் டேரா.. கேட்டா என் தாத்தா வீடும்ப்பா..”

“இது சாரோட வீடாச்சே..”

“ஆமாம் உத்ரா.. இவ அதைச் சொல்லவே மாட்டா..”

“இவளோட அம்மா, அப்பாவும் இங்கேதான் இருக்காங்களா..?”

“ம்ம்ம்.. கூடவே இவளோட அண்ணனும் இருக்கான்.. அவன் யாருன்னு நினைக்கிற..”

அஜந்தா என்ற ஒருத்தி அங்கே இருக்கிறாள் என்ற பிரக்ஞையே இல்லாதவர்களாய் தங்களுக்குள் பேசிக் கொண்டிருப்பதைப் போல நந்தினியும், உத்ராவும் பேசிக் கொண்டிருந்தார்கள்.. அஜந்தாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.. பொதுவாய் இதுபோன்ற வேலைகளை அவள்தான் செய்வாள்.. அவந்திகாவை அருகில் வைத்துக் கொண்டு வீணாவையும், ரம்ய மாலினியையும் பற்றி அவர்களின் மனம் புண்படும்படி பேசுவாள்..

“அம்மே.. ஈ தரவாடில நிங்களோட அம்மா ச்சி மகள்தான் வாழ வந்திருக்கனும்.. அம்மாவன் புத்தி பேதலிச்சதில எவர் எவரோ இங்கே வாழ வந்து..” வீணாவைப் பார்த்துக் சொல்வாள்..

“அம்மே.. அபராஜிதன் அழகுக்கும் அறிவுக்கும் ஈ கேரள தேசத்தில வல்லிய சுந்தரிகள் எல்லாம் அவனை விவாகம் கழிக்க நான், நீன்னு போட்டி போடறாங்கள்லோ.. அவன்தான் பாவம் நம்ம அம்மாவன் மோள்ன்னு கருணை காட்டி ஈ அழுமூஞ்சி சுந்தரிய விவாகம் கழிக்கனும்னு விஜாரம் கொண்டு.. அபராஜிதனத் தவிர எவன் ஈ குரங்கு மூஞ்சியத் திருப்பி நோக்கும்..?” ரம்ய மாலினியின் காதுகளில் விழும்படி உரக்க கேள்வி கேட்பாள்..

அவள் செய்த அட்டூழியங்களைப் போல அவளுக்கே நிகழும் என்று அவள் சொப்பனத்திலும் விஜாரம் (நினைவு) கொண்டதில்லையே..

“அவன், இவன்னு பேசினால் நான் சும்மா இருக்க மாட்டேன்..”

ரம்ய மாலினியே அபராஜிதனை அவன், இவன் என்று முகத்திற்கு நேராகச் சொன்னதில்லை.. மறைவாக அவள் மட்டத்திலும் மட்டமாக பேசுவாள் என்பது நிச்சயம்தான் என்றாலும் அதைப்பற்றி நாம் ஏன் கவலைப்பட வேண்டும் என்பாள் அஜந்தா..

நேருக்கு நேர் பேச பயப்படுகிறார்கள் அல்லவா.. அது.. அந்த பயம்தான் நமக்கு வேண்டும் என்பாள்..

நந்தினிக்கு அந்த பயமற்றுப் போனதைத்தான் அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லை... அபராஜிதனைச் சந்தித்த முதல் நாளிலேயே அவனைப் பற்றி அருள்மொழிவர்மனிடம் போட்டுக் கொடுத்த புண்ணியவதிதான் நந்தினி.. அவளின் அந்த அசாத்திய மனோ தைரியத்தை அஜந்தா என்றுமே விரும்பியதில்லை.. வீணாவிடம் அந்த மனோ தைரியம் உண்டென்றாலும் அவள் சாத்வீகமானவள்...

கணவன்மீது காதல் கொண்டவள்... அவளுக்காக குடும்பத்தில் உள்ள மற்றவர்களின் செயல்பாடுகளை சகித்துப் போகிறவள்.. யாழினியை இப்போதுதான் எதிர்த்துப் பேசுகிறாள்..

அதுவும் நந்தினியின் வரவிற்குப் பின்னர்தான் என்பதில் யாழினிக்கும் ‘அஜந்தா அண்ட் கோ’விற்கும் பெருத்த கோபம் உண்டு..

நந்தினி வீணாவைப் போல அமைதியானவள் இல்லை என்பதுதான் அஜந்தாவுக்குப் பெருத்த தலைவலியாக இருந்தது... அவள் நினைத்ததைப் பேசினாள்.. பிடித்ததைச்

சாப்பிட்டாள்.. கட்டுக்கடங்காத அருவியைப் போன்ற குதூகலத்துடன் இருந்தாள்.. ஓமனா முதல் ரவிவர்மன் வரை வயநாட்டு அரண்மனையில் இருந்த அனைவரையும் தனது துறுதுறுப்பினாலும்.. சுட்டித்தனமான பேச்சினாலும் காந்தமென கவர்ந்திழுத்துக் கட்டியப் போட்டாள்.. அந்தக் கட்டில் அருள்மொழிவர்மன் அடங்கியிருப்பார்தான்.. யாழினி அதற்கு விடவில்லை..

“சும்மா இருக்க முடியலைன்னா ஆடு.. ஐ ஹேவ் நோ அப்ஜெக்ஷன்.. உனக்கு ஏதும் அப்ஜெக்ஷன் இருக்கா உத்ரா..?”

“நீயே நோ அப்ஜெக்ஷன் சொர்டிஃபிகேட் கொடுத்துட்ட பின்னாலே நான் அப்ஜெக்ட் பண்ணவா போகிறேன்..?”

“இந்தா.. உத்ராவும் நோ அப்ஜெக்ஷன் சொர்டிபி கேட்டைக் கொடுத்துட்டா.. நீ ஆடு அஜந்தா.. ஆடு பார்க்கலாம்.. ஆடு..”

இப்படி ஒரு கலாய்த்தலை எதிர் நோக்க வேண்டியிருக்கும் என்று தெரிந்திருந்தால் நந்தினியின் அறைப்பக்கமே அஜந்தா வந்திருக்க மாட்டாள்... தெரியாமல்

வந்து மாட்டிக் கொண்டு முழித்தவள் இது ஜகா வாங்க வேண்டிய நேரம் என்ற முடிவிற்கு வந்தாள்..

முடிவெடுப்பது சுலபம்.. அதை செயல்படுத்துவது தான் சிரமம்.. வயநாட்டு அரண்மனைக்குள் அஜந்தா புறமுதுகு காட்டி ஓடினாள் என்ற செய்தி பரவினால் அஜந்தாவின் நிலைமை படு மோசமாகி விடும்.. வேலையாள்கள் தங்களுக்குள் இனிப்பையும் செய்தியையும் ஒருசேர பறிமாறி அதை வானலையில் பறக்க வட்டு வயநாட்டையும் தாண்டி கேரள தேசம் முழுவதும் பரப்பி விட்டுத்தான் வேறு வேலையையே பார்ப்பார்கள்..

அப்பேற்பட்ட இனிய வாய்ப்பை அவர்களுக்கக் கொடுப்பதா..?

‘எப்படி நழுவுவது..?’

அஜந்தாவின் பார்வை அவளது கையிலிருந்த செல்ஃபோனின் மீது படிந்தது.. விழிகள் பளிச்சிட்டன.. தப்பிக்கும் மார்க்கம் அவளுக்குப் புலப்பட்டு விட்டது..

இதுபோன்ற சூழலில் இருந்து தப்பிக்க செல்ஃபோனை விடச் சிறந்த உபகரணம் வேறேதும் உண்டா..?

“சுஷ்மா..”

அஜந்தா செல்ஃபோனை காதுக்குக் கொடுத்து சுஷ்மாவுடன் பேசியபடி நகர்ந்து விட்டாள்..

“யாருடி அந்த சுஷ்மா..?” சிரிப்பை அடக்கியபடி கேட்டாள் உத்ரா..

“அது அவளுக்கே தெரியாது.. எனக்கு மட்டும் தெரிஞ்சிருமா..?” சிரிக்காமல் கேட்டாள் நந்தினி..

“ஹா.. ஹா.. செம காமெடி போ..”

உத்ராவின் சிரிப்பில் கலந்து கொள்ளாமல் சிந்தனையுடன் உள்ளே வந்து சோபாவில் உட்கார்ந்தாள் நந்தினி..

“என்னடி.. மூட்-அவுட் ஆகிட்ட..?” பக்கத்தில் உட்கார்ந்த உத்ரா கேட்டாள்..

“இவ காமெடி பீஸில்லை உத்ரா.. டேன்ஜரஸ் பீஸ்..”

“ஸோ வாட்..? நீ பயப்படறியா..?”

நந்தனி பதில் சொல்லவில்லை.. கை விரல்களைக் கோர்த்துப் பிரித்தபடி சிந்தனையுடன் இருந்தாள்..

“இது போல போஸ் கொடுக்க எங்கேடி கத்துக்கிட்ட..? வயநாடு உனக்கு என்னவெல்லாம் டிரெயினிங் கொடுத்து வைச்சிருக்கு..?”

“பயம்ன்னு இல்லை உத்ரா.. பட்.. அஜந்தா ஆபத்தானவள்.. இந்த வீட்டில அத்தையும், ரம்யாவுமே அவளைக் கண்டா ஒதுங்கித்தான் போகிறாங்க..”

“அப்ப.. நீ ஒதுங்கிப் போகக் கூடாது நந்தினி..”

“என்னடி சொல்கிற..? அவங்களை விட நான் பெரிய ஆளா..?”

“நிச்சயமா.. அவங்க ரவிசாரோட அம்மாவும், தங்கையும்தான்.. நீ ரவிசாரோட பெட்டர் ஆஃப்.. அவரில் பாதி.. அவரோட அம்மா, தங்கையை பாதுகாக்கிற கடமை உனக்கும் இருக்கனுமில்ல..?”

‘ஓ.. இதில் இப்படியொரு ஆங்கிள் இருக்கா..?’

“சாரோட அத்தை மகள்ன்னு சொல்கிற.. இவளோட ஒட்டு மொத்தக் குடும்பமே இங்கேதான் டேரா போட்டிருக்காங்கன்னு வேற சொல்கிற.. உனக்கு டிரபிள்ஸ் அதிகமாத்தான் இருக்கும்.. நீதான் அதையெல்லாம் எதிர்த்து

நின்று ஜெயித்துக் காட்டனும்.. இங்கேன்னு இல்லை நந்தினி.. எங்கேயும் வாழ்க்கை நமக்கு போராட்டக் களத்தைத்தான் கொடுக்கிறது.. போராட அஞ்சி நின்னா நமக்கு வேண்டியதை எடுத்துக்க முடியாது.. உனக்கு ரவி சார் வேண்டுமா.. வேண்டாமா..?"

இந்த ஒற்றைக் கேள்விதான் நந்தினியின் அனைத்து பயங்களையும் அடித்து விரட்டியது..

உனக்கு அது வேண்டுமா வேண்டாமா என்று தீர்மானி.. வேண்டுமென்றால் போராடு.. வேண்டா மென்றால் விலகிச் செல்..

வாழ்வில் இதுதான் தாரக மந்திரம்..!

# அத்தியாயம் 185

**வா**ழ்க்கை பல கோணங்களை உள்ளடக்கியது.. ஒவ்வொரு தருணத்திலும் ஒவ்வொரு விதமான பரிணாமம் வெளிப்படும்.. அது பார்ப்பவர் எந்தக் கோணத்தில் பார்க்கிறார்கள் என்பதைப் பொறுத்தது..

வாழ்க்கையின் சூட்சுமம் வாழ்ந்து பார்த்தவர்களுக்கும் புரியும்.. வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கும் புரியும்.. விதி விட்டபடிதான் வாழ்க்கை என்பது உண்மைதான்.. அதற்காக கைகளைக் கட்டிக் கொண்டு விட்டத்தை வெறித்துக் கொண்டிருந்தால் விதிக்கே காண்டு வந்து விடாதா..? விதி நம்மை ஆசீர்வதிக்க வேண்டுமானால் காலத்தின் ஓட்டத்தோடு நாம் சுறுசுறுப்பாக ஓடக் கற்றுக் கொள்ள வேண்டும்..

உத்ரா அதைத்தான் உபதேசித்தாள்.. சோர்ந்து விடாதே என்று பாடம் எடுத்தாள்.. வாழ்க்கைப் பயணத்தில் ஓடிக் கொண்டேயிருக்க வேண்டும்.. இளைப்பாற ஒரு நேரம் கிடைக்கும்.. அப்போது இளைப்பாறிக் கொள்ளலாம்.. ஓட வேண்டிய நேரத்தில் ஓடா விட்டால் வாழ்க்கைப் பயணித்தில் குறிப்பிட்ட இலக்கை எட்டிப் பிடிப்பது கடினமாகி விடும்.

கண்முன் தெரியும் பாதையைக் காட்டி ஓடு என்றாள் உத்ரா.. தற்கொலை செய்து கொள்வதை விடத் தப்பித்து ஓடுவது சாலச் சிறந்தது என்று பாடம் எடுத்தாள்.. நந்தினியும் தோழி காட்டிய மார்க்கத்தில் ஓட ஆரம்பித்து வயநாடு வந்து சேர்ந்து விட்டாள்..

இப்போது ரவிச்சந்திரனுடனான காதல் பயணத்தில் சோர்ந்து விடாமல் போராடச் சொல்லி உபதேசிக்கிறாள்..

“ரவிசார் உனக்கு வேணும்ன்னா நீ போராடித்தான் ஆகனும் நந்தினி.. ரவிசார் உன்னைத் தனித்துப் போராடும்படி விட்டுவிட மாட்டார்.. என்னோட கெஸ்ஸிங் சரியா இருந்துச்சுன்னா அவர் உன்னை தாய்ப்பறவை போல அடை காத்திருக்கனும்..”

ஆமாம் எனும் விதமாக பெருமையுடன் தலையை மேலும் கீழுமாக ஆட்டினாள் நந்தினி..

“அப்புறம் என்ன..? உன்னை விட்டுக் கொடுக்காத லவ்வர் கிடைச்சிருக்கார்.. இதுகளால உன்னை என்ன செய்து விட முடியும்..?”

“அப்படி ஈஸியாச் சொல்லி விடாதே உத்ரா.. அஜந்தாவும் அவளோட குடும்பமும் ஆபத்தை ஒட்டு மொத்தமாக

குத்தகைக்கு எடுத்திருக்கிறவங்க.. அவங்க ஜெயிக்கனும்னா எந்த எல்லைக்கும் போவாங்க.. துணிஞ்சு எதை வேண்டும்னாலும் செய்வாங்க..”

“ஏன்னா.. இழக்கிறதுக்கு அவங்களிடம் எதுவுமே இருக்காது.. சரியா..?”

“சரியாச் சொன்னே உத்ரா.. அஜந்தாவோட அப்பா ஒரு ஊதாரி.. உங்க வீட்டு எங்க வீட்டு ஊதாரியில்ல.. உலகத்தையே வித்துச் செலவழிக்கிற அளவுக்கு ஊதாரி..”

“என்னடி இப்படிச் சொல்ற..?”

“ஒட்டு மொத்தக் கதையையும் கேட்டேன்னு வைய்யி.. நீ இதுக்கு மேலேயே சொல்வ..”

நந்தினி கதை சொல்ல வாகாக உத்ரா பக்கம் திரும்பி அமர்ந்து கதை சொல்ல ஆரம்பித்தாள்.. கண்களை அகல விரித்து படு ஆர்வமாக கதை கேட்ட உத்ராவின் முகத்தில் நவரசங்களும் வந்து சென்றன.. கதை முடிந்ததும் கன்னத்தில் கையை வைத்து..

“இப்படியாப்பட்ட அப்பனுக்கு மகளாப் பிறந்திட்டா இவ இந்த குதி குதிக்கிறா..?” என்று ஆற்றாற்றுப் போனாள் உத்ரா..

“அதனாலதான் அவளை டேனஜரஸ்ன்னு சொன்னேன் உத்ரா.. அங்கொன்னும் இங்கொன்னுமா மைனஸ் இருந்தாக் கூடப் பரவாயில்லை.. மைனஸ்களின் ஒட்டு மொத்தமா இவ குடும்பம் இருக்கு.. அப்பா உலகத்தையே வித்துச் செலவழிக்கிறவர்ன்னா.. இவளோட அண்ணன் பிரபஞ்சத்தையே ஸ்வாஹா பண்ண வழி இருக்கான்னு யோசிப்பான்.. அம்மா இவங்களோட தப்பையெல்லாம் இழுத்து மூடி மறைத்து அதுக்குத் துணையும் போய்க்கிட்டு இப்ப என்ன அதுக்குன்னு நிட்டாந்தரமாக் கேள்வி கேட்பாங்க.. இப்படியாப்பட்ட குடும்பத்தில பிறந்த ஒருத்திக்கு இத்தனை திமிரும் தெனாவெட்டும் இருக்குன்னா இவ எப்பேற்பட்ட டேன்ஜரஸ்ன்னு யோசித்துப் பாரு..”

“என்ன தேவைக்கு..? இவளைப் பத்தி யோசிச்சா எனக்கே இருக்கிற தைரியம் பறந்து போயிடும் போல இருக்கேடி..”

“இருக்கில்ல..? அதைத்தான் நானும் சொன்னேன்.. அஜந்தா அவளுடைய ஃபேமிலியின் மைனஸ் பாயிண்டுகளை நினைத்தே பார்க்க மாட்டா.. அது அவ மனசை பலவீனப் படுத்திரும், இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸை உண்டு பண்ணிரும்ங்கிறதைத் தெள்ளத் தெளிவாப் புரிஞ்சு வைச்சிருக்கிற சாகசக்காரி இவ.. இதைவிட சாகசம் என்னன்னா.. மத்தவங்களையும் அந்த மைனஸ் பாயிண்டை நினைக்க விடாம அத்தனை மைனஸ் பாயிண்டுகளும் அவங்க மேலதான் இருக்கிறதைப் போல திசை திருப்பி விடுகிறதில படு கெட்டிக்காரி..”

“ஐய்யோடி.. அப்படியாடி இவ செய்வா..?”

“அதுக்கும் மேலேயும் செய்வா.. இவ செய்கிறதை யெல்லாம் நேரில் பார்த்துக்கிட்டு இருக்கிறவ நான்.. என்னை எப்படியெல்லாம் மாட்டி விட்டாத் தெரியுமா..?”

“யார்கிட்ட..?”

“ரவியோட பேரண்ட்ஸ் தங்கமானவங்க.. இவ பாச்சா அவங்களிடம் எடுபடாது.. ரம்யா இவகிட்ட பேச்சே வைச்சுக்க மாட்டாங்க.. தாத்தா பாட்டியைத்தான் தூண்டி விடுவா..”

“அவங்க இவ சொல்கிறதைக் கேட்டுக்குவாங்களா..?”

“அப்படியே கேட்டுக்குவாங்க.. மகள் மேல பாசம் அதிகம்ன்னு சொன்னேனில்ல... இவ மகள் வழி பேத்தியாச்சே..”

“அதுக்காக மகன் குடும்பத்தை சிரமப் படுத்துவாங்களா..?”

“அதில தப்பில்லன்னு அஜந்தா குடும்பம் அவங்களை பிரெயின் வாஷ் பண்ணி வைத்திருக்கே.. ரவியோட அம்மா அமைதியானவங்க.. அப்பா பெத்தவங்களுக்கு அடங்கிப் போகிறவர்.. இதை தங்களுக்குச் சாதகமா அஜந்தாவோட குடும்பம் யூஸ் பண்ணிக்கிச்சு.. தாத்தா தன்னோட பவரை விட்டுக் கொடுக்காம மகள் குடும்பத்தை காபந்து பண்றதிலேயே தன்னோட அத்தனை சொத்துக்களையும் அழிச்சுட்டு ரவியோட அப்பா பங்கில கை வைக்க வந்தாராம்..”

“அஜந்தாவோட அம்மாவுக்கும் பங்கை பிரித்துக் கொடுத்துட்டாதாச் சொன்னியேடி..”

“அதெல்லாம் அவங்களுக்கு எந்த மூலைக்கு..?”

“அடிப்பாவி..! இப்படியும் ஒரு குடும்பம் இருக்குமா..?”

“இருக்குதே..”

“ரவியப்பா பங்கையும் வித்துத் தின்னுட்டாங்களா..?”

“ஊஹும்.. அங்கேதான் எண்ட்ரி கொடுக்கிறான் நம் ஹீரோ..!”

நந்தினியின் முகம் ஜொலித்தது.. காதலில் விழுந்து விட்ட காதலியின் முகம் காதலனைப் பற்றிப் பேசும் போது உலகத்தில் உள்ள அத்தனை வெளிச்சத்தையும் தன் முகத்தில் ஏந்தி ஜொலிப்பதற்கான தாத்பர்யம் என்னவாக இருக்கக் கூடும் என்று கண்டு சொன்னவர் எவருமிலர்..

“யாரைச் சொல்கிற..? ரவி சாரையா..?”

“ஹீரோன்னு சொன்னா அது ரவியாத்தான் இருக்கும்ன்னு உன் மரமண்டைக்குத் தெரிந்திருக்க வேணாமோ..”

“ரவி உனக்கு மட்டும்தான் ஹீரோன்னு உன்னோட மர மண்டைக்குத் தெரிந்திருக்க வேணாமோ.. என்னோட ஹீரோ ரூமில தூங்கிக்கிட்டு இருக்கார்.. நீ ரவியை நம்ம ஹீரோன்னு என்னையும் கூட்டுச் சேர்த்துச் சொன்னது வினித் காதில விழுந்திருக்கனும்.. உன் ஃபிரண்ட்ஷிப்பை டோட்டலாக் கட்

பண்ணிட்டு இப்பவே ஊருக்குக் கிளம்புடின்னு சொல்லியிருப்பார்..”

“போடி..”

“போகிறதுக்கு முன்னாலே உன் ஹீரோ எண்ட்ரி கொடுத்து ஃபைட் பண்ணின சாகச சீனையெல்லாம் கேட்டுட்டுப் போறேன்.. சொல்லு.. என்ன செய்தாரு..?”

“தற்காத்துத் தன் குடும்பத்தைக் காத்து.. சொற்காத்து நின்று விட்டான்..”

“நீயெல்லாம் குறள் சொல்ல ஆரம்பிச்சா நாடு என்னத்துக்கு ஆகிறது.. ஏற்கனெவே அது ஒரு சீரா இருக்கு..”

“உனக்குப் பொறாமைடி..”

“எதைப் பார்த்து.. உன் குறள் சொல்லும் வித்தகத்தைப் பார்த்தா..? வேணாம் நந்தினி.. நான் ஏற்கனெவே அஜந்தா குடும்பக் கதையைக் கேட்டு பேய்தடிச்சிருக்கேன்..”

“ம்ஹூம்.. நீ நாளைக்கு மறுநாள் தப்பிச்சு ஊருக்கு ஓடிப் போயிருவ.. நானில்ல மாட்டிக்கிட்டு முழிக்கனும்..”

“அதில உனக்கு வருத்தமாடி..?”

உத்ராவின் குரல் ஆழ்ந்து ஒலித்தது.. நந்தினி நிமிர்ந்து தோழியைப் பார்த்தாள்.. திடமான பார்வையுடன் இல்லை எனும் விதமாக இடம் வலமாக தலையை அசைத்தாள்..

“நான் ரவியைக் காதலிக்கிறேண்டி.. எப்படி என் மனசுக்குள்ள காதல் நுழைந்ததுன்னு தெரியலை.. இப்ப ரவியில்லாத வாழ்க்கையைக் கற்பனை செய்துகூடப் பார்க்க முடியலைடி உத்ரா..”

“நந்தினி..”

“அவனுக்காக எதையும் செய்வேன்.. உயிரையும் குடுப்பேன்.. அஜந்தாவும் அவளுடைய குடும்பமும் டேன்ஜரஸ்தான்.. அவங்களோட போராடனும்தான்.. அதுக்குப் பயந்துக்கிட்டு என் காதலை விட்டுக் கொடுக்கவே மாட்டேன்..”

“குட்..! இதுதான் என்னோட நந்தினி..”

“ரவி என்னை விட பெரிய பணக்காரன்.. ஸ்டார் இமேஜ் இருக்கிற கோடிஸ்வரன்ங்கிறதுக்காக நான் இப்படிச் சொல்லலை உத்ரா.. ஹி இஸ் எ சூப்பர் மேன்..! எனக்கு அவன் சூப்பர் ஸ்டார்..! என்னோட சூப்பர் ஹீரோ.. அவன் எப்படியாப்பட்டவன்னு உனக்குச் சொல்லிப் புரிய வைக்க முடியாது உத்ரா.. அவனுடன் இருந்த இந்த நாள்களில்

ஒவ்வொரு செகண்டிலும் ஏதோ ஒரு காரணத்துக்காக அவனை பார்த்து நான் பிரமிச்சிருக்கேன்.. எல்லாவகையிலும் என்னை அவன் ஆச்சரியப் படுத்தினான்.. ஒண்ணை மட்டும் உறுதியாச் சொல்வேன் உத்ரா.. அவனைப் போல ஒருவனை என் வாழ்க்கையில் நான் பார்த்ததில்லை.. மயக்கறான்டி..''

''இதப்பாருடா.. அவன், அவன்னு உருகற..''

''அவன்தான்.. அது என்ன அவர்.. குட்டிச் சுவர்..! மரியாதை கொடுக்கனுமா என்ன..?''

''என்ன தேவைக்கு..?''

தோழிகள் இருவரும் கலகலத்துச் சிரித்தார்கள்.. ரவிச்சந்திரன் எப்படியெல்லாம் தன் குடும்பச் சொத்துக்களைப் பாதுகாத்தான் என்பதை நந்தினி விவரித்தாள்.. தீவிரமான முகபாவனையுடன் அதைக் கேட்டுக் கொண்ட உத்ரா..

''ம்ப்ச்.. ரவிசாரை நிம்மதியா இருக்க விடாம இவங்க பாடாய் படுத்தறாங்களேடி..'' என்று ரவிச்சந்திரனுக்காக பரிதாபப்பட்டாள்..

''அவன் அப்படி ஃபீல் பண்ண மாட்டான்டி.. ஜஸ்ட் லைக் தட்ன்னு சொடக்குப் போடற நேரத்துக்குள்ள இவங்க பண்ற

சதி வேலைகளைத் துவம்சம் பண்ணிட்டுப் போய்க்கிட்டே இருப்பான்..”

“பெரிய பெருமை பீற்றல் களஞ்சியம்தான் போ..”

“இல்லையா பின்னே..? நான் யாரு..?”

“ஏய்ய்.. நீ என்னோட ஃபிரண்ட நந்தினிதானேடி.. அவளோட குளோனிங்கா..?”

“தி கிரேட் ரவிச்சந்திரனோட லவ்வராக்கும்..”

“ஹப்பா.. காது ஜவ்வு கிழிஞ்சிருச்சு போ.. சுத்திச் சுத்தி அத்தனை மாடுலேஷனிலயும் இந்தப் பெருமையைத்தான் பீற்றிக்கிட்டு இருக்கே.. கொஞ்சம் சவுண்டைக் குறைடி.. தாங்கலை..”

நந்தினியைச் செல்லமாக முதுகில் அடித்தாள்.. கேரளாவுக்கு வந்த பின்பு நந்தினி என்னவெல்லாம் வாங்கினாள் என்பதை உத்ராவின் முன்னால் கடை பரப்பிக் காட்டினாள்.. உத்ராவுக்காக வாங்கி வைத்திருந்த உடைகளையும் பொருள்களையும் கொடுத்தாள்..

“நீ வர்றப்ப கொடுத்து விடலாம்ன்னு வைத்திருந்தேண்டி..” என்றாள்..

தோழியின் அன்பில் நெகிழ்ந்து போனாள் உத்ரா..

“பைத்தியம்..” அன்புடன் கடிந்து கொண்டாள்..

“நான் ஷாப்பிங் போறப்ப வாங்கிக் குவிச்சதே ஏராளமா இருக்கு.. நீயும் வாங்கி வைக்கனுமா..?”

“அது அண்ணா வாங்கிக் கொடுத்தது.. இது உனக்காகன்னு பார்த்துப் பார்த்து நான் வாங்கினது..”

நந்தினியைக் கட்டிக் கொண்டாள் உத்ரா.. இரண்டு நாள்கள்தான் அதற்குப் பின்னால் உத்ரா ஊருக்குப் போய் விடுவாள் என்பதில் துயர் கொண்டாள் நந்தினி..

“நீ என் கூடவே இருந்தா நல்லாயிருக்கும்டி உத்ரா..” ஏக்கத்துடன் சொன்னாள்..

“என் வாழ்க்கைன்னு ஒண்ணு இருக்கில்ல நந்தினி.. வினித் எங்கேயோ.. அங்கேதானே நானும் இருந்தாகனும்..? உனக்கு என்னடி.. ரவிசார் உன் கூடவே இருப்பார்..”

“ம்ம்ம்..” அரை மனதாக முணுமுணுத்த நந்தினி..

“உத்ரா” என்றாள்..

அவள் எதையோ சொல்லத் தயங்குவதை புரிந்து கொண்ட உத்ரா..

“என்னடி..?” என்று ஆதரவாகக் கேட்டாள்..

“அம்மா, அப்பா, நந்துக்குன்னு டிரஸ் பர்ச்சேஸ் பண்ணினேன்டி.. நந்துக்கு இந்த வாட்ச் சூப்பரா இருக்கும்.. பட்.. இதையெல்லாம் அவங்களிடம் எப்பக் கொடுப்பேன்.. எப்படிக் கொடுப்பேன்னு இருக்கு..”

“நந்தினி..”

உத்ராவின் கண்கள் கலங்கின.. மணமாகி சில நாள்கள்தான் ஆகின்றன.. அவளால் பிறந்த வீட்டை மறக்க முடியவில்லை.. அவர்களின் நினைவாகவே இருக்கிறது.. நினைத்தவுடன் திண்டிவனத்திற்கு போய் வரும் தொலைவில் சென்னையில்தான் அவள் இருக்கிறாள்.. அவளுக்கே இப்படி எனும்போது.. பிடிக்காத திருமணத்திலிருந்து தப்பிக்க ஓடி ஒளிந்திருக்கும் நந்தினிக்கு எப்படி இருக்கும்..?

“வீட்டு நினைப்பாவே இருக்குடி உத்ரா.. அப்பா மனசு மாறவே மாட்டாரா..?” நந்தினி அழ ஆரம்பித்தாள்..

“போதும் நந்தினி.. அழுதுகிட்டே இருக்கக் கூடாது.. நீ இப்படிக் கண்ணீரும் கம்பலையுமா இருந்தா நான் எப்படி நிம்மதியாக் கிளம்பி சென்னைக்குப் போவேன்..?” உத்ரா அதட்டினாள்..

“ஓகே.. ஓகே..” நந்தினி கண்களைத் துடைத்துக் கொண்டாள்..

“உனக்கு என்ன..? நீ வாங்கி வைத்திருக்கிறதை உன் வீட்டில் சேர்க்கனும்.. அவ்வளவுதானே..? உன்னைப் பற்றி விசாரிக்க உன் அப்பாம்மாவும், நந்துவும் எங்க வீட்டுக்கு வருகிறதா இருக்காங்க.. கல்யாணப் பெண்ணை டிஸ்டர்ப் பண்ணக் கூடாதுன்னு இத்தனை நாளா பேசாம இருந்தாங்களாம்.. அம்மாதான் உன்னைத் தஞ்சாவூருக்குப் பஸ் ஏற்றி அனுப்பிட்டோம்ன்னு சாதிச்சுட்டாங்களே.. உங்க பெண் வீட்டுக்கு வராததுக்கு நாங்க எப்படி பொறுப்பாக முடியும்.. எங்க வீட்டில பத்திரமாத்தானே பார்த்துக்கிட்டோம்ன்னு சொல்லிட்டாங்க.. உன் வீட்டில இருந்து வந்து போகிறப்ப நான் வாங்கி வைத்திருந்ததா சொல்லி இதையெல்லாம் அவங்களுக்குக் கொடுத்து விடுகிறேன்.. போதுமா..? பட்.. இதைப் போட்டுப் பார்க்கிற மன நிம்மதியோடவா அவங்க இருக்காங்க..?” உத்ராவின் கேள்வியில் நந்தினி மறுபடியும் அழ ஆரம்பித்தாள்..

# அத்தியாயம் 186

எப்படி பயன்படுத்துவார்கள்..?

உத்ரா கேட்ட கேள்வி சரிதானே.. பெற்ற மகள் வீட்டை விட்டு வெளியேறியிருக்கிறாள்.. வெளிநாட்டில் இருப்பதாக தகவல் வந்திருக்கிறது.. அவள் பத்திரமாக இருக்கிறாளா இல்லையா என்ற பதைப்புடன் அவர்கள் துடித்துக் கொண்டிருக்கிறார்கள்.. நந்தினியைக் கண்ணால் காணும் வரை அவர்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு இயந்திரமாகத்தான் வலம் வருவார்கள்.. உண்ணுவதைப் போலப் பாவனை செய்து ஒரு களவளம் உணவோடு எழுந்து கொள்வார்கள்.. அது கூட அவர்கள் சாப்பிட்டால் தான் குடும்பத்தில் உள்ள மற்றவர்கள் சாப்பிடுவார்கள் என்பதற்காக.. ஒருவருக்காக மற்றவர் நடிப்பார்கள்.. படுத்தால் உறக்கம் வராது.. விடியும் வரை ஆயிரம் யோசனைகளுடன் புரண்டு புரண்டு படுத்துக் கொண்டிருப்பார்கள்.. மற்றவர்கள் பார்க்கும் போது அயர்ந்து உறங்குவதைப் போலப் பாவனை செய்வார்கள்..

“உத்ரா..” நந்தினியின் கண்களில் கண்ணீர் வடிந்தது..

“நீ தப்பித்து ஓடி வந்திட்டடி.. துயரப் பெருங்கடலில் உன் குடும்பம் விழுந்திருக்கிறது.. நீந்தித் கரை சேர்ககிற வரைக்கும் அவங்க முகத்தில சிரிப்பு இருக்காதுடி நந்தினி.. நீ கேம்பஸ் இண்டர்வியூவில செலக்ட் ஆகி வெளிநாட்டில வேலை பார்க்கப் போயிருக்கிறதா ஊரில சொல்லி வைத்திருக்காங்களாம்..”

“நான்தான் கெஞ்சினேனேடி.. கதறினேனேடி..”

“ம்ப்ச்.. நீ என்ன செய்வ..? உன் மனதில எந்த அளவுக்கு வெறுப்பு இருந்ததுன்னா சூசைட் அட்டெம்ட் வரைக்கும் போவ.. துணிமணி, நகை நட்டுன்னு எல்லாத்திலயும் பெத்த பொண்ணோட மனசை அறிந்து வாங்கிக் கொடுக்கிற பெத்தவங்க வாழ்க்கையிலேயே அதி முக்கியமான லைஃப் பார்ட்னர் விஷயத்தில மட்டும் நம்ம மனசை மதிக்க மாட்டேங்கிறாங்க பாரேன்..”

“நம்ம மனசுன்னு நீயும் என்கூடக் கூட்டணி போடற பார்த்தியா..? உன் அம்மா கோபக்காரங்களா இருந்தாலும் உனக்குப் பிடிச்ச மாப்பிள்ளைக்குக் கல்யாணம் பண்ணிக் கொடுத்திருக்காங்க.. அப்பா கடைசி வரைக்கும் மனசு இரங்கலையேடி..”

“அதுக்குத்தான் அனுபவிக்கிறார்..”

“அப்படியும் நினைக்க முடியலையேடி.. அப்பாம்மா, நந்து எல்லாம் மனசு கஷ்டப்படுவாங்களேன்னு அழுகையழுகையாய் வருதுடி.. கில்ட்டியாய் இருக்குடி..”

“கில்ட்டியாய் ஃபீல் பண்ணாம இருந்திருக்கனும்னா நீ அந்த பெல்ட் மன்னனுக்கு கழுத்தை நீட்டியிருக்கனும்..”

“அடித்தே கொன்று விடுவேன்..”

“இதுக்குத்தான் வயநாட்டுக்கு வா, வான்னு வருந்தி வருந்தி அழைத்தியா..? உன்னை நம்பி வந்தேன் பாரு..”

“எதுக்குடி வந்த..? ஹனிமூன் கொண்டாட வந்தியா.. இல்லை பெல்ட் மன்னனோடு என்னை கோர்த்து விட வந்தியா..?”

“பொங்குதில்ல..? அப்புறம் என்ன அலுவலுக்கு கில்ட்டியாய் ஃபீல் பண்ற..? உன் அப்பா உச்சாணிக் கொம்பில ஏறி உட்கார்ந்துக்கிட்டு இறங்க மாட்டேன்னு அடம் பிடிச்சாரு.. உனக்கு வேற வழியில்ல.. வயநாட்டுக்கு வந்து சேர்ந்திருக்க.. வந்த இடத்தில உன் மனசுக்குப் பிடிச்ச மணாளனையும் மீட் பண்ணிட்ட.. அவர் கழுத்தில மாலை சூட என்ன வழின்னு யோசிப்பாளா.. அதை விட்டுட்டு என்னென்னத்தையோ பேசிக்கிட்டு இருக்கா.. ஒண்ணை மனசில வைத்துக்க

நந்தினி.. நீ டிராவல் பண்ண ஆரம்பித்திருக்கிறது ஒரு வழிப் பாதையில.. திரும்ப நினைச்சா உனக்குத்தான் கஷ்டம்..''

''திரும்பனும்னு யாருடி நினைச்சது..''

''அதில தெளிவா இரு.. நடந்த எதையும் உன்னால மாத்த முடியாது நந்தினி.. இனி நடக்கப் போகிறதை நல்லதா நடத்திக் காட்டு.. அதில்தான் உன் குடும்பத்தோட சந்தோஷமே அடங்கியிருக்கு..''

''உண்மைதான் உத்ரா..''

''நீ வாங்கி வைத்திருக்கிற இந்த கிஃப்டையெல்லாம் நான் வாங்கிக் கொடுத்ததா உன் ஃபேமிலியிடம் கொடுத்து விடுவேன்.. என்னால் அதைச் செய்ய முடியும்தான்.. பட்.. அவங்க இதையெல்லாம் மூலையில் தான் தூக்கிப் போடுவாங்க நந்தினி.. நீ செஞ்சிக்கு வந்து அங்கிருந்து தப்பிப் போயிட்டங்கிற கோபம் அவங்க அடி மனசில இருக்கத்தான் செய்யும்.. அதை குத்தம்னு சொல்லவும் முடியாது.. நான் கிஃப்டா கொடுக்கிறதை கர்ட்டசிக்காக அவங்க வாங்கிக்கிட்டு போகிற போக்கில தூக்கி எறிஞ்சுட்டுப் போனாலும் ஆச்சரியப்படறதுக்கில்ல..''

மேகநாதன் அப்படிச் செய்யக் கூடியவர்தான் என்பதில் நந்தினி தலையை ஆட்டி ஆமோதித்தாள்..

“இப்பச் சொல்லு.. நான் என்ன செய்யட்டும்..?”

“வேண்டாம் உத்ரா.. இந்த கிஃப்ட்டெல்லாம் என்கிட்டேயே இருக்கட்டும்.. என் குடும்பத்தோட நான் ஒன்று சேர்கிறப்ப ஒட்டு மொத்தமா சேர்த்து வைச்சு அத்தனை கிஃப்டையும் கொடுத்துக்குவேன்..”

“அஃது..”

உத்ரா நந்தினியின் நெற்றியில் செல்லமாக முட்டினாள்.. தோழிகள் இருவரும் சற்று நேரம் கதை பேசினார்கள்.. ரவிச்சந்திரனின் மீது நந்தினிக்கு எப்போது காதல் வந்தது என்று உத்ரா கேட்டாள்..

“நீ எப்படியெப்படிக் கேட்டாலும்.. திரும்பத் திரும்ப விசாரித்தாலும் என் பதில் ஒண்ணே ஒண்ணுதான்..”

“என்னத்தச் சொல்லித் தொலைக்கப் போகிற.. தெரியலைடின்னு சொல்லுவ..”

“அஃதே..”

தோழிகள் இருவரும் கலகலத்துச் சிரித்தார்கள்.. வினித் எழுந்து விடுவான் என்ற நினைவு வந்து உத்ரா கிளம்பிப் போனாள்..

மனதில் இருந்த ரகசிய உணர்வுகளைத் தோழியிடம் பகிர்ந்து கொண்ட சந்தோஷத்துடன் நந்தினி கதவை அடைத்து விட்டுக் குளிக்கப் போனாள்..

டைனிங் ஹாலில் அனைவரும் சந்தித்துக் கொண்டார்கள்.. வினித் சங்கடமாக உணராமல் இருக்க வேண்டுமே என்று நந்தினிக்குக் கவலையாக இருந்தது.. அவளையே பார்த்துக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் இமைகளைச் சுருக்கி 'என்ன'வென்று ரகசிய சமிக்ஞையில் வினவினான்.. நந்தினிக்கு அது பிடித்திருந்தது.. அவளுடைய முக பாவனையை வைத்தே அவளுடைய மனதில் ஏதோ சஞ்சலம் இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து விட்ட அவனது அக்கறை பிடித்திருந்தது.. தன்னை மகாராணியாக உணர்ந்தாள்..

வினித், உத்ரா பக்கமாக அவள் கண்காட்டினாள்.. அவர்களுக்கு என்ன என்று விழிகளாலேயே வினவினான் ரவிச்சந்திரன்.. டைனிங் ஹாலைச் சுற்றி வலம் வந்து

ரவிச்சந்திரனிடம் நிலைத்தது அவள் பார்வை.. அங்கிருந்தவர்களால் வினித், உத்ராவின் மனம் புண்பட்டு விடுமோ என்று அவள் அஞ்சுவதைப் புரிந்து கொண்டவன் இமைகளை மூடித் திறந்து நான் பார்த்துக் கொள்கிறேன் எனும் விதமாய் சமிக்ஞை செய்தான்..

‘அப்பாடா..’ நிம்மதியானால் நந்தினி..

அவளுடைய இரும்புக்கை மாயாவி சொன்னதை செய்யக் கூடியவன்.. வாக்களித்ததை நிறைவேற்றுபவன்.. அவன் பாதுகாவலில் வினித்தும் உத்ராவும் இருக்கும் போது அவள் எதற்காக மனதைப் போட்டு உழட்டிக் கொள்ள வேண்டும்..? அரண்மனையில் காலடி வைத்ததுமே அவன் அவளுக்கு இப்போது ரகசிய சமிக்ஞை செய்து நான் பார்த்துக் கொள்கிறேன் என்று இமைகளை மூடித் திறந்ததைப் போல இமைகளை மூடித் திறந்து விட்டானே.. அப்புறமும் நந்தினி கவலை கொள்ளலாமா..?

மனதில் நிரம்பிய தைரியத்துடன் விழிகளை உயர்த்திப் பார்த்தாள் நந்தினி.. செவ்வரி ஓடிய கண்களுடன் யோகானந்தன் அவளையே முறைத்துப் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்..

அவ்வளவுதான் நந்தினியின் தைரியம் காணாமல் போய் விட்டது..

‘கடவுளே..! ஈ மனுஷன் இந்த முழி முழிக்கிறானே..’

யோகானந்தன் அவளை மட்டுமா முறைத்தார்..? என்னவோ அவரின் சொத்தை கொள்ளையடிக்க வந்து விட்டவர்களை முறைப்பதைப் போல வினித்தையும், உத்ராவையும் முறைத்துக் கொண்டிருந்தார்..

‘இந்த மனுஷனை வினித்தும், உத்ராவும் பார்க்காமல் இருக்க வேண்டுமே..’

கலவரமானாள் நந்தினி.. ‘இரண்டு நாள்கள்.. இரண்டே நாள்கள்.. வினித்தும, உத்ராவும் அந்த அரண்மனையில் தங்கி இருக்கப் போகும் அந்த இரண்டு நாள்களும் எந்தவித வில்லங்கமும் இல்லாமல் நகர்ந்து வீட வேண்டும் கடவுளே..!’

மனதுக்குள் வேண்டுதலை வைத்துக் கொண்டிருக்கும் போதே இப்படியொரு சூழலில் வசிக்கும் வீணாவும், ரம்ய மாலினியும் எந்த அளவுக்கு சிரமங்களை அனுபவித்திருப்பார்கள் என்ற எண்ணம் வந்தது.. பாவம் அவர்கள் என்று மனது பரிதாபப் பட்டது. .

ஆனானப்பட்ட ரவிச்சந்திரனின் அன்னையும், தங்கையும் முள்கள் நிரம்பிய இருக்கையில் அமர்வதைப் போன்ற அவஸ்தையை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே.. இது அநியாயம் அல்லவா..?

அவந்திகாவின் குடும்பத்தைக் கண்டாலே ரவிச்சந்திரனுக்கு ஆகாமல் போனதற்கான காரணம் இதுதானோ..?

“ஓமனா..” வீணா அழைத்தாள்..

“அம்மே..” ஓடோடி வந்தாள் ஓமனா..

“வினித்தும், உத்ராவும் புதிதாக் கல்யாணமானவங்க.. நம்ம அரண்மனைக்கு விருந்துக்கு வந்திருக்கிறாங்க.. இவங்க இங்கே தங்கியிருக்கப் போகிற இந்த இரண்டு நாள்களிலும் இவங்களுக்குப் பிடித்ததைத்தான் சமைக்கனும்.. புரிந்ததா..?”

“மனசிலாயி அம்மே..”

ஓமனா வாயெல்லாம் பல்லாக தலையை ஆட்ட.. அஜந்தா நிமிர்ந்து யாழினியைப் பார்த்தாள்.. பார்த்தாயா என்று வினவிய பேத்தியின் பார்வையால் உசுப்பி விடப் பட்ட யாழினிப் பாட்டி..

“ஓமனா..” என்று அதட்டலாக அழைத்து ஏதோ பேசப் போனாள்..

‘போச்சு.. ஃபைட் ஸ்டார்ட் ஆகப் போகுது..’ பதட்டத்தில் நந்தினிக்கு உணவே உள்ளே இறங்கவில்லை..

உணவருந்தும் இடத்தில்தான் உள்வீட்டுப் போர் மூளும் என்ற வயநாட்டு அரண்மனையின் நியதிகளைப் பற்றி அறியாத வினித்தும் உத்ராவும் மலையாள வகை உணவுகளின் ருசியில் ஈர்க்கப்பட்டவர்களாக அவற்றை ஒருகை பார்த்துக் கொண்டிருந்தார்கள்.. உணவை ஆராதிக்கும் நந்தினிதான் சாப்பிட முடியாமல் திணறிக் கொண்டிருந்தாள்.. எப்போது கலவரம் வெடிக்குமோ என்று அவளுக்கப் பதக், பதக் என்று இருந்தது..

“அம்மே..” ஓமனா யாழினியிடம் விரைந்தாள்.. யாழினி எந்தத் தூண்டிலைப் போட்டு விலாங்கை இழுக்கப் போகிறாளோ என்று ‘தடக், தடக்’ என்ற இதயத்துடிப்புடன் நந்தினி தவித்துக் கொண்டிருக்க.. அருள்மொழிவர்மன் யாழினியைப் பேச விடாமல் குறுக்கே விழுந்து..

“அம்மைக்கு குழாய்புட்டு வேணுமல்லோ..” என்று ஓமனாவை திசை திருப்பினார்..

“ஞான் அங்ஙன பறஞ் ..?” யாழினி திமிற..

“நிண்ட மனச ஞான் அறிஞ் ...” என்று அருள்மொழிவர்மன் அவளை அடக்கி விட்டார்..

யாழினி வினயமாக எதையாவது சொல்வாள்.. அதைக் கொண்டு ஒன்றைப் பத்தாக்கி சண்டையை மூட்டி விடலாம் என்று கொக்கைப் போலக் காத்திருந்த அஜந்தாவுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.. அருள்மொழிவர்மன் யாழினிப் பாட்டியை வாய் திறக்க விடவேயில்லை..

அப்படியிருந்தும் யாழினி விசும்ப முயற்சி செய்தால்தான்.. அருள்மொழிவர்மன் தாழ்ந்த குரலில் யாழினிப் பாட்டிவாயைத் திறந்தால் தான் கூறாமல் சன்யாசம் வாங்கிக் கொண்டு மேற்கு தொடர்ச்சி மலைகளில் தவம் பண்ணப் போய் விடுவதாகப் பயமுறுத்தி அவளது திருவாயை மூட வைத்து விட்டார்..

‘இந்தக் கிழவியைக் கிழம் பேச விடாது போல இருக்கே..’

இதுதான் ஞான் அருள்மொழிவர்மனண்ட கொச்சு மோளாக்கும் என்று தன்னை அடையாளப் படுத்திக் கொள்ளும் அஜந்தா தன் தாத்தா பாட்டிக்குக் கொடுக்கும் மரியாதை..

யாழினியை நம்பினால் வேலைக்கு ஆகாது என்று தானே களம் இறங்க முடிவு செய்த அஜந்தா..

“மாமா..” என்று குரலை உயர்த்தினாள்..

வினித்தின் வேலையைப் பற்றி விசாரித்துக் கொண்டிருந்த ரவிவர்மன் ஆட்சேபப் பார்வையோடு அஜந்தாவின் பக்கமாகத் திரும்பி முறைத்தார்... அஜந்தாவுக்கே உடல் தூக்கிப் போட்டு விட்டது... ரவிவர்மன் தங்கையிடமும் தங்கையின் பிள்ளைகளிடமும் முறைப்பாய் பேசுபவரல்ல.. அபராஜிதன் ரம்ய மாலினியிடம் வம்பு செய்ததைக் கேள்விப் பட்ட போதுதான் ரௌத்ரமானார்.. அபராஜிதனை வாங்கு வாங்கு என ரவிச்சந்திரன் தூக்கிப் போட்டு மிதித்ததைத் தடுக்காமல் வேடிக்கை பார்த்து விட்டு தன் பங்குக்கு நான்கு அப்பு அப்பினார்..

அஜந்தாவிடம் கோப முகத்தைக் காட்டியதில்லை.. அந்த தைரியத்தினால்தான் அவரிடம் உத்ராவைக் குறை சொல்வதைப் போல கலகத்தை ஆரம்பிக்க முடிவு செய்து குரலை உயர்த்தினாள் அஜந்தா..

உத்ரா அஜந்தாவிடம் மரியாதை குறைவாய் பேசினாள் என்ற பிரச்னையைக் கிளப்பினால் உத்ரா சங்கடப்படுவாள்..

அங்கிருக்கப் பிடிக்காமல் உடனடியாக ஊருக்குக் கிளம்பினாலும் கிளம்பி விடலாம்.. அப்படி அவள் கிளம்பி விட்டால் பார்த்தாயா உன் தோழியை விரட்டி விட்டேன்.. உன்னை விரட்ட எனக்கு எவ்வளவு நேரமாகும் என்று நந்தினியிடம் சவால் விடலாம்.. அப்படிச் சொடக்குப் போட்டுச் சவால் விட வேண்டும் என்பதுதான் அஜந்தாவின் வன்மம்..

அதற்கு இடம் கொடுக்காமல் தங்கையின் மகளைப் பார்வையிலேயே கண்டித்தார் ரவிவர்மன்..

# அத்தியாயம் 187

“வீட்டுக்கு கெஸ்ட் வந்திருக்கிறப்ப எப்படிப் பேசனும் என்கிற மேனர்ஸ் இருக்க வேண்டாமா..? இப்படியா கத்துவ..? உன் எதிரில்தானே இருக்கிறேன்.. வயநாட்டோட எல்லையில இருக்கிறதைப் போல மாமான்னு அலருகிற..? மேரேஜாகி இன்னொரு வீட்டுக்கு வாழப் போகிற பெண்.. எப்படி ஸாப்ட்டாப் பேசிப் பழகனும்ங்கிற அறிவு இருக்க வேண்டாமா..? ரம்யமாலினியைப் பார்.. உன்னைப் போல ஓர் நாளாவது சத்தமாய் பேசியிருப்பாளா..? வீணா அப்படி மகளை வளர்த்து வைத்திருக்கிறாள்.. அவந்திகாவின் வளர்ப்பு இப்படியிருக்கிறது..”

அஜந்தா திணறி விட்டாள்.. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறி விட்ட கதையைப் பற்றித்தான் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.. குரங்கைப் பிடிக்கப் போனவளையே குரங்காய் மாற்றி விட்ட கதையைப் பற்றித்தான் அவள் கேள்விப்பட்டிருக்கிறாள்.. குரங்கைப் பிடிக்கப் போனவளையே குரங்காய் மாற்றி விட்ட கதையை இப்போதுதான் அனுபவிக்கிறாள்..

புது மனிதர்களின் முன்னிலையில் ரவிவர்மன் காய்ச்சிய காய்ச்சலில் விக்கித்துப் போன அவந்திகா..

“சேட்டா..” என்றாள்..

“கேட்டோ..” என்றார் ரவிவர்மன்..

“அஜந்தாவை ஷெமிக்கனும் சேட்டா.. வெப்பராளம் கொள்ளாண்டாம்.. ஞான் அவளிண்ட பறஞ் ..”

“எதையோ செய்.. உன் மகள் பேச ஆரம்பித்தாலே கோபம்தான் வருகிறது.. இவளை வாயை மூடிக் கொண்டு இருக்கச் சொல் அவந்திகா.. அதுதான் உனக்கும், உன் குடும்பத்திற்கும் நல்லது.. கேட்டோ..”

ரவிவர்மனின் வார்த்தைகளில் இருந்த மறைமுகப் பொருளை உணர்ந்து கொண்டாள் அவந்திகா.. மற்ற தருணங்களில் அஜந்தா விளையாடும் சாகச விளையாட்டை விருந்தினர் வந்திருக்கும் போது விளையாடிப் பார்க்கலாம் என்று நினைத்து விடக் கூடாது.. அப்படி அவள் விளையாட நினைத்தால் பின் விளைவுகள் விபரீதமாக இருக்கும்..

“ஆகட்டும் சேட்டா..”

அதுபோல எதுவும் நடந்து விடக் கூடாது என்ற பதட்டத்தில் தன் மகளிடம் சொல்லி வைப்பதாக உத்திரவாதம் அளித்தாள் அவந்திகா.. தாய் தழைந்து பேசுவதை விரும்பாத அஜந்தா..

“எந்தா அம்மே.. அம்மாவனிண்ட இங்ஙன பறஞ் ..? அவரு நிண்ட சேட்டனல்லோ..” என்று ஆட்சேபித்தாள்..

அருள்மொழிவர்மன் வழியைப் பின்பற்றித் தன் மகளிடம் தாழ்ந்த குரலில் முணுமுணுத்து தான் அருள் மொழிவர்மனின் மகள் என்பதை நிரூபித்தாள் அவந்திகா..

“அஜந்தா..! எண்ட மோளே..! நினக்கு கோடி புண்ணியம் கிட்டுமல்லோ..”

“எங்ஙன அம்மே..”

“நிண்ட திருவாயை திறக்காலிருந்தா போதும் மோளே.. கேட்டோ..”

“எந்துக்கு அம்மே..?”

“நானும், நீயும், நம்மட குடும்பமும் ஈ கொட்டாரத்தில ஜீவிக்கனுமல்லோ..? அதுக்கோசரம்தான் மோளே..”

அவந்திகா பல்லைக் கடித்தபடி சொன்னாள்.. என்ன சாசக்காரியாய் இருந்து என்ன செய்ய..? எந்த நேரம் பதுங்க வேண்டும்.. எந்த நேரம் பாய வேண்டும் என்ற புத்தி இருக்க வேண்டாமா..? கோபத்துக்கு இடம் கொடுத்து உள்ளதையும் கெடுத்துக் கொள்வது கெட்டிக்காரத்தனமா..? வன்மத்தை மனதில் புதைத்துக் கொண்டு காலம் வரும்வரைக் காத்திருந்து செயல்படும் புத்தியை அஜந்தா எவரிடம் கடன் கொடுத்தாள்..?

“உத்ராவும் இதைத்தான் சொன்னாள் ரம்யா.. நான் சண்டைக்குப் போனேனா.. உன் அண்ணாவும் வினித் அண்ணாவும் உத்ராகூடக் கூட்டுச் சேர்ந்துக்கிட்டு என்னைக் கலாய்க்க ஆரம்பிச்சுட்டாங்கப்பா..”

கலகலத்துச் சிரித்த நந்தினியை வெறித்துப் பார்த்தாள் அவந்திகா.. அவளது சிரிப்பில் அஜந்தாவின் முகம் பயங்கரமாக கோணுவதைக் கவனித்தாள்.. அஜந்தாவின் கைவிரல்கள் நடுங்கின.. அவள் தன் சுயகட்டுப்பாட்டை இழந்து எந்த நேரமும் நந்தினியிடம் சண்டைக்குக் கிளம்பி விடுவாள் எபோல தோன்றியதில் அவந்திகா நீண்ட பெருமூச்சுக்களை விட்டுத் தன்னைச் சமனப் படுத்திக் கொண்டாள்..

அஜந்தாவைப் பற்றி அவந்திகாவுக்குத் தெரியும்.. அவள் எதற்கும் அசைந்து கொடுக்காதவள்.. இடி விழுந்தாலும் எதுவுமே நடக்காததைப் போல உணர்வுகள் துடைக்கப்பட்ட முகத்துடன் இருப்பவள்.. அபராஜிதனைப் போல எதிலும் மாட்டிக் கொள்ளாமல் அவனைவிட கோடி மடங்கு வில்லத்தனத்தைச் செய்து கொண்டிருப்பவள்..

அப்படிப்பட்ட அஜந்தா தன் சுயகட்டுப்பாட்டை இழக்கிறாள் என்றால் அது சாதாரணமான ஒன்றல்ல.. அஜந்தாதான் அவந்திகாவின் மிகப் பெரிய பலம்.. அவள் பலவீனமடைவது அவந்திகாவின் குடும்பத்திற்கு நல்லதல்ல..

'எப்பேற்பட்ட சாகசக்காரி எண்ட மோள்..'

அப்பேற்பட்டவளைப் பலவீனப் படுத்திக் கொண்டிருப்பது நந்தினி என்ற சின்னப்பெண் என்பதை அவந்திகாவினல் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை..

"ஆ மனுஷி ஈ கொட்டாரத்தில காலடி பதிச்ச பின்னாலதான் ரவி மாறிப் போயி.."

யாழினி வன்மம் கொள்வதில் அர்த்தமுள்ளதோ.. நந்தினியால் என்ன செய்துவிட முடியும் என்று அவந்திகா

நினைத்தாளே.. எதுவும் செய்ய முடியும் என்று நந்தினி காட்டிக் கொண்டிருக்கிறாளே..

ஒரு கன்னத்தில் அடித்தால் மறு கன்னத்தைக் காட்டும் புத்தரைப் போலவும் சித்தரைப் போலவும் வாய் பேசாமல் மௌன யோகினியாய் வளைய வந்த வீணா மாமனாரின் முன்னிலையிலேயே மாமியாரை முறைக்கிறாள்.. நறுக்கென்ற நான்கு கேள்விகளைக் கேட்கிறாள்.. யாராலே..? நந்தினியாலே..

தாயிற் சிறந்த கோவிலுமில்லை.. தந்தை சொல் மிக்க மந்திரமில்லையென்று அன்னையும், பிதாவும் முன்னறி தெய்வமென பூப்போட்டு வணங்கி பாதபூஜை செய்து கொண்டிருந்த ரவிவர்மன்.. அந்த அன்னை, தந்தையை வேற்று மனிதர்கள் என்று அவர் பெற்றெடுத்த மகன் ரவிச்சந்திரன் குறிப்பிட்டபோது வாய் பேசாமல் மௌனம் சாதித்தாரே.. இது யாரால் நிகழ்ந்த நிகழ்வு..? நந்தினியால் நிகழ்ந்த நிகழ்வு..!

சிரிப்பைத் தொலைத்து விட்டு பேச மறந்த மௌனச் சுரங்கமாக தாயின் முந்தானைக்குள் பதுங்கி அவந்திகாவின் குடும்பத்தைக் கண்டாலே ஒதுங்கிப் போகும் ரம்யமாலினி..

இன்று அபராஜிதனையே எள்ளி நகையாடிச் சிரிக்கும் அளவிற்கு தைரியம் பெற்றிருக்கிறாள் என்றால் அந்த தைரியம் எங்கிருந்து வந்தது..? நந்தினியிடமிருந்து வந்தது..

ரவிச்சந்திரனைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.. அவன் என்றுமே அவந்திகாவிற்கும் அவளுடைய குடும்பத்திற்கும் சிம்ம சொப்பனந்தான்.. எந்த நொடியிலும் அவன் அவந்திகாவின் குடும்பத்தை கூண்டோடு வயநாட்டு அரண்மனையை விட்டு வெளியேற்றித் துரத்தியடித்து விடுவான் என்ற பயத்துடன் அவந்திகாவின் குடும்பத்தை த நடுங்க வைத்துக் கொண்டிருப்பவன்தான்.. அந்த நொடிகள் அடிக்கடி அவந்திகாவின் குடும்பத்திற்கு அருகில் வந்து வந்து போய் கொண்டிருந்ததைதான்..

நந்தினி வந்த பின்னால் அந்த நிழல்கள் அத்தனையும் நிஜமாக நடந்து விடும் போல இருக்கின்றதே..

'ஈ மனுஷி அபாயமானவளல்லோ..'

இதை அவந்திகா நினைத்ததுதான் கொடுமை.. கள்ளம் கபடமற்ற நந்தினியைப் பற்றி அபாயமே உருவான அவந்திகா, அவளை விட அபாயகரமான பிள்ளைகளைப் பெற்று வளர்த்து

வைத்திருக்கும் அவந்திகா நினைத்ததுதான் கொடுமையிலும் பெரிய வன்கொடுமை..!

“வெப்பராளம் வேண்டாம் மோளே.. சாந்தம் கொள்..” மகளுக்கு அறிவுறுத்தினாள் அவந்திகா..

“எங்ஙன அம்மே..? ஈ நந்தினிப் பிசாச ஈ வயநாட்டுக் கொட்டாரத்த விட்டு விரட்டியடிச்சாலல்வோ எனிக்கு நிம்மதி கிட்டும்..” புலம்பினாள் அஜந்தா..

“சம்சாரிக்கிறது எண்ட மோளா..? நிண்ட மதி எங்ஙன போயி..? ஈ திவசம் நாம வெப்பராளம் கொள்ள வேண்டிய திவசமல்ல மோளே.. கேட்டோ.. நமக்கின்னு ஓர் திவசம் வரும்.. ஆ திவசத்தில ஈ நந்தினிப் பிசாச நாம ஓட ஓட விரட்டி..” சமாதானம் சொன்னாள் அவந்திகா..

“ஆ திவசம் எப்ப வரும்..?”

“வரும் போது வரும்..”

“ஞான் என்ன சூப்பர் ஸ்டாரோ.. வரும் போது வருமெண்டு பறயறதுக்கு..?”

“எண்ட மோள் லேடி சூப்பர் ஸ்டாரல்லோ..”

“அம்மே.. பகடி வேண்டாமல்லோ..”

"ஞான் அறிஞ் அஜந்தா.. பட்ஷே.. ஈ திவசம் நமக்கான திவசமில்லா.. இனி எண்ட மோள் ஆலோசிக்கனுமல்லோ.. ஆலோசிச்சு பொறுமை காக்கனுமல்லோ.."

அவந்திகாவின் இறைஞ்சுதலில் பல்லைக் கடித்தபடி தன்னைக் கட்டுப் படுத்திக் கொள்ள முயன்றாள் அஜந்தா.. நந்தினி, உத்ராவிடம் ரம்யமாலினி காட்டிய நெருக்கமும், அவர்கள் மூவரும் சேர்ந்து பேசி சிரித்த சிரிப்புக்களும் அமில வெள்ளமாக அஜந்தாவின் காதுகளில் பாய்ந்தது.. அதை வீணாவும், ரவிவர்மனும் பிரியம் கொட்டும் விழிகளில் பார்த்துப் பரவசப்பட்டதில் அவளது உடலெங்கும் எரிச்சலை உண்டாக்கியது.. அஜந்தா வயிறெரிந்தாள்..

ரவிச்சந்திரன் வினித்திடம் காட்டிய நட்பிலும், கனிவிலும் யாழினி மனதுக்குள் பொங்கிப் பொசுங்கினாள்.. இது போன்ற மரியாதையையும், நட்பையும், பிரியத்தையும் ஓர் நாளும் அபராஜிதனிடம் ரவிச்சந்திரன் காட்டியதில்லை என்பதில் அவள் மனம் குரோதம் கொண்டது.. ரவிச்சந்திரனின் நன் மதிப்பையும் பிரியத்தையும் பெற்றுக் கொள்ளும் அளவில் அபராஜிதன் நடந்து கொள்ளவில்லை என்பதை யாழினி வசதியாக மறந்து போனாள்.. மகள் சார்ந்த அனைத்துக் குற்றங்களையும் மறந்து விடுவதுதான் அவளது குணம்..

அதுவே மகன் சார்ந்த சிறு விவரத்தையும் பூதக்கண்ணாடியில் பார்த்து பூதாகரமாக்குவதும் அவளது குணம்தான்..

என்ன செய்வது..? எதையாவது பேசி வந்திருக்கும் விருந்தினர்களுடன் வம்பிழுக்க வேண்டுமென்றுதான் அவளும் நினைத்தாள்.. அஜந்தாவும் நினைத்தாள்.. பாட்டி, பேத்தி இருவரின் திருவாய்களையும் முறையே அருள்மொழிவர்மனும் அவந்திகாவும் பூட்டுப் போட்டு மூட வைத்து விட்டார்களே..

இரண்டு கைகள் நான்காகி என்ன பிரயோசனம்.. இரண்டு வாய்களுக்கும் பூட்டுப் போடப்பட்ட பின்னால் எதையும் பேசிக் கலகம் மூட்ட முடியாமல் போய் விட்டதே..

காலை உணவிற்குப் பிறகு ரவிச்சந்திரன் எஸ்டேட் வரை போய் விட்டு வந்து விடுவதாகச் சொல்லிக் கிளம்பினான்.. உடன் கிளம்பாமல் தயங்கிய நந்தினி அவள் உத்ராவுடன் பேசிக் கொண்டிருக்க விரும்புவதாகச் சொல்லி விண்ணப்பித்தாள்.. உத்ரா பக்கத்தில் இருந்ததால் எதையும் பேச முடியாமல் முறைத்தபடி அவன் காரில் ஏறிக் கிளம்பி விட்டான்.. வினித் ஓய்வெடுக்கப் போவதாகச் சொல்லிவிட

உத்ராவும், நந்தினியும் ரம்ய மாலினியுடன் அரட்டை அடித்தபடி தோட்டத்தைச் சுற்றி வந்தார்கள்..

“இந்தத் தோட்டமே பார்க்கை மிஞ்சின அழகோட இருக்குடி..” பிரமிப்புடன் நந்தினியிடம் சொன்னாள் உத்ரா..

“இவங்களும் உங்களைப் போல்தான் சொல்லுவாங்க உத்ரா.. தோட்டத்தில சுற்றுவதுன்னா அவ்வளவு இஷ்டம்.. நைட் டின்னருக்குப் பின்னாலே மாடி ஹாலில உட்கார்ந்து தோட்டத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருப்பாங்க..” தலை சாய்த்துச் சிரித்தாள் ரம்யமாலினி..

“இயற்கைன்னா இவளுக்கு அல்வா சாப்பிட்டது மாதிரி ரம்யா..”

“கோழிக்கோடன் அல்வா மாதிரின்னு சொல்லுங்க..”

“அதே.. அதே..”

“உவமை சொல்கிறதுக்குக் கூட ஸ்நாக்ஸ் அயிட்டமாச் சொல்கிறிங்க பாருங்க.. நந்தினியோட பெஸ்ட் ஃபிரண்டா இருக்கிறதுக்கான முழுத் தகுதியும் உங்களுக்குத்தான் இருக்கு உத்ரா..”

“நீங்க மட்டும்தான் பாக்கின்னு நினைத்தேன்.. நீங்களும் சொல்லிட்டிங்க.. கேட்டுக்கடி நந்தினி.. உன்னோட சாப்பாட்டு ரசனையைப் பத்தி உலகமே பேசுது.. எங்கேயோ போயிட்டடி நீ..”

“எங்கேயும் போகலை.. வயநாட்டு அரண்மனைத் தோட்டத்திலதான் நின்றுக்கிட்டு இருக்கேன்.. சிநேகிதத் துரோகி..! சைக்கிள் கேப்பில சான்ஸ் கிடைச்சாக்கூட நீ மிஸ் பண்ண மாட்டியே.. காலை வாரி விடறதில உனக்கு நிகர் நீதாண்டி.. இப்படியாப்பட்ட ஃபிரண்ட் கிடைக்கப் புண்ணியம் பண்ணியிருக்கேண்டி..”

நந்தினி உத்ராவை மொத்தினாள்.. அவள் பதிலுக்கு மொத்த.. தோழிகளின் செல்லச் சண்டையை சுவராஸ்யமாக வேடிக்கை பார்த்தாள் ரம்யமாலினி.. இதுபோன்ற லேசான மனதுடன் இருந்து நீண்ட நாள்களாகி விட்டது என்ற உணர்வுடன்..

“தேங்க்ஸ்..” என்றாள்..

அடித்துக் கொண்டிருந்த தோழிகள் இருவரும் அதை நிறுத்திவிட்டு..

“எதுக்கு..?” என்று வியப்புடன் கேட்டார்கள்.. எதையோ சொல்லப் போன ரம்யமாலினி அங்கே வந்து கொண்டிருந்த அபராஜிதனைக் கண்டதும் சிரிப்பைத் துறந்தவளாக..

“எல்லாத்துக்கும்..” என்று சொல்லி விட்டு விரைந்து விட்டாள்..

அவளைத் துரத்தி விட்டு விட்ட அபராஜிதனை தோழிகள் இருவரும் வெறுப்புடன் பார்த்தார்கள்..

# அத்தியாயம் 188

“**இ**வன் எதுக்குடி இங்கே வர்றான்..?” எரிச்சலுடன் கேட்டாள் உத்ரா..

“ம்ம்ம்.. கடலை போட வர்றான்..”

அவளைவிட எரிச்சலுடன் சொன்னாள் நந்தினி..

“ஆல்ரெடி உனக்கும் எனக்கும் தான் ஆளிருக்குதே.. அப்புறம் எதுக்காக இவன் வேஸ்ட்டா கடலை பொறுக்க வர்றான்..?”

“எனக்கு ஆளிருக்கிறது இவனுக்குத் தெரியாதுடி உத்ரா..”

“உனக்கெல்லாம் காதலே வராதுன்னு முடிவு கட்டியிருப்பான்..”

“லொள்ளு..?”

“இவனே ஜொள்ளு.. இவனைக் கண்டா ‘லொள்ளு’ தான் வரும்.. அது சரிடி நந்தினி.. உனக்கு ஆளிருக்கிறது இவனுக்குத் தெரியாதுங்கிறது ஓகே.. பட்.. எனக்கு ஆளிருக்கிறது இவனுக்குத் தெரியும்தானே.. என் கழுத்தில

மஞ்சள் கயிறைக் கட்டி ஹனிமூன் கொண்டாட என் புருஷன் வந்திருக்கிறார்.. அவரை இவன் பார்த்தான்தானே.. அப்புறமும் வழிய வர்றான் பாரு.. கல்யாணமான லேடிஸ்கிட்ட வழியக் கூடாதுங்கிற கர்ட்டசி கூட இவனுக்கு இல்லையேடி..”

“அஜந்தாவோட அண்ணன் எப்படியிருப்பான்..?”

“ம்ஹூம்.. இவன் அஜந்தாவின் அண்ணனா இங்கே என்ட்ரி கொடுத்திருப்பான்னு நான் நினைத்தே பார்க்கலைடி.. ஷாக்கா இருக்கு.. செஞ்சியில இருந்து உன்னை ஃபாலோ பண்ணி வயநாடு வரைக்கும் வந்து நிற்கிறான் பாரு..”

“இது இவனோட ஊராம்..”

“வீடுதான் இவனோட வீடில்ல போல..”

“அதை இவனும் ஒப்புக்க மாட்டான்.. இவனோட குடும்பமும் ஒப்புக்காது... நமக்கேன்டி இவங்க பிரச்னை..? இவங்களாச்சு.. இவங்களோட குடும்பப் பிரச்னையாச்சு..”

“ஊஹும்.. அப்படிச் சொல்லி ஒதுங்கி விடக் கூடாதுடி நந்தினி.. ரம்யாவை பார்த்தேல்ல.. சிரிச்சுப் பேசிக்கிட்டு இருந்தவ இவனைக் கண்டதும் ஓடறா.. இந்த

அரண்மனையில் பிறந்து வளர்ந்த பெண்ணுக்கு நிம்மதியா தோட்டத்தில நின்று பேசிக்கிட்டிருக்கக் கூட சுதந்திரமில்லை.. இதைப் பார்த்த பின்னாடியும் ஒதுங்கிப் போவியா..?"

எப்படி ஒதுங்கிப் போவாள்...? நந்தினி ரவிச்சந்திரனை உயிரினும் மேலாக காதலிப்பவள்.. அவள் மனதில் காதல் எனும் உணர்வை உணராத போதே வீணாவையும் ரம்ய மாலினியையும் நேசித்தாள்.. பாசம் காட்டினாள்.. இப்போதோ ரவிச்சந்திரன் வேறு, நந்தினி வேறு என்ற நினைவில்லாமல் அவன்மீது பித்தாகி விட்டாள்.. வீணாவின் மீதும் ரம்யமாலினியின் மீதும் கொண்டிருந்த நேரமும், பாசமும் வலுப் பெற்று விட்டதே..

"என்னால என்னடி பண்ண முடியும்..?"

"உன்னாலே எதுவும் பண்ண முடியாதுன்னா உன் ஆளிடம் சொல்லு.. அவர் பிளந்து கட்டிற மாட்டாரா..?"

"நான் சொல்லனும்னு இல்லை உத்ரா.. அவருக்கே எல்லாமும் தெரியும்.."

"அவருக்கும் தெரியாதது உனக்குத் தெரிய வந்தா..?"

"அப்போப் பார்த்துக்கலாம்.."

நந்தினி பிடி கொடுக்கவில்லை... அவள் கலகலப்பானவள்தான்.. மனதில் நினைப்பதை மறைக்காமல் பேசிவிடக் கூடியவள்தான்.. ஆனால் சண்டைக்காரியல்ல.. அடுத்தவரின் விவகாரங்களில் மூக்கை நுழைக்காமல் விலகிச் செல்பவள்.. துஷ்டனைக் கண்டால் தூர ஒதுங்கி விடுபவள்..

‘அவந்திகாவின் குடும்பமே துஷ்டத்தனம் நிறைந்தது.. அவர்களைக் கண்டு இவள் ஒதுங்கி ஓடினால் ரவிச்சந்திரனை விட்டும் ஒதுங்கி ஓட வேண்டியதாகி விடுமே..’

உத்ராவுக்கு கவலையாக இருந்தது.. நந்தினியைப் பற்றி அவளுக்கு நன்றாகத் தெரியும்.. ஒன்றை நினைத்து விட மாட்டாள்.. நினைத்து விட்டால் அந்த நினைவிலிருந்து கடைசிவரை மாறவே மாட்டாள்.. அதே சமயத்தில் அந்த ஒன்றை வேண்டாமென்று வெறுத்து விட்டால் விலகிச் சென்று விடுவாள்.. இறுதிவரை திரும்பிப் பார்க்க மாட்டாள்..

முரண்பாடுகளைக் கொண்டதுதானே மனித இயல்பு..! நந்தினி முரண்படுவதைப் போலத் தோன்றினாலும் அதுதான் அவளது இயல்பு.. அந்த நந்தினி இப்போது ரவிச்சந்திரனைக் காதலிக்கிறாள்.. அவன் முள்களால் சூழப்பட்டிருக்கும் ரோஜா என்பதை அவளே உணர்ந்து சொல்கிறாள்..

நந்தினி முள்களால் காயமடையாமல் ரவிச்சந்திரன் என்ற ரோஜாவை அடைந்து விட வேண்டுமே என்றிருந்தது உத்ராவுக்கு.. அது அவ்வளவு எளிதான ஒன்றாக இருக்கக்கூடும்.. என்று அவளுக்குத் தோன்றவில்லை..

ரவிச்சந்திரன் இரும்பு மனிதனாக இருக்கலாம்.. நந்தினி இரும்பு மனுஷியல்ல.. பூப்போன்ற இதயம் கொண்டவள்..

அந்த பூவிதயம் கொண்டவளின் காதல் நிறைவேற வேண்டுமே என்ற கவலையுடன் நின்றிருந்த உத்ராவை உல்லாசப் பார்வை பார்த்தபடி பக்கத்தில் வந்து நின்ற அபராஜிதன்.. அதைவிட உல்லாசமான குரலில்..

“ஹல்லோவ்... என்னங்க... கண்டுக்க மாட்டேங்கறிங்க..” என்று காலம் காலமாக பழகியவனைப் போலக் கேட்டு வைத்தான்..

உத்ராவுக்குத் தூக்கிவாரிப் போட்டது.. அபராஜிதன் எக்குத் தப்பாக பேசி வைப்பான் என்று அவள் எதிர்பார்த்தாள்தான்.. இப்படி பேசி வைப்பான் என்று எதிர்பார்க்கவில்லை.. அவனது பார்வையும், பேச்சும் உத்ராவையே கலவரப் படுத்தின..

“என்னடி இப்படி உரிமை கொண்டாடறான்..?”

நந்தினியிடம் முணுமுணுத்தாள்..

“இதுக்கு மேலேயே உரிமை கொண்டாடுவான்.. இதெல்லாம் ஜுஜுபி..” பதிலுக்கு முணுமுணுத்தாள் நந்தினி.

“உங்களுக்குள்ளேயே ரகசியம் பேசிக்கிட்டா எப்படி..? இங்கே நானும் நிற்கிறேனில்ல.. என்னையும் சேர்த்துக்கலாமே..”

அவன் ‘சேர்த்துக்கலமே’ என்ற வார்த்தையில் கொடுத்த அழுத்தம் ரசிக்கும்படி இல்லை.. உத்ரா அதை ரசிக்கவும் இல்லை.. முகம் சுளித்தாள்..

“நாங்க ஃபிரண்ட்ஸ்.. ரகசியம் பேசிக்கிறோம்..” சிடுசித்தாள்..

நீ யார் என்ற கேள்வி அதில் தொக்கி நின்றதைப் புரிந்து கொள்ளாததைப் போல அவன் கவர்ச்சியாக சிரித்து வைத்தான்.. அவனது அழகின் மீது அவனுக்கு அதீத நம்பிக்கை இருக்கிறது என்று நந்தினி கிசுகிசுத்தாள்.. அவன் பேசிக் கொண்டிருப்பதை வினித் பார்த்து விடாமலிருக்க வேண்டுமே என்று உத்ராவுக்கு பதட்டமாக இருந்தது.. பார்த்து விட்டால் உத்ராவைச் சும்மா விட மாட்டான்.. உலுக்கி எடுத்து

விடுவான்.. ஏற்கனெவே டைனிங் ஹாலில் அபராஜிதன் இருப்பதைப் பார்த்து விட்டு..

“இவன் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனில நாம பார்த்த ரோமியோதானே..?” என்று முகம் மாறினான்..

“அப்படித்தான் தெரியுது..” அவனை அப்போதுதான் பார்த்திருந்ததால் எரிச்சலடைந்த உத்ரா.. நந்தினியின் கையைக் கிள்ளினாள்..

“என்னடி நந்தினி.. இவன் இங்கே உட்கார்ந்திருக்கான்..?”

“இது அவனோட தாய்வழித் தாத்தாவோட வீடு..”

“ரவிசார் வீடுன்னு கேள்விப்பட்டேனே..”

“அதை நாம ஏண்டி சொல்லனும்..? சொன்னா ரவி இவனோட தாய்மாமன் மகன்ம்பான்.. தேவையா நமக்கு..”

“பாருடா.. இவன் ரவிசாரோட அத்தை மகனா..?”

“ம்ம்ம்.. அஜந்தாவோட அண்ணன்..”

“இதைத்தான் இந்த அஜந்தா வம்புக்கு வந்தப்ப சொன்னியா..? இவளோட அண்ணனா இவன்..?”

“கழுதையில.. எனக்கும் இப்படித்தான் இருந்தது..”

தோழியிடம் சேகரித்த விவரங்களை வினித்தின் காதுகளுக்குள் கடத்தினாள் உத்ரா.. தலையைத் தலையை ஆட்டிக் கேட்டுக் கொண்ட வினித் யோசனையாகி விட்டான்.. அது டைனிங் ஹால் என்பதால் உத்ரா தப்பித்தாள்..

அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த தனியறையாக இருந்திருந்தால் வினித் கேள்விகளைக் கேட்டுத் துளைத்தெடுத்திருப்பான்..

“என்னடி.. இவன் இப்படி சிரித்து வைக்கிறான்..?” உத்ரா நந்தினியிடம் சன்னக் குரலில் புலம்பினாள்..

“உன்னை இப்படித் தோட்டத்தில் கார்னர் பண்றானேன்னு சந்தோஷப்பட்டுக்க.. என்னை டைனிங் ஹாலில் வைத்து இப்படிக் கண்டுக்க மாட்டேங்கறியேன்னு கேள்வி கேட்டு கலங்கடிச்சான்.. நான் அதுக்கான விளக்கத்தைச் சொல்லி ஓய்ஞ்சு ஒருவழியா ஆனேன்.. அதில இவனோட தங்கச்சி வேற குட்டையைக் குழப்பி இவனுக்கும் எனக்கும் காவியக் காதலிருக்குங்கிறதைப் போல சீன் கிரியேட் பண்ண ஆரம்பிச்சுட்டா..”

“அடிப்பாவி..! அப்படியா செஞ்சா..?”

“அவ அதுக்கு மேலேயும் செய்வா.. எதுக்கும் அஞ்சாத கேட்டகிரி.. அவ பேச்சை விடு.. இவன் பேச்சுக்கு வா..”

“தலையெழுத்துடி.. இவனெல்லாம் ஒரு ஆள்.. இவன் பேச்சை நாம பேச வேண்டியிருக்கு.. நல்லவேளை..! டைனிங் ஹாலில் வைச்சு என்னைக் கண்டுக்க மாட்டேங்கறியேன்னு கேள்வி கேட்காம விட்டு வைச்சான்.. அங்கே கேட்டிருந்தா என்ன ஆகிறது..?”

உத்ரா பல்லைக் கடித்துக் கொண்டிருக்க.. அபராஜிதன் உல்லாசமாக..

“பார்த்தீங்களா.. இன்னமும் நீங்களாவே ரகசியம் பேசிக்கிட்டு இருக்கீங்க.. என்னையும் சேர்த்துக்க மாட்டேங்கறிங்களே..” என்று கண்ணைச் சிமிட்டினான்..

உத்ராவின் பொறுமை பறந்து போனது.. அபராஜிதனிடம் தயவு தாட்சண்யம் பார்க்கக் கூடாது என்ற கோபம் வந்தது..

“மைண்ட் யுவர் ஆக்டிவிட்டிஸ் மிஸ்டர் அபராஜிதன்.. ஐ டோன்ட் லைக் திஸ் டைப் ஆஃப் ஆக்ட்டிவிட்டிஸ்..” கண்டிப்புடன் குரலை உயர்த்தினாள்..

அந்த நேரம் பார்த்து ரவிவர்மன் தோட்டத்தை ஒட்டிய பாதையில் வேலையாளிடம் எதையோ பேசியபடி நடந்து செல்ல இங்கே அபராஜிதன் பம்மினான்..

“மெல்லப் பேசுங்க.. நான் உங்க பக்கத்திலேதானே நிற்கிறேன்..? இந்த சவுண்ட் வாய்ஸ் எதற்கு..?” சரசமாக வினவினான்..

“ஷட் அப்..! என்னை யாருன்னு நினைத்தீங்க..?” சகிக்க மாட்டாமல் சீறினாள் உத்ரா..

“உத்ராதானேங்க நீங்க.. என்னுடன் செஞ்சியிலே ஃபிரண்ட்லியாப் பேசிப் பழகினவங்க இப்ப அன்நோன் பெர்சனிடம் பேசுவதைப் போல ஃபிலிம் காட்டறிங்களே..”

“நீங்க அன்நோன் பெர்சனில்லாம வெல் நோன் பெர்சனா..?”

“ஆமாங்க.. நான் உங்களுக்கு வெல் நோன் பெர்சன்தான்..”

“வேண்டாம் அபராஜிதன்.. விளையாட்டுப் பேச்சு வினையில் முடிந்து விடும்.. இதை யாராவது கேட்டு வைத்தால் நீங்கள் சொல்வதில் உண்மை இருக்குமோன்னு

நினைத்து விடுவாங்க.. அடுத்த வீட்டுப் பெண்களிடம் பேசுகிறப்ப பார்த்துப் பேசனும்.. இல்லேன்னா முதுகில டின் கட்டிருவாங்க..”

“வாட்..?”

உத்ராவின் எச்சரிக்கையில் முகம் மாறினான் அபராஜிதன்.. உத்ராவும் நந்தினியும் ஒன்று சேர்ந்து தன்னைக் ‘கேரோ’ செய்தார்கள் என்று அஜந்தா அவனிடம் புலம்பித் தள்ளியிருந்தாள்.. ரவிச்சந்திரனின் விருந்தினர் என்ற திமிர் உத்ராவுக்கு என்று பொருமியிருந்தாள்..

அத்தனை தைரியமா.. எங்கே வந்து யார், யாரை ‘கேரோ’ செய்வது என்ற கோபத்துடன் உத்ராவை ‘உரசி’ப் பார்க்க முடிவு செய்துதான் அபராஜிதன் தோட்டத்திற்கு வந்திருந்தான்.. உத்ராவோ அவள் ‘தீக்குச்சி..’ என்பதை நிரூபணம் செய்து நெருப்புப் பொறியை பறக்க விட்டு விட்டாள்..

**‘வத்திக்குச்சி பத்திகாதுடா..**

**யாரும் வந்து**

**உரசற வரையிலே..’**

அபராஜிதனின் மனதில் பாடல் ஒலித்தது... சரசம் பேசுவதைக் கைவிட்டவனாய் குரூரமாக பார்த்து வைத்தான்..

“இதுதான் இவன்..! இந்த போஸ்தான் இவனுக்கு ஸுட் ஆகுது..” நந்தினியிடம் முணுமுணுத்தாள் உத்ரா..

“இனிப் புதிதாகத்தான் யாரும் கேட்கனுமா..?”

கழுகுப் பார்வையுடன் அவன் கேட்ட கேள்வியில் உத்ராவுக்கு மறுபடியும் தூக்கி வாரிப் போட்டது.. தேநிலவுக்கு வந்த இடத்தில் அந்த கேடு கெட்டவனால் விவாகரத்து வரைக்கும் விவகாரம் போய் விடுமோ என்ற பயம் அவளைப் பிடித்து ஆட்டியது..

“ரப்பிஷ்..! என்னமேன்.. என்ன உளருகிறிங்க..?”

“உளறலா..? நானா..? ஹா.. ஹா.. உங்களுக்கும் எனக்கும் செஞ்சியிலேயே பழக்கம் ஆரம்பிச்சிருச்சுன்னு சொன்னது நானில்லை..”

“வேற யார் சொன்னது..?”

“வேற யாரா..? உங்க உயிருக்குயிரான ஃபிரண்ட்ன்னு உருகறிங்களே.. இந்த நந்தினிதான் சொன்னாங்க.. யாரிடம் சொன்னாங்க.. தெரியுமா..? எங்க தாத்தாவிடம்

சொன்னாங்க.. எங்கே சொன்னாங்க தெரியுமா..? டைனிங் ஹாலில் எல்லோரும் இருக்கிறப்ப சொன்னாங்க.. ஸோ.. இந்த அரண்மனையில இருக்கிற அத்தனை பேருக்கும் உங்களுக்கு என்னைத் தெரியும் என்கிற விவரம் தெரியும்.. தெரியப் படுத்தினது நானில்லை.. உங்க ஃபிரண்ட்.. நந்தினி..''

நந்தினிக்குள் குளிர் பரவியது.. உத்ரா திரும்பி அவளைப் பார்த்த மௌனப் பார்வையிலிருந்த அதிர்ச்சியும், குற்றச்சாட்டும் அவளைக் கொன்று தின்றன.. தோழிகளின் உணர்வு போராட்டத்தைத் திருப்தியுடன் பார்த்தான் அபராஜிதன்..

'ஒன்றாய் இருந்தால்தானே எங்கள் வம்புக்கு வருவீங்க..? துண்டாகிப் போனா என்ன செய்வீங்க..?'

அவன் மனம் வெற்றிக் களிப்பில் கெக்கலி கொட்டியது..

# அத்தியாயம் 189

**ந**ந்தினி சிநேகித துரோகியாகி விட்டாளா..? அப்படியொரு பெயர் ஏற்பட்டு விட்டால் வயநாட்டு மலையுச்சியிலிருந்து தலைகீழாக பாய்ந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டும் என்று சங்கல்பம் செய்து கொண்டாள் நந்தினி..

அவள் அருள்மொழிவர்மனிடம் என்ன சொன்னாள்..? அவள் ஒன்றும் அபராஜிதனிடம் பேசவில்லை.. அவன் உத்ராவிடம்தான் பேசிக் கொண்டிருந்தான் என்று சொன்னாள்.. அதை அப்போதே குதர்க்கப் படுத்த முயன்ற அஜந்தா தோற்றுப் போனாள்.. தங்கை செய்ய முயன்றதை இப்போது அபராஜிதன் செய்து விட்டானே.. உத்ராவைத் தவறாகச் சொல்லவில்லை என்பதை நந்தினி எப்படி நிரூபிப்பாள்..? விசாரனை என்று ஆரம்பித்தால் அது வினித்தின் காதுகளுக்குப் போய் விடும்.. அமைதியாக விட்டு விட்டால் உத்ரா ஆயுளுக்கும் நந்தினியை மன்னிக்க மாட்டாள்.. சிநேகித துரோகி யென்று நினைத்து விடுவாள்..

‘என்ன செய்வது..?’

பொறியில் மாட்டிக் கொண்ட எலியாக தவித்தாள் நந்தினி... அவளை இடுங்கிய கண்களுடன் பார்த்த அபராஜிதன்..

“என்னஙக.. இரண்டு பேரும் கூடிக்கூடி ரகசியம் பேசிக்கிட்டிங்க.. இப்ப எதுவும் பேச ாம எதிரும், புதிருமா நிற்கறிங்க..? என்ன ஆனது..? நீங்க இரண்டு பேரும் ‘திக்க்க்..’ ஃபிரண்டாச்சே..” என்று நக்கலாகக் கேட்டான்..

நந்தினிக்கு வேகு, வேகு என வந்தது..

“நந்தினி..” ரவிச்சந்திரனின் குரலில் திரும்பிப் பார்த்தாள்..

ரவிச்சந்திரனும், வினித்தும் தோட்டத்துக்கு வந்து கொண்டிருந்தார்கள்.. அவர்களைப் பார்த்த அபராஜிதன்..

“என் அம்மாவன் மோனோட இவங்க ஹஸ்பெண்டும் வருகிறார் போல இருக்கே.. ஏன் நீங்க இரண்டு பேரும் இப்படி நிற்கறிங்கன்னு அவரிடமே கேட்டு விடலாமா..?” என்று உத்ராவையே உன்னிப்பாக பார்த்தபடி புருவங்களை உயர்த்தினான்..

உத்ராவின் முகம் வெளிரியதில் நந்தினியின் மனம் பதறியது.. அஞ்சாமையை அவருக்குப் போதித்த அவளின் தோழி அபராஜிதனிடம் அஞ்சி நிற்பதா..?

"நீங்க இங்கேதான் இருப்பீங்கன்னு வினித்திடம் சொன்னேன்... கரெக்டாக் சொல்லிட்டிங்களேன்னு ஆச்சரியப் படறார்.. நந்தினிக்கு எங்க அரண்மனைத் தோட்டம்ன்னா அப்படியொரு பித்து... பகலில் தோட்டத்தில்தான் குடியிருப்பாள்... நைட் டயத்தில மாடி ஹாலிலோ.. இல்லை அவளோட ரூமிலோ உட்கார்ந்துக்கிட்டுத் தோட்டத்தை வேடிக்கை பார்த்துக்கிட்டு இருப்பா.." ரவிச்சந்திரனின் பார்வை உரிமையுடன் நந்தினியை வருடியது..

பதிலுக்கு காதலுடன் காதலனைப் பார்க்க முடியாமல் கண்கலங்கி விட்டாள் நந்தினி.. ரவிச்சந்திரனின் புருவங்கள் சுருங்கின.. அபராஜிதனும் அங்கே நிற்பதை அப்போதுதான் கவனித்தவனாக..

"பெண்கள் பேசிக்கொண்டிருக்கும் இடத்தில் உனக்கென்ன வேலை..?" என்று கடுமை காட்டினான்..

'ஆமாண்டா.. பொண்ணுக பேசற இடத்தில எனக்கு வேலையிருக்கக் கூடாது.. உனக்கு மட்டும்

வேலையிருக்கனும்.. அதிகாரமாடா பண்ற..? உன்னோட இந்த அதிகாரத்தை உடைத்துத் தூள் தூளா ஆக்கலேன்னா நான்.. நான்.. நான்..'

அத்துடன் நிறுத்திக் கொண்டான்

அபராஜிதன்.. நான் அபராஜிதன் இல்லைடா என்று ரவிச்சந்திரனுக்கு எதிராக மனதுக்குள் கூடச் சூளுரைக்கும் தைரியம் அவனுக்கு வரவில்லை..

'இவன் மைண்ட் வாய்ஸைக் கூடப் படிச்சுத் தொலைப்பான்..'

அபராஜிதனின் மனதைப் படித்து விட்டு ரவிச்சந்திரன் அபராஜிதனை இல்லாமலே ஆக்கிவிட்டால் என்ன செய்வது என்ற பயத்தில் அவன் அத்துடன் நிறுத்திக் கொண்டான்..

உத்ராவுக்கு கண்ணைக் கட்டிக் கொண்டு வந்தது.. அபராஜிதன் என்ன பேசி வைப்பானோ என்று அவள் பயந்தாள்..

"பாஸ்.." நந்தினியின் குரல் தழுதழுத்ததில் வினித்தும் ரவிச்சந்திரனும் உத்ராவைப் பார்க்காமல் நந்தினியைக் கவனித்தார்கள்..

“வாட் ஹேப்பன்ட்..?” ரவிச்சந்திரன் அதட்டினான்..

“இவன்.. இவன்..” நந்தினி திக்கித் திணறினாள்..

‘பேசாதேடி..’ உத்ரா பார்வையில் இறைஞ்சினாள்..

அபராஜிதனைப் பற்றி வழக்கு வைத்துத் தொலைத்தாள் வினித்தின் பலத்த கண்டனம் நிறைந்த விசாரணைக்கு அவள் ஆளாக வேண்டியிருக்கும்..

‘வேண்டாம் நந்தினி.. வாயை மூடிக் கொண்டிரு..’

உத்ராவின் பதட்டத்தையும் பயத்தையும் ரவிச்சந்திரனும் வினித்தும் கண்டு விடாமலிருக்க நந்தினி மளமளவென்று கண்ணீர் விட்டு அவர்களின் மொத்தக் கவனத்தையும் தன் பக்கம் ஈர்த்துக் கொண்டாள்..

“சொல்லு நந்தினி.. இவன் என்ன செய்தான்..?”

ரவிச்சந்திரன் உறுமிய உறுமலில் அபராஜிதனின் சர்வாங்கமும் நடுங்கித் தொலைத்தன.. இருந்தாலும் அவன் திடமாக நின்றான்.. நந்தினியிடம் அவனை என்ன செய்து விட முடியும் என்ற இறுமாப்பு அவனுக்கு.. அவனால் உத்ராவின் கணவனின் மனதில் சந்தேகத்தை விதைத்து விட முடியும்..?

அந்த இரு பெண்களால் அவனை என்ன செய்து விட முடியும்..?

“இவன்.. இவன்..?”

“இவன்..?”

“நான் இவனை சைட் அடித்ததா.. காதலித்ததாவும் உத்ராவிடம் கதை கட்டறான் பாஸ்..”

நந்தினி பிளேட்டைத் தன் பக்கமாக திருப்பி விட்டு அழ ஆரம்பித்து விட்டாள்.. ஒருவகையில் அபராஜிதன் அதைச் செய்ய முயன்றவன்தான் என்பதில் அவள் மனதில் பொய் சொல்லும் உணர்வே வரவில்லை... உத்ராவை அவன் மிரட்டியதில் அவள் கொதித்துப் போயிருந்தாள்.. அபராஜிதன் இரக்கப் பட வேண்டியவனல்ல என்ற முடிவுக்கு வந்திருந்தாள்..

நந்தினியின் மீதான ரவிச்சந்திரனின் தீவிரமான காதல் எத்தனை சக்தி வாய்ந்தது என்பதை நந்தினி அறிவாள்.. அதை அபராஜிதனும் அறிந்து கொள்ள வேண்டாமா..? நந்தினியை ஓர் பார்வை பார்த்தாலே ரவிச்சந்திரன் அவனைக் கொன்று பு தைத்து விடுவான்.. இதில் நந்தினி அபராஜிதனைப் பார்ப்பதாக அவன் கதை கட்டுகிறான் என்றால் விட்டு வைப்பானா..?

“அப்படியா சொன்னான்..? ராஸ்கல்..!”

வினித்துக்கு கோபம் வந்து விட்டது..

அவனுக்கு அபராஜிதனின் மீது நல்ல அபிப்ராயம் கிடையாது.. நந்தினியிடம் அவன் ரோமியோத்தனம் காட்ட முயன்றதை வினித் நினைவில் வைத்திருந்தான்.. ரவிச்சந்திரனுக்கு நந்தினியின் மீது காதல் உண்டாகியிருக்கிறது..

நந்தினியும் அவனைக் காதலிக்கிறாள் என்று சாப்பிட வருவதற்கு முன்னால் உத்ரா வினித்திடம் சொல்லியிருந்தாள்.. தங்கையைப் போலப் பாசம் காட்டும் நந்தினியின் வாழ்வைக் காப்பாற்றும் பொறுப்புள்ள அண்ணனாக அவன் மாறிவிட்டான்..

“ரவி சார்.. இவன் உங்க ரிலேட்டிவ்ங்கிறதினால கை வைக்காம இருக்கிறேன்.. இல்லேன்னா நடக்கிறதே வேற.. நந்தினியை வயநாட்டுக்கு அனுப்பி வைக்க நானும் உத்ராவும் சென்ட்ரல் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்தப்ப இவன் நந்தினியிடம் பேச டிரை பண்ணினான்.. நான் பார்த்துட்டுக் கண்டிச்சேன்.. செஞ்சியிலே உத்ராவும் நந்தினியம் அவுட்டிங் போனப்ப இவனைப் பார்த்தாங்களாம்.. அப்ப.. உத்ராவும்

இவன் செஞ்சிக் கோட்டையைப்பற்றி உயர்வாய் பேசவும் அதில இம்ப்ரெஸ் ஆகி.. அவவோட ஊர்க் கோட்டையைப் பற்றின பெருமையில கோட்டையைப் பத்தித்தான் இவனிடம் பேசியிருக்கிறா.. அப்ப செஞ்சிக் கோட்டையோட ஃபுல் ஹிஸ்டரியையும் இவன் சொன்னானாம்..''

''இவன் அப்படித்தான் வினித்.. எந்த இடத்துக்குப் போக வேண்டி வந்தாலும் அந்த இடத்தோட ஃபுல் டீடெயிலையும் கலெக்ட் பண்ணி வைத்துக்குவான்.. அதைப் பற்றித் தெரிந்ததைப் போலப் பேசுவான்.. இந்த புத்தியையெல்லாம் பிஸினெஸ்ஸில் காண்பிக்க மாட்டான்.. அப்படியே இவனோட அப்பாவோட குணம் இவன் ரத்தத்திலே ஊறியிருக்கு... உருப்படாதவன்..''

''இவன் சொன்னதை வைத்து உத்ரா நாலு வார்த்தை இவனிடம் பேசியிருக்கிறா.. இந்த நாய் அதை யூஸ் பண்ணிக்கிட்டு ரயில்வே ஸ்டேஷன் வரைக்கும் வந்திருச்சு.. நான் அடிக்காத குறையா சண்டை போட்டு விரட்டி விட்டுட்டேன்..''

''ஊஹும்.. நீங்க விரட்டி விட்டதிலே இவன் ஓடிப் போயிடலை வினித்.. நீங்களும் உத்ராவும் நந்தினியை

அவளோட சீட்டில் உட்கார வைத்துட்டுப் போனதும் இவன் என்னோட சீட்டில வந்து உட்கார்ந்துக்கிட்டு இவன்தான் ரவிச்சந்திரன்னு சொன்னானாம்..”

“அயோக்கிய ராஸ்கல்.. அப்படியா சொன்னான்..?”

வினித் நந்தினியிடம் கேட்க.. அவள்..

“ஆமாம் அண்ணா..” என்று பூம் பூம் மாடானாள்..

“அப்புறம் நான் வந்ததும் இவன் ஓடிட்டானாம்.. இதை நந்தினி டைனிங் ஹாலில் வைத்துத் தாத்தாவிடம் சொன்னாள்..

அரண்மனையில இருக்கிற வேலையாள்கள் உட்பட அத்தனை பேரும் கேட்டாங்க.. அப்படியிருந்தும் இவன் உத்ராவிடம் பொய் சொல்லிக்கிட்டு இருக்கான் வினித்..”

‘கேட்டாயா..’ என்பதைப் போல உத்ராவைப் பார்த்தாள் நந்தினி.. அவளது கண்ணீரில் மனம் இளகிய உத்ரா தோழியை அணைத்துக் கொண்டாள்.. தோழிக்கு ஆறுதல் சொல்லத்தான் உத்ரா அணைத்துக் கொள்கிறாள் என்றுதான் ரவிச்சந்திரனும், வினித்தும் நினைத்தார்கள்.. தோழியின் மனம் திரும்பி அணைத்துக் கொள்கிறாள் என்பதை

நந்தினியும், அபராஜிதனும் மட்டுமே அறிந்திருந்தார்கள்.. விரிசல் கண்ட நட்பு சரியாகி இன்னும் அதிகமாக இறுகிப் போய் விட்டதில் நந்தினி நிம்மதியாக அபராஜிதன் காண்டானான்..

ரவிச்சந்திரனின் கோபத்துக்கு ஆளாகி நிற்பவனின் கோபம் யாரை என்ன செய்து விடும்..?

ரவிச்சந்திரனின் காதலில் மீது அவதூறு சொல்லி விட்டு அபராஜிதனால் தப்பிப் பிழைத்து விட முடியுமா..?

“இவன் வயநாட்டுக்கு வந்தவுடனே காலை முறிச்சு ஹாஸ்பிடலில் அட்மிட் பண்ணியிருக்கனும்.. விட்டு வைத்ததுக்கு வேலையைக் காட்டறான்... இவனைக் குடும்பத்திலே சேர்க்கவே கூடாது... அதற்கான தகுதி இவனுக்கில்லைன்னு தான் மும்பைக்கு விரட்டியிருந்தேன்... மறுபடியும் எண்ட்ரி கொடுத்து கடுப்பைக் கிளப்பறான்.. இவன் வந்த அன்றைக்கே நந்தினியிடம் தெரிந்தவனைப் போலப் பேசினான்.. தாத்தா நந்தினிக்கும் இவனுக்கும் ஃபிரண்ட்ஷிப் இருக்கிறதோன்னு சந்தேகப்படறதைப் போல சீன் கிரியேட் பண்ணினான்.. நந்தினி நேருக்கு நேர் அதை ஃபேஸ் பண்ணி இவன் சொன்னதெல்லாம் பொய்யின்னு ப்ரூப்

பண்ணினா.. இன்னும் இவன் அடங்கலை.. பார்த்தீங்களா..?”

ரவிச்சந்திரன் வினித்திடம் பேசிக் கொண்டிருக்கிறான் என்ற நம்பிக்கையில் நின்று விட்டான் அபராஜிதன்.. ரவிச்சந்திரன் விசாரித்துக் கொண்டிருக்கும் போது அவன் ஓடி விட முடியாது என்பது வேறு விஷயம்.. அபராஜிதன் அங்கு நின்றுதான் ஆக வேண்டும்.. என்ன ஒன்று.. ரவிச்சந்திரனின் கைகளுக்கு அகப்படாமல் எட்டி நின்றிருக்க வேண்டும்... அப்படிச் செய்யாமல் அவனது கைகளுக்கு எட்டும் தொலைவில் நின்றிருந்ததால் ரவிச்சந்திரன் எட்டி அபராஜிதனின் சட்டையை கொத்தாகப் பிடித்து சாத்து சாத்து எனச் சாத்தித் தீர்த்து விட்டான்..

‘இனி இவன் என்ன பொய் சொன்னாலும் எடுபடாது..’

உத்ராவின் சுவாசம் சீரானது.. ஓர் நொடியில் சிக்கலைத் தீர்த்து விட்ட நந்தினியை அவள் வியப்புடன் பார்த்தாள்.. எத்துனை சாதுர்யமாக அவள் நிலைமையைக் கையாண்டிருக்கிறாள் என்பது அவளுக்குத் தெரியுமா என்றிருந்தது உத்ராவுக்கு.. நந்தினியா இது..? அபராஜிதன் போன்ற அயோக்கினை நொடிப் பொழுதில் மண்ணைக் கவ்வ

வைத்து விட்டாளே.. இனி அவள் வாழ்க்கையை அவள் பார்த்துக் கொள்வாள்.. உத்ரா கவலைப்பட வேண்டியதில்லை..

“யாரும் வாயைத் திறக்கக் கூடாது தாத்தா.. இந்த செகண்டிலேயே அபராஜிதன் வயநாட்டை விட்டு வெளியேறியாகனும்.. இல்லேன்னா இவனைச் சேர்ந்த அத்தனை பேரையும் இந்த அரண்மனையை விட்டு நான் வெளியேற்றி விடுவேன்..”

ரவிச்சந்திரனின் கட்டளைக்கு அருள்மொழிவர்மன் அடிபணிந்தார்.. அபராஜிதனுக்காக என்று பார்த்தால் அவந்திகாவும் அவளுடைய குடும்பமும்

வயநாட்டு அரண்மனையைத் துறக்க வேண்டி வருமே என்ற முன்யோசனையில் யாழினியும், அவந்திகாவும் அறிவார்ந்த மௌனத்தை சாதிக்க.. அபராஜிதன் வயநாட்டை விட்டுத் துரத்தப் பட்டான்..

# அத்தியாயம் 190

“**த**டக்.. தடக்.. தடக்.. க்கூ.. சிக்கு.. புக்கு.. சிக்கு.. புக்கு..”

மங்களூர் எக்ஸ்பிரஸ் கோழிக்கோடை விட்டு நகர்ந்தது.. உத்ராவும், வினித்தும் ஒருவர்மீது ஒருவர் அப்பியவர்களாக ஏஸி கோச்சின் வாசலில் நின்று எட்டிப் பார்த்துக் கையாட்டிக் கொண்டிருந்தார்கள்.. ரயில் மறைந்து புள்ளியாகும் வரை கையாட்டிக் கொண்டிருந்த நந்தினி.. ரயில் கண் பார்வையிலிருந்து மறைந்த பின்னாலும் கையாட்டுவதை நிறுத்தாமல் அப்படியே நின்றிருந்தாள்..

“ஹேய்.. பைத்தியம்..”

ரவிச்சந்திரன் அவளது தோள் தொட்டு அழைத்ததும் பிரமை பிடித்ததைப் போல அவனைப் பார்த்தவள்..

“உத்ரா சென்னைக்குப் போயிட்டாளா பாஸ்..?” என்று ஏக்கத்துடன் கேட்டாள்..

“நான் உன்னுடன்தான் இருக்கிறேன்.. எப்போதும் இருப்பேன்..”

கனிவுடன் அவளை அணைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. தாய்மடியில் ஒன்றும் கன்றினைப் போல அவன் மார்பில் முகம் புதைத்துப் பிணைந்து நின்றவளின் கரங்கள் உரிமையுடன் அவனது இடுப்பை வளைத்துக் கொண்டதில் அவனுக்குள் திருப்தி பரவியது. அவனிடம் காதல் சொல்வதற்கு முன் இப்படியொரு நெருக்கத்தை அவள் காட்டியதேயில்லை..

“நந்தினி..”

அவளது உச்சந்தலையில் முகம் புதைத்து முத்தம் பதித்தான்.. அவளுக்குள் ஓடிய சிலிர்ப்பலைகளை அவனது உடல் உணர்ந்தது.. தோழியின் பிரிவால் அவள் மனதில் குடி கொண்டிருந்த துயரை உணர்ந்தவன் அதிலிருந்து அவளை வெளியே கொண்டுவர யத்தனித்தவனாய் அவள் காதுகளில் கிசுகிசுத்தான்..

“உங்க ஊர் செண்பகப் பாண்டியன் தன்னோட மகாராணியின் கூந்தலை இப்படித்தானே முகர்ந்திருப்பான்..?”

உச்சந்தலையிலிருந்து இறங்கி அவளது கூந்தல் காட்டில் முகம் புதைத்துப் புரட்டியவன்.. “ம்ஹா..” என்று வாசம் பிடித்தான்..

“பாஸ்..” நந்தினி அவனுக்குள் இன்னமும் அதிகமாகப் புதைந்தாள்..

அவன் மீதிருந்து வந்த இதமான நறுமணம் அவளை கிறங்க வைத்து ஏதோ ஓர் நதியில் மூழ்கும் உணர்வை ஏற்படுத்தியது..

‘செண்பகப் பாண்டிய மன்னனின் மகாராணி இதுபோல வாசனையை உணரவில்லையா..?’ தனக்குள் கேட்டுக் கொண்டாள்..

காலம் காலமாக பெண்களின் அழகை மட்டுமே பிரத்யேகமாய் புகழும் கவிஞர்களும் காவியம் படைத்தவர்களும் ஆண்களின் அழகைக் குறித்து எதுவுமே சொல்வதில்லையே.. அது ஏன்..? அப்படியே வர்ணித்தாலும் அவர்களின் வீரம் குறித்தும் வலிமை குறித்துமே வர்ணிக்கிறார்கள்..

ஆண்களுக்கு வீரம் அழகு.. பெண்களுக்கு அவர்களின் தோற்றம்தான் அழகு என்ற நியதியை வகுத்தவர் யார்..?

அடுத்த ரயில் வந்து நின்றதில் கூட்டம் குவிந்தது.. தனிமை கலைக்கப்பட்டதில் ஒட்டித் தழுவி நின்ற ரவிச்சந்திரனும் நந்தினியும் பிரிந்து எட்ட நின்றார்கள்..

நந்தனியின் வெட்கச் சிவப்பை பூசிய முகத்தில் உத்ராவைக் குறித்த ஏக்கம் சிறிதும் இல்லை.. அவள் ரவிச்சந்திரனின் காதலியாக.. அவனைக் காதலிப்பவளாக நாணி நின்றாள்..

சில நொடிகளில் அவளைத் தோழியை மறக்க வைத்து விட்ட கர்வத்துடன் அவளது தோளில் கை போட்டு இறுக்கியபடி நடக்கத் தொடங்கினான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் கை அவனது இடுப்பைத் தானாக வளைத்துக் கொண்டதில் அவனுக்குள் சந்தோஷம் உண்டானது..

காரில் ஏறுவதற்காகப் பிரிந்தவள் அவன் காரில் ஏறி அமர்ந்ததும் அதற்காகவே காத்திருந்ததைப் போல அவன் தோளில் தலை சாய்த்துக் கண்களை மூடிக் கொண்டாள்..

ரவிச்சந்திரனுக்கு அது பிடித்திருந்தது.. அவன் கேட்காமலே அவள் காட்டிய நெருக்கத்தில் அவன் மனம் நிறைந்திருந்தது.. அவனிடம் அவள் எடுத்துக் கொண்ட உரிமையில் அவனது உடல் தகிக்க ஆரம்பித்தது.. அவளை எட்ட நிறுத்திப் பேசிப் பழக முடியாத நிலையில் அவனிருந்தான்.. அவன் தோளில் தலை சாய்த்திருந்த நந்தினியின் இதழ்கள் மயக்கத்துடன் பாட ஆரம்பித்தன.. காரை ஓட்டிக் கொண்டிருந்த ரவிச்சந்திரன் செவிகள்

அப்பாடலின் கிறக்கத்தையும் காதலையும் உள்வாங்கிக் கொண்டன..

**“விழியில் உன் விழியில் வந்து விழுந்தேன்..**

**அந்த நொடியில் என் எதிர்காலம்**

**நீதான் என்று உயிர் சொன்னதே..”**

காரை ஓடித்து மலைப் பாதையில் திருப்பிய ரவிச்சந்திரனின் மனதும் உடலும் அவளது அண்மையில் குளிர் காய்ந்து கொண்டிருந்தன..

**“வழியில் உன் வழியில்.. வந்து நடந்தேன்..**

**அந்த நொடியில் என் வழித்துணை**

**நீதான் என்று என் நிழல் சொன்னதே..”**

நந்தினியின் தலைமீது தலை மோதினான் ரவிச்சந்திரன்.. அவனுக்கும் அவளுக்கும் மட்டும் உரித்தான அந்தத் தனிமையை விட்டுக் கொடுக்கக் கூடாது என்ற தீவிரம் அவன் நெஞ்சில் பரவியது.. வயநாட்டு அரண்மனைக்கு உடனடியாகத் திரும்பிப் போக அவன் விரும்பவில்லை.. அவளும் அவனும் மட்டுமாக சுகித்திருக்கும் இந்தத் தனிமை கலையக் கூடாது.. நீடித்திருக்க வேண்டும்..

**“உன்னோடு வாழ்ந்திடத்தானே வாழ்கிறேன்..**

**உன்கையில் என்னைத் தந்து தோளில் சாய்கிறேன்..”**

நந்தினி பாடல் வரிகளை உணர்ந்து உருகிப் பாடினாள்.. அவளது காதலில் நனைந்து கரைந்து அந்த அற்புதமான நொடிகளை அனுபவித்து ரசித்துக் கொண்டிருந்தான் அவன்..

நந்தினி அவனிடம் காதல் சொல்லியபோது உத்ராவும் வினித்தும் உடனிருந்தார்கள்.. அவ்வபோது கிடைத்த தனிமையில் ஒட்டி உரசிக் கொண்டாலும்.. அவன் மனதில் பற்றியெரிந்து கொண்டிருந்த போகத்தீயை அந்தத் தழுவல்களால் குளிர வைக்க முடியவில்லை.. கனல் வீசும் காதலின் ஜ்வாலையை நந்தினியால் மட்டுமே அருவி நீராய் அணைக்க முடியும் என்ற நிலையில் அவன் தகித்துக் கொண்டிருந்த போது அவர்கள் வயநாட்டுக்குத் திரும்பி விட்டார்கள்..

அரண்மனையின் பூசல்கள்... குடும்ப அங்கத்தினர்கள்.. பொறுப்புள்ள குடும்பத் தலைவனாய்.. எஸ்டேட்டின் நிர்வாகியாய் பார்க்க வேண்டிய அலுவல்கள் என்று காதலிக்க நேரமும் சூழலும் கிட்டாமல் அவன் அல்லாடிக் கொண்டிருந்தான்..

இதோ.. உத்ராவும் வினித்தும் சென்னைக்கு திரும்பி விட்டார்கள்.. ரவிச்சந்திரனும் நந்தினியும் வயநாட்டு அரண்மனையிலிருந்து வெளியே வந்து அற்புதத் தனிமையின் ஆளுகையில் சுகித்திருக்கிறார்கள்..

இந்த சுகம் நீடிக்க வேண்டும்.. நந்தினி அவனுக்காக எப்படியெல்லாம் உருகுகிறாள் என்பதை அவன் உணர்வுபூர்வமாக உணர்ந்து விட வேண்டும்..

**“இதுவரை என் இருதயம்..**

**இந்த உணர்வினில் தடுமாறவில்லை..**

**முதல்முறை இந்த இளமையின் சுகம்**

**உணர்ந்ததில் நான் தூங்கவில்லை..”**

நந்தினியின் குரல் உணர்வின் வேகம் தாளாமல் நடுங்கியது.. முதன் முதலாய் காதலை உணர்ந்த காரிகையின் மனதில் எழும் உணர்வுகளை அப்பாடலில் அவள் பிரதிபலித்துக் கொண்டிருந்தாள்..

**“குடையோடு நான் போனேன்..**

**மழையினில் ஏனோ நனைகின்றேன்..**

**கடிகாரம் இருந்தாலும்..**

**காலடி சத்தத்தில் மணி பார்த்தேன்..”**

நெகிழ்ந்த குரலுடன் தலையுயர்த்தி அவனைப் பார்த்தவள்.. தழுதழுத்த குரலுடன்..

**“என் தனிமைக்கு தனிமை**

**நீ வந்து கொடுத்தாய்..”**

என்று அவர்களுக்கு மட்டும் சொந்தமான அந்தத் தனிமையில் தனிமைக்கான அர்த்தத்தை கவித்துவமாக எடுத்துரைத்தாள்..

ரவிச்சந்திரன் கிண்டலாக எதையோ கூறியதில் கலகலத்து அவள் சிரித்தாள்.. அவளது சிரிப்பினில் உண்டான உயிர்ப்பலைகளில் கரை சேர விரும்பாமல் நீந்திக் களித்தான் அவன்..

அவளது சிரிப்பை ரசித்துச் சிரித்த அவன் சிரிப்பில் மயங்கிப் போனவளாக அவனையே பிய்த்துத் தின்று விடுவதைப் போல ஆசையாசையாய் பார்த்து வைத்தாள் அவள்.. அவன் என்னவென்று வினவும் பாவனையில் இமைகளை உயர்த்தி விழிகளைச் சிமிட்டியதில் அவளுக்குள்

'ஜிவ்' வென்ற ஓர் உணர்வு கிளம்பி இன்பமாக இம்சை செய்தது..

**"சிரிப்பிலே.. உன் சிரிப்பிலே..**

**சிறையிலடைக்கிறாய் நான் மீளவில்லை..**

**உறவுகள் ஒன்று சேர்கையில்**

**என்ன ஆகின்றேன் என தெரியவில்லை.."**

நந்தினி நகர்ந்து அவனுடன் பசை போட்டு ஒட்டிக் கொண்டதைப் போல ஒட்டிக் கொண்டாள்.. அவன் மீதான அவளது அதீத காதலின் வெளிப்பாடுகளில் அவனது எல்லைகள் தகர்ந்தன.. காரை வேகம் கூட்டினான்.. அதைக் கவனிக்கும் மனநிலையில் அவள் இல்லை.. அவளது உலகில் அவன் மட்டுமே இருந்தான்.. அவளுடைய ரவிச்சந்திரன்.. அவளின் காதலன்.. அவளைக் காதலிப்பவன்.. அர்த்தமில்லாத உரையாடல்கள்.. எதைச் சொன்னாள் என்று அவளுக்கும் நினைவில்லை.. எதைக் கேட்டான் என்று அவனுக்கும் நினைவில்லை.. ஆழ்ந்த காதலில் அர்த்தமில்லாத உரையாடல்கள் கூட ஓர்விதச் சுகமானவைதான்..

**“உன்னோடு நான் பேசும்**

**ஒவ்வொரு வார்த்தையும்**

**இனிக்கிறதே..**

**உரையாடல் தொடர்ந்தாலும்**

**காலங்கள் கூடப் பிடிக்கிறதே..**

**என் கனவுக்கு கனவு**

**நீ வந்து கொடுத்தாள்..”**

கனவில் மிதப்பவளாய் கண் மூடிச் சொக்கினாள் நந்தினி.. அவனது அருகாமை சுகம் நிறைந்ததாக இருந்தது.. அவளுக்கும் அவனுக்குமான தனிமை இதம் நிரம்பியதாக இருந்தது..

அவளின் அவன்.. இந்த உணர்வுடன் விழிமூடி அவன் தோளில் சாய்ந்திருந்தவள் இன்னமுமா வயநாட்டுக்கு வந்து சேரவில்லை.. என்ற கேள்வியோடு விழி திறந்தாள்.. எதிரே தெரிந்த சாலை வயநாட்டுக்குச் செல்லும் சாலையாக இல்லாததில் திகைத்தாள்..

“பாஸ்..”

“நான் உனக்கு பாஸா..?”

“பின்னே இல்லையா..? என்னைக்குமே நீங்கதானே என்னோட பாஸ்..”

“அசத்தறடி.. இந்தப் பேச்சையெல்லாம் இத்தனை நாளாய் எங்கே ஒளித்து வைத்திருந்த..?”

“என் மனசுக்குள்ள..”

“அடுத்த அசத்தல்..! நந்தினி..!”

“ம்ம்ம்..”

“ஐ லவ் யு..”

போதையுடன் சொன்ன ரவிச்சந்திரனின் குரல் கரகரத்தது.. காதல் அதிகமானால் அவனது குரல் கரகரத்து விடுகிறது என்பதில் நந்தினி அவனது தோள் வளைவில் முகம் புதைத்து முத்தம் கொடுத்தாள்..

“ஏய்ய்ய்..”

அவன் காரை ஓரம் கட்டி நிறுத்தி விட்டான்.. பனி தேசம் என்று வர்ணிக்கப்படும் கேரளாவின் இயற்கை எழில் கொஞ்சும் அழகில் மனம் லயிக்காதவளாய் அவளைத் தேடிக் குனிந்த அவனது முக வசீகரத்தில் மனம் லயித்தாள் நந்தினி..

இளம்பச்சை செடிகளும் ஓங்கி வளர்ந்த மரங்களுமாக ஓர்புறம் இருக்க.. மறுபுறம் சரிவாக இறங்கி பள்ளத்தாக்கில் முடிந்தது..

மலையோரக் காடோரமாக காரை நிறுத்தி விட்டு அவளை இழுத்து வேட்கையுடன் தழுவிக் கொண்ட ரவிச்சந்திரனின் இறுக்கமான அணைப்பில் நந்தினிக்கு மூச்சுத் திணறியது.. அடக்கி வைத்திருந்த ஆவேசத்தை முத்த மழைகளால் பொழிந்து கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

"பாஸ்.."

"சொல்லுடி.."

"இது வயநாட்டுக்குப் போகிற பாதையில்லை.."

"இல்லை.. அதுக்கு இப்ப என்னாங்கிற..?"

அவளைப் போலவே கேள்வி கேட்டு அவளை மயக்கினான் அந்த வசீகரன்.. ஹை டெக் தொழிலதிபன் அவளுக்காக பேசும் முறையை மாற்றிப் பேசியதில் அவள் கள் நிரம்பிய பூவானாள்..

"எங்கே போகிறோம் பாஸ்..?"

"அங்கே போனதும் உனக்கே தெரியும்.."

எங்கே அழைத்துக் கொண்ட போகிறான் என்று தெரியாமலே அவனுடன் பயணிக்க ஆரம்பித்தாள் நந்தினி..

# அத்தியாயம் 191

**ஏ**துவும் பேசாமல் எங்கே நீயோ நானும் அங்கே உன்னோடு என்று அவன் தோளில் தலை சாய்த்து கண் மூடியிருந்தவளின் ஒப்புக் கொடுத்தலில் உள்ளம் உருகிப் போயிருந்தான் ரவிச்சந்திரன்..

‘நீயே சகலமும்..’

அடிக்கடி இதையே உணர்த்திக் கொண்டிருந்தாள் நந்தினி... அவனிடம் அடைக்கலமாகியிருந்தாள்... அவனுடைய காதலை நம்பாமல் சந்தேகித்தவள்.. காதலாகி கசிந்துருகிக் கொண்டிருந்தாள்..

கார் சீரான பாதையில் விரைந்து கொண்டிருந்தது.. காதலில் கண்மூடியிருந்தவளின் விழிகளில் துயில் வந்து துயில் கொண்டதில் அவள் மெல்லத் துயிலில் அமிழ ஆரம்பித்தாள்.. அவளது உறக்கத்தை உணர்ந்த ரவிச்சந்திரன் காரைக் குலுக்காமல் மிதமான வேகத்துடன் அலுங்காமல் குலுங்காமல் தேரைப் போல ஓட்டிச் சென்றான்.. துயில் கலைந்து நந்தினி கண் விழித்துப் பார்த்தபோது இருள் சூழ்ந்த

பாதையில் நடுவே விளக்கின் ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியபடி கார் விரைந்து கொண்டிருந்தது..

“முழிச்சிட்டியா..?” கரிசனத்துடன் வினவினான் ரவிச்சந்திரன்..

“ம்ம்ம்..” அவன் தோளிலிருந்து தலையை விலக்காமல் பதில் சொன்னாள் நந்தினி..

“பசிக்கலை..”

“இதைச் சொல்கிறது நீதானா நந்தினி..? நம்ப முடியலை..”

“என்னன்னு தெரியலை பாஸ்.. உங்க பக்கத்தில இருக்கும் போது பசி, தூக்கம் மறந்து போயிருது..”

“மறந்து போயிருதா..? இல்லை.. பறந்து போயிருதா..?”

“ரெண்டும்தான்..”

“இப்பத் தூங்கினியே..”

“என்னை அறியாமத் தூங்கினதுதான்.. இப்படித் தூங்கினாத்தான் உண்டு பாஸ்.. தூங்கனும்னு தூங்க முடியறதில்லை..”

குழந்தையாகச் சொன்னாள் நந்தினி.. காதலின் வெளிப்பாடுகளை உணர முடியாத குழந்தைத்தனம் கொண்டவளின் மீது அவனுடைய பிரியம் அதிகரித்தது.. சாலையோரத்தில் வண்ண மயமான விளக்குகளுடன் மின்னிய உயர்தர உணவகம் ஒன்றின் முன்னால் காரை நிறுத்தினான்..

“வா.. சாப்பிடலாம்..”

“ம்ம்ம்..”

ரவிச்சந்திரனுடன் கை கோர்த்து உணவகத்தில் நுழைந்த போது அவளுக்கு சந்தோஷமாக இருந்தது.. அவன் மீதான அவளுடைய காதலை ஒப்புக் கொண்ட பின்பு இப்போதுதான் அவர்கள் இருவரும் தனித்திருக்கிறார்கள்.. அதுவரை உத்ராவும் வினித்தும் உடன் இருந்தார்களே..

இவன் என்னுடையவன் என்ற கர்வத்துடன் அவன் விரல் பற்றி நடந்தவளுக்குப் பெருமையாக இருந்தது.. எதிரும் புதிருமாக உட்காரப் போனவளை அவன் விழிகளால் அதட்டித் தன்பக்கமாக இழுத்துக் கொண்டான்..

“ஏன்..? உத்ராவும் வினித்தும்தான் இல்லையே..” என்று சந்தேகம் கேட்டு விட்டு..

“தத்தி.. தத்தி..” என்ற திட்டுக்களை வாங்கிக் கட்டிக் கொண்டாள் நந்தினி..

“சும்மா சும்மா தத்தி, தத்தின்னு சொல்லாதீங்க பாஸ்..” மூக்கை உறிஞ்சினாள்..

“இப்படிக் கேள்வி கேட்டா வேற எப்படிச் சொல்கிறதாம்..?”

“என்னத்தைக் கேட்டேன்..? நீங்க சொன்னதைத் தானே கேட்டேன்..”

“என்ன சொன்னேன்..?”

“உத்ராவும் வினித் அண்ணாவும் நியுலி மேரிட் கப்புள்.. அவங்க பக்கத்தில பக்கத்தில உட்கார்ந்துக்கனும்.. அதனால நாம பக்கத்தில பக்கத்தில உட்கார்ந்துக்கனும்.. அப்படின்னு சொன்னீங்க..”

“ஓ..”

“என்னத்தை ‘ஓ’.. மலையாள தேசத்தில இதையொன்னை கண்டு வைச்சிருக்கீங்க.. எதுக்கெடுத்தாலும் ‘ஓ’ தான்..”

“நான் ‘ஓ’ போடறதில உனக்கென்னடி வருத்தம்..?”

“ஒரு வருத்தமுமில்லை.. மாறி மாறிப் பேசிட்டு என்னைத் ‘தத்தி’ங்கிறிங்க பாருங்க.. அதிலதான் வருத்தம்..”

“தத்தியை தத்தின்னுதான் சொல்ல முடியும்.. மக்கு, மக்கு..”

“இந்தப் பட்டம் வேறயா..?”

“அடேங்கப்பா.. நீ பட்டம் கொடுக்காத ஆள்தான்.. எனக்குக் ‘கம்மாண்டர்’ன்னு நிக்நேம் வைத்தவதானடி நீ.. இப்ப என்ன பெயர் வைத்திருக்க..?”

இமை சிமிட்டி அவன் கேட்டான்.. எங்கிருந்தோ வெட்கம் வந்து நந்தினியின் முகத்தில் அப்பிக் கொள்ள அவள் முகம் சிவந்தாள்.. ரவிச்சந்திரன் அதை ரசனையுடன் பார்த்தான்..

“சொல்ல மாட்டேன்..” உதட்டைக் கடித்தபடி அவள் தலையை அசைத்தாள்..

“சொல்லாம நான் விட மாட்டேன்..”

“என்னத்தை செய்வீங்களாம்..”

“எதுவும் செய்வேன்..”

“ஃபார் எக்ஸாம்பிள்..?”

“காதைக் கொடு..”

அவளது காதோரமாக சரிந்து செவிமடல்களில் அவனது மீசை உராய கிசுகிசுத்தான் அவன்.. முகத்தில் ரத்தம் பாய..

“ச்சீய்..” என்று அவன் கையைக் கிள்ளினாள் அவள்..

“ஹா.. ஹா..”

“என்னவெல்லாம் பேசறிங்க..”

“இதுக்கு மேலேயும் பேசுவேன்.. பேசவா..?”

“வேண்டாம், வேண்டாம்..”

“அந்த பயம் இருந்தா எனக்கான நிக் நேம் என்ன என்கிறதை நீ சொல்லியாகனுமே..”

நந்தினி உதட்டைக் கடித்தபடி தலை சாய்ந்து அவனைக் காதலுடன் பார்த்தாள்.. ஈரம் படிந்த அவளது செம்பவள இதழ்களில் முத்தமிடும் ஆசை அவனுக்கு வந்தது.. இதுபோன்ற காதலுடன் எந்தப் பெண்ணும் அவனைப் பார்த்ததில்லை.. அவர்களின் காதலே வேறு விதமானது.. ரவிச்சந்திரன் என்ற கோடிஸ்வர ராஜகுமாரனின் கடைக்கண் பார்வை கிடைத்தால் கிடைக்கப் போகும் பெயரையும், புகழையும் மனதில் இருந்திய காதல் பார்வைகள் அவை..

“கலாபத் காதலன்..!” கிறக்கத்துடன் சொன்னாள் நந்தினி..

மயக்கத்துடன் அவள் பார்த்த பார்வை அவனை வலை போட்டு இழுத்தது.. சொக்கனிடம் சொக்கிப் போன மீனாட்சியாக அவனிடம் சொக்கிப் போயிருந்தாள் அவள்..

“ஏய்ய்ய்..”

ரவிச்சந்திரன் தாபத்துடன் அவளை நெருங்கினான்.. அவள் எதிர்பார்க்காத தருணத்தில் அவளது கன்னத்தில் முத்தமிட்டான்..

“ஸ்ஸ்.. ஹோட்டல்..”

அவன் மார்பில் கை வைத்துத் தள்ளி விட்டாள் நந்தினி..

“இதுக்குத்தான் என் பக்கத்தில் உட்காரச் சொன்னேன்.. நான் சொல்லாமலே என் பக்கத்தில் நீ உட்கார்ந்திருக்க வேண்டாமா..? உத்ராவும் வினித்தும் நியுலி மேரிட் கப்புள்னா.. நீயும், நானும் லவ்வர்ஸ்..! மனசிலாயி..”

“மனசில வைச்சுக்கறேன் பாஸ்..”

“எதை..?”

“உங்களை..”

ஒற்றை வார்த்தையில் அவனை சிறை பிடித்தான் நந்தினி.. இவள் இப்படிக்கூடப் பேசுவாளா என்று அவன் ஆச்சரியப்பட்டுப் போனான்..

“என்னை மனதில் வைத்திருக்கிறவ எதற்காக எதிரில் உட்காரப் போனாளாம்..?”

“அதுக்குத்தான் ‘தத்தி’ பட்டம் கொடுத்தாச்சே..”

நந்தினி கோபம் போலச் சொன்னாள்.. ரவிச்சந்திரன் குழைந்தான்..

“கோபமாடி..?”

“இல்லேன்னு பொய் சொல்லச் சொல்கிறீங்களா..?”

“என் மேல கோபப் படுவியா..?”

“படுவேன்..”

“ஆர் யு ஷ்யூர்..?”

“யெஸ் பாஸ்.. ஐ ஆம் ஷ்யூர்..”

“எங்கே.. கோபப்படு.. பார்க்கலாம்..”

நந்தினி கோபப்பட முயன்றாள்.. உர்ரென முகத்தை வைத்துக் கொண்டவளின் முகத்தோடு முகம் வைத்து அவன்

ஈஷியதில் அவளது பொய் கோபம் புறமுதுகு காட்டி ஓடி விட்டது.. ஆசையுடன் அவனைப் பார்த்தவளைப் பார்த்தவனின் கண்கள் மின்னி..

“இதுதான் கோபமா..?” புருவங்களை உயர்த்தினான்..

“பாஸ்..” மயக்கத்துடன் அவன் கையில் முகம் புதைத்தாள்..

“ஆர்டர் ப்ளீஸ்..” சர்வர் வந்து நின்றான்.. பேருக்கு என்று தள்ளி உட்காருவதைப் போல அவள் பாவனை செய்தாள்.. அவன் அதையும் செய்யவில்லை.. அவள் மீது கவிழ்ந்தபடி மெனுகார்டை எடுத்தான்.. அவள் மீது சாய்ந்தபடி எது எது வேண்டும் என்று கேட்டான்.. அவள் மீது உராய்ந்தபடி உணவு வகைகளின் பெயர்களைக் காட்டினான்..

‘செம நைட் ஷோ..’ இளம் வயது பேரர் ஆர்டர் எடுப்பதை மறந்து ‘ஆ’ வென பார்க்க ஆரம்பித்தான்..

இது வேண்டும், அது வேண்டாம் என்று இருவரும் ஈஷிக் கொண்டு வழக்கடித்தார்கள்.. கட்டக் கடைசியில் உங்களுக்குப் பிடித்த உணவு வகைகளையே கொண்டு வரச் சொல்லுங்கள் என்று நந்தினி சொன்னதுதான் ஹைலைட்..

‘இதுக்கு எதுக்கு அப்பிக்கனும்..?’ பேரரின் சந்தேகத்தை தீர்க்க எவருமில்லை..

அந்த பேரர் சில நாள்களுக்கு முன்னர்தான் அங்கே வேலைக்குச் சேர்ந்திருந்தான்.. இது போன்ற அப்புதலை இப்போதுதான் முதன் முறையாக பார்க்கிறான்.. சமையல் அறைக்குச் சென்றவன்.. அவன் கண்ட காட்சியைப் பற்றி அங்கே பிரஸ்தாபிக்க..

“ஓ..! இதி வல்லிய காட்சியோ..? இதி விட வல்லிய காட்சிகள் பலதை ஞான் நோக்கி..” என்றான் அங்கிருந்த சீனியர் பேரர்..

பேரர் உணவுவகைகள் பரப்பிய தட்டுக்களைச் சுமந்து கொண்டு போன போது ரவிச்சந்திரனும் நந்தினியும் முகத்தோடு முகம் வைத்து ரகசியம் பேசிக் கொண்டிருந்தார்கள்.. அதி முக்கிய ரகசியம் போல என்று நினைத்துக் கொண்டான் அந்த பேரர்.. கிட்ட நெருங்கும் போது ..

“யு ஆர் ஸோ ஸ்வீட்..”

“உங்களை விடவா..?” என்ற பேச்சுக்கள் காதில் விழுந்ததில் இதுதான் அந்த அதி முக்கிய ரகசியமா என்று நொந்து போனான் பேரர்..

உணவுத் தட்டுக்களை அவன் டேபிளில் கடை பரப்பிக் கொண்டிருக்க.. அவற்றுக்கும் தங்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை என்பதைப் போல ரவிச்சந்திரனும் நந்தினியும் கொஞ்சிக் கொண்டிருந்தவர்கள்.. பேரருக்கு பொறாமையாக இருந்தது.. அவனும்தான் ஆன மட்டும் முயற்சி செய்து பார்த்து விட்டான்.. ஒரு காதலிகூட அகப்படவில்லை..

‘இந்தாளுக்கு மட்டும் எப்படி படிஞ்சிருக்குன்னு பாரு...’

நந்தினியை அவன் நோட்டம் விட்டதை நல்ல வேளையாக ரவிச்சந்திரன் ‘நோட்’ பண்ணவில்லை.. அதனால் தப்பிப் பிழைத்திருப்பதை உணராதவனாக பெருமூச்சுடன் அங்கிருந்து அகன்றான் பேரர்.. அவன் தமிழ்நாட்டிலிருந்து வந்தவன்..

“ஈ மலையாள நாட்டு மக்கள் டீக்கடை வைத்துப் பிழைக்க தமிழ்நாட்டுக்குப் போயி.. நீ எந்துக்கு சர்வர் ஜோலி பாக்க ஈ மலையாள நாட்டுக்கு வந்து..?” என்ற கேள்விக்கு..

“எனிக்கு எங்க ஊரில எந்த ஜோலியும் கிட்டலை..” என்று பொய் சொல்லியிருந்தான்..

“எண்ட ஊரில இருக்கிற சுந்தரிகள் எவரும் என்னைத் திரும்பிப் பார்க்கலையல்லோ.. அதினால நிங்க மலையாள தேசத்து சுந்தரிகளில எவளையாது நோக்கி நூல் விட்டுக் கணக்குப் பண்ணனும்னு இங்ஙன ஜோலி பார்க்க வந்திருக்கிறேனல்லோ..” என்ற உண்மையை அவன் சொல்லியிருந்தால்..

“இங்ஙன உனிக்கு எந்த ஜோலியும் இல்லையல்லோ..” என்று முதுகில் டின் கட்டித் துரத்தியடித்திருப்பார்கள்..

அவ்வாறு மலையாள சுந்தரியை மடிக்க நினைத்திருந்தவனுக்கு மலையாள சுந்தரிகளை விடப் பேரழகியான ஒருத்தியை ஒருவன் மடித்துத் தன் கைபிடிக்குள் பொட்டலம் கட்டி வைத்திருந்ததில் பொறாமை வராதா..?

நந்தினிக்கு மட்டும் அவள் மலையாள சுந்தரிகளைவிட வல்லிய (பெரிய) சுந்தரியென்று அந்த பேரர் நினைத்திருந்ததைப் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.. அவனுக்குப் பிராந்தை (பைத்தியம்) தான் என்று முடிவு கட்டியிருப்பாள்..

“ஞான் சுந்தரி யென்பதிலேயே எனிக்கு வல்லிய சம்சயம் (சந்தேகம்) உண்டு.. இதில ஞான் வல்லிய சுந்தரியோ..?” என்று எகிறிக் குதித்திருப்பாள்..

தன் அழகைக் குறித்த பிரக்ஞை சிறிதும் இல்லாதவளாக ரவிச்சந்திரனையே பருகு, பருகு எனப் பார்த்தபடி இருந்த நந்தினியின் மாசு மருவில்லாத பேரழகில் மயங்கிப் போயிருந்தான் ரவிச்சந்திரன்.. இருவரும் ஒருவருக்கொருவர் ஊட்டி விட்டுக் கொள்ளாத குறையாக சாப்பிட்டு முடித்தார்கள்.. கை கழுவிய ரவிச்சந்திரன் டிஷ்யூ பேப்பரைப் புறக்கணித்து விட்டு நந்தினியின் துப்பட்டாவில் கை துடைத்தான்.. அது போதாது என்று நந்தினி தன் துப்பட்டாவினால் அவனுடைய வாய் துடைத்து விட்டாள்..

இவர்கள் அடித்த லூட்டியைப் பார்த்தபடி தட்டுக்களை எடுத்த பணியாள் அதை நழுவ விட இருந்த கடைசியில் ‘கேட்ச்’ எனக் கைப்பற்றித் தப்பித்தான்..

இப்படியாகத்தானே ஓட்டலில் வேலை செய்பவர்களுக்கு சோதனை மேல் சோதனையைக் கொடுத்து விட்டுக் காரில் ஏறிக் கிளப்பிய ரவிச்சந்திரனின் தோள் மீது தலை சாய்த்துக் கொண்டாள் நந்தினி..

# அத்தியாயம் 192

**மு**டிவேயில்லாமல் அந்தக் கார்ப்பயணம் நீண்டு கொண்டே போக வேண்டும் என்று விரும்பினாள் நந்தினி.. அவளது விருப்பத்தை உணர்ந்தவனைப் போலக் காரை நிறுத்தாமல் ஓட்டிக் கொண்டே இருந்தான் ரவிச்சந்திரன்.. எங்கே போகிறோம் என்று அவளும் கேட்கவில்லை.. அவனும் சொல்லவில்லை.. அக்கம், பக்கம் யாருமில்லாத தனிமையிலே அவன் தோள் சாய்ந்திருந்தாலே போதும் என்றிருந்தது அவளுக்கு..

அவனுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும்.. அடிக்கடி முகம் திருப்பி அவளது உச்சந்தலையில் முத்தம் பதித்துக் கொண்டே இருந்தான்.. முத்தங்களின் ஸ்பரிசத்தில் மட்டும் இமைகளை மூடித் திறப்பாள் நந்தினி.. மற்ற தருணங்களில் இமை மூடாமல் மெல்லிய குரலில் அவனுடன் பேசிக் கொண்டே இருந்தாள்..

வாய் ஓயாத பேச்சு.. வாய் வலிக்கவில்லையா என்று அவன் கேட்கவேயில்லை.. அவனும் வாய் ஓயாமல் பேசிக் கொண்டுதான் இருந்தான்.. இருவரும் ஒருவர்

மனதிலிருந்ததை மற்றவர்களிடம் பகிர்ந்து கொண்டார்கள்.. பகிர்ந்து கொள்ள இத்தனை விவரங்களை மனதில் பதுக்கி வைத்திருந்தோமா என்று மலைத்துப் போனார்கள்..

நந்தினிக்கு ரவிச்சந்திரனிடம் சொல்வதற்கு ஏராளமான விவரங்கள் கொட்டிக் கிடந்தன.. அவளது ஊர்.. பூர்விக கிராமம்.. அங்கே வீடுதோறும் குவிந்திருக்கும் உறவினர்கள்.. தாத்தா, பாட்டி, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பா, சித்தி, அத்தை, மாமா என்று அவள் மனப்பாடம் பண்ணி மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டிய அளவுக்கு ஊர் முழுக்கப் பரந்திருக்கும் உறவினர் பட்டாளம்.. மேகநாதனின் பண்ணையார் அந்தஸ்து.. அங்கிருக்கும் தோப்பு, துரவுகள்.. காவிரியாறு.. கிராமத்து சிநேகிதிகள்.. தஞ்சையில் அக்கம் பக்கத்து வீடுகளில் இருக்கும் சிநேகிதிகள்.. சென்னையில் கல்லூரிக் காலத்து நினைவுகள்.. சிநேகிதிகள்.. உயிர்த் தோழியான உத்ரா..

தஞ்சையிலிருக்கும் அவளது தம்பி நந்தகுமார்.. அவனது அட்டூழியம்.. அடாவடி.. என்று பேச்சுச் சுரங்கமாய் கொட்டிக் கவிழ்த்துக் கொண்டிருந்தாள்..

அவள் பேசிய விவரங்களை விட.. அதை சுவராஸ்யமாக்கி அவள் பேசிய விதம்தான் அவனைக் கவர்ந்தது.. அவளுடன் இருக்கும் நொடிகளை அவள் உயிர்ப்பாக்கிக் கொண்டிருப்பதை அவன் உணர்ந்தான்.. அவள் மெல்லிளம் தென்றலாக இருந்தாள்.. பனி பொதிந்த கேரளத்தின் குளிர்ச்சி அனைத்தையும் தன்னுள் அடக்கியவளாக அவனுக்குள் மோகத்தீயை மூட்டி விட்டாள்.. குளிர் நிரம்பியவளை ‘குளிர்காய வா..’ என அழைக்கும் தனைப்பாக மாறிக் கொண்டிருந்தான் ரவிச்சந்திரன்..

அவனுடைய சிறு பிராய்த்து நினைவுக் குவியல்களைக் கிளறியெடுத்து முத்து முத்தான சம்பவங்களைக் கோர்த்து இணைத்து அவளிடம் சொன்னான்.. எப்படி சுவராஸ்யமாக கதை சொன்னாளோ.. அதைப் போல படு சுவராஸ்யமாக அவள் கதை கேட்டாள்..

‘இவள் ஊக்க சக்தி..’

ரவிச்சந்திரனின் மனம் காதலில் திளைத்தது.. இருள் விலகி மெல்லிய வெளிச்சப் படலம் தெரிவதைக் கண்ட நந்தினி வியப்புடன்..

“விடியுது..” என்று சொன்னாள்..

“விடியாம என்ன செய்யும்..? நைட்டுன்னு இருந்தா டே டைம் வந்துதானே தீரும்..?”

பெரும் வாழ்க்கைத் தத்துவத்தை வெகு இயல்பாக சொல்லி வைத்தான் ரவிச்சந்திரன்..

பனிபடர்ந்த கேரளத்தில் இரவு முழுவதும் விழித்திருந்து விடியலை அருகில் பார்க்கும் பாக்கியம் பெற்ற தான் அதிர்ஷ்டசாலி என்று மகிழ்ந்து போனாள் நந்தினி..

‘மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் டிராவல் பண்ணி வந்த போதும் இப்படித்தான்.. ஜர்னி முழுக்க நான் தூங்கலை..’

அன்று அவள் தூங்காமலிருந்ததிற்கு காரணம் வேறு.. ரவிச்சந்திரனும் அவளும் மட்டுமே அந்த கூஃபேயில் இருந்தார்கள்..

புதிய மனிதன் என்ற பயத்திலும் வீட்டை விட்டு வெளியேறி விட்டாளே என்ற தவிப்பிலும் அவள் தூங்கவில்லை..

இன்னொன்றும் உண்டு.. அன்று.. அவள் மட்டும் தான் தூங்கவில்லை.. ரவிச்சந்திரன் தூங்கினான்.. இன்றோ அவன்

தூங்காமல் காரை ஓட்டிக் கொண்டிருக்கிறான்.. நந்தினி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கிறாள்..

காரின் முன்பக்கக் கண்ணாடியின் வழி தெரிந்த கேரளத்தின் இயற்கை அவளைக் கவர்ந்தது.. எத்தனை முறை வியந்தாலும் அலுக்காத அழகு.. பனி பொழியும் மலை தேசம்.. கேரளத்தின் இயற்கை மிகப் பெரும் போதை என்பதை உணர்வு பூர்வமாக உணர்ந்தவள் நந்தினி.. நீலிமலைக் காட்டையும் மீன் முட்டி அருவிகளையும் மறந்து விட முடியுமா..? அவை தந்த போதையில் மயங்கிப் போய் ரவிச்சந்திரனின் அணைப்பில் அடங்கினாளே..

மாசில்லாத சுத்தமான காற்று மலைப் பகுதிக்கே உரிய வரம்.. மாசில்லாத அழகையும் தன்னகத்தே சேர்த்துக் கொண்டிருந்தத கேரள மலைநாடு.. எங்கு பார்த்தாலும் சிகப்புக் கம்பள வரவேற்பு என்பதைப் போல.. பச்சைக் கம்பள வரவேற்பு.. பச்சைப் பசேலென்ற செடி கொடிகள்.. மூங்கில் பினைத்த பாதைகள்.. கொடி வீடுகள் என மனதை மயக்கத்தில் ஆழ்த்தும் சக்தி கொண்டது கேரளத்தின் இயற்கை அழகு..

கேரளத்துச் செடிகளின் இளம் பச்சை நிறம் மனதுக்குள் உற்சாகத்தை விதைத்தது.. ஓங்கி வளர்ந்த மரங்களின் அடர்த்தி கதிரவனின் கதிர்களை மறைத்து பனியின் ஈரத்திலேயே வைத்துத் தரையைக் கதிரவனின் கதிர்களில் குளிர்காய விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது.. பனிப் புகை சூழ்ந்த சாலையில், பனிப்புகையிலிருந்து வெளிச்ச கோடுகளாய் விளக்குகளின் ஒளி வெள்ளம் பாய்ச்சி வாகனங்கள் வெளிப்பட்டன..

“எங்கே வந்திருக்கோம்..?”

எங்கே போகிறோம் என்று கேட்டவள் அங்கே போனதும் உனக்கே தெரியும் என்ற பதிலில் எதுவும் கேட்காமல் அமைதியாகி விட்டு இரவுப் பயணம் முடிந்த விடியலில் எங்கே வந்திருக்கிறோம் என்று கேட்கிறாள்..

‘இதுதான் காதலா..?’

அவளது பட்டுக் கன்னத்தில் மின்னல் வேகத்தில் முத்தமிட்டுப் பிரிந்தவன்..

“அங்ஙன நோக்கு..” என்றான்.. அண்ணலும் நோக்கினான்.. அவன் நோக்கிய பாதையில் அவளும் நோக்கினாள்..

'ஆ' வென வாய் பிளந்து, இகைளைச் சிமிட்ட முடியாமல் கண்முன் தெரிந்த காட்சியின் பேரழகில் பிரமித்துப் போனவளாக பேச முடியாமல் வாயடைத்துப் போய் உட்கார்ந்து விட்டாள்..

'வாவ்..!' குதூகலித்தது அவள் மனம்.. இமைகளைச் சிமிட்டினால் அந்தப் பேரழகு மறைந்து போய் விடுமோ என்று

அஞ்சியவளைய் விழிகள் விரிய உட்கார்ந்திருந்தவளின் தோள் தொட்டு அசைத்தான் ரவிச்சந்திரன்..

"பாஸ்.."

அதற்கு மேல் பேச முடியாத பரவசத்தில் அவள் இருந்தாள்.. நீலிமலைக் காட்டின் மீன் முட்டி அருவிகளைப் பார்த்தபோது ஏற்பட்ட அதே பிரமிப்பு இப்போதும் ஏற்பட்டது.. எத்துனை மனரோ ரம்யமான காட்சி..!

நீலிமலைக் காட்டில் மரவீட்டைப் பார்த்ததும் 'ஆ' வென வாய் பிளந்து நின்றிருக்கிறாள்.. இங்கே கண்ணெதிரே அலையடிக்கும் நீர்ப்பரப்பின் மீது வரிசை கட்டி நின்றிருந்த படகு வீடுகளின் அணிவகுப்பில் சிலிர்த்து விட்டாள்..

"பாஸ்..! என்ன பாஸ் இது..!"

“ம்ம்ம்.. பார்த்தாத் தெரியலை..? படகு வீடு..!”

“அதைத்தான் கேட்கிறேன்.. நாம் என்ன காஷ்மீருக்கா வந்திருக்கிறோம்..?”

நந்தினியின் விழிகள் பனிக்கட்டிகளால் போர்த்தப்பட்ட மலைகளைத் தேடின.. அதில் சறுக்கி விளையாட வேண்டும்... அவளும், அவளுடைய அரவிந்தசாமியான கம்மாண்டரும் பனிக்கட்டிகளை அள்ளியள்ளி ஒருவர்மீது ஒருவர் வீசி மகிழ வேண்டும்..

எங்கே..? அதற்குமேல் கற்பனைச் சிறகை விரித்துப் பறக்க முடியாமல் அவன்..

“அறிவுக் கொழுந்து..!” என பட்டம் கொடுத்து விட்டானே..

‘இது எதுக்காம்..?’ அவள் மனம் சிணுங்கியது..

“அடிக்கடி உன் அறிவை புரூவ் பண்ணிக்கிட்டே இருக்கக் கூடாதுடி..”

வாரினாலும் காதலனாக ‘டீ’ சொல்லித்தான் வாருகிறான் என்பதில் ஓர் இன்பச் சிலிர்ப்பை உணர்ந்தவளாக..

“போங்க பாஸ்..” என்னோட அறிவின் லெவலை கோல்டு மெடல் வாங்கிப் ‘புரூவ்’ பண்ணிட்டேனாக்கும்..” என்று பொய் கோபம் காட்டினாள் நந்தினி..

“அதைத்தான் எஜுகேசனல் மிராக்கிள்ன்னு நான் சொல்லிட்டேனே..”

“ஆமாமாம்.. இவர் கண்டாரு..”

“உன்னைக் கண்டுக்கிட்டு இருக்கேனே.. போதாதா..?”

“எந்தக் காதலனும் இப்படிக் கண்டுக்கிட்டு இருக்க மாட்டான்.. சான்ஸ் கிடைச்சாப் போதும்.. காலை வாரி தொபுக்கடிர்ன்னு மண்ணைக் கவ்வ வைச்சிடறீங்க..”

“பின்னே என்னடி..? லேட் நைட்டில காரில் புறப்பட்டு விடிகிறப்ப காஷ்மீரில் போய் நின்று விடுவியா..? கேட்டாலும் யோசித்துக் கேள்வி கேட்கனும்.. உனக்கு மேல் மாடி காலிங்கிறதை அடிக்கடி புரூவ் பண்ணக் கூடாது..”

“அப்ப இது காஷ்மீர் இல்லையா..?”

படகு வீடுகளை பார்த்தாள்.. பல வடிவங்களில் அவை நீரில் மிதந்து கொண்டிருந்தன..

“காஷ்மீர் தால் ஏரியிலதானே படகு வீடுகள் இருக்கும்..?”

“ஆலப்புழா வேம்பனாடு ஏரியிலயும் படகு வீடுகள் மிதந்துக்கிட்டு இருக்கும்..”

‘ஆஹா..!’

ஆனந்தத்துடன் படகு வீடுகளைப் பார்த்தவளுக்கு இதுவல்லவோ ஆலோக சொர்க்கம் என்று தோன்றியது..

காயல் (கடல்)களின் மீது பயணம் செய்வது என்பது அற்புதமான பயணமல்லவா..?

“ஆலப்புழாவில இருந்து கொச்சிக்கு நீர்வழிப் பயணமா போயிருக்கியா..?”

“நல்லாக் கேட்டிங்க போங்க.. காவேரிக்கரையில பிறந்து வளர்ந்த செந்தமிழ்நாட்டுத் தமிழச்சிகிட்டக் கேட்கிற கேள்வியா இது..? எங்க ஊரு ஆத்தில குதிச்சு இக்கரையில இருந்து நீந்தி அக்கரையைத் தொட்டிருக்கிறேன்.. அதுதான் என்னோட நீர் வழிப் பயணம்.. கடல்ன்னா எப்படியிருக்கும்ன்னு சென்னையில படிக்க வந்ததுக்கு அப்புறம் மெரினா பீச்சைப் பார்த்துத்தான் தெரிஞ்சுக்கிட்டேன் பாஸ்..”

“கெட்டிக்காரிதான் போ.. ஸோ.. கடல்ன்னா எப்படியிருக்கும்ன்னு உனக்கு விளக்கத் தேவையில்லைன்னு சொல்லு..”

‘அந்த அளவுக்கு நான் தத்தியாயிருப்பேன்னு நினைச்சுக்கிட்டு இருக்கான்..’

இதற்காக அவள் வீடு கட்டி சண்டை போட்டிருக்க வேண்டும்.. அவள் செய்யவில்லை.. அவன் என்னவோ அவளுக்குப் புகழாரம் சூட்டி விட்டதைப் போலக் காதலுடன் அவனைப் பார்த்தாள்..

இரவு முழுவதும் காரை ஓட்டி வந்த களைப்புத் தெரியாமல் சுறுசுறுப்புடன் இருந்தவனின் அழகான முகத்தின் அதீத கவர்ச்சியில் அவள் மனம் அலைமேல் படகாக தடுமாறியது..

“என்னடி இப்படிப் பார்க்கிற..? என்னைக் கட்டிக்கனும்.. போல இருக்கா..?” அவனது புருவங்கள் உயர்ந்து இறங்கின..

அவளுக்கு அப்படித்தான் இருந்தது.. மனதைக் கட்டுப் படுத்த வேண்டும் என்ற பதட்டமின்றி அவள் மனம் போல மனம் மயங்கினாள்.. அவளுக்கு அவன் சொன்னதைப் போலதான் இருந்தது.. மனதை மறைக்காமல் ‘ஆமாம்’

என்பதைப் போல அவள் முகம் சிவக்கத் தலையை ஆட்டி விட்டதில் அவனது விழிகள் மின்னின..

“ஹேய்ய்..”

அவளது தோளில் கை போட்டு இழுத்துக் கொண்டான்..

“கட்டிக்கடி..” அவளது காதோரமாக முணுமுணுத்தான்..

“நான் உனக்குத்தான்.. இஷ்டம் போலப் பிய்த்துத் தின்னுக்க..”

நந்தினி இந்த உலகத்திலேயே இல்லை.. ஜிவ்வென்று ரத்தம் சூடேற.. இறக்கையின்றி வானில் பறந்தாள்.. எட்டாக்கனியென்று எட்டி நின்றவளின் கையில் ‘இந்தா வைத்துக் கொள்..’ என்று அவன் தன்னையே தந்து விட்டானே.. அவளது செவி மடல்களில் உராய்ந்த அவனது மீசை முடிகளும், இதழ்களின் ஸ்பரிசமும் அவளை கிறங்க வைத்தன..

“ரவி..” தாள முடியாத தாபத்துடன் அவள் முணுமுணுத்தாள்..

“ரவிதாண்டி.. உன் ரவிதான்.. உனக்கு மட்டும் சொந்தமான ரவிதான்.. நான் உனக்கே உனக்குத்தான்..”

மந்திரம் போல அவன் உச்சரித்ததில் உத்வேகம் கொண்டவளாய் அவன் கழுத்தை வளைத்து வேகத்துடன் இழுத்தாள் நந்தினி.. விருப்பத்துடன் உடன்பட்டவனின் பிடறி முடியை அவளது கைகள் இறுக்கிப் பிடித்தது அவனுக்கு இம்சையாக இருக்கவில்லை.. இன்பமாக இருந்தது.. ஆவேசத்துடன் அவனது முகமெங்கும் முத்தங்களைப் பதித்தவளின் காதலின் வேகத்தில் தன்னை ஒப்புக் கொடுத்தான் ரவிச்சந்திரன்..

அழகான நொடிகள் அவை.. ஆலப்புழாவின் வேம்பனாடு ஏரியின் அருகே.. மனதை கொள்ளை கொள்ளும் படகு வீடுகளின் அணி வகுப்புகளுக்கு எதிரே.. அவனுக்காக அவள் உருகித்தவித்து ஒன்று சேரத் துடித்த நொடிகளை அவன் உணர்ந்து கொண்ட அற்புதமான தருணம் அது..

“நீங்க எனக்கே எனக்குத்தான..?” நம்ப முடியாமல் அவள் கேட்டாள்..

கேரளத்தின் ராஜகுமாரனனான அந்தப் பேரழகன் அவளுக்கு மட்டும் சொந்தமானவனா..? அது உண்மையா..?

உண்மைதான் என்று அவளது கன்னத்தில் முத்தமிட்டான் அவன்.. நான் உனக்கே உனக்குத்தான் என்று வாக்களித்தான்..

காதல்தான் எத்தனை இனிமையானது..! சக்தி வாய்ந்தது..! தஞ்சையில் பிறந்து வளர்ந்த நந்தினியை வயநாட்டில் கொண்டு வந்து நிறுத்தி வயநாட்டு ரவிச்சந்திரனைத் தன் முந்தானையில் கட்டிப் போட்டு விட்டதே..

# அத்தியாயம் 193

**சி**லுசிலுவென ஈரப் பசையுடன் கூடிய காற்று உடலுக்கும், மனதுக்கும் புத்துணர்வைத் தந்தது.. மனதை வருடும் காற்றில் சிலிர்த்துப் போனாள் நந்தினி.. அவள் தோளில் போட்டிருந்த துப்பட்டா பறந்து ரவிச்சந்திரனின் முகத்தை மூடியது.. அதை விலக்க மனமில்லாமல் இழுத்துத் தன் கழுத்தில் அவன் சுற்றிக் கொண்டு இழுக்க.. துப்பட்டாவை பறக்க விடாமல் இறுக்கிப் பிடிக்க முயன்ற நந்தினி அவன் கை வளைவுக்குள் வந்தாள்.. அவளது முகத்தோடு முகம் வைத்துக் கண்ணோடு கண் பார்த்தவனின் ஆழ்ந்த பார்வையில் அவள் கிறங்கித் தவித்தாள்..

ஓர் பார்வையில் அவள் தடுமாறும் தடுமாற்றத்தை ரசித்தான் ரவிச்சந்திரன்.. மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் சின்னஞ்சிறு பெண்ணாக சிறுபிள்ளைத்தனம் மாறாமல் அவனுடன் சண்டையிட்டுக் கொண்டு வந்த நந்தினியா இது என்று வியந்து போனான்..

நீலிமலைக்காட்டில் அவன் காதல் சொன்னபோது அவள் விழிகளில் வந்த மிரட்சி இப்போது இல்லை.. அவன் மீதான தேடல்தான் இருந்தது..

**‘எங்கே நானென்று..**

**தேடட்டும் என்னை..**

**சிந்தாத முத்தங்கள் சிந்த..’**

அவளது காதலை வேண்டி அவன் பாடிய பாடல் நனவாகி விட்டது.. அவன் எங்கேயென்று அவளது விழிகள் தேடித் தவித்து விட்டன.. அவன் வேண்டும் என்ற வேட்கையுடன் அவனைக் கட்டியணைத்து கோடி முத்தங்களை அவள் சிந்தி விட்டாள்..

அவன் காதலித்த காதலியின் மனதை வென்று அவனைக் காதலிக்க வைத்து விட்ட ஆண்மையின் கர்வம் அவன் மனதில் வியாபித்தது..

“எல்லோரும் முந்தானை முடிச்சில ஹஸ்பெண்டை முடிச்சுப் போட்டு வைத்துக்குவாங்கன்னா நீ டிஃபரன்ஸா துப்பட்டாவில முடிச்சுப் போட்டு வைத்துக்கலாம்ன்னு பார்க்கறியா..?” கண் சிமிட்டினான்..

‘இவன் என் புருஷனா..?’ அவள் மனதில் மயக்கம் சூழ்ந்தது..

புருஷன் என்ற அந்த ஓர் வார்த்தையில் தலைகீழாக் கவிழ்ந்து மாயலோகத்தில் வீழ்ந்து விட்டாள் நந்தினி.. மனமெங்கும் பூவாசம்.. அவன் மீது அவள் கொண்ட நேசம்.. எல்லைகளற்ற ஏகாந்த உலகத்தில் அவனுடன் அவள் மட்டும் சஞ்சரித்தாள்.. இனிமை நிரம்பிய கனவு போன்ற சுகானுபவத்தில் திளைத்தாள்..

“ஆமாம்.. அப்படித்தான்..”

மூச்சுத் திணறலுடன் அவள் சொல்லியபோது அவளது முகத்தில் தெரிந்த வெட்கமும் வேட்கையும் ஒன்று சேர்ந்து அவனை ஈர்த்தது..

“முடிஞ்சுக்கடி.. அது உன் சேலையின் முந்தானை முடிச்சா இருந்தாலும் சரி.. துப்பட்டாவின் முந்தானை முடிச்சா இருந்தாலும் சரி.. முடிச்சுப் போடறது நீயாய் இருந்தா முடிச்சில் சிக்க நான் ரெடிடி..”

அவளது முகத்தைக் கையில் ஏந்தி வெகு பிரியத்துடன் சொன்னான் அவன்.. அவனையே ஆசையுடன் பார்த்தவளின்

விழிகளோடு அவனது விழிகள் கலந்தன.. அவன் மீதான அவளது பிரேமத்தில் (காதலில்..) அவன் பிரமித்தான்..

‘இவ்வளவு ஆசையா என் மீது..?’

கள்ளமில்லா பிள்ளை குணம் கொண்டவள் அவள்.. காதல் உணர்வுகளை உணராத பேதை.. காணக் கிடைக்காத கோஹினூர் வைரம் போன்றவள்.. அவளது அருமை என்னவென்று ரவிச்சந்திரன் நன்கு அறிவான்.. அவளது காதல் கிடைப்பதென்பது வரம்.. அதனால்தான் அவன் நீலிமலைக் காட்டின் மரவீட்டில் ஒரு பொய்யாவது சொல் கண்ணே.. உன் காதல் நான்தானென்று என்று பாடினான்.. அவள் பொய் சொல்லியறியாதவள்.. உண்மையாக அவனைக் காதலித்து விட்டாள்..

‘இதைவிடப் பெரிய சக்சஸ்ன்னு எதுவுமே இல்லை..’ வியாபார உலகில் பல வெற்றிகளை ஈட்டி கேரளத்தின் முதன்மைத் தொழிலதிபனாக.. உலகம் முழுவதும் அறியப்பட்ட வியாபார காந்தமாக நட்சத்திர அந்தஸ்துடன் சுடர் விடும் அந்த ராஜாதிராஜன் அவளைத் தன்னோடு இறுக்கித் தழுவிக் கொண்டான்.. இசைந்து கொடுத்து அவன் அணைப்பில் அடங்கிய நந்தினியின் கரங்கள் உரிமையுடன்

அவனது முதுகில் பரவிப் படர்ந்து அழுந்தின.. அந்த இசைவில் அவள் உணர்த்திய ஒப்புக் கொடுத்தலில் களிப்படைந்தது அவன் மனம்..

“போவோமா..?” அவளது காதருகே குனிந்து கேட்டான்..

“ம்ம்ம்..”

“எங்கேன்னு கேட்க மாட்டியா..?”

“கேட்க மாட்டேன்..”

“நான் எங்கே கூப்பிட்டாலும் வருவாயா..?”

“வருவேன்..”

அவன் கண்களில் விஷமம் வழிந்தோட அவளது காதருகே உதடுகளைப் புதைத்து கிசுகிசுப்பாக பேசிய பேச்சுக்களில் கிளர்ந்து தவித்தவள் முகச் சிகப்புடன் விலகி அவன் கையைப் பிடித்துக் கிள்ளி..

“ச்சீய்..” என்றாள்..

“ஹா.. ஹா..” அவன் உரக்க நகைத்தான்..

அவன் முகம் பார்க்க முடியாமல் நந்தினியை வெட்கம் சூழ்ந்து கொண்டது.. ரத்தமென முகம் சிவந்திருந்தது..

‘என்னவெல்லாம் பேசுகிறான்..’ உதட்டைக் கடித்தாள்..

“ஏய்ய்..” போதையுடன் அழைத்தான் ரவிச்சந்திரன்..

“ம்ம்ம்..”

“பேச மாட்டியா..?”

“ம்ம்ம்..”

“ஏண்டி..? என்னைப் பிடிக்கலையா..?”

ரவிச்சந்திரனின் அநியாயமான கேள்விக்குக் கை மேல் பலன் கிடைத்தது.. நந்தினி உதடுகள் துடிக்க அவனை நிமிர்ந்து பார்த்தாள்..

“உங்களை அளவுக்கு மீறிப் பிடிச்சுப் போனதினாலதானே பைத்தியமா நிற்கறேன்..? உங்களைப் பிடிக்கலைன்னா எனக்கு இந்த உலகத்தையே பிடிக்கலைன்னு அர்த்தம் பாஸ்.. ஏன்னா நீங்கதான் என் உலகம்..”

“நந்தினி..”

மார்போடு சேர்த்து அணைத்துக் கொண்டான் நந்தினியின் காதலன்.. காதல்தான் எத்தனை சுகமானதாக இருக்கிறது.. காதலிப்பது ஓர்வித சுகமென்றால்.. காதலிக்கப்

படுவது அதைவிட அதீதமான சுகம் கொண்டதாக இருக்கின்றதே.. தேனாகத் தித்திக்கின்றதே..

ரவிச்சந்திரன் நந்தினியால் காதலிக்கப்படும் சுகத்தினை மனமார ரசித்து அனுபவித்தான்.. அதுபோன்ற இன்பம் வேறில்லையென்று அவனது மனம் சொன்னது..

“நம்ம படகு வீட்டுக்குப் போகலாம் வா..”

“நிஜமாவா பாஸ்.. இந்தப் படகு வீட்டில் நாம போகப் போகிறோமா..?”

காதலின் போதையிலிருந்து விடுபட்டு படகு வீட்டில் பயணிக்கப் போகும் ஆர்வத்துடன் சிறு குழந்தையைப் போல விழி விரித்தாள் நந்தினி.. அவளது அந்தக் குழந்தைத்தனமான ஆர்வத்தை ரசித்தான் ரவிச்சந்திரன்..

“யெஸ்..” என்றான்..

“ஹைய்யா..” கைகளைத் தட்டிக் குதித்தாள் நந்தினி.

“ஏய்ய்.. தண்ணிரில் விழுந்து விடாதேடி...” அவளைத் தன் பக்கமாக இழுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

‘தண்ணிங்கிறதெல்லாம் சும்மா.. இவனுக்கு ஒரு செகண்ட் கூட நான் தள்ளியிருக்கக் கூடாது.. கட்டிப் பிடிச்சுக்கிட்டே இருக்கனும்..’ கன்னம் சிவந்தாள் நந்தினி.

“ஆலப்புழாவின் முக்கிய தொழிலே படகு வீடுகள்தான்.. இதற்கு அடுத்ததா கயிறு தயாரிக்கும் தொழிலைச் சொல்லலாம்..”

கணப் பொழுதில் தொழிலதிபனாக மாறி அவன் விவரித்ததை ஆழ்ந்து கேட்டுத் தலையை ஆட்டினாள் நந்தினி.. வியாபாரத்தையும் இவனையும் பிரிக்க முடியாது என்று நினைத்துக் கொண்டாள்.. எங்கு சென்றாலும் அங்கு நிலவும் தொழில் சூழலை கணக்கில் எடுத்துக் கொண்டு அவன் பேசுவதை அவள் பலமுறை கவனித்திருக்கிறாள்.. அவளுடைய அப்பா மேகநாதனும் இப்படித்தான்.. எங்கே போனாலும் அந்த நிலத்தில் என்ன விளைகின்றது என்று ஊன்றிக் கவனித்து அதைப் பற்றிச் சிலாகித்து பேசுவார்.. என்னதான் ஜவுளி வியாபாரம் என்று தஞ்சையில் கால் ஊன்றியிருந்தாலும் அவரது வேர் பூர்விக கிராமத்திலும் விவசாயத்திலும்தான் இருந்தது..

‘அப்பா..!’

நெகிழ்ந்த மனதை அவளது விழிகளில் கண்டு கொண்டவன்..

“என்ன..?” என்று புருவங்களை உயர்த்தி அவளை மயக்கத்தில் ஆழ்த்தித் தந்தையை மறக்க வைத்தான்..

வரிசை கட்டி நின்றிருந்த படகு வீடுகளில் மிக ஆடம்பரமாக இருந்த படகு வீட்டை நோக்கி அவன் நடந்தான்.. கையில் அவளது துணிகளையும் அவனது துணிகளையும் ஒன்றாக்கித் தன்னுள் அடக்கியிருந்த லெதர் பேக்..

“உன் பேக்கை எடு..”

காரில் அவன் கட்டளையிட்ட போது எதற்காகக் கேட்கிறான் என்று தெரியாமலே பின்சீட்டில் இருந்த தனது பையை எடுத்துக் கொடுத்தாள் நந்தினி.. பையிலிருந்த அவளது துணிகளை அவனது பெரிய லெதர் பேக்கிற்கு அவன் இடம் மாற்றிய போது..

“எதுக்கு பாஸ்..?” என்று குழம்பினாள்..

“போகப் போகத் தெரிஞ்சுக்குவ..” மர்மமான குரலில் அவன் சொன்னதும்..

‘இவன் பெரிய மர்ம வீரன்..’ என்று புதிதாக ஒரு பட்டப் பெயரைக் கண்டு பிடித்து அவனுக்கு நாமகரணம் செய்தாள்..

அந்த மர்மவீரன் பரிசளிக்கும் மர்மங்கள் அவளுக்குப் பிடித்தமானவையாக இருந்தன.. நீலிமலைக் காட்டில் அவன் காட்டாத மர்மங்களாக..? மீன்முட்டி அருவிகளைப் பார்க்கப் போவதாகச் சொல்லிவிட்டு அவளை முட்டி உடைய மலையேற வைத்தான்.. நீலிமலை வியு பாயிண்டிலிருந்து வெள்ளிப் பாலாறாக ஓடி வந்த மீன்முட்டி அருவிகளைக் காட்டினான்.. அவற்றைப் பார்த்த அதிசயத்திலிருந்து அவள் மீள்வதற்குள் அவளிடம் காதலைச் சொல்லி மயக்கம் போட வைத்தான்..

அவளையாவது, அவன் காதலிப்பதாவது என்று அவன் காதலை நம்பாமல் மறுத்தவளிடம் கோபம் கொள்ளாமல் யானைக் கூட்டம் வருகிறது என்று பயமுறுத்தி மரக்குடிலைக் காட்டிப் பிரமிக்க வைத்தான்..

அந்த மர்மவீரன் அளிக்கும் மர்மங்கள் அனைத்தும் அலாதியான அழகு நிரம்பிய பொழுதுகளை உள்ளடக்கியவை என்பதில் அடுத்து அவன் கொடுக்கப் போகும் மர்மம் எதுவாக இருக்கக்கூடும் என்று மனது குறுகுறுக்கத்தான் அவனை

ஆட்டுக்குட்டி பின் தொடர்வதைப் போலப் பின் தொடர்ந்து கொண்டிருந்தாள் அவள்..

படகு வீடுகளைப் பார்வையிட்டபடி அவன் கூட நடந்தவள்..

“இத்தனை படகு வீடுகளும் வாடகைப் படகு வீடுகளா பாஸ்..?” என்று அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் கேட்டாள்..

“யெஸ்.. பட்ஷே.. நாம போகப் போகிறது வாடகைப் படகு வீட்டில் இல்லை.. என் சொந்தப் படகு வீடு..!”

“அதானே பார்த்தேன்.. நீலிமலைக் காட்டிலே மர உச்சியிலேயே மரவீட்டைக் கட்டி வைத்திருந்தவர் படகு வீட்டை விட்டா வைப்பார்ன்னு நினைச்சேன்.. நான் நினைச்சது சரியாத்தான் இருக்கு..”

“ஊஹும்..? நீ எப்பவும் என்னைப் பத்தியே நினைத்துக்கிட்டு இருக்கேன்னு சொல்லு..” வசீகரமாய் அவன் புருவங்களை உயர்த்தி அவளை வசீகரிக்க யத்தனிக்க..

“யெஸ் பாஸ்..” என்று மயக்கத்துடன் சொல்லி அந்த வசீகரனை வசீகரித்து விட்டாள் அந்த வசீகரி..

“ஏய்ய்..” விழிகள் மின்ன அவன் நின்று விட்டான்..

“எல்லோரும் நம்மையே பார்க்கிறாங்க பாஸ்..” அவள் கெஞ்சோ கெஞ்செனக் கெஞ்சி அவனை நகர வைக்க வேண்டியிருந்தது..

“எல்லாமே கமர்ஷியல் பர்ப்போஸ்தான் நந்தினி.. நீலிமலைக் காட்டின் வுட் ஹவுஸ், என் கம்பெனியோட கெஸ்ட் ஹவுஸ்.. அதில வந்து தங்கிப் போகிறவங்க என் பிஸினெஸ் டீலிங்கை மறுக்கவே மாட்டாங்க.. அக்ரிமெண்ட்டைப் பத்திப் பேச வருகிறவங்க, சைன் பண்ணிட்டுப் போயிடுவாங்க.. எப்பவும் என் பிஸினெஸ் டீலிங்கை முறிச்சுக்க மாட்டாங்க..”

“கிரேட் பாஸ்..”

அனைத்தையும் வியாபார நுணுக்கத்தோடு அவன் அணுகியதில் அவளுக்கு அவன் மீதான ஆதர்ஷம் அதிகரித்தது..

‘எல்லாத்தையும் இவன் பிஸினெஸ்ஸாக்கிர்றான்..’

“ஆலப்புழா படகு வீடும் அப்படித்தான்.. வாடகை பர்ப்போஸிக்காக இதை உருவாக்கினேன்.. இங்கே படகு வீடுகளின் தரத்தை வைத்து வாடகையை ஃபிக்ஸ் பண்ணுவாங்க.. நாள் ஒன்றுக்கு பத்தாயிரத்தில் இருந்து

ஐம்பதாயிரம் ரூபாய் வரை வாடகைக்கு படகுகள் கிடைக்கும்.”

“உங்க படகை ஐம்பதாயிரம் ரூபாய்க்குத்தானே வாடகைக்கு விடறங்க..?”

“கரெக்ட்..”

‘எதிலயும் இவனோடது ஃபர்ஸ்ட் அண்ட் பெஸ்ட்டாவும் காஸ்ட்லியாவும்தான் இருக்கும்..’

நந்தினிக்குப் பெருமையாக இருந்தது.. அவளது உள்ளம் கவர்ந்த கள்வன் ஒரு அசகாய சூரன் என்பதில் அவள் இறுமாப்புக் கொண்டாள்..

“என் படகு வீட்டில மூன்று எம்ப்ளாயிஸ் வொர்க் பண்றாங்க.. மூன்று பேருக்குமே படகு வீடு சம்பந்தமான எல்லா வொர்க்ஸு ம் தெரியும்..”

“படகு வீட்டில் என்ன வொர்க் இருக்கப் போகுது பாஸ்..? படகை ஓட்டனும்.. அவ்வளவுதானே..?”

“இப்படி மத்தவங்க கேட்கலாம்.. ரவிச்சந்திரனோட வொய்ஃப் கேட்கக் கூடாதுடி.. உனக்கு எல்லாம் தெரிந்திருக்க வேண்டாமா..?”

‘நான் இவனுடைய பெண்டாட்டியாம்..’

அவன் தன்னை அவளுடைய புருஷன் என்று சொல்லிக் கொண்டதில் எப்படிக் கிறங்கிப் போனாளோ.. அதைவிட அதிகமாக.. அவளைத் தன்னுடைய பெண்டாட்டி என்று சொல்லிக் கொண்டதில் கிறங்கிப் போனாள் நந்தினி..

**‘புருஷன்தான்.. இவன் என்**

**புருஷன்தான்..’**

அவளது மனம் கூவியது.. பதிலுக்கு அவன் வேம்பனாடு ஏரிக்கரையோரம் நின்று..

**‘பெண்டாட்டி.. இவ என்**

**என் பெண்டாட்டி..’**

என்று கூவுவதைப் போல மனதில் கற்பனைக் காட்சி விரிந்தது..

ஆணுக்கும் பெண்ணுக்குமான ஆழ்ந்த காதல் மயக்கத்தை உருவாக்கி வைத்த இயற்கையின் நியதி விந்தையானதுதான்.. சில தினங்களுக்கு முன்வரை யாரோ எவரோ என்றிருந்த அந்த இருவரும் இன்று நீயின்றி

நானில்லை என்ற மாறிப் போயிருப்பது விந்தையிலும் விந்தையான ஒன்றுதானே..

# அத்தியாயம் 194

**ஆ**லப்புழாவின் அடையாளம் ஆடம்பர படகு வீடுகள்.. காயலாகப் பட்ட கடலின் மீது பயணம் செய்வது இனிமை.. அதுவே வீட்டில் அமர்ந்து அந்த வீடு நீரினில் மிதக்க உண்டு, உறங்கி, கூடிக் களித்துச் சிரித்துப் பேசி என்று மிதக்கும் வீட்டில் வாழ்ந்து பார்ப்பது இனிமையிலும் இனிமை..

ஒரு அழகான படகு வீட்டை கட்டமைக்க குறைந்த பட்சம் ஒரு கோடி ரூபாய் அளவில் செலவாகலாம் என்று ரவிச்சந்திரன் சொன்னான்..

“அதற்கும் குறைந்து இருக்கலாம்.. பட்ஷே.. எனக்குத் தெரிந்த படகு வீடுகளை கட்டமைக்க ஆன செலவு ஒரு கோடி ரூபாய்தான்..” என்றான்..

“உங்க படகு வீட்டை கட்டமைக்க ஆன செலவு எவ்வளவு..?”

“ஆறு கோடி ரூபாய்..”

“அடேங்கப்பா..”

மலைத்து விட்டாள் நந்தினி.. மிதக்கும் படகு வீட்டை நிர்மாணிக்க ஆறுகோடி ரூபாயை செலவிட்டிருக்கிறானா..?

“அதற்குத் தகுந்தபடி இண்டிரியர் வொர்க் இருக்கும்.. அங்கேதானே போய்க்கிட்டிருக்கோம்..? நீயே நேரில் பார்த்து அனலைஸ் பண்ணு..”

படகு வீடுகளில் மூன்று நபர்கள் இருப்பார்களாம்.. படகு ஓட்டுவது, சமைப்பது, மற்ற வேலைகளைப் பார்ப்பது என பகிர்ந்து வேலை செய்வார்களாம்.. மூவருக்குமே படகு தொடர்பான அனைத்து வேலைகளும் தெரியுமாம் ..

“தெரிந்திருக்கனும்..” அழுத்தமாகச் சொன்னான் ரவிச்சந்திரன்..

“ஏன் அப்படி..?”

“தண்ணீரில் படகு கிளம்பிட்டா எந்த நேரம் எது நடக்கும்ன்னு யாருக்குத் தெரியும்..? ஆளில்லாத இடத்திலே படகை ஓட்டுகிறவனுக்கு உடம்பு சரியில்லாமல் போகலாம்.. சமையல் வேலை செய்கிறவனுக்கும் அதே கதைதான்.. அப்ப அந்த வேலைகளை மாற்றிச் செய்யத் தெரிந்திருக்கனும்.. ஒருநாள் சமையல் வேலையில் இருக்கிறவன் அடுத்த நாள் படகை ஓட்டற வேலையில் இருக்கனும்.. மறுநாள் மற்ற

வேலைகளைக் கவனிக்கனும்.. மத்தவங்களக்கும் இதே ரொட்டின் வொர்க்தான்.. படகை ஓட்டறவன் சமைக்க வருவான்.. மற்ற வேலைகளைக் கவனிக்கிறவன் படகை ஓட்டுவான்.. இப்படி வேலைகளை மாற்றிச் செய்து டிரெயினிங் எடுத்துக்குவாங்க..”

“இண்ட்ரெஸ்ட்டிங்..”

“உனக்கு இது இண்ட்ரெஸ்டிங்.. இவங்களுக்கோ வாழ்க்கை..!”

‘உண்மைதானே..’ என்றிருந்தது நந்தினிக்கு..

“தண்ணியிலேயே மிதந்துக்கிட்டு இருந்தா இவங்களுக்கான வாழ்வை எப்படி வாழ்வாங்க பாஸ்..?”

நந்தினிக்கு பெருங் கவலையாகி விட்டது..

“இவங்க ஒரு வாரம் வந்தா இவங்களை மாத்தி விட வேறொரு டீம் வருவாங்க.. அவங்க ஒரு வாரம்.. அவங்களை மாத்திவிட இவங்க.. இதுவும் ரொட்டின்தான்.. சில படகுகளை உருவாக்கினவங்களே அதில் வேலை செய்வாங்க.. அவங்க பாடுதான் கஷ்டம்..”

“இவங்க குடும்பம்..?”

“குடும்பம் இல்லாமல் இருக்குமா...? குடும்பத்திற்காகத்தானே இத்தனை உழைப்பும்...? இவங்களுக்குன்னு தனி ஸ்கூல் இருக்கு.. சர்ச் இருக்கு.. கவர்ன்மென்டில இவங்களுக்குன்னு தனி கவனிப்பு உண்டு..”

“ஓ..”

வியப்புடன் கேட்டுக் கொண்டாள் நந்தினி.. தண்ணீரில் மிதக்கும் படகு வீட்டில் அவள் தங்கப் போகிறாள் என்ற நினைவே எதிர்பார்ப்பைக் கிளறியது.

அவளுக்குப் போட்டில் போய் வர பிடிக்கும்.. கப்பலைத் தொலைவில் நின்று கவனித்திருக்கிறாள்.. பக்கத்தில் போனதில்லை.. இங்கோ போட் ஹவுஸ்.. அது நீரில் விரையும்.. அதில் அவளும் ரவிச்சந்திரனும் இருப்பார்கள்..

‘ஆஹா..!’ நினைத்தாலே இனிக்கும் என்பது இதுதானா..?

“நம்முடைய போட் ஹவுஸுக்கு வந்துட்டோம்..” மகாராணியை வரவேற்பதைப் போல ரவிச்சந்திரன் முதுகை வளைத்து அவளுக்கு முகமன் கூறி அவளது கையைப் பற்றி..

“வெல்கம் டு அவர் போட் ஹவுஸ்..” என்றான்..

நந்தினி தன்னை மகாராணியைப் போல உணர்ந்தாள்.. ராஜாதிராஜனான ரவிச்சந்திரனின் காதலி மகாராணிதானே.. கண்முன் நீரில் அன்னப் பட்சியைப் போல அசைந்தாடிக் கொண்டிருந்த படகு வீட்டைப் பார்த்தாள்.. பிரமித்துப் போனவளாய் அப்படியே நின்று விட்டாள்..

நீண்ட அன்னப் பறவையின் தோற்றத்தோடு வெகு நேர்த்தியாக வடிவமைக்கப் பட்டிருந்தது அந்தப் படகு.. அதில் சொகுசான பங்களா ஒன்று வீற்றிருந்தது.. அழகான ஆடம்பரம் நிறைந்த பங்களா..

ரவிச்சந்திரனின் ஸ்டார் ஹோட்டலின் காட்டேஜ் ஒன்றின் முன்னால் நிற்பதைப் போலவே நந்தினிக்கு இருந்தது..

‘யாழ் ஹோட்டலோட ரிசார்ட் ஒண்ணைத் தூக்கி இங்கே வைச்சுட்டாங்களா..?’

ரவிச்சந்திரன் செய்தாலும் செய்வான்.. அவனால் செய்ய முடியாதது என்று ஒன்று உண்டா..?

“செப்பலைக் கழட்டிட்டு வா.. போட் ஹவுஸில் செப்பலுடன் நடக்கக் கூடாது..” என்றான் ரவிச்சந்திரன்..

அவர்களது செருப்புக்களை அங்கேயே விட்டு விட்டு படகு வீட்டில் ஏறினார்கள்.. அவளது இடுப்பில் கை கொடுத்து அலேக்காக தூக்கி படகு வீட்டில் விட்ட ரவிச்சந்திரன் உள்ளே வந் தான்.. ஸ்டார் ஹோட்டலைப் போலவே படகு வீட்டின் உள்புறத் தோற்றம் வடிவமைக்கப் பட்டிருந்ததில் மயங்கிப் போயிருந்தாள் நந்தினி..

‘இது எப்பேற்பட்ட அனுபவம்..!’

படகு வீட்டின் சுவர்கள் முழுவதும் மர வேலைப்பாடுகள் கொண்ட அலமாரிகளைக் கொண்டிருந்தன.. வழவழப்பாய் வீட்டின் ஹாலில் இருப்பதைப் போலவே தூண்கள் இருந்தன.. பரந்த பெரிய ஹால்.. தரையிலும் சுவரிலும் ஒட்டப்பட்டிருந்த பளிங்குக் கல்.. அழகாக போடப் பட்டிருந்த சோபாக்கள் அமர்ந்ததும் மிருதுவாக உள்வாங்கி இதத்தைக் கொடுத்தன.. சுவரில் பொருத்தப் பட்டிருந்த மிகப் பெரிய டிவியில் ஒரு மலையாளத் திரைப்படம் ஒன்று ஓடிக் கொண்டிருந்தது..

ஜன்னல் வரித் தெரியும் நீர் மட்டுமே அதை படகுவீடு என்று உணர்த்திக் கொண்டிருந்தது.. மற்றபடி அது ஆடம்பர சொகுசு பங்களாவைப் போலவே இரு ந்தது..

‘இது யாழ் ஹோட்டலேதான்..’

ஆங்காங்கே சுவரில் மாட்டப் பட்டிருந்த ஓவியங்கள் கலை நுணுக்கத்துடன் அழகுற மிளிர்ந்தன.. ஜன்னல் வழி தெரிந்த தண்ணீரும் கரையோரத் தென்னை மரங்களும் எனப் பார்க்கப் பார்க்கத் தெவிட்டாத இயற்கையும், செயற்கையும் காலந்த பேரழகு..

தொலைவில் ஒரு பாலம் தெரிந்தது.. அதன் அருகில் தெரிந்த செடி கொடிகளை ஆடம்பர பங்களாவினுள் இருந்தபடி ரசிப்பதைப் போல உணர்ந்தாள் நந்தினி..

‘ஹப்பா..! இது படகு வீடாம்... படகு பங்களான்னுல்ல சொல்லனும்..’

ஹாலைக் கடந்து போனால் ஒரு பார்ட்டி நடத்தும் அளவுக்குப் பெரிதான டைனிங் ஹால் இருந்தது.. அதன் இருபுறமும் ஜன்னல்கள்.. அவற்றின் பக்கத்தில் ஓரம் கட்டிப் போடப் பட்டிருந்த ஒற்றை சேபாக்களின் வரிசை.. நடுவில் அரண்மனைகளில் இருப்பதைப் போன்ற மிக நீண்ட டைனிங் டேபிள்.. அதன் மையப் பகுதிகளில் எதிரும் புதிருமாக குஷன் பதித்த நாற்காலிகள் இரண்டு இருந்தன.. டைனிங் டேபிளின் இருபக்கமும் பக்கத்திற்கு ஒரு டஜன் என்று இருபத்தி நான்கு நாற்காலிகள் போடப்பட்டிருந்தன..

டைனிங் ஹாலைக் கடந்ததும் பால்கனி போன்ற அமைப்பு.. படகின் வெளிப்புறத்தை ஒட்டி அமைக்கப்பட்டிருந்த இந்தப் பகுதியில் குஷன் சோபாக்கள் வட்ட வடிவமாக வளைத்து கைபிடி சுவர்களை ஒட்டி போடப் பட்டிருந்தன.. அவற்றில் அமர்ந்து தண்ணீரையும், தென்னந் தோப்பையும் பார்த்தபடி பயணம் செய்யலாம்..

நீண்டு செல்லும் நீர்வழியும் கரையின் இருபக்கமும் அடர்ந்திருக்கும் தென்னந்தோப்புக்களும் கருத்தைக் கவர்ந்து இழுத்ததில் நந்தினி குதித்துக் கொண்டு அங்கே உட்காரப்போனாள்.. தடுத்து நிறுத்திய ரவிச்சந்திரனின் விழிகளில் ஏதோ இருந்தது..

“முதலில் போய் ஹவுஸை சுற்றிப் பார்.. அவுட்டிங்கை அப்புறமா வேடிக்கை பார்க்கலாம்..” என்று இழுத்துக் கொண்டு போனான்..

ஹாலுக்கும் டைனிங் ஹாலுக்கும் இடையே வழுவழுப்பான டைல்ஸ் பதிக்கப்பட்ட காரிடார்.. அங்கே கிரானைட் பதிக்கப் பட்டிருந்த உயர்தரமான வாஷ்பேசின்.. அதையொட்டிய படுக்கை அறைகள்..

ரவிச்சந்திரனுக்கான ஸ்பெசல் படுக்கை அறையைத் திறந்து காண்பித்தான்.. யாழ் டே ஹாட்டல் ரூமைப் போல அழகாக இருந்தது அந்த அறை.. வெண்மை நிற விரிப்புக்களைக் கொண்ட மெத்தைகள்.. தலையனைகள்.. ரோஸ்வுட்டில் செய்யப்பட்ட கட்டில்.. படுக்கையறையில் பொருத்தப் பட்டிருந்த ஏ.ஸி.. டி.வி. அதையொட்டியிருந்த அட்டாச்சுடு பாத்ரூம்.. ஷவர்..

அந்த அறையைப் பார்த்தால் படகு வீட்டில் இருக்கும் அறையைப் போலத் தோன்றவில்லை.. வயநாட்டு அரண்மனையின் அறையைப் போலவும் யாழ் ஹோட்டலின் அறையைப் போலவும் தோற்றமளித்தது..

அனைத்து அறைகளிலும் ஏஸி பொருத்தப் பட்டிருந்ததில்..

“தேவையா இது..?” என்றாள் நந்தினி..

“ஏன்..?” ரவிச்சந்திரன் புருவங்களை உயர்த்தினான்.

“கேரளத்து குளிரில.. படகு வீட்டில யாராச்சும் ஏக்ஷீயை யூஸ் பண்ணுவாங்களா..?”

“ரூம் கதவை இறுக்கி மூடிட்டா ஏஸியை யூஸ் பண்ணித்தானே ஆகனும்..?”

ரவிச்சந்திரனின் மேய்ச்சல் பார்வை ஒரு மார்க்கமாக அவள் மீது பரவி இறங்கிப் படர்ந்தது.. நந்தினிக்கு மூச்சுத் திணறியது.. அவனிடம் காதல் சொன்னபின்பு அவள் அனுபவிக்கும் தனிமையில் இந்தத் தனிமை அழகான இனிமையை அள்ளித் தரும் தனிமையென்று அவளது உள்ளம் சொல்லியது..

“நந்தினி..” ஆரத் தழுவிக் கொண்டான் ரவிச்சந்திரன்.. நீலிமலைக் காட்டின் படகு வீட்டில் அவளை உரிமையுடன் தழுவ முடியாத தழுவலை ஆலப்புழாவின் படகு வீட்டில் தழுவித் தன் ஏக்கத்தைத் தீர்த்துக் கொள்ள முற்பட்டான் அவன்.. அது புரிந்தவளாய் விலகாமல் உடன்பட்டு நின்றாள் நந்தினி..

“ஏய்ய்..”

“ம்ம்ம்..”

“ஐ லவ் யு..”

“ஐ லவ் யு டீ..”

மறுபடியும் இறுக்கமான தழுவல்.. தழுவித் தழுவி தன்னை மறந்திருந்தவர்களை செல்ஃபோனின் ஒலி படகு வீட்டிற்கு அழைத்து வந்தது..

“ம்ப்ச்.. இது ஒண்ணு.. டிஸ்டர்பா.. ”

அலுத்துக் கொண்டபடி ஃபோனை காதுக்குக் கொடுத்த ரவிச்சந்திரன் அங்கே டவர் கிடைக்காததினால் ஹலோ.. ஹலோ என்றபடி வெளியே சென்று விட்டான்..

நந்தினி வெளியே வந்து பால்கனிப் பகுதியில் உட்கார்ந்தாள்.. உடலைத் தழுவிச் சென்ற ஈரப்பசை மிகுந்த குளிர்காற்றில் மனமும் உடலும் சிலிர்த்தன..

படகை ஓட்ட ஆரம்பித்து விட்டார்கள்.. மற்ற படகுகள் மதியம் பனிரெண்டு மணிக்குத்தான் ஓட ஆரம்பிக்குமாம்.. அது ரவிச்சந்திரனின் படகு வீடு என்பதால் காலையிலேயே தன் நீர்வழிப் பயணத்தை ஆரம்பித்து விட்டது..

மக்கள் சென்றுவர ஆங்காங்கே அரசுப் படகுகள் அரசு பஸ்களைப் போல இயங்கிக் கொண்டிருந்தன.. செல்ஃபோன் பேச்சை முடித்து விட்டு அவளைத் தேடி வந்த ரவிச்சந்திரன் அவளருகில் நெருங்கி உட்கார்ந்து அவள் தோளில் கைபோட்டு மடிக்கு இழுத்துக் கொண்டான்..

நந்தினிக்கு ‘ரோஜா’ திரைப்படம் நினைவுக்கு வந்தது.. காஷ்மீர் நதியில் மிதிக்கும் படகில் அரவிந்தசாமியின் மடியில் மதுபாலா அமர்ந்து கொள்ளும் அந்தக் காட்சி..! வயநாட்டு அரண்மனையின் மாடி ஹாலில் ரவிச்சந்திரனை அரவிந்தசாமியாகவும் அவளை மதுபாலாவாகவும் அவள் கற்பனை செய்து பார்த்துக் களித்த அந்தக் காட்சி..! நிஜமாக ஓர் படகு வீடு..! அதில் அவன்..! அவன் மடியில் அவள். .!

கற்பனையோ கை வந்ததோ என்பது இதுதானோ.. கேரளாவின் மிதக்கும் படகுவீடு..! ஆலப்புழாவில் தண்ணீரில் மிதக்கும் வீட்டில் அவனும், அவளும்..

அனுபவம் புதுமை.. மிக அருமை..

“விண்ணைத் தாண்டி வருவாயா படம் பார்த்திருக்கியா..?” அவளை வாசம் பிடித்தபடி கேட்டான் அவன்..

“ம்ம்ம்..” பேச முடியாமல் முணுமுணுத்தாள் அவள்..

“திரிஷாவைத் தேடி சிம்பு கேரளாவுக்கு வருவதாகக் காட்டுவாங்களே.. அது இந்த ஊர்தான்..”

“ஹை.. மன்னிப்பாயா பாட்டு வருமே.. அந்த சீனை இங்கேதான் எடுத்தாங்களா பாஸ்..?”

உணர்வுப் பேரலைகளில் இருந்து வெளிப் பட்டவளாக அவள் கேட்டதில் அவளது நெற்றியில் செல்லமாக முட்டினான் ரவிச்சந்திரன்..

“நீ இருக்கியே..”

“ஏனாம்..? எனக்கு என்னவாம்..? ஐயாவுக்கு என்னைவிட அழகான கேரளத்து சொப்பன சுந்தரிகள் தேவைப்படறாங்களோ..”

“ஹா.. ஹா.. நீதாண்டி என் சொப்பன சுந்தரி.. வல்லிய சுந்தரி..”

ரவிச்சந்திரன் அவளை இறுக்கி அணைத்து உம்மா கொடுத்தான்.. யாராவது வந்து விடுவார்கள் என்று விலகப் பார்த்தாள் நந்தினி.. அது அவனது படகுவீடு.. அவனது அனுமதியில்லாமல் எவரும் வரமாட்டார்கள் என்று எளிதாக அவளது மறுப்பை மறுத்து இழுத்துக் கொண்டான் அவன்..

# அத்தியாயம் 195

**வெ**துவெதுப்பான ஷவர் நீரில் குளித்து உடை மாற்றி தலை முடியை பின்னலிட்டுக் கொண்டிருந்தாள் நந்தினி.. அறைக்கதவு தட்டப் பட்டது.. திறந்தாள்.. உள்ளே வந்த ரவிச்சந்திரன்..

“எதுக்கு ரூமை லாக் பண்ணின..?” என்று கோபித்துக் கொண்டான்..

“நேரா படகு வீட்டுக்கு வந்துட்டோம்.. பிரஷ் கூடப் பண்ணலை.. பிரஷ் பண்ணிக் குளிச்சு ரெடியாக வேண்டாமா..?” சமாதானம் சொன்னாள் நந்தினி..

“அதுக்கேன்டி கதவை லாக் பண்ணின..?”

“இது என்ன பாஸ் கொடுமையாய் இருக்கு.. நான் குளிச்சு டிரஸ் சேஞ்ஜ் பண்ண வேண்டியிருந்ததுன்னு சொன்னேனே..”

“ஸோ வாட்.. இது நம்மோட ரூம்..”

“இல்லைன்னு யார் சொன்னதாம்..?”

நந்தினி பின்னலை விசிறிப் பின்னால் தள்ள முனைய அது ரவிச்சந்திரனின் முகத்தில் பட்டு விலக யத்தனித்தது.. அவன் அதை விலக விடாமல் இறுக்கிப் பற்றி இழுத்தான்..

“வலிக்குது பாஸ்..”

நந்தினி சுழன்று திரும்பி அவன் தோள்களைத் தழுவி

அவன் மீது சாய்ந்து நின்றாள்..

“வலிக்கட்டும்..”

“எதுக்கு இந்த கோபமாம்..?”

“ஏன் கதவை லாக் பண்ணின..?”

“இல்லைன்னா..”

அவள் முகம் குங்குமமாய் சிவந்தது.. அதை ஆசையுடன் பார்த்தவன் அவளது கன்னத்தை நிமிண்டி..

“இல்லைன்னா..?” என்று தூண்டினான்..

“நீங்க..”

“நான்..”

“சேர்ந்து குளிக்கலாம்ன்னு அடம் பிடிப்பீங்க..”

இரு உள்ளங்கைகளையும் குவித்து முகத்தை மூடிக் கொண்டாள் நந்தினி.. விரலிடுக்குகளில் அவனைக் கள்ளப் பார்வை பார்த்ததில்..

“என் நந்தினி..” என்று அவன் கள்வெறி கொண்டான்..

“ரவி..” பேச முடியாமல் அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள் நந்தினி..

“ஒன்றாய் குளித்தால்தான் என்னடி..?”

அவன் வம்பு செய்ததில் அவளது வெட்கம் அதிகரித்தது..

‘வாயடிக்கிறதெல்லாம் சும்மா..’

அவளது பெண்மையின் மென்மை தன்மையில் மனம் நனைந்தவனாய் இளநகையுடன் குளிக்கப் போனான் ரவிச்சந்திரன்.. அவனைப் பற்றிய நினைவுகள் தந்த நாணப் புன்னகையுடன் அவள் கண்ணாடியில் மெலிதான ஒப்பனையில் ஈடுபட்டிருந்தாள்.. திடிரென அவள் மீது தண்ணீர் துளிகள் தெறித்தன.. சிலிர்த்து முகத்தை அழகாக சுருக்கியவள் திரும்பிப் பார்த்தாள்.. குளித்து முடித்த ஈர உடம்புடன் வந்திருந்த ரவிச்சந்திரன் தலையைச் சிலுப்பித் தலையில்

இருந்த நீர்த்துளிகளை அவள்மீது சிதற விட்டுக் கொண்டிருந்தான்..

‘இவன் தெரிந்து செய்கிறானா..? இல்லை தெரியாமச் செய்கிறானா..?’ அவள் தடுமாறிப் போனாள்.. அப்படியே ‘ரோஜா’ திரைப்படத்தின் காட்சிதான்..

‘மனசுக்குள்ள அரவிந்தசாமின்னு நினைப்பு..’

உதட்டைச் சுழித்து அழகு காட்டியவளின் முந்தானைச் சேலையைத் தன் தலைமீது போர்த்தித் துவட்டி விடும்படி அடம் பிடித்தான் அவன்..

தாள முடியாத தவிப்புடன் மறுக்கவும் முடியாமல் துவட்டவும் முடியாமல் தினறினாள் நந்தினி..

அவன் வேறு அவள் வேறு அல்ல.. ஆனாலும் அவனுக்கும் அவளுக்கும் இன்னும் திருமணமாகவில்லை என்ற தயக்கம் நெருஞ்சி முள்ளாய் ஊடாடி நெஞ்சில் நிரடுகின்றதே..

“ஏண்டி..?”

அவன் கேள்விக்கு என்னவென்று பதிலுரைப்பாள்..?

அவனோ அவளிடம் விலகலை உணர்ந்தவனாய்..

“ஏன்..?” என்று சீறினான்..

“நத்திங் பாஸ்..” தயக்கத்துடன் தன் முந்தானையால் அவனது தலையைத் துவட்டி விடத் தொடங்கினாள் நந்தினி..

“ஒன்றும் வேண்டாம் போ..” அவளைத் தள்ளி விட்டு விட்டு டவலைத் தேடினான் ரவிச்சந்திரன்..

அவன் விலக்கி விட்டதைத் தாங்க முடியாதவளாய்.. “நான் துவட்டி விட்டுக்கிட்டு இருக்கேனில்ல..?” என்று கோபித்துக் கொண்டாள் நந்தினி..

திரும்பி தீர்க்கமாக ஓர் பார்வை பார்த்தான் அவன்.. “பாஸ்..?” குரல் நடுங்க அழைத்தாள் அவள்..

“நான் யாரோ.. நீ யாரோன்னு நினைத்துட்ட இல்ல..”

“இல்லை பாஸ்..”

“உனக்கும் எனக்கும் இன்னும் மேரேஜ் ஆகலை.. அதுதானே உன் நினைவு..?”

மிகச் சரியாக அவள் மனதைக் கணித்து விட்டான் என்ற குற்ற உணர்வுடன் தலை கவிழ்ந்தாள் நந்தினி..

“அதனால் என்னடி..? எனக்கு மேரேஜ்ன்னு ஒன்று நடந்தா அது உன்னோடுதான் நடக்கும்.. அட் த ஸேம் டைம்..

உனக்கும் மேரேஜ்ன்னு ஒன்று நடந்தால் என்னோடுதான் நடக்கனும்.. நடந்தே ஆகனும்.. மைண்ட் இட்..”

அவனது கர்ஜனையில் நடுங்கிப் போனாள் நந்தினி.. சிறிய விலகலுக்கு இந்த அளவுக்கு கோபம் கொள்வானா..? “நீலிமலைக்காட்டில இதுபோல நீ விலகி நிற்கலைடி.. இயல்பா பக்கத்தில வந்த.. அப்ப வராத கள்ளம் இப்போ எப்படிடீ உன் மனதில் வந்தது..?”

“பாஸ்..”

“நீ என்னை சந்தேகப் பட்டுட்ட இல்ல..”

“இல்லை பாஸ்..”

“உனக்குத் தெரியுமாடி..? உன்னை என் மனசில் நினைத்த அந்த செகண்டில இருந்து வேற ஒரு பெண்ணை நெருங்க விட்டதில்லை..”

‘இது ஒரு பெருமையா..?’

நந்தினி அவனைச் சமாதானப் படுத்தும் முயற்சியை கை விட்டு எங்கோ வெறித்துக் கொண்டு நின்றாள்.. மூர்க்கமாக அவள் முகம் பற்றித் தன் பக்கமாக திருப்பினான் ரவிச்சந்திரன்..

“என்ன..?” என்றான்..

“ப்ளீஸ்.. உங்களைப் பெண்கள் சுத்தின பெருமையையும் நீங்க அவங்களை இக்னோர் செய்த பெருமையையும் என்னிடம் சொல்லித் தம்பட்டம் அடித்துக்காதீங்க.. எனக்குக் கேட்கப் பிடிக்கலை... கஷ்டமா இருக்கு..” நந்தினியின் கண்களில் கண்ணீர் அரும்பி விட்டது..

“ஏய்ய்.. ச்சீ.. அழக் கூடாது..” மனத்தாங்கலை மறந்தவனாக அவளைத் தன்னுடன் இறுக்கிக் கொண்டான் ரவிச்சந்திரன்..

மழலையாக தன் மனதில் இருந்த உணர்வை வெளிப்படுத்திய காதலியின் மீது அவனுக்குள் மூண்டிருந்த கோபம் காணாமல் போய்விட்டது..

“ஸாரிடி..” உண்மையான வருத்தத்துடன் சொன்னான்..

அவள் பதில் சொல்லாமல் அவனிடமிருந்து விலகி முந்தானைச் சேலையால் அவனது தலையைத் துவட்டி விட ஆரம்பித்தாள்..

“வேண்டாம்.. விடு.. நானே துவட்டிக்கிறேன்..” அவன் டவலைக் கையில் எடுத்தான்..

வேகமாக அவன் கையிலிருந்த டவலைப் பறித்து எறிந்த அவளது விழிகளில் தீப்பொறி பறந்தது..

“என்னைப் பார்த்தா உங்களுக்கு எப்படியிருக்கு..? ஏன்..? நான் துவட்டி விட்டா ஆகாதா..? துரை தானாத்தான் தலையைத் துவட்டிக்குவாரா..?”

கச்சை கட்டிக் கொண்டு அவள் உரிமை பாராட்டியதில் அவன் மனதில் காதல் வந்தது.. அவள் காட்டிய நெருக்கம் அவனைத் தாலாட்டியது..

“நீதானேடி தயங்கின..?”

“தயங்கினா..? நீங்க விலகிப் போயிருவீங்களா..?”

“விலகிப் போகிறதா..? உன்னை விட்டா..? நானும் விலக மாட்டேன்.. உன்னையும் விலக விட மாட்டேன்..”

“டயலாக்கெல்லாம் பிரமாதம்தான் சாரே..”

“ஆள்தான் பிரமாதமா இல்லைங்கறியா..?”

“ஹை.. நீங்க டக்கரா இருக்கீங்கன்னு நான் ஜொள்ளுறதை நீங்க கேட்கனுமாக்கும்.. செம ஐடியாதான் சாரே..”

“உன் வாய் இருக்கே வாய்..”

அவளது உதடுகளை நிமிண்டினான்.. இதழ் சுழித்து நாக்கை நீட்டி அழகு காட்டியவள் அவனது தலையைத் துவட்டி விடுவதைத் தொடர்ந்தாள்..

“நந்தினி..”

“ம்ம்ம்..”

“அப்போது சொன்னதைத்தான் இப்போதும் சொல்கிறேன்டி..”

“எப்போது சொன்னதை..?”

“உன்னைக் காதலிக்கும்போது சொன்னதை..”

“என்ன சொன்னீங்களாம்..?”

“என் மனதில் எந்தப் பெண்ணைப் பற்றிய காதல் உணர்வும் வந்ததில்லைடி.. எந்தப் பெண்ணையும் நான் காதலித்ததில்லை.. நான் மனதில் நினைத்த.. காதலித்த.. ஒரேயொரு பெண் நீதாண்டி.. நீ மட்டும்தாண்டி..”

காதல் மிகுதியால் கரகரத்து அவனது குரல்..! அவனை மார்போடு அனைத்துக் கொண்டாள் நந்தினி.. அவளது இடுப்பில் கைவைத்து இழுத்து அணைத்து முகம் பதித்தான் ரவிச்சந்திரன்.. அவனது உச்சந்தலையில் முகம் புதைத்தவளுக்குள் காதல் பொங்கியது..

‘என்மீது இத்தனைக் காதலை வைத்திருக்கிறாயே.. என்ன தவம் செய்தேன் நான்..’

குழந்தையாய் இருந்தவளைக் குமரியாய் மாற்றியிருந்தது அவனுடைய காதல்.. ஒருவர் மீதான காதலை மற்றொருவர் உணரப் பேசத் தோன்றாமல் மௌனத்தில் உறைந்து சிலையாகியிருந்தார்கள் அவர்கள்..

‘பேச மறந்து சிலையாய் இருந்தால்.. அதுதான் தெய்வத்தின் சன்னதி..

அதுதான் காதல் சன்னதி..’

காலத்தால் அழியாத காவிய வரிகள்.. கண்ணதாசன் எனும் மகத்தான கவிஞன் வரைந்த கவி வரிகள்.. அவற்க்கு உயிர் கொடுத்து சிலையாய் சமைந்திருந்தவர்களை தட்டியெழுப்பியது செல்ஃபோனின் மணியொலி..

“இது மட்டும் இல்லைன்னா..” சிரிப்புடன் விலகி செல்ஃபோனை காதுக்குக் கொடுத்தான் ரவிச்சந்திரன்.. டவளுக்காக அவன் அறையை விட்டு வெளியேற.. பின் தொடர்ந்த நந்தினியின் மனதில் அமைதி விரவியிருந்தது..

இனம் புரியாத பயங்களையும், தயக்கங்களையும் உள்ளடக்கிய கேள்விகளுக்கான பதில் கிடைத்து விட்டதைப் போல உணர்ந்தாள்.. நீரைக் கிழித்துக் கொண்டு சென்ற படகின் அழகு அவள் மனதைக் கவர்ந்து இழுத்தது.. பால்கனி சோபாவில் உட்கார்ந்து வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள்.. ஆடம்பரப் படகு வீட்டில் அமர்ந்து வேடிக்கை பார்த்தபடி பயணம் செய்வது தான்தானா என்ற சந்தேகம் கணநேரம் வந்து போனது..

வேம்பனாடு ஏரியின் அழகு மனதை மயக்கியது.. மயங்கிய மனதை மேலும் மயக்கிய மனோ ரம்யமான காட்சிகள் அவளைச் சுற்றி வலம் வந்தன.. நீரைக் கிழித்துக் கொண்டு செல்லும் படகின் மீது ஓங்கியடிக்கும் நீரலைகளின் ஒலி.. ஏரியின் இருபக்கமும் பச்சைப் பசேலென காட்சியளிக்கும் வயல்வெளி.. கால்வாய் வலை பின்னல்கள்.. அவற்றில் பயணிக்கும் ஓடம் போன்ற சிறு படகுகள்..

பிரிந்து செல்லும் கால்வாயின் ஓரமாக இருந்த வயல்வெளிகளில் நாரைகள் இருந்தன.. தென்னந் தோப்புகளில் கூடு கட்டியிருந்த பறவைகள் கூட்டமாக பறப்பதைப் பார்க்க ஆனந்தமாக இருந்தது.. காயலின் ஊடே ஏரி.. அதிலிருந்து பிரியும் கால்வாய்கள் என ஆலம்புழாவின் அழகு மனதை அள்ளுவதாக இருந்தது.. படகின் அருகே பறந்து வந்த மீன் கொத்திப் பறவையொன்று மீனைக் கவர்ந்து செல்லும் காட்சியைப் பக்கத்தில் பயணித்த படகிலிருந்த ஒருவன் செல்ஃபோனில் படம் பிடித்தான்..

தண்ணீரின் கரையை ஒட்டித் தீவுகள் காட்சி தந்தன.. ஆங்காங்கே கரைகளில் உட்கார்ந்து மீன் பிடித்துக் கொண்டிருந்தார்கள்.. நந்தினிக்கு நீலிமலைக் காட்டில் அவளும் ரவிச்சந்திரனும் மீன் பிடித்த நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன..

‘நீ பிடித்த மீன் உனக்கு.. நான் பிடித்த மீன் எனக்கு..’ என்று அவன் பயமுறுத்தியது நினைவுக்கு வந்ததில் அவளது இதழ்களில் சிரிப்பு விரிந்தது..

“என்னடி..? உனக்கு நீயாய் சிரிச்சுக்கற..?” ரவிச்சந்திரன் பக்கத்தில் உட்கார்ந்து ஒட்டிக் கொண்டான்..

அவள்மீது அவன் கவிழ்ந்து சாய்ந்திருந்ததில் சொக்கிப் போன நந்தினி அவன் மீது சாய்ந்து அவர்கள் மீன் பிடித்த கதையை நினைவு படுத்தினாள்..

“எனக்கு ஒரு பீஸ் மீனாவது கிடைக்குமான்னு நான் பயந்து போனேன் தெரியுமா..?”

“ஹா.. ஹா.. அது மறக்குமா..? ஆமாம்.. பத்து மணியாகப் போகுது.. இன்னும் பிரேக்ஃபாஸ்டை மொக்கலையே.. என்னடி ஆச்சு..? பசிக்கலையா..?”

அவன் மென்மையாக வினவினான்.. அவள் குடை போன்ற ஜிமிக்கிகள் ஆட அழகாக தலையை அசைத்து..

“ஊஹும்..” என்றாள்..

“உலக அதிசயத்தில் இதையும் ஒன்றாச் சேர்த்துடனும்..”

“எழுதிப் போடுங்க பாஸ்..”

“ஏன் பசிக்கலை..?”

“தெரியலை.. உங்க பக்கத்தில் இருந்தால் பசியே தெரிய மாட்டேங்குது..”

குழந்தையாகச் சொன்னவளை பிரியத்துடன் அணைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. எங்கே நானென்று

தேடட்டும் என்னை என்று அவன் தேடிய காதல் கிடைத்து விட்டதில் அவன் மனதிலும் அமைதி விரவியது..

# அத்தியாயம் 196

**ப**ஞ்சு போலப் பறக்கும் இட்லிகள்.. தொட்டுக் கொள்ள சட்னி.. மீன் குழம்பு.. முன்னதைவிடப் பின்னதே இட்லிக்குத் தோது என்று சப்புக் கொட்டிக் கொண்டே அபிப்ராயம் தெரிவித்தாள் நந்தினி.. இது உணவு சம்பந்தமான அபிப்ராயம் என்பதினால் அவள் சொல்வதே சரியானதாக இருக்கும் என்று ரவிச்சந்திரன் தீர்ப்பு வழங்கினான்.. எதனால் அப்படி என்று அவள் சண்டைக்கு வந்தாள்.. உணவு விஷயத்தில் அவளளவுக்குத் தனக்குப் பாண்டித்யம் கிடையாது என்று தன்னடக்கதோடு அவன் சான்று பகர்ந்தான்.. பேசாமல் இருக்காவிட்டால் இட்லிகளாலேயே தாக்குதல் நடத்தப் போவதாக நந்தினி போர் முரசு கொட்டினாள்.. அவளுடைய ஆயுதம் உணவாகத்தானே இருக்க முடியும் என்று ரவிச்சந்திரன் கூறிவிட்டு அவளிடம் பலத்த கிள்ளை வாங்கினான்..

“ஹ..! கொஞ்சம் கூட வலிக் கவே இல்லைடி.. வெறும் வாய்தான்.. சுத்தமா ஸ்ட்ரென்த் இல்லை..”

கிள்ளிய கையை இறுக்கிப் பிடித்துத் தன் கையில் சிறை வைத்தபடி கேலி செய்தான் ரவிச்சந்திரன்.. தண்ணீரில் மிதந்தபடி காலை உணவை உண்ணும் அனுபத்தை ரசித்து அனுபவித்தாள் நந்தினி.. காலை உணவை முடித்தவர்கள் அறைக்குப் போகாமல் பால்கனிக்குப் போய் அங்கிருந்த சோஃபாவில் சரிந்து விட்டார்கள்..

படகின் முகப்பின் வளைவை ஒட்டி வளைவாய் அமைக்கப் பட்டிருந்த சோபாவின் மூலைப் பகுதியில் முதுகை சாய்த்து அமர்ந்து கால்களை நீட்டித் தன் மடியில் நந்தினியை இழுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. அவன் மார்பின்மீது சாய்ந்து கொண்டவளின் தோள் வளைவில் அவனது கரங்கள் இறங்கி ஒன்று சேர்ந்து அவளை வளைத்து இறுக்கிக் கொண்டன..

இறுக்கமாக அவளை வளைத்திருந்த ரவிச்சந்திரனின் பிணைந்த கைகளின் மீது கை வைத்து கதை பேசியபடி வெளிப்புறக் காட்சிகளை ரசித்துப் பார்த்தாள் நந்தினி.. திடிரென..

“ஹை.. வாத்து..” என அவள் துள்ளி எழ..

“அடங்குடி..” என்று தன்னுள் அடக்கிக் கொண்டான் ரவிச்சந்திரன்..

வாத்துக்கள் கூட்டம் கூட்டமாக ஏரியின் ஓரமாக நீந்திச் சென்றன.. வாத்துக்களை மேய்ப்பவர் கரையை ஒட்டி நடந்தபடி அவைகளை குச்சி கொண்டு மிரட்டி ஒருங்கிணைத்தபடி விரட்டிக் கொண்டு போனார்..

“தண்ணிக்குள்ள வாத்து மேய்க்கிறாரா பாஸ்..?”

“அறிவுத் திருக்கடல்ன்னு அப்பப்ப புரூவ் பண்ற.. பட்ஷே.. நீ சொல்வது ஒருவகையில் சரிதான்.. இப்ப அவர் வாத்துக்களை புதிய மேய்ச்சலிடங்களுக்கு அழைத்துக் கொண்டு போகிறார்..”

அவனை இருக்கையாக்கி மடி மீது உட்கார்ந்து அவன் மார்பின் மீது சாய்ந்து அவள் கதை பேசுவதாக இருந்தால் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும் அலுக்காமல் கதை கேட்கலாம் என்று ஆணித்தரமாக ஜொள்ளியது அவன் மனது..

பக்கத்தில் ஓர் ஓடம் மிதந்து கொண்டிருந்தது.. ஆளில்லாத ஓடம் தனியாக மிதக்கிறதே என்று பரிதாபம் கொண்டாள் நந்தினி.. இது நீரோடு செல்கின்ற ஓடம் என்ற பாடலின்

முதல்வரி அவளது வாயில் வெளிப்பட்டதில் அவள் தலையில் கொட்டு வைத்தான் ரவிச்சந்திரன்..

“வாகாய் தலை அகப்பட்டுக்கிட்டாக் கொட்டிப் புண்ணாக்குவீங்களா பாஸ்..?” தலையைத் தடவிக் கொண்டாள் நந்தினி..

“பின்னே.. சிச்சுவேஷனுக்குத் தகுந்ததைப் போல டூயட் சாங் எதையாவது பாடுவியா.. அதை விட்டுவிட்டு சோக கீதம் இசைக்கிறா.. ஏண்டி இப்படி இருக்கிற..?”

“ஏதோ இருக்கிறேன்.. தனியாய் ஓடம் மிதந்தா ஐயோ பாவம்ன்னு தோணாதா..”

“அங்ஙன நோக்கு..”

அண்ணலும் சுட்டிக் காட்டினான்.. ஆரணங்கும் நோக்கினாள்.. கண்ணீருக்குள் இருந்து வெளிப்பட்ட ஒருவன் கூடையிலிருந்த ஈரமணலை ஓடத்தில் கொட்டி விட்டு மீண்டும் தண்ணீருக்குள் மூழ்கினான்..

“அவன் என்ன பாஸ் செய்கிறாரு..?”

“ம்ம்ம்.. மணலை அள்ளுகிறார்..”

“எதுக்கு..?”

“விற்க..”

“இதை வாங்கி என்ன பாஸ் செய்வாங்க..?”

“வீடு கட்டுவாங்க..”

“என்னது..?”

ஆச்சரியப் பட்டுப் போனாள் நந்தினி.. தண்ணீரின் அடியிலிருக்கும் மணலை அள்ளித்தான் வீடு கட்ட வேண்டுமா..?

ஆமாம் என்றான் ரவிச்சந்திரன்.. கேரள அரசாங்கத்தின் ஆணை அது என்றான்..

“இங்கே வீடு கட்டுவதற்கான மணலை ஆற்று நீரில் மூழ்கித்தான் அள்ள வேண்டும்.. ஆறோடும் பகுதி தூர் வாரியதைப் போல ஆழமாகும்.. மணல் விலை இங்கே அதிகம்தான்.. கவர்ன்மெண்டோட ஆர்டர் இது..

கேரளத்தின் இயற்கை வளத்தை பாதுகாக்கிற அரசியல் வாதிகள்தான் இங்கே ஆட்சியைப் பிடிக்க முடியும்..”

“ஓ..”

அழகாக உதடுகளைக் குவித்தாள் நந்தினி.. குனிந்து அவன் முத்தமிட முயன்றான்.. முகத்தைத் திருப்பி ஏமாற்றி

அவன் முகத்தில் தலையை மோதி கலகலத்துச் சிரித்தாள்... அவளது சிரிப்பலைகளில் பரவிய உயிர்ப்பலைகளை ரசித்தான் ரவிச்சந்திரன்.. அவளுடன் இருக்கும் மணித்துளிகள் மறக்க முடியாதவை என்று அவன் மனது சொன்னது..

சீரான வேகத்தில் வேம்பனாடு ஏரியில் படகு மிதந்து சென்று கொண்டிருந்தது.. படகு வீட்டின் பங்களாவில் இருந்து பால்கனியில் வேடிக்கை பார்ப்பதைப் போல இருப்பதாக சொன்னாள் நந்தினி..

“மொட்டை மாடிக்குப் போய் பார்க்கலாமா..?” என்று கேட்டான் ரவிச்சந்திரன்..

“மொட்டை மாடியா..? இது படகு பாஸ்..” என்றாள் நந்தினி..

“ஆஹா..! எப்பேற்பட்ட கண்டு பிடிப்பு.. தேறிட்ட போ..” பாராட்டினான் ரவிச்சந்திரன்..

‘நிஜமாவே பாராட்டறானா..?’

‘ஙே’ என விழித்தாள் நந்தினி.. அது பாராட்டுதலைப் போலவும் இல்லாமலிருந்ததால் ஒரு மார்க்கமாக அவனைப் பார்த்தாள்..

“எதுக்கு இந்த விழி விழிக்கிற..?”

அவனுக்கு வேடிக்கையாக இருந்தது.. அவள் செய்வது அனைத்தும் அவனுக்கு வேடிக்கையானதாகவே இருப்பதாக குற்றப் பத்திரிக்கை வாசித்தாள் நந்தினி..

“ஊஹும்..?” அவனுக்கு அதுவும் வேடிக்கையாகவே இருந்தது..

“அதென்ன பாஸ்.. நான் எதைச் சொன்னாலும் அதை ஜோக்காவே கன்சிடர் பண்றிங்க..? இது படகு பாஸ்.. இதில போய் மொட்டை மாடி.. சுற்றுச் சுவர்ன்னு சொன்னா நம்பற மாதிரியா இருக்கு..?” நந்தினிக்கு கோபம் வந்து விட்டது..

“நீ டைட்டானிக் படம் பார்த்ததில்லையா..?” அவளை மட்டம் தட்டுவதைப் போல கேட்டான் அவன்..

“ஏன், ஏன், ஏன்..?”

“எதுக்கு இத்தனை ஏன்..? ஏண்டி நீ கேள்வியின் நாயகியாடி..? எதுக்கெடுத்தாலும் ஏன், என்னன்னு ராகம் பாடற..?”

“நீங்க மட்டும்தான் டைட்டானிக் படம் பார்க்கனுமா..? நாங்கள்ளாம் பார்க்கக் கூடாதா..?”

“நாங்கன்னு யாரை மென்ஷன் பண்ற.. உத்ராவையும் உன்னையும் சேர்த்து மென்ஷன் பண்றியா..?”

“உத்ராவைப் பத்தி நீங்க பேசக் கூடாது..”

“ஏன் பேசக் கூடாது..? அவங்க உன்னோட ஃபிரண்ட்..”

“எனக்குத்தான் ஃபிரண்ட்.. உங்களுக்கில்லை..”

“எனக்கு அவங்க என்ன எனிமியா..?”

“ஸ்ஸ்ஸ்.. உங்களோட முடியலை.. கண்ணைக் கட்டுது..”

“ஏண்டி.. கண்ணாமூச்சி விளையாடப் போறியா..?”

“ஹலோ பாஸ்..”

“சொல்லுடி.. என் ஆசை பெர்சனல் செக்கரட்டரி..”

“ம்ஹூம்.. பி.டெக் கோல்ட் மெடலிஸ்ட்.. காலேஜ் ஃபர்ஸ்ட்.. எனக்குக் கிடைச்சிருக்கிற பட்டத்தைப் பாரேன்..”

“யாரைப் பார்க்கச் சொல்கிற..?”

“உத்ரா வினித் அண்ணாவின் பெண்டாட்டி..”

“இது என்னடி வம்பாய் போச்சு..? இல்லைன்னு நான் சொல்லவே இல்லையே..”

“அவளைப் பத்தி நீங்க பேசக் கூடாது..”

“நான் எங்கேடி பேசினேன்...? நீதானே நாங்கள்ளாம்ன்னு அவங்களையும் சேர்த்து மென்ஷன் பண்ணின..?”

“நாங்கள்ளாம்ன்னா.. நாங்கள்ளாம்ன்னு அர்த்தம்..”

“ஆஹா.. எவ்வளவு தெளிவா மீனிங் சொல்றேடி.. உன் அறிவோட லெவலில அசந்து போறேண்டி நந்தினி..”

“பாஸ்..”

“சொல்லுடி..”

“நீங்கள்ளாம் ஹை-டெக் கோடிஸ்வரங்க.. டைட்டானிக் பார்ப்பீங்கங்கிற மமதையில பேசாதீங்கங்கிற மீனிங்கலி சொன்ன ‘நாங்கள்ளாம்..’ ங்கிற வார்த்தைதான் அது..”

“ஓ.. ஓ.. ஓ..”

“நான் ஏன்னு கேட்டா இவர் எதுக்கு இத்தனை ஏன்னு கேட்பாராம்.. இவர் மட்டும் இத்தனை ‘ஓ’ போடலாமாம்..”

“நான் ஹை-டெக் கோடிஸ்வரன்.. நீ யாருடி..? மண் குடிசையில பிறந்து வளர்ந்த ஏழைப் பெண்ணா..?”

ரவிச்சந்திரன் மடக்கியதில் திருதிருத்தாள் நந்தினி.. அவன் சொல்வதும் சரிதானே.. அவள் பணக்காரக் குடும்பத்தில் கோடிஸ்வரர் மேகநாதனின் மகளாக பிறக்கும் போதே வாயில் தங்க ஸ்பூனைக் கவ்வியபடி பிறந்தவள் தானே..

'என்னத்தைப் பிறந்து என்ன பண்ண..? இவன் முன்னாடி.. ஓலைக்குடிசையில் இருப்பவளைப் போலயில்ல இன்பிரியாரிட்டி காம்ப்ளெக்ஸா இருக்கு..'

“என்னடி..? பதிலைக் காணோம்.. கமான்.. கிவ் மி த ஆன்சர்..”

“அதெல்லாம் எனக்குத் தெரியாது... நான் டைட்டானிக் படத்தைப் பார்த்திருக்க மாட்டேன்னு எப்படி நீங்க சொல்லலாம்..? இதுக்குப் பதிலை நீங்க சொல்லங்க..”

“அபாண்டமா பழி போடக் கூடாது.. நான் என்ன கொஸ்டின் பண்ணினேன்னு மனதுக்குள்ளே ரிவைண்ட் பண்ணிப் பார்த்துட்டுத்தான் பேசனும்..”

அவன் போட்ட போட்டில் ஒற்றை விரலால் நெற்றியில் தட்டி அவன் என்ன பேசினான் என்பதை மனதுக்குள் ரிவைண்ட் செய்து நினைத்துப் பார்த்தாள்..

“நீ டைட்டானிக் படம் பார்த்ததில்லையா..?”

மனதுக்குள் வந்த அவன் கேட்டான்..

“நினைவுக்கு வந்துருச்சா..? ‘நீ டைட்டானிக் படம் பார்த்ததில்லையா..?’ அப்படித்தானேடி கேட்டேன்.. நீயெல்லாம் டைட்டானிக் படத்தைப் பார்த்திருக்க மாட்டேன்னா சொன்னேன்..?”

மறுபடியும் அவன் மடக்கியதில் அவள் அசடு வழியும் முகத்தோடு அவன் பக்கமாகத் திரும்பி அவனது சட்டைப் பொத்தானைத் திருகியபடி.

“ஹி.. ஹி..” என்று சிரித்து வைத்தாள்..

‘இவள் இருக்கிறாளே..’

அவளது காதைப் பிடித்து திருகினான் ரவிச்சந்திரன். .

“போதும் பாஸ்.. வலிக்குது...”

அவள் வேண்டிக் கேட்டுக் கொண்டதால் காதை விட்டான்..

“எதுக்காக டைட்டானிக்கை கட்டி இருத்தீங்க பாஸ்..?” அப்போதும் சட்டைப் பொத்தானை விடாமல் திருகியபடி கொஞ்சலாக கேட்டு வைத்தாள் நந்தினி..

‘இப்படிக் கேட்டால் என் சொத்து முழுதையும் இவளுக்கே எழுதிக் கொடுத்து விடுவேன் என்பதை இவள் அறிவாளா..?’

அவளது நெற்றியின் மையத்தில் விரலால் தொட்டு இழுத்து மூக்கைக் கடந்து உதடுகளில் மையம் கொண்டான் ரவிச்சந்திரன்.. உணர்ச்சி மேலிட்டில் அவள் சட்டை பொத்தானை மறந்து அவன் கழுத்தைக் கட்டி முத்தம் பதித்தாள்..

“உன்னைக் கட்டி இழுக்க நினைக்கிறவனை ஏண்டி டைட்டானிக்கை கட்டி இழுக்கச் சொல்கிற...?” வேட்கையுடன் அவளை அணைத்து விழிகளுக்குள் பார்த்துக் கேட்டான் ரவிச்சந்திரன்..

“நான் ஒண்ணும் சொல்லலை... நீங்கதான் டைட்டானிக்குன்னு எதையோ சொல்ல வந்தீங்க..” சிணுங்கினாள் நந்தினி..

“சொல்ல வந்ததை நீ சொல்ல விட்டால்தானே.. எத்தனை கொஸ்டின்.. இதில வேற சண்டைக்கு வர்றா..” அவளது மூக்கைப் பிடித்துத் திருகினான் ரவிச்சந்திரன்..

“ஸோ.. பேசியே டைம் பாஸ் பண்ணுவீங்க.. என்னன்னு சொல்ல மாட்டிங்க..”

“பெரிதா ஒன்றுமில்லைடி.. டைட்டானிக் கப்பலிலே மொட்டை மாடி எது..?”

“கப்பலோட மேல்தளம்..”

“அதைப் போல இங்கேயும் இருக்காதா..?”

“பாஸ் அது கப்பல்.. இது படகு..”

“திரும்பத் திரும்ப இதையே ரிவிட் பண்றா.. ஏய்ய்.. இப்படி வாடி..”

ரவிச்சந்திரன் அவளது கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனான்.. அழகிய கடைசலுடன் கூடிய மரப் படிகள் நடுவில் ரெட் கார்பெட் விரிக்கப் பட்டு கண் சிமிட்டின..

‘இதென்னடா இது.. ஜீபூம்பா வேலையாய் இருக்கு..’

கனவில் நடப்பவளைப் போல ரவிச்சந்திரனின் கை பிடித்துப் படிகளில் ஏறினாள் நந்தினி.. அவன் சொன்னதைப் போல மொட்டை மாடி இருந்தது.. வெறும் மொட்டைமாடியில்ல.. பால்கனியுடன் கூடிய மொட்டை மாடி..

அங்கும் அசத்தலான சோஃபாக்கள் போடப் பட்டிருந்தன.. வட்ட வடிவமாக வளைத்து அமைக்கப் பட்டிருந்த சோபாவில் நந்தினியுடன் சரிந்தான் ரவிச்சந்திரன்..

எங்கும் தண்ணீர்.. கரையோர தென்னந் தோப்புக்கள்.. அதையொட்டிய சின்னஞ்சிறு தீவுகள்.. வயல் வெளிகள்..

அவற்றை வேடிக்கை பார்த்தபடி சோபாவில் சரிவது பெரும் சுகம்.. பால்கனியில் படுத்துக் கொள்ளும் வகையில் கைபிடி இல்லாத நீண்ட சோபாக்கள் இருந்தன.. அதில் தலையணை போலிருந்த திண்டுகள்..

யாருமற்ற தனிமையில், தண்ணீர் தேசத்தில், மிதக்கும் படகு வீட்டின் மேல் மாடி பால்கனியில், எவரும் பார்க்காமல் மறைவாக சோபாவில் ஒருவர் மீது ஒருவர் சரிந்து தண்ணீரையும் சுற்றுப் புறத்தையும் வேடிக்கை பார்ப்பது என்பது அப்பேற்பட்ட ஆனந்தம்..!

# அத்தியாயம் 197

**க**ரையை ஒட்டிய தீவுகளில் கால்வாய் நீர் ஓடிக் கொண்டிருந்தது.. வாய்க்காலைக் கடக்க தென்னை மரங்களை குறுக்காக போட்டிருந்தார்கள்.. அதைப் பார்த்த நந்தினி..

“தென்னை பாலம்..” என்றாள்..

அவள் சொன்னதைக் கவனிக்காமல் அவளது கன்னத்தில் விரலால் கோடிழுத்தான் ரவிச்சந்திரன்.. அவளையே பார்த்த அவனது விழிகளில் வேட்கையும் தாபமும் நிரம்பிய அழைப்பிருந்தது.. நந்தினி கிளர்ந்தாள்.. அவள்மீது அவன் பரவியிருந்த அழகான அந்தப் பொழுது மயக்கம் நிரம்பியதாக இருந்தது..

தண்ணீர் தேசம்..! அதில் மிதக்கும் படகு வீடு..! அரண்மனையின் உப்பரிகை போல ஒரு பால்கனி..! அதில் பஞ்சணைகள் போடப் பட்டிருப்பதைப் போல படுக்கும் வசதியுடன் போடப்பட்டிருக்கும் சோபாக்கள்.. ஒருபுறம் நீர்.. மறுபுறம் தீவுகளும், வயல்வெளிகளும், ஆகாயத்தில் கூட்டம் கூட்டமாக பறந்து கொண்டிருக்கும் பறவைகள்..

ஈரப் பசையுடன் கூடிய கேரளத்துக்கே உரிய சிலுசிலுவென்ற குளிர் காற்று.. படகின் மேல்பகுதி பால்கனியில் அவளும் அவனும் மட்டுமாக இருக்கும் அழகான தனிமை..!

போதை நிரம்பிய அந்தப் பொழுதில் காதலன் காதலியிடம் என்ன வேண்டுவானோ அதை வேண்டினான் ரவிச்சந்திரன்.. நந்தினியின் மீது பரவிப் படர்ந்து முகத்தோடு முகம் வைத்து இதழ்களில் ஆழமான முத்தத்தைப் பதித்தான்.. வெறி கொண்ட சிங்கத்தின் பாய்ச்சலை அவனிடம் உணர்ந்தாள் நந்தினி.. அவளது மேனி நடுங்கியது..

மற்றைய பொழுதாக இருந்தால் அவளது நடுக்கத்தை உணர்ந்தவுடன் ரவிச்சந்திரன் விலகி அவளை அமைதிப் படுத்தியிருப்பான்.. அது விலக முடியாத கள்ளூரும் போதை நிரம்பிய பொழுது..! அவளது நடுக்கத்தைப் புறக்கணித்து நெருக்கத்தை அதிகப் படுத்தினான்.. அவளது சிறு விலகலிலும் சினம் கொண்டு உறுமினான்.. இரை தேடும் சிங்கத்தின் வெறியினை அவனுள் கண்டவளால் விலக முடியவில்லை.. அவன் வேண்டாம் என்று நினைத்தால் விலகி விடலாம்.. அவளுக்கு அவன் வேண்டுமே..

அவனைக் கண்ட நொடி முதல் இந்த நொடிவரை அவனுடன் கழித்த அத்தனை தினங்களிலும் அவள் மீதான அவனது தீராத மோகத்தையும் ஆசையையும் அவள் தெளிவாக வரையறுத்து வைத்திருந்தாள்.. அவளது விலகலை அவன் விரும்ப மாட்டான்..

நந்தினியின் கைகள் அவன் கழுத்தை வளைத்தன.. அதில் திருப்தியானவனின் விழிகள் ஜொலித்ததில் அவனது நெற்றியில் சிறு முத்தம் பதித்து முடியைக் கோதி விட்டாள்.. அவன் விழி மூடி அவளது முத்தத்தையும் முடி கோதலையும் அனுபவித்தான்..

“எனக்கு வேடிக்கை பார்க்கனும்..” அவள் கோரிக்கை வைத்தாள்..

“தள்ளிப் போகாமல் வேடிக்கை பார்க்க முடிந்தால் பாரு..” அவன் அனுமதி கொடுத்தான்..

“எப்படி முடியும் சாரே..?”

“இப்படி முடியும்..”

அவளது இடையில் கை கொடுத்து அவன் தூக்கிக் கொள்ள அவனது கழுத்தைக் கைகளால் பிணைத்து மாலையாக்கி அவன் கைகளில் அவள் சயனித்தாள்..

பால்கனியைச் சுற்றி அவன் வலம் வந்து சுற்றிக் காட்ட எம்பி அவன் கன்னத்தில் முத்தமிட்டு மோகத்தீயை குளிர வைத்தாள்.. அவன் காட்டிய நெருக்கத்திற்குக் குறைவில்லாத நெருக்கத்தை அவள் அள்ளியள்ளி தந்ததில் அவன் போதை கொண்டான்..

**"ஸ்நேகிதனே..! ஸ்நேகிதனே..!**

**ரகசிய ஸ்நேகிதனே..!"**

ரகசியக் குரலில் கிசுகிசுப்பாய் அவள் பாடியதில் கிளர்ந்து கிறங்கினான் ரவிச்சந்திரன்.. இத்துனை அழகான இணக்கத்தையும் நெருக்கத்தையும் அவன் எதிர் பார்த்திருக்கவில்லை.. குழந்தைத்தனமான சுபாவம் கொண்டவளிடமிருந்து வெளிப்பட்ட காதலின் போதையில் அவன் கரையேற முடியாமல் மூழ்கினான்..

அவனை மோக வெள்ளத்தின் போதையில் மூழ்க வைத்து மூச்சுத் திணற வைக்கும் சாமர்த்தியம் கொண்டவளாக இருந்தாள் நந்தினி.. காதலிக் கு மட்டும்

கைகூடும் சாமர்த்தியம் அது.. காதலனின் தேவையை அறிந்து செயல்படும் சாமர்த்தியம் அது..

"சின்னச் சின்னதாய் கோரிக்கைகள்.. செவி கொடு ஸ்நேகிதனே..!"

அவன் குனிந்து செவியைக் கொடுக்க அவள் நுனிப் பற்களால் செவி மடலைக் கடித்தாள்.. 'ஹா' என்று கிறங்கிப் போனான் அவன்.. அழுத்தமாக இறுக்கி அவன் அணைத்ததில் எழும்புகள் நொறுங்கும் இன்ப இம்சையை அவள் உணர்ந்தாள்..

**"இதே அழுத்தம், அழுத்தம்..**

**இதே அணைப்பு, அணைப்பு..**

**வாழ்வின் எல்லை வரை வேண்டும்**

**வேண்டும்.."**

தாள முடியாத காதலோடு அவளை சோபாவில் கிடத்தி மேலே பரவியவனின் காதோரமாக அவள் பாடினாள்..

**"சின்னச் சின்ன அத்து மீறல்கள்.. புரிவாய்..**

**என் செல் எல்லாம் பூக்கள் பூக்கச்**

**செய்வாய்.. மலர்களில் மலர்வாய்..”**

அவளது உடலெங்கும் பரவிய நூதனமான மயக்கத்தில் ஆழ்ந்து அமிழ்ந்தபடி அவன் தோள் வளைவில் முகம் புதைத்தாள்.. நாடி நரம்பெங்கும் வியாபித்திருக்கும் காதல் போதையிலிருந்து வெளிவர இயலாமல் தவித்தாள்.. அவளது அந்தத் தவிப்பு அவனுக்கானது என்பதில் அவன் மனது நிறைந்தது.. மெல்லிய பூவின் இதழ்களை வருடும் நுட்பத்தோடு அவளது கை வளைவில் முகம் பதித்தான்..

**“பூப்பறிக்கும் பக்தன்**

**சூபால மெதுவாய்..**

**நான் தூங்கும்போது விரல்நகம்**

**களைவாய்.. சத்தமின்றித் துயில்வாய்..”**

அவளது விழிமீது இமைமூட.. அதன் மீது அவன் இதழ் மூட அவர்கள் துயில் கொள்ளாமல் துயில் கொண்டார்கள்.. அவள் கைவிரல்களை உதற அவன் அவற்றைப் பற்றி நீவிக் கொடுத்தான்.. அவள் புருவங்களை நெறித்தால் புருவங்களை நீவி அமைதியைக் கொடுத்தான்.. அவளுக்கான காதல்

சேவைகளை செய்யும் சே வகனாக அந்த ராஜாதி ராஜன் மாறியதில் அவனது ராணியான அவள் இன்பம் கொண்டாள்..

**"ஐ விரல் இடுக்கில்..**

**ஆலிவ் எண்ணை பூசி சேவைகள் செய்ய வேண்டும்.."**

அட்டூழியமாக அவள் கட்டளையிட.. அவன் 'அதற்கென்ன' என்பதைப் போல தலையை ஆட்டி முத்தம் கொடுத்தான்..

**"நீ அழும்போது**

**நான் அழ நேர்ந்தால்**

**துடைக்கின்ற விரல் வேண்டும்.."**

அவளது குரல் நெகிழ்ந்து உருகியதில் அவன் உருகிப் போனவனாக அவளது இதழ் மூடிச் சேர்த்தணைத்துக் கொண்டான்..

கூடலில்லாத கூடல் காதலில் மட்டுமே சாத்தியம்.. காதலனின் தேவையறிந்து வழங்கும் அட்சய சுரபியாக காதலி மாறும் போது.. தேவைகளைக் கட்டுப்படுத்தி அவளை ரட்சிக்கும் ரட்சகனாக காதலன் மாறுவான்..

உண்மையான காதல் ஒரு போதும் வஞ்சிக்காது.. நந்தினியின் காதருகே முணுமுணுப்பாக தன் கோரிக்கைகளை வைத்தான் ரவிச்சந்திரன்.. அவள் முகம் சிவக்க விரல்களால் முகம் மூடி விரலிடுக்கில் அவனைப் பார்த்து 'ச்சீய்' எனும் பாவனையில் முகம் சுருங்கினாள்.. கள்வெறி கொண்டவனாக அவள் மீது கவிழ்ந்தான் அவன்.. காதலனின் தாகம் அறிந்தவளாக..

**"சொன்னதெல்லாம் பகலினில் புரிவேன்..**

**நீ சொல்லாததும் இரவினில் புரிவேன்..**

**காதில் கூந்தல் நுழைப்பேன்.."**

என்று தன் பின்னலால் அவன் முகம் வருடினாள் நந்தினி.. மயிலிறகால் அவள் மனம் வருடியதைப் போல சிலிர்ப்பைக் காட்டினான் ரவிச்சந்திரன்.. அவனது ஸ்வெட்டருக்குள் தானும் நுழைந்து அவனை அவள் அதிசயப் பட வைத்தாள்.. அவன் செய்வதைப் போலவே அவனது நெற்றியின் மையத்தில் விரல் வைத்துக் கீழே இறக்கி மூக்கைக் கடந்து அவனது மீசையை நிரடி இதழ்களில் வந்து நின்றாள்.. அவளது நுனி விரலை அவன் கடிக்க.. மூக்கைச் சுருக்கிச் சிரித்து மயக்கினாள்..

**"உந்தன் சட்டை நானும் போட்டு**

**அலைவேன்..**

**நீ குளிக்கையில் நானும் கொஞ்சம்**

**நனைவேன்..**

**உப்பு மூட்டை சுமப்பேன்.."**

யார்..? நீதானே..? என்னை வேண்டுமானால் உன்னை சுமக்க வைப்பாய் என்று அவன் சொன்னதில் கலகலத்துச் சிரித்தாள்..

**"உன்னையள்ளி எடுத்து**

**உள்ளங்கையில் மடித்து..**

**கைக்குட்டையில் ஒளித்துக் கொள்வேன்.."**

என்று அவள் பாட.. அவனோ உன் முந்தானையில் ஒளித்துக் கொள் என்றான்..

**"நீ வெளிவரும் போது விடுதலைகள் செய்து**

**வேண்டும் வரம் வாங்கிக் கொள்வேன்.."**

என்றவளிடம் என்ன வரம் வேண்டும்..? கேள்.. தருகிறேன்.. என்றான் அவன்..

நந்தினி அவன் காதலை வரமாக கேட்டாள்.. வரம் கொடுக்கும் தேவதை வரம் கேட்கலாமா என்று அவன் நியாயம் கேட்டான்.. இவர்களின் காதல் பாடலைக் கேட்டபடி நேரம் நகர்ந்து கொண்டிருந்தது..

சுகமான ஈரக்காற்று உடல்களில் படிய அவர்கள் ஒருவரிடம் ஒருவர் கதகதப்பைத் தேடிக் கொண்டிருந்த போது மரப்படிகளில் குரல் கேட்டது.. நந்தினி அவசரமாக விலகி அமர்ந்தாள்.. ரவிச்சந்திரன் எழுந்து சென்று என்னவென்று வினவினான்..

“ஆரஞ்சு ஜுஸ் சாரே..” என்றான் பணியாள்..

இரண்டு கண்ணாடித் தம்ளர்களில் நிர ம்பியிருந்த ஆரஞ்சு ஜுஸுடம் வந்தான் ரவிச்சந்திரன்.. ஒன்றை நந்தினியிடம் கொடுத்து விட்டு இன்னொன்றை பருக ஆரம்பித்தான்.. பாதித் தம்ளர் ஜுஸை காலி செய்ததும் நந்தினி அவனுடைய தம்ளரைப் பிடுங்கிக் கொண்டாள்.. அவன் குடித்த ஜுஸை அவள் குடித்ததில் அவன் முகத்தில் மென்மை படர்ந்தது.. அவள் குடித்த ஜுஸை அவன் குடிக்க ஆரம்பித்தான்..

ஜூஸ் தம்ளர்களை எடுத்துப் போக வந்த பணியாளிடம் வாய் வளர்த்தாள் நந்தினி.. அங்குள்ளவர்களின் வாழ்க்கைச் சூழலைப் பற்றிக் கேட்ட போது வீட்டுக்கொரு சைக்கிள் இருப்பதைப் போல.. அங்கே வீட்டுக்கொரு ஓடம் இருக்கும் என்று தெரிய வந்தது..

“நிஜமாவா..?” என்று அவள் வாய் பிளந்ததில் பணியாள் சிரித்து விட்டுப் போய் விட்டான்..

“இவனை இண்டர்வியு எடுத்துக் கவர் ஸ்டோரி எழுதப் போகிறயா..?” ரவிச்சந்திரன் கேலி செய்தான்..

“எழுதினா என்ன பாஸ்..? ஏன் நான் கர்ஸ்டோரி எழுதக் கூடாதா..?”

“எந்த மேகசின்ல போடுவாங்களாம்..?”

“ஏனாம்..? எனக்காக நீங்க ஒரு மேகசினை ஆரம்பிக்க மாட்டிங்களா என்ன..?”

“ஏன் ஆரம்பிக்க மாட்டேன்..? உனக்காக எதையும் செய்வேன் என்கிறபோது கேசின் ஆரம்பிக்க மாட்டேனா..? என்ன ஒன்று.. படிக்கத்தான் ஆள் தேட வேண்டும்..”

அவன் கவலைப் படுவதைப் போல பாவனை செய்ய.. அவள்..

“பாஸ்..” என்று அவன் மார்பில் குத்தினாள்..

அவர்கள் கீழே இறங்கி வந்தார்கள்.. கண்ணாடி கதவுகளைக் கொண்ட ஜன்னல்களை அவள் செல்ஃபோனில் படம் பிடித்துப் பத்திரப் படுத்திக் கொண்டாள்.. பட்டாம் பூச்சியின் சுறுசுறுப்போடு இங்கும் அங்குமாக ஓடித் திரிந்தவளை அவன் காதலுடன் வேடிக்கை பார்த்தான்..

“இங்கே கிச்சன் இருக்கா பாஸ்..?”

“இல்லாமலா உனக்கும் எனக்கும் பிரேக்ஃபாஸ்ட் கொடுத்தாங்க.. கொஞ்ச நேரத்துக்கு முன்னாலே உணக்கையாய் ஆரஞ்சு ஜூஸ் குடிச்சியே.. அது எங்கிருந்து வந்தது..?”

“நான் மட்டுமா குடிச்சேன்..? நீங்களும்தான் குடித்தீங்க..”

“சத்தமாய் சொல்லாதே.. கேட்கிறவங்க நீ ஜூஸைப் பத்தித்தான் சொல்கிறேன்னு நினைக்க மாட்டாங்க.. வேற எதையாவது நினைச்சிறப் போறாங்க..”

“இதுவே தண்ணீர் தேசம்.. இங்கே போய் யார் வாய் பார்க்கப் போகிறாங்களாம்..?”

“இங்கே வேலை செய்கிறவங்க வாய் பார்க்க மாட்டாங்களா..?”

“ஆமாமில்ல..”

மரியாதையாய் வாயை மூடிக் கொண்ட நந்தினி அந்தப் பக்கமாக போய் பார்த்தாள்.. சுவரில் டைல்ஸ் ஒட்டப்பட்டு மர அலமாரிகளுடன் கூடிய மாடுலர் கிச்சனாக அதி நிவீனமாக இருந்தது சமையலறை..

‘பாருடா..’ அதையும் படம் பிடித்தாள்..

சிங்கில் குழாயைத் திறந்தால் தண்ணீர் கொட்டியது..

‘தண்ணீரில் மிதக்கும் படகு வீட்டில் ஷவரில் தண்ணீர் கொட்டுது.. வாஷ்பேசின் குழாயில் தண்ணீர் கொட்டுது.. கிச்சன் சிங்கிலும் தண்ணீர் கொட்டுது..’

புருவங்களை மெச்சுதலாக உயர்த்தி விட்டு வெளியே வந்தவளின் நாசி வறுத்த மீனின் வாசனையை உணர்ந்து.. “ம்ஹா..” என்று அதை உள்ளே இழுத்து அனுபவித்து வாசம் பிடித்தது..

“நம்ம கிச்சனிலா பாஸ்..?”

காதலை மறந்து உணவின் உபாசகியாய் நாக்கைச் சப்புக் கொட்டினாள்..

“இப்பத்தான் ஒரிஜினல் நந்தினியாய் இருக்கேடி..”

தலையில் அடித்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

# அத்தியாயம் 198

**அ**லையடிக்கும் நீரில் மிதக்கும் படகில்.. அலைபாயும் மனங்களோடு காதல் உணர்வில் மிதந்து கொண்டிருந்தவர்கள் பேசிக் கொள்ளும் பேச்சா இது..? சற்றுப் பொழுதுக்கு முன் நந் தினியும் காதல் உணர்வில் மிதந்து கொண்டிருந்தவள்தானே.. ரகசிய சிநேகிதனிடம் ரகசியமாய் காதல் பாடலைப் பாடிக் கொண்டிருந்தவள் தானே.. சில நொடிகளில் அவளை வேறு உணர்வு வசப்படுத்த முடியுமானால் அது உணவின் ருசி மணத்தைத் தவிர வேறாக இருக்க முடியுமா..?

“ஹோட்டல் பிஸினெஸ் பண்ணுகிறவர்தான் முதலில் சமையல் வாசனையை ஸ்மெல் பண்ணியிருக்கனும் பாஸ்.. ஸ்மெல்லிலேயே தெரியுது பாருங்க.. இது செமத்தியான டேஸ்ட்டா இருக்கும்ன்னு..”

“ஹோட்டலில ஃபுட்டை மட்டும் கவர் பண்ண மாட்டோம் நந்தினி.. அதைப் பற்றியெல்லாம் உனக்குச் சொன்னாப் புரியாது..”

“பட்.. சாப்போட்டோட ருசியை உணர்த்தும் வாசனை அப்படியில்லை பாஸ்.. அது அறிவு ஜீவிகள், தத்திகள்ன்னு வித்தியாசம் பார்க்காத பொதுவுடமைத் தத்துவத்தை ஃபாலோ பண்ணுவது..”

“இதைப் பத்தி பேசச் சொன்னா மணிக்கணக்கா லெக்சர் எடுப்பியே..”

“இதை விடுங்க பாஸ்..”

“இதைச் சொன்னது நீதானா நந்தினி..?”

“என்ன ஆச்சாம்..? இதைப் பத்தின பேச்சைத்தான் விடச் சொன்னேன்.. மனசிலாயி..”

“அதானே பார்த்தேன்.. யார் நீ..?”

“நந்தினி..”

அவனைப் போலவே அவள் புருவங்களை உயர்த்தி இறக்கி வசீகரித்ததில் அவனது விழிகள் மின்னின.. அவளை அவன் நெருங்க.. அவள் அவனது மார்பில் கை வைத்துத் தள்ளி விட்டுக் கலகலத்துச் சிரித்தாள்..

“நந்தினி..”

வெகு சாதாரணமாக அவள் உச்சரித்த அவளது பெயரை படு போதையுடன் அவன் உச்சரித்தான்.. உதட்டைக் கடித்தபடி நின்றவளை அவன் நெருங்க.. அவள் விலகாமல் கண்மூடி நின்றாள்.. அவளது முகத்தைக் கைகளில் ஏந்தி அவளது கன்னத்தில் அவன் முத்தமிட்ட போது கண்மூடிக் கொண்டாள்..

அள்ள அள்ளக் குறையாத நீருற்று போன்றது காதல்.. அது வற்றாத ஜீவ நதி.. கடல் போன்றது.. வானம் தொடுவது.. வரையறைகளைத் தகர்ப்பது.. வாழ்ந்து விடத் துடிப்பது..

**‘இப்படி நான் ஆனதில்ல..**

**புத்தி மாறிப் போனதில்ல..’**

அடி ஆத்தாடி என்று அவள் மனதில் பேரலையொன்று அவள் மனதில் ஓங்கி அடித்தது.. அவள் அதில் அடித்துச் செல்லப்பட்டாள்.. விழிகளில் நீர் அரும்பியது... எதற்கென்று தெரியவில்லை... கண்டிப்பையும் கோபத்தையும் காட்டும் அந்தக் கம்மாண்டரின் விழிகளில் கொட்டிக் கொண்டிருந்த காதல் உண்மையா, பொய்யா என்ற ஆராய்ச்சியில் இறங்க அவளுக்கு மனமில்லை.. அது உண்மைதான் என்ற

தீர்மானத்தில் அவள் உறுதியாக இருந்தாள்.. அது பொய்யென்றால் அவள் பூமியில் புதைந்து போய் விடுவாள்..

“என் ரவி..”

அவளது இந்த முணுமுணுப்பிற்குத்தான் எத்தனை சக்தி..! அவன் ஆவேசம் கொண்டவனாக அவளது முகமெங்கும் முத்தங்களைப் பதித்து விட்டுக் கழுத்து வளைவில் முகம் புதைத்தான்.. பிணைந்து நின்ற இருவரின் மனங்களும் காதலில் பிணைந்திருந்தன..

கரையோர தென்னந்தோப்புகளையும், வயல் வெளிகளையும் கடந்து சென்று கொண்டிருந்தது படகு.. ஆங்காங்கே தெரிந்த தீவுகளில் வாய்க்கால்கள் ஓட.. அதில் கால் பதித்து பறந்த பறவைகளின் கூட்டம் மனதுக்குள் குதூகலம் நிரம்பிய புத்துணர்வை விதைத்தன.. தொலைவில் அந்த தண்ணீர் தேசத்தில் ஒற்றை வீடு தெரிந்தது..

“ஒற்றைப் பனைமரம் போல இது என்ன ஒற்றை வீடு..?” காதல் உணர்வுகளில் இருந்து வெளிப்பட்டவளாக வியப்புடன் கேட்டாள் நந்தினி.. ரவிச்சந்திரன் திரும்பிப் பார்த்து விட்டுச் சிரித்தான்..

“உனக்கான வீடுடி அது..”

“எனக்கான வீடுன்னா..?”

“இப்ப முகர்ந்து மயங்கினியே.. மீன் வாசனை..! அது எங்கிருந்து வந்ததுன்னு நினைக்கிற..?”

“நம்ம கிச்சனில இருந்துதானே வந்தது..?”

“அதுசரி.. இப்பத்தானே ஜுஸ் குடுத்துட்டுப் போனாங்க..? அதுக்குள்ள சமையலை முடித்திருப் பாங்களா..?”

“முடித்திருக்க மாட்டாங்களா..?”

“ஜீபூம்பா மேட்டரா அது..? நீ சமைத்திருந்தா தெரிந்திருக்கும்.. எங்கே..? சாப்பிடத்தான் தெரியும், எனக்குச் சமைக்கத் தெரியலையேங்கிற ரகமாச்சே நீ..”

“சும்மா சும்மா சொல்லிக் காட்டாதீங்க பாஸ்.. ஒருநாள் உங்களுக்குக் கட்டாயம் சமைச்சுப் போடுவேன் பாருங்க..”

“அந்த ஓர் நாள் எப்போ வரும்ன்னு முன்னாடியே சொல்லிரு நந்தினி.. நான் ஃபாரின் பக்கம் எஸ்கேப் ஆகிடறேன்..”

“எதுக்காம்..?”

“உன் சமையில இருந்து தப்பிக்கத்தான்.. வேற எதுக்காம்..? உன் சமையலை டிரையல் பார்க்க நான்தான் கிடைச்சேனா..?”

“எல்லாப் பெண்டாட்டிகளுக்கும் புருஷன்தான் மாட்டியாகனும்..”

அவள் அவனது சட்டை காலரைப் பிடித்து இழுத்துச் செல்லமாக முட்டினாள்.. அந்த ஒற்றை வீட்டை நெருங்க நெருங்க உணவின் வாசனை அதிகரித்து ஆளைத் தூக்கியது..

“பாஸ்.. அந்த வீட்டில் இருந்துதான் வாசனை வருது..” உற்சாகமானாள் நந்தினி..

“ப்ப்ப்பா.. என்னமா சந்தோஷப் படறடி நீ.. உன்னை சந்தோஷப் படுத்த நகை , டிரஸ்ஸுன்னு மெனக்கெட வேண்டிய அவசியமேயில்லை.. டேஸ்ட்டான ஃபுட்டைக் கொடுத்தாப் போதும்..”

“அதை விட பெட்டர் சாய்ஸ் ஒன்று இருக்கு பாஸ்..”

“என்னடி..?”

“நீங்க..”

நந்தினி ஆள்காட்டி விரலை நீட்டி அவனைச் சுட்டிக் காட்டினாள்.. ரவிச்சந்திரனின் கண்களின் மின்னல் கோடி சூரியன்களை உள்ளடக்கியதாக இருந்தது..

“நந்தினி..?”

“யெஸ் பாஸ்.. என்னை சந்தோஷப் படுத்தற ஃபர்ஸ்ட் அண்ட் பெஸ்ட் சாய்ஸ் நீங்க மட்டும்தான் பாஸ்.. உங்களைவிட உசத்தின்னு எதுவுமில்லை.. நீங்க.. நீங்க மட்டும்தான் என்னோட சந்தோஷம்..”

ஆலிங்கனம் அழகானது.. ரவிச்சந்திரனின் அழகான ஆலிங்கனத்தில் அடங்கினாள் நந்தினி.. சிறு முத்தத்துடன் கூடிய தழுவலுடன் அவளை விடுவித்தான் ரவிச்சந்திரன்.. உணர்வுகள் ஆழமாகும் போது அங்கே ஸ்பரிசம் அன்னியமாகி விடுகிறது..

அவன் கையோடு கை கோர்த்து நின்ற நந்தினிக்கு உலகமே வசப்பட்டு விட்டதைப் போல இருந்தது.. வாழ்க்கை வசமானால் வானமும் வசமாகும்.. அவள் நினைத்த காதல் கை கூடி விட்டதே.. இதற்கு மேல் அவளுக்கு வேறென்ன வேண்டும்..?

நான்கு வழிச்சாலையில் ஓரத்தில் உள்ள உணவகங்களில் வரிசையாக கார்களும், பஸ்களும் நிறுத்தப் பட்டிருப்பதைப் போல அந்த தண்ணீர் தேசத்தின் ஒற்றை வீட்டைச் சுற்றிச் சில படகுகளும், படகு வீடுகளும் நின்றிருந்தன.. வீட்டை நெருங்க நெருங்க பொறித்த மீனின் வாசம் அதிகரித்துக் கொண்டே இருந்தது..

நந்தினி பொறித்த மீனின் வாசனையை உணராத காதல் மயக்கத்தோடு ரவிச்சந்திரனின் தோளில் தலை சாய்த்து நின்றதில் அவன் கர்வம் கொண்டான்.. அவனது படகுவீடு அந்த வீட்டை நெருங்கும் போது குரல் கொடுத்தான்..

“எட்வர்ட்.. அந்த ஹவுஸின் முன்னால் கொஞ்சம் ஸ்டாப் பண்ணு..”

“ஏன் பாஸ்..?” அவனது உத்தரவின் காரணம் புரியாமல் கேட்டாள் நந்தினி..

“உள்ளே போய் பார்க்க வேண்டாமா..?”

“எதுக்காம்..?”

“எதுக்கா..? இப்படிக் கேட்கிறது என் நந்தினிதானா..?”

பிரியத்துடன் சிரித்தவன் அவளது கன்னத்தை தட்டி விட்டு..

“இங்கே உடனுக்குடன் மீனைப் பிடிச்சு சமைச்சுக் கொடுப்பாங்கடி.. ஸ்டார் ஹோட்டல்களில் செய்கிறதைப் போல இல்லாம வில்லேஜ் ஸ்டைலில செய்து தருவாங்க.. வெரைட்டியாவும் டேஸ்ட்டாவும் இருக்கும்.. வா, போய் பார்க்கலாம்..”

“அப்படிங்கறிங்க..”

“அட..! வாடி.. போய்ப் பார்க்கலாம்..”

வீட்டின் ஓரமாக வரிசை கட்டியிருந்த படகுகளின் இடைவெளியில் சொறுகி ரவிச்சந்திரனின் படகு வீடு நின்றது.. அவன் முன்னே சென்று கை கொடுக்க.. சர்வ ஜாக்கிரதையாக அவன் கைபிடித்து நடத்து அந்த வீட்டுக்குள் இறங்கினாள் நந்தினி.. உள்ளே கும்பல் இருந்தது.. ஸ்டாலில் இருப்பதைப் போலத் திட்டுக்களில் மீன் உணவு வகைகள் பரப்பி வைக்கப்பட்டிருந்தன.. அவகைளின் மிகச் சிறந்த விசேசமே தட்டுக்களில் வாலையிலைகளைப் பரப்பி அவற்றின் மீது பொறித்த, வறுத்த மீன் வகைகளைப் பரப்பி வைத்திருந்ததுதான்..

‘லவ்லி..’ நந்தினி அதை ரசித்தாள்..

பொறிக்கப்பட்டு பரப்பி அடுக்கப் பட்டிருந்த பல்வகை மீன்களைப் பார்வையிட்ட மக்கள் கூட்டம் அவரவர்க்கு வேண்டியதைத் தேர்வு செய்து சொன்னால் அவற்றை வாழையிலைகள் கட்டித் தந்தார்கள்..

எண்ணயில் பொறிக்கப்பட்ட, சமைக்கப்பட்ட அசைவ உணவு வகைகளின் சுவையைக் கூட்டுவது பசும் வாழையிலை..! இது எத்தனை பேருக்குத் தெரிகின்றது..? மாறிவரும் நவின யுகத்தில் வாழையிலைகளின் பயன்பாடு தொலைந்து கொண்டே வருகின்றது.. பிளாஸ்டிக் பேப்பர்களைக் கொண்டு கட்டப்படும் உணவு வகைகளில் பேப்பரின் வாசனை கலந்து உணவின் சுவையைக் குறைத்து ஆரோக்கியத்தைக் கெடுக்கின்றது..

மசால் தடவி வைக்கப் பட்டிருந்த மீன் வகைகள் பெறிக்கப் பட்டுக் கொண்டேயிருக்க.. சடுதியில் அவை காலியாகிக் கொண்டிருந்தன.. இரண்டு புறமும் கைப்பிடியோடு கருத்திருந்த இரும்பு வாணலியில் எண்ணை சூடாகிக் கொண்டிருந்தது.. பக்கத்தி லிருந்த

அடுப்பில் மண்சட்டியில் கொதித்துக் கொண்டிருந்த மீன் குழம்பு..

“எங்க ஊர் கிராமங்களில இன்னமும் மண்சட்டியில சமைக்கிற பழக்கம் இருக்கு பாஸ்.. அதோட டேஸ்ட்டே தனி..” என்றாள் நந்தினி..

“நீ சொன்னா சரியாத்தாண்டி இருக்கும்..” புகழ்ச்சி போல சிலாகித்த ரவிச்சந்திரன் அவள் முறைத்த முறைப்பில் இரண்டு கைகளையும் உயர்த்தி..

“ஹேய்.. ஜஸ்ட் ஃபார் பன்..” என்று கவர்ச்சியாகச் சிரித்து அவளை மயக்கி வசப் படுத்தினான்..

அங்கே அவனைத் தெரிந்தவர்கள் பலர் இருந்தார்கள்.. அந்த வீட்டைச் சேர்ந்தவர்கள், படகு வீடுகளை ஓட்டி வந்திருந்தவர்கள், அதில் பயணித்த சில பயணிகள் என்று ரவிச்சந்திரனுக்கு வணக்கம் கூற அவன் லேசான தலையாட்டலுடன் அவற்றை ஏற்றுக் கொண்டான்..

‘இவனைத் தெரியாதவர்கள் இருந்தால்தான் அதிசயம்.. ஆரானு ஈ சுந்தரன்..? கேரளத்தின் ராஜனல்லோ..’ மனதுக்குள் அவனைக் கொண்டாடி பூரித்துப் போனாள் நந்தினி..

ரவிச்சந்திரன் சிறப்பானதாக இருக்கும் என்று சில மீன் வகைகளைச் சுட்டிக் காட்டி நந்தினியிடம் சொல்லி விட்டு கை காட்ட அவை வாழையிலைகளில் கட்டித் தரப்பட்டன.. பொட்டலங்களுடன் படகு வீட்டுக்குத் திரும்பினார்கள்.. பிரயாணம் தொடர்ந்தது..

“லன்ச் ரெடியாக நேரமாகும்.. அது வரைக்கும் பசி தாங்க இதை மொக்குவோம்.. வா, வா..”

ரவிச்சந்திரன் மேல்மாடி பால்கனிக்குப் போகும் மரப்படிகளில் ஏறினான்.. நந்தினி தொடர்ந்தாள்.. அங்கிருந்த மெத்தையில் அமர்ந்தவன் எதிரேயிருந்த டீப்பாயை இழுத்து அதில் மீன் வகைகளைப் பரத்தினான்.. பக்கத்தில் குடி தண்ணீர்..

நீரில் மிதக்கும் படகில் தண்ணீரையும், சுற்றுப் புறத்தையும் வேடிக்கை பார்த்தபடி பொறித்த மீன் வகைகளை உண்ணுவதென்பது எத்துனை இனிமையானது.

அதை ரவிச்சந்திரனிடம் சொன்ன போது..

“அதைச் சொல்லு..” என்று அவளது நெற்றியில் விரல்களால் சுண்டி விட்டுச் சிரித்தான்..

அதை, இதையென்று பேசி அரட்டையடித்தபடி மீன் வறுவலையும், பொரியலையும் காலி செய்து விட்டு அங்கிருந்த குப்பைக் கூடையில் வாழையிலைகளையும் மீன்முள்களையும் போட்டு விட்டு வாஷ் பேசினில் சோப்புப் போட்டுக் கை கழுவினார்கள்..

“எவ்வளவு சோப்பைக் கரைத்தாலும் கையிலிருக்கிற மீன வாசனை போக மாட்டேங்குது பாஸ்..” குறை பட்டாள் நந்தினி..

“ம்ஹூம்.. உனக்கும் மீன் வாசத்துக்கும் விட்ட குறை தொட்ட குறைன்னு ஆழமான ஓர் அஃபெக்ஷன் இருக்கும் போல..” தீவிரமாக முகத்தை வைத்துக் கொண்டு சிரிக்காமல் சொன்ன ரவிச்சந்திரன்.. அவன் சொல்வதைக் கூர்மையாக காது கொடுத்து அவள் கவனமாக கேட்டுக் கொண்டதில் ‘பக்’ கென சிரித்து விட்டான்..

“நான் எதைச் சொன்னாலும் நம்பிருவியா..?” அவள் தலையில் செல்லமாக குட்டு வைத்து இறுக்கிக் கொண்டான்..

அழகு மிகுந்த ஆலப்புழாவின் வேம்பனாடு ஏரியில் அசைந்தாடிச் சென்ற படகு வீட்டின் மேல் பகுதி

பால்கனியில் நீர் சூழ அவர்கள் இருவரும் ஒருவரின் அணைப்பில் ஒருவர் சுகம் கண்டு சொக்கிப் போனார்கள்..

# அத்தியாயம் 199

**“சொக்குப் பொடி மீனாட்சி - உன்**

**சொக்கநாதன் நான்தாண்டி..”**

**ர**விச்சந்திரன் பாடலில் கன்னம் சிவந்தாள் நந்தினி.. அவளுடைய சொக்கநாதன் ஆளை மயக்கும் அதீத பேரழகனாய் இருந்தான்.. இவன் மனதில் நானா என்ற பிரமிப்பு அவள் மனதில் எழுந்தது..

“பாஸ்..”

“சொல்லுடி..”

அவளது கன்னத்தில் அவனது உதடுகள் உரசின..

கண்மூடிக் கிறங்கிய நந்தினி பேசத் தடுமாறினாள்.. அவளது இதழ்களை வருடிக் கொடுத்தான் அவன்.. அவளை பேச் சொல்லி ஊக்கப் படுத்தினான்..

“பேசுடி..”

“ஆர் யு ஷ்யூர்..?” தடுமாறினாள் நந்தினி.. அவள் எதைப் பற்றிக் கேட்கிறாள் என்று புரியாமல் புருவங்களை

உயர்த்தி அவளது தடுமாற்றத்தை அதிகப் படுத்தி அலைக்கழித்தான் ரவிச்சந்திரன்..

“இப்படிக் கேட்டா எதைன்னு நான் மீன் பண்ணிக்கிறது..? மீன் சாப்பிட்டா மீனிங்கே இல்லாமப் பேசனும்னு ‘லா’ எதுவும் இல்லைடி..”

“ம்ப்ச்.. நான் அதைச் சொல்லலை..”

“வேற எதைச் சொல்ற..? மீன் வாசம் போகலைன்னு நீ கவலைப்பட்டதுக்கு நான் சொன்னதை சீரியஸா எடுத்துக்கிட்டுக் கேட்கறியா.. ஹா.. ஹா.. அது கிண்டலுக்குன்னு சொன்னதுடி.. நீ குழந்தைடி.. சீரியஸா முகத்தை வைத்துக்கிட்டு நான் சொன்னதை டீச்சர் சொல்கிறதை ஸ்டூடண்ட் கேட்டுக்கிறதைப் போல முகத்தை வைத்துக்கிட்டு நீ கேட்டது இருக்கே.. ஹா.. ஹா..

யு ஆர் ஸோ ஸ்வீட் நந்தினி..”

கொஞ்சியபடி அவளது இதழ்களில் அவன் முத்தமிட அவளுக்கு ‘ஜிவ்’ வென்று ஆகிப் போனது..

“பாஸ்..” கேட்க நினைத்ததை கேட்க முடியாமல் அவளுக்கு மூச்சுத் திணறியது..

ஆழ்கடலின் சுழலில் அகப்பட்டுக் கொண்ட துரும்பினைப் போல அவள் அலை பாய்ந்தாள்.. அலைகடலின் மீது படகு ஆடுவதைப் போல அவளது மனம் அல்லாடியது.. அவள் மீதான அவனது பிரேமம் (காதல்) உண்மையானதுதானா என்று அவளுக்குத் தெரிய வேண்டியிருந்தது..

அதையறியாத ரவிச்சந்திரன் அவளைக் கட்டியனைப் பதிலும் கொஞ்சிக் குழாவுவதிலும் கவனம் செழுத்திக் கொண்டிருந்தான்..

அவன் உறுதியானவன்.. அவள் மீதான அவனது காதல் நிலையானது என்பதை அவன் அறிவான்.. அவனது காதலை அவள் ஏற்றுக் கொள்ளாத போதே அவன் அவளை விட்டுக் கொடுத்ததில்லை.. விட்டு விலகியதில்லை.. அவனை அவள் காதலிப்பாளா, மாட்டாளா என்று சந்தேகம் கொண்டதில்லை.. நீ என்ன வேண்டுமானாலும் செய்து கொள்.. என் காதலி நீதான்.. இதுதான் அவனது நிலைப்பாடாக இருந்தது..

அப்படிப்பட்டவன் அவன் மீதான அவளது காதலை அறிந்த பின்னால் விட்டு விலகி நிற்பானா..?

“என்ன நந்தினி..?” அவளது முடிகோதி வினவினான்.

அவளது மூச்சுத்திணறலில் புருவம் உயர்த்திக் கிறங்கடித்தவன்..

“ஹேய்.. கிண்டலுக்குச் சொன்னதையெல்லாம் மனதில் போட்டு உழட்டிக் கொண்டிருப்பியா..? இது கேரளாடி.. மீன்தான் இம்பார்ட்டண்ட் ஃபுட் அயிட்டம்.. இங்கே பிரேக்ஃபாஸ்ட், லன்ச், டின்னர்ன்னு மூன்று வேளைச் சாப்பாட்டிலும் மீன் வெரைட்டிஸ் இருக்கும்.. இதில் மீன் வாசம் போகலைன்னு நீ வருத்தப்பட்டா எனக்குச் சிரிப்பு வராதா..?” என்று சமாதானப் படுத்த முயன்றான்..

“என் கொஸ்டினே வேற பாஸ்..”

“என்னதாண்டி உன் பிராப்ளம்..? என்ன கொஸ்டின் பண்ணின..?”

“நீங்க.. நீங்க..”

“நான்..? நான்..?”

“பாஸ்..”

கேட்க நினைத்ததை கேட்க முடியாமல் தவித்தாள் நந்தினி.. எப்படிக் கேட்பது..? அவளிடம் அவன் மனதாரக் காதல் சொன்னான்.. அவளோ அவன் மீது உயிரையே

வைத்து விட்டாள்.. இருவருமாக தனிமை யைத் தேடி ஆலப்புழாவின் வேம்பனாடு அருவியில் படகு வீட்டில் மிதந்து கொண்டிருக்கிறார்கள்.. இப்போது போய் மனதில் எழும் சஞ்சலத்தை கேள்வியாக கேட்டு வைக்கிறாளே.. அவன் அதை என்னவென்று எடுத்துக் கொள்வானோ.. இந்த அளவுக்கு நெருக்கமான பின்னும் அவனை அவள் சந்தேகிக்கிறாள் என்று எடுத்துக் கொள்ள மாட்டானா..?

அவளது தவிப்பையும் தயக்கத்தையும் ஆச்சரியத்துடன் பார்த்தவன்..

“ஹேய்.. நீ யாடி இது..? ஐ கான்ட் பிலிவ் திஸ்.. மனதில் உள்ளதை மறைக்காமல் பேசிவிடும் நந்தினி எங்கே ஒளிந்து கொண்டாள்..? இந்த பயந்தாகுளி நந்தினி எங்கிருந்து வந்தாள்..? ம்ம்ம்..?”

“அது இல்ல பாஸ்..”

நந்தினி அவன் மார்பில் சாய்ந்து விழி மூடிக் கொண்டாள்.. அவனது கரங்கள் அவளைச் சுற்றி வளைத்துக் கொண்டன.. அவளது உச்சந்தலையில் முகம் புதைத்து அசையாமல் அவன் நின்றான்..

“உன் மனது அமைதியில்லாம ஏன் தவிக்குது நந்தினி..? மென்மையாக வினவினான்..”

அமைதியைத் தேடி அவனிடம் அவள் அடைக்கலம் புகுந்திருப்பதை உணர்ந்தவனாக அவன் இதமாக வினவியதில் அவள் மனம் நெகிழ்ந்தாள்..

‘இதுதான் இவன்.. என் ரவிச்சந்திரன்..’

அவனருகில் இருந்தால் போதும் என்றிருந்தது அவளுக்கு.. மலையளவு தைரியம் மனதுக்குள் வந்து விடுகிறது..

‘எப்போதும் எனைப் பிரியாமல் கூடவே இருப்பானா..?’

அவளுக்குள் கலக்கம் வந்தது.. அவன் அவளை விட்டுப் பேகாமலிருக்க வேண்டுமே என்ற பயத்துடன் அவனை இறுக்கிக் கட்டிக் கொண்டாள்.. அவளது அணைப்பு காதலின் வெளிப்பாடாக இல்லாமல் அவளது மன நடுக்கத்தின் வெளிப்பாடாக இருப்பதை புரிந்து கொண்டவனாக அவன் அவளது முதுகில் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்த முயன்றான்..

“ஹேய்.. நந்தினி.. என்னைப் பாருடி..”

“ஐ லவ் யு பாஸ்..”

‘இதைக் கேட்கத்தானே இத்தனை நாளாய் காத்திருந்தேன்..’

“ஐ லவ் யு ஸோ மச் நந்தினி..” என்றான்..

“ஆர் யு ஷ்யூர்..?”

ஆழ்ந்த அவளது கேள்வியில் புருவங்கள் சுருங்க யோசனையானான் ரவிச்சந்திரன் இதே கேள்வியைத்தான் அவள் சற்று முன்பும் கேட்டாள் என்பதில் அவளது யோசனை அதிகமானது... அவன் மார்பில் சாய்ந்திருந்தவளை விலக்கி நிறுத்தி கூர்ந்து பார்த்தான்..

“என் காதலை சந்தேகப் படறியா..?” நிதானமாக கேட்டான்..

“தெரியலை பாஸ்..” தேம்பினாள் நந்தினி..

“ஏய்ய்.. ம்ப்ச்.. கிட்ட வா..”

மனதை மறைக்காமல் சொல்லி அழுகிறவளை என்ன சொல்லித் தேற்றுவது என்று மனதுக்குள் ஆழ்ந்து சிந்தித்து வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்துக் கோர்த்தான்.. அவன் பேசுமுன் அவள் பேசினாள்..

“உங்க காதலை நான் சந்தேகிக்கிறேனா இல்லையான்னு எனக்குத் தெரியலை பாஸ்.. பட்.. என்னோட காதல் உண்மையானது.. எனக்குக் காதலிக்கவும் தெரியாது.. காதல்ன்னா எப்படியிருக்கும், அது கருப்பா, சிவப்பான்னும் தெரியாது.. அப்படிப் பட்டவ உங்களை உயிருக்குயிரா காதலிக்கிறேன் பாஸ்.. இப்ப எனக்குக் காதலிக்கவும் தெரியும்.. காதல்ன்னா என்னன்னும் தெரியும்.. உங்களைக் காதலிக்கக் காதலி க்க உங்க காதல் உண்மையானது தானாங்கிற பயம் எனக்கு அதிகமாகுது பாஸ்..”

“ஏண்டி..? என்னை ஏமாற்றுக்காரன்னு நினைக்கறியா..?”

“எனக்கு ஏமாற்றம் வந்திருமோன்னு பயப்படறேன்.. நீங்க எங்கே..! நான் எங்கே..?”

“வொய்..? நான் எங்கேயிருக்கிறேனோ அங்கேதான் நீயும் இருக்கிறாய்..”

“இல்லை பாஸ்.. நீங்க படா ஹேண்ட்சம் மேன்..! பிக் பெர்சனாலிட்டி.. உங்க பக்க த்தில் நிற்கக்கூட, ஏன் உங்க நிழலுக்குப் பக்கத்தில் வரக்கூட எனக்குத் தகுதி கிடையாதுன்னு இன்பீரியரா ஃபீல் பண்றேன் பாஸ்..”

“முட்டாள்..”

ஆத்திரத்துடன் சிரித்தான் ரவிச்சந்திரன்.. அழகின் வடிவமாய் அவனை அலைக்கழித்தவள் அழகில்லையாம்.. அவளுக்காக, அவளது காதலுக்காக ஏங்கியவனின் நிழலுக்கு அருகே வரக்கூட அவளுக்குத் தகுதியில்லையாம்.. தாழ்வு மனப்பான்மை வருகிறதாம்.. புலம்புகிறாள்..

‘இன்ஃபீரியாரிட்டி காம்ப்ளெக்ஸா..? இவளுக்கா..?’

ரவிச்சந்திரனுக்கு எங்கு போய் முட்டிக் கொள்வதென்றே தெரியவில்லை.. காதலைச் சொல்லாமல் அவனைக் கலங்கடித்து காத்திருக்க வைத்து ஒரு வழியாய் காதல் சொல்லியிருப்பவள் சந்தோஷமாய் அவனுடன் டூயட் பாடிக் கொண்டிருந்ததை நிறுத்தி விட்டு இப்படிப் புலம்பித் தள்ளுகிறாளே..

“அடித்தேன்னா பாரு.. இப்படிக் கூட நீ பினாத்துவியா..?”

“பாஸ்..”

“அழாதே.. அழாதேன்னு சொல்கிறேனில்ல..?”

அவன் அதட்டிய அதட்டலில் அவள் அழுகையை அடக்கிக் கொண்டாள்.. கைகளை விரித்து..“வா..” என்றான்..

வந்தாள்.. அவனது கைகளுக்குள் புகுந்து கொண்டாள்.. அவனது இறுக்கமான அணைப்பில் அடங்கிக் கண்களை மூடிக் கொண்டாள்.. சிறு குழந்தைக்குச் சொல்வதைப் போல அவள் மனதில் பதியும்படி ஆழ்ந்த குரலில் அவன் எடுத்துச் சொன்னான்..

“உன் கண்களுக்கு நான் அழகனா இருப்பதில் சந்தோஷம்டி..”

“நீங்க அழகன்தானே பாஸ்.. பேரழகன்..”

“தேங்க் யு..”

மகிழ்ந்து போனவனாக அவளது நெற்றியில் முட்டினான்..

“தட் ஸேம் டைம்.. என் கண்களுக்கு நீ மட்டும் தாண்டி அழகாய் தெரிகிற..”

“உங்க கண்களை திறமையான கண்டாக்டர்கிட்டக் காட்டி இம்மீட்டியட்டா செக் பண்ணிக்கங்க பாஸ்..” சிரிக்காமல் சொன்னாள் நந்தினி..

“ஹா.. ஹா..” என்று சிரித்து வைத்தான் ரவிச்சந்திரன்..

“நீ அழகிடி..”

“பொய்..”

“மெய்..”

“உங்க பாட்டியை விட அழகா..?”

“ம்ம்ம்..? இதிலென்ன சந்தேகம்..? பாட்டி பாரபட்சம் பார்ப்பாங்க.. மகனுக்கு ஒரு நியாயம்.. மகளுக்கு ஒரு நியாயம்ன்னு சொல்வாங்க.. மகளை வீட்டோட வைத்துக்குவாங்க.. மருமகளை அடிமையாய் நினைப்பாங்க.. குடும்பத்தோட அதிகாரம் அவங்க கையில் மட்டும்தான் இருக்கனும்னு எக்ஸ்பெக்ட் பண்ணுவாங்க.. கூட்டிக் கழித்துப் பார்த்தா அவங்களிடம் குறைகள்தான் அதிகமிருக்கும்.. அந்தக் குறைகளே அவங்களோட அழகைக் குறைத்துக் குரூரமானவங்களா காட்டி விடும் நந்தினி.. அவங்களை விடக் கள்ளமில்லா வெள்ளை மனது கொண்ட நீ பேரழகிடி..”

“ஆர் யு ஷ்யூர்..?”

“இந்த மூன்று வார்த்தைகளை விடவே மாட்டியா..? ஐ ஆம் ஷ்யூர் எபௌட் தட் நந்தினி.. போதுமா..?”

“போதாது பாஸ்..”

“இன்னும் என்னடி..?”

“உங்க அத்தை அவந்திகாவை விட நான் அழகா..?”

“கேட்டியே ஒரு கேள்வி.. ஏண்டி.. அவங்களாலே என் குடும்பம் படுகிற துன்பம் கொஞ்ச நஞ்சமா..? பெருந்தன்மையான பாட்டியை குரூரமானவங்களை மாத்தியதே இந்த சூனியக்கார அத்தைதானேடி..? அவங்களோடு உன்னை ஒப்பிடறதே தப்பு.. இதில கேள்வி வேற கேட்கிற.. அடச்சீ.. அடங்கு..”

“ஊஹூம்..”

“அடங்க மாட்ட..?”

“மாட்டேன்.. அஜந்தாவை விட நான் அழகா பாஸ்..?”

மனம் படபடக்க இந்தக் கேள்வியைக் கேட்டாள் நந்தினி.. இதற்கான பதிலை அவள் தெரிந்து கொள்ள வேண்டியிருந்தது..

ரவிச்சந்திரன் அவளை உண்மையாக காதலிக்கிறானோ இல்லையோ.. நிச்சயமாக பொய்யுரைக்க மாட்டான் என்று அவள் நம்பினாள்.. ஆமாம்.. நீ என் காதலை மறுத்தாய்.. உன் மனதை வென்று காட்ட வேண்டும் என்ற சவாலுக்காகத்தான் நான் உன்னிடம் என் காதலை வற்புறுத்தினேன் என்று சொன்னாலும் சொல்லி விடுவான்..

பொய்யாக அவள் மனதில் நம்பிக்கையை விதைக்க மாட்டான்..

அஜந்தா நந்தினியிடம் ரவிச்சந்திரன் அவளைக் காதலிப்பதாகச் சொல்லியிருந்தாள்.. அஜந்தாவின் வார்த்தை நம்பத் தகுந்ததாக இருக்காது என்று நந்தினி அதை ஒதுக்கித் தள்ளியிருந்தாலும் மனதின் ஓர் மூலையில் மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் பயணம் செய்து கோழிக் கோடுக்கு வந்து கொண்டிருந்த போது ரவிச்சந்திரனிடம் அஜந்தாவின் புகைப்படம் இருந்ததை படர்த்த நினைவு நெருஞ்சி முள்ளாக நிரடிக் கொண்டிருந்தது.. ரவிச்சந்திரன் எதற்காக அஜந்தாவின் புகைப்படத்தை வைத்திருக்க வேண்டும்..? அத்தை மகள் என்ற பாசமா..? அது இல்லை என்பது இப்போது தெரிந்து விட்டதே..

“எப்படி நந்தினி இப்படியொரு கேள்வியைக் கேட்கிற..?” நம்ப முடியாதவனாக கேட்டான் ரவிச்சந்திரன்..

“அவ அழகு பாஸ்..”

“ம்ப்ச்.. பேசாதே.. அவந்திகா அத்தையைக் கூட ஒரு வழியில் சேர்த்து விடலாம்.. இந்த அஜந்தா இருக்கிறாளே.. இவளை எதிலும் சேர்க்க முடியாது.. கடைந்தெடுத்த வில்லி..

பாட்டியையும் அத்தையையும் பாய்சனா ஆக்கி வைச்சிருக்கிறா.. அவளைப் போய் அழகு என்கிறாயே..”

“அவ அழகில்லைன்னா அவ போட்டோவை எதுக்காக வைத்திருந்தீங்க பாஸ்..?”

நந்தினி கேட்டு விட்டாள்.. அவளால் மனதில் அதை மறைத்து வைத்துக் கொள்ள முடியவில்லை.. நெருஞ்சி முள்ளின் நெருடலோடு அவனிடம் ஒட்டி உறவாட முடியாது.

# அத்தியாயம் 200

**ர**விச்சந்திரன் அவளை விட்டு முற்றிலுமாக விலகி நின்று விட்டான்..

'விலகுகிறானே..' தவித்துப் போனாள் நந்தினி..

இந்தச் சிறு விலகலையே அவளால் தாங்கிக் கொள்ள முடியவில்லையே.. அவன் நிரந்தரமாக விலகி விட்டால் அவளால் தாங்கிக் கொள்ள முடியுமா..?

'ஏன் இந்தக் கேள்வியைக் கேட்டேன்..' மனம் நொந்த அதே வேளையில்..

'இந்தக் கேள்வியைக் கேட்காமலிருக்க முடியுமா..?' என்ற எண்ணமும் மனதில் எழுந்தது..

"அவ போட்டோ என்னிடம் இருந்ததை நீ எப்போது பார்த்த..?"

குற்றவாளியை விசாரிப்பதைப் போல புலன் விசாரணை செய்தான் அவன்..

‘அடேங்கப்பா.. செய்வதையெல்லாம் இவன் செய்து விட்டு என்னை என்கொயர் பண்ண வந்துட்டானா..?’ பழைய நந்தினியாக பொங்கினாள் அவள்..

என்னாங்கிற.. இப்ப என்னாங்கிற என்பதைப் போல அவனை முறைத்துப் பார்த்தவள்..

“மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் நாம கோழிக்கோ டுக்கு ஜர்னி பண்ணி வந்த போது பார்த்தேன்..” என்று எரிந்து விழுந்தாள்..

“ஓ.. இத்தனை நாளா அதைப்பத்தி எதுவும் கேட்காம மனதுக்குள்ளேயே வைத்திருந்திருக்கிற..”

“கேட்கிறதுக்கான ரைட்ஸ் இப்பத்தான் வந்திருக்குது பாஸ்..”

“கெட்டிக்காரிதாண்டி நீ..”

“இந்தக் கெட்டிக்காரியை நீங்க தத்தின்னு சொல்கிறதா ஞாபகம்..?”

“வாயெல்லாம் வயநாட்டைத் தாண்டிக் கிழியுதுடி.. புத்தி மட்டும்தான் இல்லை..”

“எப்படி இருக்கும்..? அதைத்தான் ஒட்டு மொத்தமா உங்க அத்தை மக ரத்தினம் விலைபேசி வளைச்சுப் போட்டுக்கிட்டாளே..”

“உன்னை..”

ரவிச்சந்திரன் கோபச் சிரிப்புடன் பல்லைக் கடித்து விட்டு..

“இந்த அஜந்தா ஒரு வேலையை பண்ணி வைச்சிட்டா.. என் எக்ஸ்போர்ட் கம்பெனியோட டெல்லி பிரான்சுக்கு மெயில் அனுப்பி சீக்ரெட் டீடெயில்ஸைக் கேட்டிருக்கா.. நீங்க யார்ன்னு அவங்க கேட்டப்ப என் வுட்பின்னும் எக்ஸ்போர்ட் கம்பெனியை நான் இவ பெயருக்கு மாற்றி எழுதி விட்டதாகவும் சொல்லியிருக்கிறா..”

“மைகாட்.. இது எப்போ நடந்தது பாஸ்..”

“எதுடி..? இவ இந்த சதிவேலையை செய்ததா..?”

“ஊஹும்.. நீங்க இவ பெயருக்கு எக்ஸ்போர்ட் கம்பெனியை எழுதி வைத்தது..”

“நினைத்தேன்.. உன் புத்தி இப்படித்தானே யோசிக்கும்..? எனக்கென்று வந்து வாய்த்திருக்கிறாயே.. அவ பெரிய உண்மை விளம்பி.. பாரு..”

“அப்ப நீங்க அவளுக்கு கம்பெனியை எழுதிக் கொடுக்கலையா..?”

“அதற்குத்தானே நான் வன்பாடு பட்டு சம்பாதிக்கிறேன்..? கோபத்தைக் கிளராம வாயை மூடிக்கிட்டு இருக்கிறயா..”

அதற்கு மேலும் சந்தேகப்பட்டுக் கேள்வி கேட்டால் அடித்தாலும் அடித்து விடுவான் என்பதால் அவள் வாயை இறுக்கமாக மூடிக் கொண்டாள்..

“டெல்லி பிரான்ச்சில இருந்து என்னிடம் பெர்மிஷன் கேட்டு மெயில் வந்தது.. அப்போ நான் யூரோப் கண்டரிஸில இருந்தேன்..”

“நீங்க உலகம் சுத்தற பெருமையைப் பீற்றி என் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்க வேண்டாம் பாஸ்..”

“வா.. நீயும் நானும் சேர்ந்து உலகம் சுற்றலாம்..”

அவன் வாக்குவாதத்தை மறந்து அழைத்ததில் அவளது புன்னகை விரிந்தது.. அவனில்லாத வாழ்வை அவளால் நினைத்துப் பார்க்கக் கூட முடியவில்லை.. அவளில்லாத உலகை அவனும் நினைத்துப் பார்க்க மாட்டான் என்றே அவளுக்குத் தோன்றியது..

“முதலில் ஆலப்புழாவை சுத்தி முடிக்கலாம் பாஸ்.. படகு வீட்டுக்குள்ள வந்து பாதிநாள்கூட ஆகலை.. அதுக்குள்ளே உலகம் சுற்ற அழைச்சாச்சு.. ஆமாம்.. தெரியாமல்தான் கேட்கிறேன்..”

“யார்..? நீ..? தெரியாமல் கேள்வி கேட்கிற ஆள்..? போடி.. நீ தெரிந்தே கேள்வி கேட்கிற கில்லாடி.. யாரிடம் கதை விடுகிற..?”

“உங்களிடம் கதை விட்டுட்டாலும்.. கழுதையில.. நீங்க கேட்டுட்டுத்தான் வேற வேலை பார்ப்பீங்க.. போவிங்களா..”

“எங்கேடி போகச் சொல்கிற..?”

“நிச்சயமா அந்த அஜந்தாகிட்டப் போகச் சொல்லலை.. மனசிலாயி.. அவ ஏன் பாஸ் உங்க கம்பெனியோட சீக்ரெட் டீடெயில்ஸைக் கேட்டா..?”

“போட்டி கம்பெனிக்கு விலை பேசியிருக்கலாம்..”

“அடிப்பாவி.. உண்ட வீட்டுக்கே ரெண்டகம் செய்வாளா..?”

“அவ எதையும் செய்வா.. எதற்கும் அஞ்சாதவ.. நான் இந்தியாவுக்கு வர நாளாகும்ங்கிற தைரியத்தில எக்ஸ்போர்ட்

கம்பெனியோட டெல்லி பிரான்ச் மேனேஜரை நேரடியா மீட் பண்ணியிருக்கா.. அவங்க நம்புகிறதைப் போலப் பேசியிருக்கிறா.. உடனே அந்த டீடெயில்ஸ் வேண்டும்ன்னு அவங்களை அவசரப் படுத்தியிருக்கிறா..''

''வயநாட்டு அரண்மனையை விட்டு எப்படி டெல்லி வரை போனா..? வீட்டில யாரும் அவளை எங்கே போகிறான்னு கேட்கவே இல்லையா..?''

''அவந்திகா அத்தையும் இதில கூட்டு.. குடும்பத்தோடு யோகானந்தன் மாமாவோட சொந்தக்காரங்க வீட்டு விசேஷத்துக்குப் போகனும்ன்னு காரணம் சொல்லிட்டு டெல்லிக்கு ஃபிளைட் பிடிச்சுட்டாங்க.. மாமா சைடு சொந்தம்ன்னா தாத்தா, பாட்டி தள்ளியே நின்றுக்குவாங்க.. அந்த டெக்னிக்கை ஃபாலோ பண்ணியிருக்காங்க..''

''அதிலெல்லாம் கெட்டிக்காரங்களாச்சே..''

''நான் அவங்களை விடக் கெட்டிக்காரன்.. உலகம் முழுவதும் என்னோட பிஸினெஸ் பரவியிருக்கு.. எல்லா பிஸினெஸ்ஸையும் என் விரல் நுனியில் கட்டுப் படுத்தி வைத்திருக்கிறேன்.. எனக்குத் தெரியாம ஒரு சிறு துகள் கூட நகராது.. யோகானந்தனின் மகளுக்கு இது தெரியலை..''

'இவன் சூப்பர் மேன்..' நந்தினிக்குப் பெருமையாக இருந்தது..

"என்னோட கம்பெனியின் பிரான்ச் மேனேஜர் இம்மீடியட்டா எனக்கு மெஸேஜ் பண்ணிட்டார்.. எந்த டீடெயில்ஸையும் லீக் அவுட் பண்ணக் கூடாதுன்னு நான் ஆர்டர் போட்டதை அவளிடம் சொன்ன அடுத்த செகண்டில அவ எஸ்கேப் ஆகிட்டாளாம்.. அவளோட போட்டோவை மெயிலில் அனுப்பி இவதானா அவன்னு கேட்டேன்.. ஆமாம்ன்னு பதில் வந்தது.. அவளை லெஃப்ட் அண்ட் ரைட் வாங்கினேன்.. இல்லவே இல்லைன்னு அவ சாதிச்சா.. அவமேல வேண்டும்ன்னே பழி போடறேன்னு பிளேட்டை என் பக்கம் திருப்பி விட்டுட்டா.. தாத்தா, பாட்டி வருத்தப்பட்டாங்க.. தெரிந்த கதைதானேன்னு விட்டுத் தொலைத்தாலும் என்னோட பிஸினெஸ் சம்பந்தமா எந்த டீடெயில்ஸையும் கறக்க முடியாதுன்னு அவளை வார்ன் பண்ணிட்டுத்தான் விட்டுத் தொலைத்தேன்.. அந்த மெயிலை அனுப்புகிறதுக்காக ஸ்டோர் பண்ண வைத்திருந்த போட்டோ அது.."

அவனது நீண்ட விளக்கம் இட்டுக் கட்டியதாக இல்லாமல் வெகு இயல்பானதாக இருந்தது.. நந்தினியின் மனம் தெளிந்தது..

‘இப்பேற்பட்ட கீழ்த்தரமான குணம் படைத்தவ பேரழகியா இருந்தாலும் இவன் அவளைத் திரும்பிக் கூடப் பார்க்க மாட்டான்..’

ரவிச்சந்திரனின் குணாதிசியத்தைப் பற்றி அறிந்து வைத்திருந்ததால் நிம்மதியானாள் நந்தினி.. விலகி நின்றிருந்தவனின் பக்கத்தில் நெருங்கி கைகளை அவன் கழுத்தில் போட்டு மாலையாக்கி அவனைக் காதலுடன் பார்த்தாள்..

“சந்தேகம் தீர்ந்துருச்சா..?” என்றான் அவன்..

“அஜந்தாவைப் பற்றிய சந்தேகம் தீர்ந்துருச்சு.. பட்.. நான் உங்களுக்கு பெர்ஃபெக்ட் மேட்ச்சா இருக்கிறேனாங்கிற சந்தேகம் மட்டும் தீரலை.. தீரவும் தீராது..” என்றாள் அவள்.

“ஏண்டி படுத்தற..?” ஆற்றாமையுடன் கேட்டான் ரவிச்சந்திரன்..

"ஏண்டா இத்தனை அழகாய் இருக்கிற..?" பதிலுக்கு ஆற்றாமைப் பட்டாள் நந்தினி..

"என்ன சொன்ன..? 'டா' வா..?" அவன் கண்கள் மின்னின..

வெகு நேரமாக காணாமல் போயிருந்த மின்னல் வந்து அவன் கண்களில் உட்கார்ந்ததில் திருப்தி அடைந்தாள் நந்தினி.. காதலியுடன் கொஞ்சிக் குழாவ ஆலப்புழாவின் படகு வீட்டுக்கு அழைத்து வந்திருந்தவனைக் கேள்வி மேல் கேள்வியாக கேட்டுக் கடுப்பைக் கிளப்பி விட்ட குற்ற உணர்வுடன் இருந்தவளுக்கு அவனது சந்தோஷம் மீண்டு விட்டதில் சந்தோஷமாகி விட்டது..

"ஆமாண்...டா.." அழுத்தமாக 'டா..' போட்டாள்..

"அடி கள்ளி.."

அவன் கள்ளூரும் சிங்கமானான்.. அனைத்து மனக்கிலேசங்களும் மறந்து போனவளாக அவனது ஆலிங்கனத்தில் அடங்கிப் போனாள் நந்தினி.. வெகு நேரம் கழித்து அவளை விடுவித்தவன் கலைந்திருந்த அவளது முடியைக் கோதி விட்டு நெற்றியிலே முத்தமிட்டான்..

நந்தினி சரிந்து அவன் தோளில் சாய்ந்து அவனது சட்டை பொத்தான்களைத் திருக ஆரம்பித்தாள்..

“அது சரிடி.. என் பாட்டி, அத்தை, அஜந்தான்னு வரிசை கட்டி அவங்களை விட நான் அழகான்னு கேட்டியே.. என் அம்மாவையும், ரம்யாவையும் ஏன் சொல்லலை..?” அவளது முகம் நிமிர்த்திக் கேட்டான் அவன்..

அவள் விழிகளை நேருக்கு நேராக சந்தித்தவளின் விழிகளில் எல்லையற்ற பிரியம் குடி கொண்டது..

“அத்தையையும், ரம்யாவையும் விட நான் அழகாயிருக்கனும்னு ஆசைப்படலை பாஸ்.. ஆசைப் படவும் மாட்டேன்..”

“ஏண்டி..?”

“அது அப்படித்தான்.. நீங்க பேரழகன்னா, அத்தை பேரழகி.. ரம்யா அந்த தேவதையின் மடியில் உதித்த அன்புத் தேவதை.. தேவதைகளுக்கு நிகரில்லை பாஸ்.. நானும் அவங்களுக்கு நிகரில்லை..”

அவள் பேசப்பேச ரவிச்சந்திரனின் விழிகள் பிரகாசித்தன.. அது ஏன் என்று அவளுக்குத் தெரியவில்லை.. விழிகள் பளபளக்க..

“என் அம்மாவின் நம்பிக்கையைக் காப்பாத்திட்டடி..” என்றான்..

“அத்தை என்னை நம்பினாங்களா..? எப்போ..? எதுக்கு..?”

ரவிச்சந்திரன் அவளை இழுத்து அணைத்துக் கரையோரத் தீவைச் சுட்டிக் காட்டினான்.. அந்தத் தீவின் இயற்கையழகில் வீணாவைப் பற்றிய கேள்வியை மறந்து போனவளாக ஆவலுடன் வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விட்டாள் நந்தினி..

சுற்றுப்புற அழகை ரசிக்கத் தோதாக படகுவீடு மெதுவாக மிதந்து சென்று கொண்டிருந்தது.. மதிய உணவு உண்ண அழைப்பு வந்தது.. ரவிச்சந்திரனும் நந்தினியும் இறங்கி டைனிங் ஹாலில் வந்து அமர்ந்தார்கள்.. அழகானதொரு அரண்மனையின் விருந்து மண்டபத்தில் அமர்ந்திருப்பதைப் போல நந்தினிக்கு இருந்தது..

சாதம், சாம்பார், கூட்டு, பொரியல், அப்பளம், பொறித்த மீன், பச்சடி, மீன்குழம்பு, மீன் பொரியல்.. என்று மதிய உணவு சைவமும் அசைவமும் கலந்து வெளுத்துக் கட்டியது..

பளபளப்பான நீண்ட டைனிங் டேபிள் வழவழப்பாகவும் இருந்தது... உயர்தரமான பீங்கான் தட்டுக்கள்.. மிதந்து செல்லும் படகில் தண்ணீரை ஜன்னல் வழி வேடிக்கை பார்த்தபடி சாப்பிடும் அனுபவம் அருமையான அனுபவமாக இருந்தது..

நந்தினி ரவிச்சந்திரனுக்குப் பரிமாறினாள்.. "அசத்தறடி.." கேலி செய்தாலும் அவள் பரிமாறிச் சாப்பிடுவதை அவன் விரும்பினான்..

"நீயும் சாப்பிடு.."

அவன் வற்புறுத்தியதில் சாப்பிட ஆரம்பித்தாள்..

சாதம், மீன்குழம்பு, பொறித்த மீன், பச்சடி, மீன் பொரியல் என்று சப்புக் கொட்டிக் கொண்டு சாப்பிட்டவள் சாம்பார், கூட்டு, பொரியல், அப்பளத்தை எட்டிக்கூடப் பார்க்கவில்லை..

"இதில இவ எப்படிக் கைகழுவினாலும் மீன்வாசனை போக மாட்டேன் என்கிறதாம்.. இப்படி மீன் வெரைட்டிஸா

மொக்கினா மீன் வாசம் எப்படிப் போகும்..?” வைத்துக் கேலி செய்து தீர்த்து விட்டான் ரவிச்சந்திரன்..

உண்ட மயக்கம் தீர முன் பக்க பால்கனிக்கு வந்தவர்கள் படுத்துக் கொள்ளும் வகையில் கைபிடி இல்லாமல் நீண்டிருந்த சோபாக்களில் படுத்து திண்டை இழுத்துத் தலைக்கு வைத்துக் கொண்டார்கள்.. படுத்தபடி நீரை வேடிக்கை பார்ப்பது அற்புதமாக இருந்தது..

கடந்து சென்ற ஓடங்களைக் கவனித்த நந்தினி அங்கே வீட்டுக்கு ஒரு சைக்கிள் நிற்பதைப் போல வீட்டுக்கு ஒரு ஓடம் இருக்கும் என்பதை நினைவு படுத்திக் கொண்டாள்.. “கடை கண்ணிக்கு போய் வர ஓடத்தை எடுன்னு இவங்க பேசிக்குவாங்கள்ல..” ஒருக்களித்துப் படுத்து எதிர் பக்க சோபாவில் படுத்திருந்த ரவிச்சந்திரனிடம் கேட்டாள்..

“கடைக்குப் போய் வருகிறதைக் கேள்விப் பட்டிருக்கிறேன்.. அது என்ன ‘கண்ணி’க்கு போய் வருகிறது..?”

“கண்ணி வைக்க பாஸ்..”

“நீ கண்ணி வைப்பியா..?”

“நந்து வைப்பான்.. கண்ணி வைத்துப் பிடிக்கிறதில அவன் செம கில்லாடியாக்கும்..”

பேசிக் கொண்டிருந்தவள் திடிரென மௌனமாகி விட்டதில் அவளுக்கு வீட்டு நினைவு வந்திருக்கும் என்பதை புரிந்து கொண்டான் ரவிச்சந்திரன்.. எழுந்து அவளருகில் வந்து தலைமாட்டில் அமர்ந்து, அவள் தலைக்கு வைத்திருந்த திண்டைத் தூக்கிக் கடாசி விட்டு அவள் தலையைத் தூக்கித் தன் மடியில் வைத்துக் கொண்டு தலைகோதி விட்டான்..

அண்ணாந்து அவன் முகம் பார்த்த நந்தினியின் கண்கள் கலங்கியிருந்தன..

“என்னடி..?” இதமாக வினவினான்..

“நந்துக்கு போட்டிங் போகிறதுன்னா ரொம்பப் பிடிக்கும் பாஸ்.. இந்த படகு வீடு ஜர்னியில் அவனும் இருந்திருந்தா நல்லாயிருக்கும் இல்ல..?”

‘இவளை என்னதான் செய்வது..?’

காதலனும், காதலியுமாக வருபவர்கள் தம்பியையும் உடன் அழைத்து வருவார்களா..? அதைப் பற்றிச் சற்றும் சிந்திக்காமல் கண்ணீர் விடும் தன் காதலியின்

குழந்தைதன்மையில் மனதைப் பறி கொடுத்தான் ரவிச்சந்திரன்..

# அத்தியாயம் 201

**லே**சாக எழுந்து அமர்ந்து ரவிச்சந்திரனின் மடியில் சொகுசாக சாய்ந்து படுத்துக் கொண்டாள் நந்தினி.. அவனுக்கு அதுதான் பிடித்தமானதாக இருந்தது.. அவன் மடி மீது சாய்ந்தபடி தண்ணீரையும் கரையோர தீவுகளையும் வேடிக்கை பார்ப்பது நந்தினிக்குப் பிடித்தமானதாக இருந்தது.. உறக்கம் கொள்ளும் பின் மதிய வேளையில் அவர்கள் உறங்காமல் அன்றையப் பொழுதையும் படகு வீட்டில் பயணிக்கும் அனுபவத்தையும் ரசித்து அனுபவித்துக் கொண்டே வந்தார்கள்..

மெல்ல மதியப் பொழுது நகர்ந்து மாலை வந்து சேர்ந்தது.. பறவைகள் கரையோரத் தோப்புக்களில் இருந்த கூடுகளுக்குக் கூட்டம் கூட்டமாக திரும்பிக் கொண்டிருந்தன.. சூடான இஞ்சி டீயும் வெங்காய பஜ்ஜியும் அவர்களைத் தேடி வந்தன.. மொட்டை மாடி பால்கனியில் அமர்ந்தபடி அவற்றை ருசிக்கலாமே என்று ஆலோசனை சொன்னான் ரவிச்சந்திரன்.. ஆகட்டும் என்றாள் நந்தினி.. இவர்கள் முன்னே செல்ல இஞ்சி டீயும், வெங்காய பஜ்ஜியும் பின்னே வந்தன..

மாலை நேரத்துச் சூரியனின் சிவந்த கதிர்கள் தண்ணீரின் மேற்பரப்பில் படிந்திருந்த காட்சியைப் பார்க்க வெகு அழகாக இருந்தது.. அங்கும் இங்கும் சென்று கொண்டிருந்த படகுகளையும், படகு வீடுகளையும் பார்வையிட்டபடி உண்ட வெங்காய பஜ்ஜி அதிகமாக ருசித்தது.. குடித்த 'இஞ்சி டீ' தேவாமிர்தமாக இனித்தது..

மாலை மயங்கி இருள் பரவிய போது படகு வீட்டின் வேகம் மெல்லக் குறைந்து யாருமே இல்லாத தீவு ஒன்றில் படகு வீடு நஞ்கூரமிட்டு நின்று விட்டது..

"என்ன பாஸ் இது..?" நந்தினி பயந்து விட்டாள்..

"இதுதான் படகு வீடுகளின் யூஷுவலா செய்வாங்க.. பகலில் ஏரியில் மிதந்து வரும் படகுகள் நைட் டயத்தில ஏதாவது ஒரு தீவில் நங்கூரம் பாய்ச்சி நின்று விடும்.. இனிக் காலையில்தான் படகு கிளம்பும்.." விளக்கினான் ரவிச்சந்திரன்..

"ஆளில்லாத இந்தத் தீவில் தனியாய் இருக்கிறதா..?" சுற்று முற்றும் பார்த்தாள் நந்தினி..

இருள் அவளை அச்சுறுத்தியது.. தன்னிச்சையாக ரவிச்சந்திரனின் பக்கமாக நகர்ந்து ஒன்றிக் கொண்டாள்..

அவள் பயந்து போயிருக்கிறாள் என்பதைப் புரிந்து கொண்ட ரவிச்சந்திரன் அவளை இறுக்கி அணைத்து முதுகில் தட்டிக் கொடுத்து அமைதிப் படுத்தினான்.

“இங்கே பயப்படறதுக்கு எதுவுமே இல்லைடி.. நம்ம படகு வீடு மட்டும் தீவில ஸ்டே பண்ணலை.. மற்ற படகு வீடுகளும் தள்ளித் தள்ளி ஸ்டே பண்ணியிருக்கும்..”

“பகலில ஒண்ணும் தோணலை பாஸ்.. இருட்டிலே பயமாய் இருக்கு..”

“பக்கத்தில் நானிருக்கேனில்ல..? பயம் என்ன பயம்..? இதுவாவது ஆலப்புழா.. படகுவீடு.. ஹெல்ப்புக்கு ஒன்றுக்கு மூன்றாய் ஆள்கள் பக்கத்தில் இருக்காங்க.. யாருமே இல்லாம நீலிமலைக் காட்டிலே வுட்-ஹவுஸில் பத்திரமாய் இருந்தோமே.. மறந்து விட்டதா..?”

‘எப்படி மறக்கும்..?’

பயம் குறைந்தவளாக விலகி நின்றாள் நந்தினி.. இருவரும் கீழ்தளத்திற்கு இறங்கி வந்தார்கள்.. எட்வர்ட் என்று ரவிச்சந்திரனால் அழைக்கப் பட்டவன் தீவிலிருந்த எலக்ட்ரிக் கம்பத்தில் இருந்து படகுக்கு மின் இணைப்பைக் கொடுத்தான்..

படகுவீடு விளக்குகளுடன ஒளிர்ந்து நீரில் மிதக்கும் மாளிகை போல ஜொலித்தது.. அதன் அழகில் பிரமித்துப் போனாள் நந்தினி..

“இப்படித்தான் போட்-ஹவுஸுக்கு கரண்ட் சப்ளை ஆகுமா..?” அறிந்து கொள்ளும் ஆர்வத்துடன் விசாரித்தாள். “ம்ம்ம்..”

“நாம தண்ணியில ஜர்னி பண்ணினப்பவும் படகில கரண்ட் இருந்துச்சே.. டிவி ஓடுச்சு.. மிக்ஸி, கிரைண்டர்ன்னு அத்தனைக்கும் கரண்ட் கிடைச்சுச்சே.. அது எப்படின்னு அப்ப யோசிக்கலை பார்த்திங்களா..?”

“உனக்கு அறிவு பத்தலைன்னு சொல்லு.. அதை நான் பார்க்க வேறு செய்யனுமா..?”

“பாஸ்..”

நந்தினி சிறு குழந்தையைப் போலக் கால்களைத் தரையில் உதைத்துச் சிணுங்கிய விதம் ரவிச்சந்திரனின் மனதை கொள்ளை கொள்ளுவதாக இருந்ததில் அவள் அழகில் அவன் மனம் லயித்தான்..

“தண்ணீரில் ஜர்னி பண்ணும் போது போட் ஹவுஸில் ஜெனரேட்டர் மூலம் கரண்ட் சப்ளை ஆகும்.. கரையோரமாக நிற்கும் போது அங்கே கிடைக்கிற ஈபி கனெக்ஷனில் இருந்து கரண்டை கனெக்ட் பண்ணி விடுவாங்க..”

அவன் சொல்வதை அதீத வியப்புடனும், ஆர்வத்துடனும் கேட்டுக் கொண்டவளின் ஈர்ப்பில் ஈர்க்கப் பட்டான் ரவிச்சந்திரன்..

அழகான பெரிய ஹாலின் சோஃபாக்கள் அவர்களை வா, வா என அழைத்தன.. காலையில் படகு வீட்டில் கால் வைத்ததிலிருந்து அந்த நிமிடம் வரை அவர்கள் ஹாலில் உட்காரவே இல்லை.. படுக்கையறையையும் குளித்து உடை மாற்றிக் கொள்வதற்காக மட்டுமே பயன் படுத்தினார்கள்.. அதற்குப் பின்பு அந்த அறைப் பக்கம் எட்டிக் கூடப் பார்க்கவில்லை..

எங்கும் தண்ணீர்.. அதில் மிதக்கும் படகுவீடு.. சுற்றிலும் பசுமை.. கரையோர வயல் வெளிகள், தீவுகள்.. தென்னந் தோப்புக்கள் என்று ஆலப்புலாவின் படகுவிடு பயணம் அற்புதமான காட்சிகளை அள்ளியள்ளித் தரும் போது அவற்றைப் பால்கனியில் உட்கார்ந்து ரசித்துப் பார்ப்பதை

விட்டு விட்டு ஹாலில் உட்கார்ந்து டிவி பார்த்து.. படுக்கையறையின் ஏஸி குளிரில் இதமான நுரை மெத்தையில் அமிழ்ந்து தூங்குபவர்கள் பைத்தியக்காரர்கள் அல்லவா..

“டிவி பார்க்கலாமா..?” ரவிச்சந்திரன் கேட்டான்..

“இங்கே கேபிள் கனெக்ஷன் இருக்கா என்ன..? டிஷ் ஆண்டெனா வசதி படகு வீடுகளில் இருக்குமா..?”

“இரண்டுமே இல்லைதான்.. சி.டி போட்டுப் பார்க்கலாமே.. உனக்குப் பிடித்த சினிமாவை சூஸ் பண்ணிச் சொல்லு.. அதையே பார்க்கலாம்..”

ரவிச்சந்திரன் நீட்டிய சிடிக்களை வாங்கி அங்கிருந்த டீப்பாயில் வைத்த நந்தினி..

“அப்புறமா பார்க்கலாம்ங்க..” என்றாள்..

“இப்ப என்ன செய்யலாம்..?”

“ஜஸ்ட் ஒரு வாக் போயிட்டு வரலாமா..?”

“இங்கேயா..?” சந்தேகமாய் கேட்டான் ரவிச்சந்திரன்.

“ம்ம்ம்..” அழுத்தமாக தலையாட்டினாள் நந்தினி..

“பயந்தியேடி..”

“இப்ப பயமில்லை பாஸ்.. பக்கத்திலேதான் நீங்க இருக்கிங்கள்ல..” அந்தப் பதில் அவனுக்குப் பிடித்தமானதாக இருந்தது..

“குட்..” என்றான்..

அவர்கள் இருவரும் படகு வீட்டை விட்டு இறங்கி நடந்தார்கள்.. வயல்வெளியைப் போல இருந்தது அந்த தீவுப் பகுதி.. ஆளரவம் இல்லை.. நந்தினிக்கு ஸ்வெட்டரையும் தாண்டிக் குளிர் தாக்கியது.. ரவிச்சந்திரன் ஒரே சால்வையை இருவருக்கமாக சேர்த்து போர்த்தி விட்டு அவளுடைய தோளில் கைபோட்டு நடந்தான்.. அவனது உடலின் கதகதப்பில் குளிர் குறைந்து விட்டது.. இருட்டிலும் தெரிந்த பசுமையான வயல் வெளியும் சிலுசிலுவென்ற காற்றும் நந்தினியைக் குழந்தையைப் போலக் குதூகலிக்க வைத்தன..

“டிஃபரண்டான எக்ஸ்பீரியன்ஸ் பாஸ்..”

“உனக்குப் பிடிச்சிருக்கா..?”

“ரொம்பப் பிடிச்சிருக்கு..”

“போட்-ஹவுஸையா..?”

“உங்களை..”

அவள் இந்தப் பதிலைத்தான் சொல்வாள் என்று அவனுக்குத் தெரியும்.. இந்த பதிலைத்தான் அவள் சொல்ல வேண்டும் என்று அவன் எதிர் பார்த்தான் என்பது அவளுக்கும் தெரியும்.. தெரிந்தே அவன் கேள்வி கேட்டான்.. தெரிந்தே அவளும் பதிலைச் சொன்னாள்..

‘‘என்னைப் பிடிச்சிருக்கா..? எவ்வளவுடி பிடிச்சிருக்கு..?’’

‘‘இவ்வளவு..’’

அவள் கைகளை விரித்துக் காட்டினாள்.. அவன் அவளை அணைத்துக் கொண்டான்.. திரும்பி வரும்போது படகு வீட்டை முதலில் யார் தொடுவது என்று அவர்களுக்குள் போட்டி வந்தது.. சால்வையிலிருந்து வெளிப்பட்டு நந்தினி ஓடினாள்..

‘‘ஏய்ய்.. நில்லுடி..’’

அவளைத் துரத்திக் கொண்டு ஓடின ரவிச்சந்திரன் வெகு சீக்கிரத்தில் அவளை முந்திச் சென்று படகு வீட்டைத் தொட்டு விட்டான்.. மூச்சு இரைக்க, இரைக்க ஓடி வந்த நந்தினி..

‘‘ம்ம்ம்.. இது கள்ளாட்டம் பாஸ்..’’ என்று தரையை கால்களால் உதைத்துச் சிணுங்கினாள்..

“ஓடி வருகிற ஓட்டப் பந்தயத்தில கள்ளாட்டம் விளையாட என்ன இருக்கு..?” அவளை மடக்கினான் ரவிச்சந்திரன்..

இந்த நாள் இனிய நாள் என்று தோன்றியது நந்தினிக்கு.. அந்த இரவு.. ஆளில்லாத தனித்தீவு.. உடலைத் துளைக்கும் குளிர்காற்று.. பச்சைப் பசேலென்ற புல்வெளி.. அதில் அவளும் ரவிச்சந்திரனு மாக உலவிய உலாவல்.. ஓடிய ஓட்டப் பந்தயம்..!

இந்த விளையாட்டில் தோற்பதும் கூட சுகமான ஓர் அனுபவம்தான்.. வெற்றிக்குச் சமமானதுதான்..

ஹா, ஹா என்று மூச்சு விட்டபடி நந்தினி ஹாலில் இருந்த சோபாவில் சரிந்தாள்..

“இதோ.. இங்கே இருக்கிற இடத்தில இருந்து ஓடி வர முடியலை.. இப்படி மூச்சு இறைக்குது.. இதில் பேச விடு.. வயநாடுவரை உன் வாய் கேட்கும்..”

“ஆஹா.. இவர் பெரிய மௌன குரு.. பேசவே மாட்டார்.. வாயைத் திறந்தா ஆர்டர் மழைதான்.. போடு தோப்புக்கரணம்ன்னா நாம எண்ணிக்கங்க.. சாரேன்னு காதைப் பிடித்துக்கிட்டு உட்கார்ந்து எழுந்திருக்கனும்.. செம கம்மாண்டர்..! இதில என்வாயைப் பத்தி இவர் பேசறார்..”

“கம்மாண்டர்ன்னு வேண்டும்ன்னா சொல்லு.. மௌனகுருன்னு சொல்லாதே..”

“ஏனாம்..?”

“நான் உன்கூட வாழனும்னு ஆசைப்படறேண்டி.. சாமியாராய் போக ஆசைப்படலை..”

அவன் கண்சிமிட்டியதில் உதட்டைக் கடித்துக் கொண்டு விரல் நகங்களைப் பார்த்தாள் நந்தினி..

“என்ன படம் பார்க்கலாம்.. சொல்லுடி..”

அவளையே குறுகுறுவெனப் பார்த்தபடி சொன்னான் ரவிச்சந்திரன்.. அவன் முகம் பார்க்க முடியாமல் ஏதோ ஒரு கேசட்டை எடுத்து நீட்டினாள் நந்தினி..

“இந்தப் படம்ன்னா உனக்கு ரொம்பப் பிடிக்குமே..”

ஒரு தினுசாக அவன் வினவியதில் என்னடா இது என்று ஆகி விட்டாள் நந்தினி.. அப்படி எந்தப் படத்தின் சிடியை எடுத்துக் கொடுத்திருக்கிறாள்..?

ரவிச்சந்திரனின் கைகளில் சுழன்று கொண்டிருந்த சிடியின் பெயர் கார்டு ‘பிரேமம்’ என்று சிரித்தது..

‘ஐயோடா.. இந்த சிடியையா எடுத்துக் கொடுத்துத் தொலைத்திருக்கிறேன்..?’ அரண்டு விட்ட நந்தினி அழ மாட்டாத குறையாய்..

“பாஸ்..” என்றாள்..

“இந்த பாஸுக்கு மலர் டீச்சரைப் பிடிக்காதுடி.. நந்தினியைத்தான் பிடிக்கும்.. நீ மலர் டீச்சராகனும்னுதானே ஆசைப்படுகிற..?”

அவளுக்குச் சுருக்கென்று முள் தைத்ததைப் போல ஆகிவிட்டது..

‘எப்படிப் பேசுகிறான்.. இவன் மட்டும் அஜந்தாவின் போட்டோவை வைத்திருப்பானாம்.. அதுக்கு ஒரு விளக்கத்தையும் செப்புவானாம்.. நான் கேணச்சியைப் போல அப்படிங்களான்னு நம்பிரனுமாம்.. இவன் என்னை நம்ப மாட்டானாம்..’

“நான் உன்னை என்னவோன்னு நினைத்தேண்டி..”

“வேண்டாம் பாஸ்..” இறுகிய முகத்துடன் சொன்னாள் நந்தினி..

“எது வேண்டாம்..?”

“இந்தப் பேச்சு..”

“ஓ.. நீ என்னைத்தான் வேண்டாம்ன்னு சொல்கிறியோன்னு நான் நினைத்தேன்..”

“நினைப்பீங்க.. நினைப்பீங்க.. ஏன் நினைக்க மாட்டிங்க.. கம்மாண்டராச்சே.. கண்டதையும் நினைக்கத்தான் செய்வீங்க.. உங்களை ஏன்னு கேட்க முடியுமா..?”

“கேளேன்.. ஏன்னு கேள்வி கேட்காதவளைப் போலப் பேசறா.. இப்பக் கூட அஜந்தாவின் போட்டோவை ஏன் வைத்திருந்தேன்னு கேள்வி கேட்டுத் துளைத்தவதானே நீ..? பேச வந்திட்டா..”

“நான் பேச வரலை பாஸ்.. வேணும்ன்னா அஜந்தாவையோ அந்தக் கிண்கிணியையோ பேச அனுப்பறேன்..”

“கிண்கிணியா..? யார் அது..?”

“எனக்கென்ன தெரியும்..? நீங்கதானே கோழிக் கோடில் அவளை மடியில் உட்கார வைத்துக் கொஞ்சிக்கிட்டு

இருந்தீங்க..? உங்களுக்குத்தான் அவ யாருன்னு தெரிஞ்சிருக்கனும்..”

“ஓ.. தரங்கிணியைச் சொல்கிறியா..? ஹா.. ஹா..”

“அவ பெயரைச் சொல்லும் போதே சிரிச்சு மகிழ்ந்து போறிங்களே.. கீப் இட் அப்.. ஆம்பளையில்ல.. எதை வேணும்னாலும் பேசுவீங்க.. செய்வீங்க.. கேள்வி கேட்க யாரிருக்கா..?”

“நீயிருக்கயேடி..”

ரவிச்சந்திரன் சிடியைத் தூக்கி விட்டெறிந்து விட்டு அவளை இழுத்து மடியில் போட்டுக் கொண்டு கொஞ்ச ஆரம்பித்து விட்டான்.. கோபத்துடன் நந்தினி திமிறினாள்..

# அத்தியாயம் 202

“**வி**டுங்க என்னை..”

“விட முடியாதுடி.. ஹா.. ஹா..”

“தரங்கிணின்னு சொன்னவுடனே கிண்கிணின்னு இவர் சிரித்து மகிழ்ந்து போவாரம்.. நான் இவரிடம் கொஞ்சிப் பேசனுமாம்.. நல்ல க தையாய் இருக்கே..”

“நானாடி அவ பெயரைச் சொன்னேன்..? நீதானே சொன்ன..?”

“நான் சொன்னா நீங்க ரசிச்சுச் சிரிக்கனுமா..?”

“சொன்னது நீ.. என்மேலக் குற்றமில்லை..”

“இதையே நானும் சொல்லலாமில்ல..?”

“சொல்லு.. என்ன சொல்லப் போகிற..?”

“இங்கேயிருக்கிற சிடிஸ் அத்தனையும் உங்களுடையது.. நீங்க வைத்திருந்தது.. கைக்கு வந்த ஏதோ ஒண்ணை நான் உறுவி நீட்டினா அது ‘பிரேமம்’ பட சிடியா இருந்து தொலைக்குது.. இதில என்மேல குற்றமென்ன..?”

ரவிச்சந்திரன் பதில் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.. சளைக்காமல் பதிலுக்கு நேர் கொண்ட பார்வையாக நந்தினி பார்த்ததில் சிரித்து விட்டான்..

“ஓகே.. ஓகே.. உன்னை நான் கோவித்துக் கொண்டது தவறுதான்.. ஐ ஆம் ஸாரி..”

கொஞ்சம்கூட யோசிக்காமல் தயங்காமல் அவன் மன்னிப்புக் கேட்டதில் மனம் இளகி விட்ட நந்தினி..

“ஸாரியும் வேண்டாம்.. பூரியும் வேண்டாம்..” என்றபடி எழுந்து கொண்டாள்..

“இருட்டிருச்சுல்ல.. வயிறு பூரியைக் கேட்குது போல.. அது எப்படிடீ உன் மூக்கு வகையா வாசனையை மோப்பம் பிடிச்சுருது..? கிச்சன்ல பூரி சுடற வாசனையை கண்டு பிடிச்சுட்டயே..”

காற்றில் மிதந்து வந்த எண்ணை வாசனையை முகர்ந்து ரசித்தபடி அவளை கேலி செய்தான் ரவிச்சந்திரன்..

“நைட் டிஃபன் பூரியா.. பாஸ்..?”

அவனையும் சிடிக்களையும் மறந்து நந்தினி கிச்சன் பக்கமாக தாவி விட்டாள்... இவள் இருக்கிறாளே என்று தலையை ஆட்டி ரசித்த ரவிச்சந்திரன் சிரித்துக் கொண்டான்..

“பூரியில்லை பாஸ்.. சப்பாத்தியாம்..”

முகத்தைத் தூக்கியபடி வந்து சேர்ந்தாள் நந்தினி.. பூரி போடச் சொல்லவா என்று ரவிச்சந்திரன் கேட்டான்.. வேண்டாம் என்று மறுத்து விட்ட நந்தினி சிடிக்களை குடைய ஆரம்பித்தாள்.. மலர் டீச்சர் படம் பார்க்க வேண்டாமா என்று ரவிச்சந்திரன் வம்பிழுக்க அவனை முறைத்தாள்.. இருவருமாக சேர்ந்து ‘காற்று வெளியிடை’ படம் பார்த்தார்கள்..

“வாட் எ ஃபிலிம்..!” என்றான் ரவிச்சந்திரன்..

நந்தினி கண் கலங்க முகத்தைத் திருப்பிக் கொண்டாள்..

‘இவளுக்கு பூஞ்சை மனது..’

நந்தினியை அணைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. அவள் அழுகிறாள் என்று கேலி செய்தான்.. வெட்கத்துடன் கண்ணீரை மறைத்துத் துடைத்துக் கொண்டவளை விரல்

விலக்கிப் பார்த்தான்.. மனபாரம் தாங்காமல் அவன் மார்பில் முகம் புதைத்து கட்டிக் கொண்டாள் நந்தினி..

“நீயென்ன பப்பாவாடி.. சினிமா பார்த்துட்டு ஊம், ஊம்ன்னு அழுகிற..?” கிண்டலைப் போல அதை இதை பேசி அவளது மன பாரத்தை குறைத்து விட்டான் ரவிச்சந்திரன்..

அப்போதும் முகத்தை ஒரு முழ நீளத்திற்கு தூக்கி வைத்துக் கொண்டிருந்தவளை இழுத்துக் கொண்டு மாடிபகுதியின் பால்கனிக்குப் போனான்.. படகின் மேல் பகுதி பாதி பால்கனியாகவும் மீதி திறந்தவெளியுமாக இருந்தது.. திறந்த வெளியில் குளிரில் நடுங்கியபடி இருவரும் நின்று ஆகாயத்தில் மின்னிய நட்சத்திரக் கட்டங்களை எண்ணினார்கள்.. நந்தினி நந்தகுமாருக்குப் பிடிக்கும் என்று ‘நிலா, நிலா ஓடிவா..’ பாடலை பாடினாள்.. அவள் பாடும் பாடலைக் கேட்டு ஆகாயத்தில் உள்ள நிலா குதித்து இறங்கி வந்து விடப் போகிறது என்று அதற்கும் கிண்டல் செய்தான் ரவிச்சந்திரன்.. நந்தகுமாரின் நினைவில் மனம் கனக்க.. நின்றிருந்தவளிடம்..

“உனக்கு அழுவதென்றால் வெல்லக் கட்டியா..? ஏதாச்சும் சான்ஸ் கிடைக்குமான்னு வலை போட்டுத் தேடிக்

கண்டு பிடிக்கிற பாரு.. அங்கே நிற்கிறேடி நீ..” என்று அதட்டினான்..

“நான் இங்கே நிற்கிறேன் பாஸ்..” சுதாரித்துக் கொண்ட நந்தினி பதிலடி கொடுத்தாள்..

சிலுசிலுவெனக் பனிக்காற்று அவர்களின் உடல் தழுவியதில் நந்தினி கைகளைக் குறுக்கிக் கட்டிக் கொண்டு..

“குளிருது பாஸ்..” என்று சிணுங்கினாள்..

“கிட்டே வா..” அவன் அணைத்துக் கொண்டான்.. அவனது நெருக்கத்தில் அவள் மனதிலிருந்த பாரம் குறைவதைப் போல இருந்தது.. அவன் தோளில் தலை சாய்த்துக் கொண்டாள்..

**“உன் நெஞ்சிலே பாரம்..**

**உனக்காகவே நானும்..**

**சுமைதாங்கியாய் மாறுவேன்..**

**உன் கண்களின் ஓரம்..**

**எதற்காகவோ ஈரம்..?**

**கண்ணீரை நான் மாற்றுவேன்..**

**வேதனை தீரலாம்..**

**வெறும் பனி விலகலாம்..**

**வெண் மேகமே..! புது அழகிலே..**

**நாமும் நனையலாம்..**

**உறவுகள் தொடர்கதை..**

**உணர்வுகள் விடுகதை**

**ஒருகதை என்றும் முடியலாம்..**

**முடிவிலும் ஒன்று தொடரலாம்**

**இனியெல்லாம் சுகமே..”**

பிசிரற்ற குரலில் அவன் பாடிய பாடல் மிருதுவாக அவள் மனதில் இறங்கித் தாலாட்டியது..

‘இவன் இரவுப் பாடகன்..!’ அவள் மையல் கொண்டாள்.. மங்களூர் எக்ஸ்பிரஸ்ஸில் அவன் பாடிய பாடல் நினைவுக்கு வந்தது.. அன்றும் இது போலதான்.. அமைதி சூழ்ந்திருந்த இரவு நேரம்.. அவளும் அவ னும் மட்டும் இருந்த தனிமைப் பொழுது.. அன்று கிடாரை மார்பில் சாய்த்திருந்தான்.. இன்று கிடாருக்குப் பதில் நந்தினியைத் தோளில் சாய்த்திருக்கிறான்..

அவர்கள் இருவரும் இறங்கி வந்தபோது இரவு உணவு டைனிங் ஹாலில் தயாராக இருந்தது.. சப்பாத்தி, குறுமா, மீன்வறுவல்..

“இங்கே மீன் வறுவலோ, பொரியலோ இல்லாம சாப்பாடே இருக்காது போல..” நொட்டை விட்டபடி சொன்னாள் நந்தினி..

“உனக்காகவே மீனை பொறித்து வைத்துக்கிட்டுக் காத்திருக்கிற தேசம் எங்கள் மலையாள தேசம்..” என்றான் ரவிச்சந்திரன்..

“ஓ..” உதட்டைச் சுழித்து அழகு காட்டினாள் நந்தினி.. எட்வர்ட் அவர்களுக்காக தட்டுக்களை எடுத்து வைக்க..

“வெயிட்..” என்றாள் நந்தினி..

“எந்தா மேம்..?” தயங்கி நின்றான் எட்வர்ட்..

“பாஸ்.. ஒரு ஐடியா..” விரல் சொடுக்கிய நந்தினி..

“நிலாச் சாப்பாடு சாப்பிடலாமா..?” என்று விழிகள் மின்ன கேட்டாள்..

“நிலாச்சாப்பாடு..?” ஆச்சரியத்துடன் கேட்ட ரவிச்சந்திரன்..

“ஓகே..” என்று இரு கைகளையும் விரித்து அனுமதி வழங்கியபடி எழுந்து கொண்டான்..

எட்வர்ட் அவர்களுக்கான உணவு வகைகளையும் தட்டுக்களையும் மாடிக்குக் கொண்டு வந்தான்.. குடி தண்ணீர் ஜக்கும் தம்ளர்களுமாக அங்கு வந்த நந்தினி..

“நாங்க சாப்பிட்டுக்கறோம்.. நீங்க போங்க..” என்று அவனை அனுப்பி விட்டாள்..

படகு வீட்டின் மேல் தளத்தில் நட்சத்திரங்கள் மின்ன.. நிலா பவனி வர அவளும் ரவிச்சந்திரனும் நிலாச் சாப்பாடை சாப்பிட ஆரம்பித்தார்கள்..

நந்தினி ரவிச்சந்திரனுக்குப் பரிமாற அவன் சப்பாத்தியை விண்டு குருமாவில் தோய்த்து அவளுக்கு ஊட்டினான்.. குருவி வாயைத் திறப்பதைப் போலத் திறந்து சப்பாத்தி துண்டை வாங்கிக் கெ ாண்ட நந்தினி.. தானும் ஒரு விள்ளலை எடுத்து அவனுக்கு ஊட்டினாள்.. சாப்பாத்தித் துண்டை வாங்கிக் கொள்ளும் சாக்கில் அவளது கைவிரல்களை லேசாக அவன் கடித்து வைக்க கைவிரல்களை உதறியவள்..

“ஊட்டின விரலுக்கு அருமையா கிஃப்ட் கொடுக்கறிங்க பாஸ்.. இந்த விஷயத்தில உங்களை அடிச்சுக்க ஆளில்லை..” என்றாள்..

தண்ணீரில் மிதந்து கொண்டிருந்த படகுவீட்டின் மேல்தளத்தில் நிலாவையும் நட்சத்திரங்களையும் வேடிக்கை பார்த்தபடி அவர்கள் உண்ட நிலா விருந்து நிலாச்சோறின் அழகை உணர்த்தியது..

இரவு உணவை உண்டு முடித்ததும் அவர்கள் கீழே இறங்கி வந்தார்கள்..

“தூக்கம் வருதா..?” ரவிச்சந்திரன் கேட்டான்..

“ஊஹும்..” இல்லையென்று தலையை ஆட்டிய நந்தினி..

“ஒரு ஸ்மால் வாக் போயிட்டு வரலாமா..?” என்று கேட்டாள்.. “திரும்பவுமா..?”

“ம்ம்ம்..”

“இருட்டிலா..?”

“பக்கத்திலேதான் நீங்க இருக்கீங்களே..”

அதே பதில்.. அவனுக்குப் பிடித்தமான பதில்.. அன்றைய நாளை அவள் மென்மேலும் இனிப்பாக்கிக் கொண்டிருப்பதாக உணர்ந்தான்..

அவர்கள் இருவரும் படகு வீட்டை விட்டு இறங்கித் தீவுப் பகுதியில் நடந்தார்கள்.. பக்கத்தில் நடந்து வந்த நந்தினி சளசளக்காமல் அந்த இரவின் நிசப்தத்தை ரசித்து நுகர்ந்தவளாய் அமைதியாக நடந்து வந்ததில் வியப்படைந்தான் ரவிச்சந்திரன்..

‘வாயைத் திறந்தா மூடவே மாட்டா... வாய் வலிக்கிறதைப் பத்திக் கவலைப்படாம பேசித் தள்ளுவா.. இப்ப என்னடான்னா பேசா மடந்தையாய் வருகிறா..’

நந்தினியின் தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவின் வாசனை மனதை மயக்குவதாக இருந்தது.. ரவிச்சந்திரன் அவளை இழுத்து கைவளைவில் நிறுத்திக் குனிந்து அவள் சூடியிருந்த பூவில் முகம் பதித்து..

“ம்ஹா..” என்று முகர்ந்து சிலிர்த்தான்..

“போதுமே..” அவன் நெஞ்சில் கை வைத்து வெட்கத்துடன் தள்ளி விட்டு நடந்தாள் நந்தினி..

தீவுக்குள் ஓடி வந்த வாய்க்கால் நீரைக் கடக்க தென்னை மரங்களை வெட்டிப் போட்டிருந்தார்கள்..

“செங்கல் இல்லாம, கம்பி இல்லாம, இயற்கையை துணையாய் வைச்சு உருவாக்கின பாலம்..” என்றாள் நந்தினி..

“ஏய்ய்.. நீ இப்படியெல்லாம் கூட யோசிச்சுப் பேசுவியாடி..?” ஆச்சரியம் போல அவளைக் கலாய்த்தான் ரவிச்சந்திரன்..

“ஏனாம்.. உங்க அத்தை மகள் ரத்தினமும், கோழிக்கோடு கிண்கிணியும் மட்டும்தான் யோசிப்பாங்களா..? நான் யோசிக்க மாட்டேனா..?” பின்னலைத் தூக்கிப் பின்னால் விசிறியபடி கேட்டாள் நந்தினி..

“அவங்களைப் பத்தி நான் நினைக்கிறதே இல்லை.. நீதான் நினைவு படுத்தற..?”

“ஹலோ பாஸ்.. என்ன..?” நந்தினி நின்று விட்டாள்..

“என்னடி..?” அவளிடம் வம்பிழுக்கப் போகும் சுவராஸ்யத்துடன் ரவிச்சந்திரனும் நின்று விட்டான்..

“இதுதான் சாக்குன்னு அதுகளை நினைச்சிருவீங்களோ..?”

“எதுகளை..?”

“ஹை.. ஐயாவுக்கு அதுக யாருன்னு தெரியாதாக்கும்..? என் வாயாலே நான் சொல்லனுமாக்கும்..”

“எப்படிடி இப்படியொரு லாங்வேஜில பேசற... எனக்கும் தமிழ் தெரியும்.. என்னாலே மட்டும் உன்னைப் போல பேச முடியறதில்லையே..”

“அதுக்குத் தமிழ்நாட்டில பிறந்து வளர்ந்திருக்கனும் பாஸ்..”

“நான் பிறந்தது வேணும்னா வயநாடா இருக்கலாம்.. வளர்ந்தது தமிழ்நாட்டிலேதான்.. ஊட்டி கான்வென்டில படிச்சேன்..”

“அடேங்கப்பா.. படா ஆள்தான்..”

“‘படா’ வா..”

“ம்ம்ம்.. ‘படா ஷோக்கான ஆளுப்பா நீ’ன்னு சொல்வாங்கள்ல அந்த ‘படா..’”

“சத்தியமா அர்த்தம் புரியலை..”

“புரியாமலே இருக்கட்டும்.. இது ஒண்ணுலேயாவது உங்களை விட நான் எக்ஸ்பர்ட்டா இருக்கிறேனில்ல.. அதுவே போதும்.. வாங்க.. இப்படி உட்காரலாம்..”

தென்னை மரப் பாலத்தில் உட்கார்ந்து வாய்க்கால் நீரில் கால் பதித்தார்கள்.. பனிக்கட்டிகளின் மீது கால் வைப்பதைப் போல சில்லென்று இருந்தது.. பலத்து அடித்த குளிர் காற்றும் சேர்ந்து கொள்ள..

“ஸ்ஆ..” என்றபடி அவன் மார்பில் ஒன்றிக் கொண்டாள் நந்தினி..

அவள் தோளில் கைபோட்டு வளைத்துக் கொண்ட ரவிச்சந்திரன்..

**“இந்த காற்று வெளியிடை கண்ணம்மா..**

**நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்..”**

என்று பாடினான்..

நந்தினியின் மேனி சிலிர்த்தது.. அந்நாள் பொன்னாள் என்று தோன்றியது... எப்படிப்பட்ட அற்புதமான அனுபவங்களை அவளுக்கு அள்ளித் தருகின்றான் அவன்..

அன்று நீலிமலைக் காட்டின் மரவீடு.. இன்று ஆலப்புழாவின் படகு வீடு..!

கேரளத்தைக் கடவுளின் தேசம் என்று சொல்வது சாலச்சிறத்து என்று நினைத்துக் கொண்டாள் நந்தினி.. அங்கே வந்திருப்பதினால் அவள் ஆசிர்வதிக்கப் பட்டிருக்கிறாள்.. இறைவனின் அனுக்கிரஹம் அவளுக்குக் கிட்டியிருக்கிறது..

# அத்தியாயம் 203

**"இந்த காற்று வெளியிடை கண்ணம்மா..**

**நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்.."**

**அ**முதூறும் குரலில் அவன் பாடிய பொழுது காற்று வெளியிடை கலந்த பொழுதாகவே இருந்தது.. குளிர் நிரம்பிய கேரளாவின் தீவுப் பகுதியில்.. ஓர்புறம் நீரும், மறுபுறம் நிலப் பரப்புமாக இருக்க.. வாய்க்காலின் குறுக்கே போடப்பட்டிருந்த தென்னை மரத்தில் உட்கார்ந்து வாய்க்கால் நீரில் கால்களை நனைத்து ஆடியபடியே பாரதியின் பாடலை பாடுவது என்பது எத்தனை இனிமையானது..

இதுபோன்ற ஒரு பொழுதைத்தானே பாரதி வேண்டி நின்றான்.. எட்டயபுரத்தின் முண்டாசுக் கவியின் சிந்தனையெல்லாம் காணிநிலமும் அதில் கேணியும், தென்னை மரங்களும்தானே.. இவற்றை முதலில் வடிவமைத்து விட்டுத்தானே அவன் பக்கத்தில் கொண்டாட ஒரு பத்தினிப் பெண் வேண்டும் என்று பாடினான்..?

ஆலப்புழாவின் படகு வீட்டையும் அந்த அற்புதத் தீவையும் கண்டிருந்தால் என்னவெல்லாம் பாடியிருக்க மாட்டான்..

**"அமுதூற்றினை யொத்த இதழ்களும்**

**நிலவூறித் ததும்பும் விழிகளும்.."**

அவளது ஈரம் படர்ந்த இதழ்களையும் இருளில் மின்னும் விழிகளையும் போதையுடன் பார்த்தபடி தாபத்துடன் அவன் பாட..

**"பத்து மாசுப் பொன்னொத்த**

**நின் மேனியும்**

**இந்த வையத்தில் நானுள்ள**

**மட்டிலும்"**

என்று தொடர்ந்து பாடினாள் நந்தினி..

**"என்னை வேற்று நினைவின்றி**

**தேற்றியே**

**இங்கோர் விண்ணவனாகப்**

**புரியுமே.."**

ரவிச்சந்திரனின் கை அவளை இறுக்கிக் கொண்டது.. நகர்ந்து அவன் மடியில்.. அவள் அமர்ந்து ஒன்றிக் கொள்ள.. போர்த்தியிருந்த சால்வையை விரித்து அவளுக்குப் சேர்த்துப் போர்த்தி இழுத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்..

“நம்பலாமா..?”

“நம்புடி.. நான் ரவிச்சந்திரன்..”

“வேற்று நினைப்பால்லாம என் நினைப்பை மட்டும் மனசில் வைச்சிருப்பீங்களா..?”

“ஏற்கனெவே அப்படித்தானேடி இருக்கேன்..?”

“ஐ லவ் யு பாஸ்..”

“ஐ லவ் யு டி..”

ஆலப்புழாவின் படகு வீட்டில் ஏறிய நொடியிலிருந்து இந்த நொடி வரை அவர்கள் எத்தனை முறை ‘ஐ லவ் யு..’ சொல்லிக் கொண்டார்கள் என்று கணக்கெடுத்துப் பார்த்தாள் நந்தினி.. நினைவுக்கு வரவில்லை..

அவளும்தான் என்ன செய்வாள்..? அந்தச் சூழலில் அவன் மீதான காதல் மயக்கம் அதிகரித்துத் தொலைக்கிறதே..

வாயைத் திறந்தால் ‘ஐ லவ் யு’ என்ற உச்சரிப்புத்தான் வந்து தொலைக்கிறது..

“இது டேன்ஜசரஸ் பிளேஸ் பாஸ்..”

அவனிடமிருந்து விடுபட்டு எழுந்து கொண்டாள் நந்தினி..

“ஊஹும்.. அப்படியெல்லாம் இல்லை.. ஆலப்புழாவில் படகு வீடுகள் தான் மெயின் பிஸினெஸ்.. ஸோ.. இங்கேயிருக்கிற தீவுகளில் பாதுகாப்பு பலமா இருக்கும்.. நைட் இவங்க இங்கே ஸ்டே பண்ணிக் கரண்ட் கனெக்ஷன் கொடுத்துக்கனுமில்லையா..?”

“நான் அந்த டேன்ஜரஸைச் சொல்லலை..”

“வேற எந்த டேன்ஜரஸைச் சொன்ன..?” பதில்சொல்லாமல் நந்தினி நடக்க ஆரம்பித்தாள்..

நிலா வெளிச்சத்தில் அவளது கன்னச்சிகப்பை கண்டு கொண்ட ரவிச்சந்திரன் இரண்டே எட்டில் அவளை அணுகி அவன் பக்கமாகத் திருப்பினான்..

“பாஸ்..”

தள்ளாடும் பூங்கொடியாய் அவன்மீது படர்ந்து மார்பில் சாய்ந்து கொண்டாள் நந்தினி..

“என்னைப் பார்த்தா உனக்கு டேன்ஜரஸ் மேன் போலத் தெரிகிறதா..?”

“உங்களைப் பார்த்து நான் பயப்படலை பாஸ்..”

“பின்னே..?”

“என்னைப் பார்த்தே பயப்படறேன்..”

நந்தினி சொல்ல வருவதை புரிந்து கொண்ட ரவிச்சந்திரனின் விழிகள் மின்னின.. அவர்கள் படகு வீட்டிற்குத் திரும்பும் வரைக் காத்திருந்த வேலையாள்கள் அவர்கள் படுக்கையறைக்குள் நுழைந்து கதவைத் தாழிட்டுக் கொண்டதும் படகுவீட்டைச் சுற்றிப் பாதுகாவலாக சூழ்ந்து படுத்து விட்டார்கள்..

ஏஸியின் மெல்லிய ரீங்கார ஒலியுடன் மங்கலான இரவு விளக்கின் வெளிச்சத்தில் நுரை மெத்தையில் வீழ்ந்த நந்தினி அறையைச் சுற்றிப் பார்வையை ஓட்டினாள்.. நட்சத்திர ஹோட்டல்களில் அறைகளைப் போன்ற அழகும் வசதியும் கொண்ட அறை.. காலையில் குளித்து உடை மாற்ற அறைக்குள் வந்தது.. அவ்வபோது பாத்ரூமை உபயோகப் படுத்த வந்து சென்றதைத் தவிர அன்று முழுவதும் அந்த அறையை உபயோகப்படுத்தவேயில்லை என்ற நினைவு

வந்தது.. ஓய்வெடுக்க வேண்டும் என்று தோன்றவேயில்லை.. மதிய உணவுக்குப் பின்னர் கண்களைச் சுழற்றிய தூக்கத்திற்கு சற்று நேரம் அயர்ந்த போதுகூட பால்கனியில் தண்ணீரையும் கரையோர இயற்கை காட்சிகளையும் வேடிக்கை பார்த்தபடிதான் கண் அயர்ந்தார்கள்.

ரவிச்சந்திரன் கதவைத் தாழிட்டு விட்டு அதில் சாய்ந்து நின்று அவளைப் பார்த்தான்.. நந்தினி இமைகளை மூடித் திறந்து அவனை அழைத்த விதத்தில் விழிகள் பிரகாசிக்க கட்டிலில் படர்ந்து அவள் மீது பரவினான்.. இமை மூடி அவனை அமைதித்தாள்..

கிளர்ச்சியில்லாத அவளது அமைதியில் விலகி அவளின் இமையில் முத்தமிட்டான்.. இமைகளைத் திறந்து அவனைப் பார்த்தவளின் விழிகளில் சொந்தம் இருந்தது.. அவனுக்கு அதுவே போதுமானதாக இருந்தது.. விலகிப் படுத்து அவளுக்காக கைநீட்டினான்.. கண்கள் மின்ன அவனிடம் தாவியவளை மார்பில் சரித்துக் கொண்டான்..

பரந்து விரிந்திருந்த அவனது மார்பைத் தலையணையாக்கி இமைமூடி அவள் படுத்திருந்தாள்.. அவளது முடி கோதியவன்..

“நந்தினி..” என்று கிசுகிசுப்பாக அழைத்தான்.

அவனும் அவளும் மட்டும் இருந்த அந்த ஏஸி அறை தாழிடப்பட்டிருந்தது.. அவர்களின் பேச்சு அறையைத் தாண்டி வெளியே பயணிக்காது.. இருந்தும் அவன் அவளிடம் கிசுகிசுத்தான்.. அவள் அவனைவிட கிசுகிசுப்பாக..

“ம்ம்ம்..” என்று முணுமுணுத்தாள்..

காதல் என்பதே ரகசியமான பரவச உணர்வுதான்.. அதில் பேச்சிலும் சிரிப்பிலும் வெகு இயல்பாக ரகசியம் கலந்து விடும்.. காதலுக்கு சுவை சேர்ப்பது ரகசியக் கிசுகிசுப்புகள்தான்..

“பயமாய் இல்லையா..?”

“எதுக்கு பயம்..?”

“இது தனி ரூம்..”

“எனக்குத் தெரியாது பாருங்க.. நீங்க சொல்லித் தெரிய வைக்கறீங்க.. சூப்பர் பாஸ்..”

அவள் அவன் சொன்னதை சூப்பர் என்று சொன்னாளா.. இல்லை அவனை சூப்பர் பாஸ் என்று கொண்டாடினாளா என்று புரியாத விதத்தில் செல்லமாக சிணுங்கினாள் நந்தினி..

“நான் சொல்லித் தெரிய வைக்க வேண்டியது நிறைய இருக்குடி..”

அவளது முதுகைத் தடவிக் கொடுத்துக் கொண்டிருந்த அவனது கையின் அழுத்தத்தில் அவளுக்குள் உணர்வுகள் கிளர்ந்து எழுந்தன.. குளிர் நிரம்பிய ஆலம்புழாவின் படகு வீட்டின் ஏஸி அறையில் அவளுக்குள் ஏதோ நிகழ்ந்தது.. உடலெங்கும் பரவிய வெப்ப அலைகளில் அவள் தடுமாறினாள்..

“பாஸ்..”

நடுங்கிய அவளது குரலில் ரட்சகனாகி அவளை அமைதிப் படுத்தினான் ரவிச்சந்திரன்.. அவள் முதுகில் அழுத்தம் கொடுத்துப் பதிந்திருந்த கை தட்டிக் கொடுக்க ஆரம்பித்தது..

“பயம் வந்திருச்சா..?”

அவன் குரலில் இருந்த நகைப்பில் அவள் அமைதியானாள்..

“எனக்கொன்னும் பயமில்லை..” உண்மையாகச் சொன்னாள்..

“பயமில்லையா.. தனி ரூமில நீயும் நானும் ஒண்ணா, ஒரே கட்டிலில படுத்துத் தூங்கப் போறோம்.. உனக்குப் பயம் வரலையா..?”

“நாம இப்படித் தனி ரூமில ஒரே கட்டிலை ஷேர் பண்ணிக்கிட்டுப் படுத்துத் தூங்கறது ஒண்ணும் ஃபர்ஸ்ட் டைமில்லை பாஸ்.. செகண்ட் டைம்.. நீலிமலைக் காட்டில வுட்-ஹவுஸில ரெண்டு நாள் தனிக் குடித்தனம் பண்ணியிருக்கோம்.. மறந்து போச்சா..?”

“எப்படிடீ மறக்கும்..?”

அந்த நாள்களின் நினைவை இருவரும் அசை போட்டபடி சற்று நேரம் மௌனமாக இருந்தார்கள்..

“அப்ப நீ என் காதலை ஏற்றுக்கலைடி..” மௌனம் கலைத்தான் ரவிச்சந்திரன்..

“இப்பவும் என் மனசில குழப்பம் இருக்கு பாஸ்..” சஞ்சலத்துடன் சொன்னாள் நந்தினி..

“இப்பத்தான் உன்னோட அபத்தமான உளரலுக்கு ஒரு புல்ஸ்டாப் வைத்தேன்.. மறுபடியும் ஆரம்பிச்சிட்டியா..?” அதட்டினான் அவன்..

“ஸாரி.. ஸாரி.. இனிமே உளர மாட்டேன்..”

“பார்க்கலாம்.. உளரலுக்கும் உனக்கும் இருக்கிற ரிலேஷன்ஷிப் இருக்கே.. ஸ்ட்ராங்கான ரிலேஷன்ஷிப்.. உனக்குன்னு இப்படியெல்லாம் எப்படித் தோணுதோ..”

“ஸாரி சொன்ன பின்னாலும் திட்டக் கூடாது..”

“நான் திட்டுகிறதைப் போல நீயும் பேசக்கூடாது..”

“ஆகட்டும்..”

புரண்டு அவன் மார்பில் முகவாயை பதித்து அவன் முகம் பார்த்துக் சொன்னாள் நந்தினி.. அந்த இரவு மறக்க முடியாத புரண்டு அவன் மார்பில் முகவாயை பதித்து அவன் முகம் பார்த்துக் சொன்னாள் நந்தினி.. அந்த இரவு மறக்க முடியாத இரவு என்று நினைத்துக் கொண்டான் ரவிச்சந்திரன்.. அவனிடம் நந்தினி காட்டிய அந்த அன்யோன்யம் அலாதியானதாக வார் த்தைகளால் உணர்த்த இயலாத பல்வேறு உணர்வுகளை உள்ளடக்கியதாக இருந்தது..

“நந்தினி..”

“ம்ம்ம்..”

“அன்றைக்கு என் காதலை நீ ஏற்றுக்கலை..”

“இன்னைக்கு நீங்க இல்லாம நான் இல்லை..” உணர்ச்சி மிகுதியால் விம்மி விட்டாள் நந்தினி..

அவளை மார்போடு சேர்த்தணைத்துக் கொண்டவனுக்கு இதைவிட வேறென்ன வேண்டும் என்று இருந்தது.. இதைத் தாண்டிய சுகத்தையா கூடல் கொடுத்து விடப் போகிறது..?

“இப்ப உன்னை எடுத்துக்கனும்னு நான் நினைச்சா நீ தடுத்து விடுவியாடி..?”

“மாட்டேன்..”

“இந்த உன் காதலையும் தனிமையையும் நான் யூஸ் பண்ணிக்க நினைக்கலாம் என்கிற பயம் உனக்கில்லையா..?”

“யூஸ் பண்ணிக்குவீங்களா..? நீங்களா..? குட் ஜோக்..”

அவள் சிரித்த சிரிப்பில் அவன் மீதான அதீத நம்பிக்கை பிரதிபலித்தது.. அந்த நம்பிக்கையில் மனம் திளைத்தான் அவன்..

அதற்கு மேல பேச என்ன இருக்கிறது..? என்பதைப் போல சரிந்து அவன் மார்பில் தலை சாய்த்து உறங்க ஆரம்பித்தாள் நந்தினி.. அவளது முதுகைத் தட்டிக் கொடுத்தபடி அவனும் உறங்கி விட்டான்.. அதிகாலையில் கண் விழித்த

நந்தினி அவனது உறக்கத்தைக் கலைக்காமல் விலகி அவன் முகம் பார்த்தாள்.. வசீகரமான அழகிய கவர்ச்சி நிரம்பிய முகம்..! கலைந்திருந்த அவனது முடியைக் கோதி விட் டுக் குனிந்து அவன் நெற்றியில் முத்தமிட்டாள்.. வழக்கம் போல அவனது கவர்ச்சியிலும் அழகிலும் மருண்டவளாய்..

“இவனுக்கு நான் ஈக்குவலா..? என்னிடம் என்னத்கைக் கண்டான்..? இப்படிப் பித்தா இருக்கிறானே.. சூப்பர் மேனுக்கு காதலியை சூஸ் பண்ணத் தெரியலை..” என்று வாய் விட்டுச் சொன்னாள்..

“ரவிச்சந்திரன் எல்லாத்திலும் சூப்பர் மேன்தான்டி.. என் லவ்வரை சூஸ் பண்ணினதிலும் நான் சூப்பர் மேன்தான்...” கண் விழித்த ரவிச்சந்திரன் கண் சிமிட்டினான்..

‘எல்லாத்தையும் கேட்டுட்டான்..’ நந்தினிக்கு வெட்கமாகி விட்டது..

‘கள்ளன்..’

அந்தக் கள்வனிடம் அகப்படாமல் தப்பி கட்டிலிலிருந்து இறங்கிக் கதவைத் திறந்து வெளியில் வந்தாள்.. எதிரில் தெரிந்த அற்புத அழகில் பிரமித்து நின்று விட்டாள்..

# எண்ணியிருந்தது ஈடேற... 6

தண்ணீரின் அலைகள் கரையில் மோதுவதால் ஏற்படும் மெல்லிய சலசலப்பு.. பறவைகளி ன் வித விதமான ‘கீச், கீச்..’ ஒலி.. குளிர்ச்சி நிரம்பிய ஆலப்புழாவின் அழகிய அமைதி..

பறவைகளின் சப்தமும், நீரலைகளின் ஓசையும் இணைந்து வெளிப்பட்ட இயற்கையழகின் பரிணாமத்தில் வியந்து அயர்ந்து நின்று விட்ட நந்தினியின் பின்னால் வந்து நின்று கழுத்தில் கைகளைப் படற விட்டு அவளது உச்சந்தலையில் முகவாயைப் பதித்தான் ரவிச்சந்திரன்..

ஏகாந்தம் நிரம்பிய இயற்கையின் பொழுது எப்படியிருக்கும் என்பதை உணர்த்திய அதிகாலைப் பொழுது ஆலப்புழாவின் அந்த விடிகாலைப் பொழுது..

சில்லென்ற குளிர் காற்றில் அவர்கள் வயல்வெளியில் உலவித் திரும்பினார்கள்.. தென்னம் பாலத்தில் உட்கார்ந்து கால்வாய் நீரில் கால்களை நனைத்து ஆட்டியபடி சூடான டீயைக் குடித்தார்கள்.. சொர்க்கத்தில் இருப்பதைப் போல உணர்ந்தாள் நந்தினி.. அவனிடம் சொன்னபோது அவளருகில் இருந்தால் அனைத்தும் சொர்க்கம் என்றான்.. அவனது வார்த்தைகள் மற்றுமொரு சொர்க்கத்திற்கு அவளை இட்டுச் சென்றன..

இரைச்சல்கள் இல்லாத அமைதியான தொரு உலகத்தில் ஓர்நாள் வாழ்ந்த நிறைவுடன் கரைக்குத் திரும்பினார்கள்..

படகு வீட்டை விட்டு இறங்க மனமில்லாமல் இறங்கினாள் நந்தினி.. அங்கேயே இருந்து விடலாம் போல இருந்தது.. சூழ்ச்சிகள் நிரம்பிய வயநாட்டு அரண்மனைக்குத் திரும்பாமல் அவளும் ரவிச்சந்திரனுமாக படகு வீட்டில் அமைதியாக வாழலாம்..

நினைவுகளும் கனவுகளும் சுகமானவைதான்.. நனவுகள் அவற்றுக்கு எதிர் திசையில் பயணிக்கின்றனவே..

ஆலப்புழாவின் படகு வீட்டிற்கு எதிர்திசையில் ரவிச்சந்திரனின் கார் விரைந்தது.. நந்தினியின் மனமோ படகு வீட்டிலேயே வெகு நேரம் இளைப்பாறியது..

**- ஏழாம் பாகத்தில் தொடரும்...**




லட்சுமி பாலாஜி பதிப்பகம்